FLOREAT

DISCE AUT DISCEDE

# தமிழ் நயம்
# 2012



றோயல் கல்லூரி தமிழ் இலக்கிய மன்றம்


EUROSTAR®
Live your Life©
CONSUMER ELECTRONICS, HOME & KITCHEN APPLIANCES
Available At Island Wide
laksha
Import & Marketed By :
UKAAYE (PVT) LTD.
Guide Way to Great Future
216A, Sea Beach Road, Colombo-11.
Tel: 011 2323646 Fax: 011 2459599 E-mail: ukaayece@sltnet.lk



# Kalai Vizha
# 2012

"And we their loyal sons now bear
The torch with hearts as sound as oak"

With best compliments from

**IMAZ IMTHIYAZ**

**&**

**INAZ IMTHIYAZ**



# SCHOOL OF OUR FATHERS

***Words and Music by Mr. H.L. Reed, Principal 1921 -1932***

Thy spirit first to life awoke
In eighteen hundred and thirty five
Beneath the sway of Marsh and Boake
Thenceforth did lanka's learning thrive

Refrain:
School where our fathers learnt the way before us
Learnt of books and learnt of men, through thee we'll do the same
True to our watchword "Disce Aut Discede"
We will learn of books and men, and learn to play the game

Within thy shade our fathers trod
The path that leads to man's estate;
They have repaid the debt they owed;
They kept thy fame inviolate.

Refrain
And we their loyal sons now bear
The torch, with hearts as sound as oak;
Our lusty throats now raise a cheer
For Hartely, Harward, Marsh and Boake.
Refrain

RIOVA
PICTURES

Graphic Designing

Photography

Video Editing

Animations

Web Designing

Scan above QR code to reach riova.net

www.facebook.com/ajisteenpix

(+94) 72 50 50 488
Dr.ajmalaji@gmail.com
www.riova.net

# றோயல் கல்லூரி
# தமிழ் இலக்கிய மன்றம்

பெருமையுடன் வழங்கும்

# "கலை விழா 2012"

14.10.2012 ஞாயிற்றுக்கிழமை, மாலை 04.01 மணி
றோயல் கல்லூரி "நவரங்கஹல"

பிரமத விருந்தினர்
பேராசிரியர். செ.யோகராஜா
சிரேஷ்ட விரிவுரையாளர்-மொழித்துறை
கிழக்குப் பல்கலைக்கழகம்

கௌரவ விருந்தனர்
திரு.எச்.ஏ. உபாலி குணசேகர
(அதிபர்-றோயல் கல்லூரி)

# The Royal College
# Tamil Literary Association

*Proudly presents*

# "Kalai Vizha 2012"

*Sunday the 14th of October 2012 at -4.01 p.m*
*at "Navarangahala" Royal College*

*Chief Guest*
*Prof. S. Yogarajah*
*Senior Lecturer-Department of Linguistic*
*Eastern University*

*Guest of Honour*
*Mr. H.A. Upali Gunasekara*
*Principal - Royal College*


With Best Complements From
THE TRAVELLER
Global Private Limited
AIRLINE TICKETING AGENTS & TOUR OPERATORS
SINCE 1989
U.G. 95, People's Park, Colombo 11.
Tel: 2421578, 2337961, 2348136/ 7, 2472003-8, 4622413-7, 4621645-50 Fax: 2430292, 2330818
e-mail: info@thetravellerglobal.com
www.thetravellerglobal.com
IATA Accredited Agent
Member of CCC
BRANCH OFFICES:
Kurunegala
100, Colombo Road, Kurunegala.
Tel: 037-2234288-9
Fax: 037-2230434
45, Central Bus Stand Complex, Puttalam Road, Kurunegala
Tel: 037-2230431-3, 037-2229966/88
Fax: 037-2230433
Kandy
No 63, D. S. Senanayake Veediya Kandy.
Tel : 081 2221222
Fax: 081 2222929
CORPORATE DIVISION:
377 A/1, 1st Floor, Galle Road, Colombo 03.
Tel: 4967000-3 Fax: 4741873, 2375350
e-mail: info@travellercorporate.com
Website: www.travellercorporate.com
HAJJ AND UMRAH DIVISION:
377 A, 2nd Floor, Galle Road, Colombo 03.
Tel: 4380200 Fax: 2372667
24 Hours Ticketing Hotline 94777555559
TRAVELLER GLOBAL DESTINATIONS & LEISURE HOLIDAYS (PVT) LTD.
377 A, Galle Road, Colombo 03.
Tel: 2372310-11, 2370968, 2372708 / Fax: 2372935
e-mail: info@travellerleisure.com / Website: www.travellerleisure.com
ARTBOX

# சமர்ப்பணம்

எம்
மறவர்
மார்தட்டி வாள்வீசி
போர் செய்யும் தோரணையில்
மயங்கிப் போய்
மனம் அலர்ந்து
மூர்ச்சையாகும் எதிரிகள்

எம்
அகம் எரிந்து
முகம் கறுக்கி
உயிர் நசுக்கிப் போகையில்
வீற்றெழுந்த வேங்கைகளாய்
யுகம் படைத்த வேழங்களாய்

விரோதங்களைத் தாண்டி
துரோகங்களைத் தாங்கி

தமிழ்
மணம் காக்க
மண் காக்க
மறம் காக்க போராடி

புதைந்து போன வீரர்களுக்கும் – மனதில்
விதைத்துப் போன வீரத்துக்கும்
இந்நூல் சமர்ப்பணம்!!!!!

# SHRI VIDHIE INSTITUTE

## #140 VIVEHANANDA HILL STREET, COLOMBO 13

## 0114 550 727

O/L , 10, 9 தரங்களுக்கான சகல பாடங்களும்…..

| | | |
|---|---|---|
| தமிழ் | - | V சாந்தகுமார் |
| கணிதம் | - | A கிரிதரன் |
| விஞ்ஞானம் | - | V கோகுலன் |
| வரலாறு | - | A கிரிதரன் |
| கணக்கீடு/வணிகம் | - | U வரதராஜன் |
| ஆங்கிலம் | - | W சுஜாதா |
| சுகாதாரம் | - | V கோகுலன் |
| தமிழ் இலக்கிய நயம் | - | V சாந்தகுமார் |
| சிங்களம் | - | இந்திரா |
| தகவல் தொழில்நுட்பம் I.T. | - | T பிரதீபன் |




5ம் ஆண்டு புலமைப்பரிசில் தலைநகரில் மட்டும் அன்றி நாடு முழுவதும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுத் தந்த முதற்தரமான ஆசான்.

A கிரிதரன்

ஸ்ரீ வித்தி,

140 விவேகானந்தா மேட்டு வீதி, கொழும்பு 13

தமிழ் நயம் 2012

# வதனத்தின் முகப்பில்......

கச்சி ஒருகால் மிதியா ஒருகாலால்
தத்துநீர்த் தண்ணுஞ்சை தான்மிதியாப்-பிற்றையும்
ஈழம் ஒருகால் மிதியாய் வருமேநங்
கோழியர்கோக் கிள்ளிக் களிறு.

\- முத்தொள்ளாயிரம்

சோழ நாட்டு யானையானது வரும் போது காஞ்சி மாநகரிலே ஒரு காலையும், மூன்றாவதாக ஈழ நாட்டிலே ஒரு காலையும் ஊன்றி நான்காவது காலை உறையூரில் ஊன்றி மெல்ல அசைந்து வருகிறது. இது சோழ நாட்டின் ஆதிக்கப்பரம்பலை அழகாக எடுத்துக் காட்டுகின்றது.

அத்தனை பிரமாண்டம் மிக்க இந்த யானை இன்று வேத்தியர் வழியாய், வேத்திய வேழங்களாய் வாழ்ந்து கொண்டும் தமிழர் பெருமை பாடிக்கொண்டும் பைந்தமிழை பாரெங்கும் பரவச் செய்து கொண்டும் இருக்கிறது.



# சமாதானம்

உலக மக்களின் தலையாய தேடல்
யுத்தம் இல்லாத முத்தான வாழ்க்கை
சமரென்றும் போரென்றும் வரிந்து நிற்கல்
வீணில் இழப்பே இறுதியில் எஞ்சும்

உள்ளவை யாவும் யுத்தத்தால் அழியும்
நல்லவை எல்லாம் சமாதானத்தால் மலரும்
இன்பம் பெருகும் துன்பம் மறையும்
சொர்க்கம் எம்மவர் பூமியில் தோன்றும்

யுத்தம் வேண்டாம் அழிவும் வேண்டாம்
ஆக்கம் வேண்டும் அன்பு வேண்டும்
நிம்மதி வேண்டும் நித்தம் வேண்டும்
சாந்தி வேண்டும் சமாதானம் வேண்டும்

ஒன்று பட்டாலே வாழ்வு உண்டு
பிளவு பட்டாலோ அழிவு உண்டு
வாழ்வு சிறக்கும் அற்புத மார்க்கம்
யாவரும் வாரீர் சமாதான வழியில்

**Ashwin Ganesh Balaratnarajah**
**8D**

1938

## எமது மன்ற இலச்சினையும் அதன் பொருளும்

இச்சின்னத்தில் காணப்படுகின்றவற்றை எடுத்துப் பார்ப்போம். அங்கு உள்ள நந்தி, தமிழரைக் குறிக்கிறது. யாழ்ப்பாண இராச்சியத்தின் கடைசித் தமிழரசன் சங்கிலியனின் கொடியிலும் யாழ் பல்கலைக்கழக இலச்சினையிலும் உள்ள நந்தியே இதுவாகும். நந்தியின் முதுகிலுள்ள தட்டிற் திருக்குறள் சுவடி உள்ளது. உலகப் பொது மறையாம் திருக்குறளைத் தமிழ்மொழி கொண்டுள்ளதால் தமிழைப் பிறநாட்டவரும் அறியவும் கற்கவும் முடிந்தது. இதனால் தமிழர், திருக்குறளைத் தாங்கி நிற்பதை முழுவதிலும் தமிழ் மொழி பரவிச் செல்லட்டும் என்பதைக் குறித்து ஒரு ஒலி – ஒளி பரப்பிக் கோபுரம் அருகில் காணப்படுகின்றது. இதன்படி பாரெங்கும் பைந்தமிழைப் பரவச் செய்வதே தமது பணியெனக் கொண்டு றோயல் கல்லூரி தமிழ் இலக்கிய மன்றம் செயற்படுகின்றது.

*With Best Compliments*

*from*



# நிகழ்ச்சி நிரல்

பாடசாலை கீதம்

தமிழ்த்தாய் வாழ்த்து

மங்கள விளக்கேற்றல்

வரவேற்பு உரை

வரவேற்பு நடனம்

தரம் 01, 02 மாணவர்களின் நிகழ்ச்சி

அதிபரின் உரை

விவாத அணி அறிமுகம்

கலாசார நடனம்

இதழ் வெளியீடு

சிறப்புப்பட்டிமன்றம்

பாடசாலைக்குள்ளான பரிசளிப்பு நிகழ்வு

பிரதம அதிதியின் உரை

நாடகம்

பாடசாலைகளுக்கிடையிலான பரிசளிப்பு நிகழ்வு

நடனம்

மேற்பிரிவு நாடகம்

நன்றியுரை

தேசிய கீதம்

# Programme

School Song

Thamizh Thai Valthu

Lighting of Oil Lamp

Welcome Speech

Welcome Dance

Programme of Grades 01 & 02

Principal Speech

Debate Team Introduction

Cultural Dance

Releasing of the Souvenir

Debate

Prize Giving - Inter Grade

Chief Guest's Speech

Drama

Price Giving - Inter School


Dance

Upper Grade Drama

Thanks Giving

National Anthem

# இதழாசிரியர்கள் இதயத்திலிருந்து



காலங்காலமாக பாரம்பரியங்களை பேணிப் பாதுகாத்து வேத்தியர் மரபு. அவற்றுள் கல், மண் தோன்றிய காலத்துக்கு முன் தோன்றிய தமிழர் பாரம்பரியங்களை பாதுகாக்கவும் வேத்தியர் தவறவில்லை என்பதற்கு இந்த 74 வருட பழமை வாய்ந்த கலை விழாவும், காலங்கடந்த வரலாற்றைக் கொண்ட தமிழ் நயம், நூலும் சான்று பகிருகிறது.

74வது அகவையில் தமிழ் இலக்கிய மன்றத்தினால் வெளியிடப்படுகின்ற இந்த இதழ் தமிழர் பெருமைகளையும் வேத்தியர்களின் தமிழ் ஆர்வ மிகுதியையும், அவர்களது தமிழ் திறமைகளையும் உலகுக்கு அழகாக பறைசாற்றியிருக்கிறது என நம்புகிறோம்.

இவற்றின் குறைகளை மறந்து நிறைகளை ஏற்கும் நல்ல தமிழ் நெஞ்சங்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். காலங்கடந்து வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த வேத்திய மரபுகளோடு வேத்தியப் பயணம் தொடர்ந்துகொண்டேயிருக்கும்.

"பாரெங்கும் பரவட்டும் பைந்தமிழ்"

இதழாசிரியர்கள்

G. ஹர்ஷாந்த் | A. D. அனோஜன் | J. கார்த்தீகன் | S. அருணன்

## Supporting Sponser

CALL ME

# 9 provisions
# 25 District

**Total Business One Solution**

**Call: 011 7410410**

Taxi Service - Car Rental - Tourism - B2B
Steels - Hotels and Resorts - Pubs & Club
Beach Resorts - Real Estates - Apalrtments
Import - Export and more...

www.callme.lk



கலைவிழா 85
1985
1991
2000
2001
தமிழ் நயம் 2004
2002
2003
2004
2005
2006
2007
2008
2009
2010
2011

# மரங்கள் வளர்ப்போம்

விருட்சம் வளர விதைகளை விதையுங்கள்
நல்ல தருக்கள் தோன்ற நன்னீர் பாய்ச்சுங்கள்
நாற்றுக்கள் வளர்ந்து பூத்துக் குலுங்குகையில்
உவக்கும் உள்ளங்களின் உண்மை காணுங்கள்

தருக்கள் தருவதோ தரணியில் அதிகம்
தான்தோன்றித் தனத்தால் அதனை அழித்தால்
புவியும் அதிகம் வெப்பம் ஆகும்
பொன்னான வாழ்வும் மண்ணாகிப் போகும்

நாற்றுக்கள் வளர நன்மழை பெருகும்
நன்மழை பெருக உற்பத்தி வளரும்
உற்பத்தி வளர ஊதியம் குவியும்
ஊதியம் குவிந்தால் உலகமே மகிழும்

உண்மை உணர்ந்து உள்ளம் தெளியுங்கள்
உங்கள்பாட்டன் விதைத்தவையே இன்று கருக்கள்
உங்கள் பேரனுக்கு எங்கே தருக்கள்?
இதனை உணர்ந்து இன்றே விதையுங்கள்.

மண்ணின் உறுதிக்கு மரங்கள் தேவை
மனிதனின் உணவுக்கும் மரங்கள் தேவை
உயிர்களின் பிணிதீர்க்க மரங்கள் தேவை
உண்மை உரைப்பின் மரமின்றி மனிதனேயில்லை.

***Ashwin Ganesh Balaratnaraja.***



## கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறை முதுநிலை விரிவுரையாளர்

# பேராசிரியர். செ. யோகராசா அவர்களது வாழ்த்துரை

கொழும்பு மாவட்டத்திலே மட்டுமின்றி இலங்கை முழுவதும் பிரபல்யம் பெற்றுத்திகழ்கின்ற இக்கல்லூரி வருடந் தோறும் வெளியிட்டு வருகின்ற இச்சஞ்சிகை தொடர்ந்து இவ்வருடமும் வெளிவருவது மகிழ்ச்சி தருகின்ற விடயமாகின்றது.

மாணவர்கள் தாங்கள் கற்கின்ற ஏட்டுக்கல்வியுடன் மாத்திரம் நின்று விடாது இத்தகைய சஞ்சிகையினை வெளியிடுவதனூடாக தாம் கற்றவற்றை வெளிப்படுத்துகின்றனர். சமூக நோக்கையும், கற்பனையாற்றலையும் இனங்காட்டுகின்றனர். ஊக்கமும் உற்சாகமும் பெற்றுக் கொள்கின்றனர். ஆதலின், இச்சஞ்சிகை வெளிவருவதற்கு அயராது பாடுபட்ட மாணவர் குழாத்தினரையும் அதற்கு உறுதுணை புரிந்த ஆசிரியர்களையும் நிர்வாகத்தினையும் மனமாரப் பாராட்டுகின்றேன்.

தொடர்ந்து வெளிவர வேண்டுமென்றும் எதிர்பார்க்கின்றேன்.

நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்களுடன்,
பேராசிரியர். செ. யோகராசா
கிழக்குப் பல்கலைக்கழகம்
வந்தாறுமுலை
2012.10.03

*With Best Compliments*

*from*

# Vasantham Foods

PALMARAH FOODS & SNACK

100% Vegetarian Foods



Indian Sweets Jaffna Snacks Mixture

423, Galle Road,

Wellawatte, Colombo 06



# PRINCIPAL MESSAGE

As the principal of Royal College I'm very much glad to express my wishes to Tamil Literary Association.

Over the past 74 years Tamil Literary Association has helped immensely to bring out the talents of students. It has also helped the public by its social projects. I feel proud that many past chairman and secretaries of this society are holding highest positions in the community. It's all because of the leadership qualities which they gained in Royal College.

Once again I wish that the Cultural day would be a great success.

**Mr. H. A. Upali Gunasekara**
***Principal***

*With Best Compliments*

*from*



# Mr. M.R. Fahumudeen

# MESSAGE FROM SENIOR GAMES MASTER





It is a great pleasure that I contribute this message to the souvenir 'Tamil Nayam' which is published annually by the Royal College Tamil Literary Association at the Annual Tamil Cultural Day (Kalai Vizha)

For the past seventy four years, the activities organized by the Tamil Literary Association has build up self confidence, leadership qualities and literary talents in young Royalists' minds.

I must express my gratitude to the Teachers-in-charge and the students of the organizing committee for conducting the Inter-school competitions and Inter-grade competitions to recognize the talents of the students of our school as well as other schools.

Let me conclude by wishing all the success in this event.

***M.T.A. Rauf***
***Senior Games Master***

***Sudath Liyanagunawardena***
***Senior Games Master***

*With Best Compliments*

*from*



# NALAPAHAM

**Veg / Non Veg Restaurant**

No. 16, E.S. Fernando Mw,
Colommbo 06
T.P : 077 9940384
0777 742068



# தமிழ்ப்பிரிவு பொறுப்பாசிரியையின் ஆசிச்செய்தி

தமிழ் இலக்கிய மன்றம் வெளியிடும் "தமிழ் நயம் 2012" மலரின் ஊடாக உங்களோடு தொடர்பு கொள்ள கிடைத்த சந்தர்ப்பத்துக்கு நன்றியுடையேன். தமிழ் இலக்கிய மன்றம் றோயல் கல்லூரியில் புகழுடன் இருந்த மன்றம், அம்மன்றத்தின் நிகழ்வுகள் பாராட்டத்தக்கதாக இருந்தன. மன்றத்தின் தரமும் உயர்வாகவே காணப்பட்டன. அவர்களால் தமிழ் இல்க்கியத்துக்கு மட்டுமல்ல சமுகத்துக்கான பல்வேறு செயற்திட்டங்கள் முன்யைவருடங்களில் எடுக்கப்பட்டு பாடசாலை நிர்வாகத்தாலும் மக்களாலும் பாராட்டப்பட்டது.

அத்தகைய மன்றத்தை நடத்தும் இவ்வருட நிர்வாகத்தினரும் சிறப்பாக பண்டைய மரபுகள், சம்பிரதாயங்கள், பாரம்பரிய முறையைக் கடைப்பிடித்து செயற்பாடுவீர்கள் என நம்புகின்றேன். உங்கள் எல்லோரினதும் செயற்பாடு கல்லூரிக்கு பெருமை சேர்ப்பதாக அமைய வேண்டும். அத்தகைய பணியில் ஈடுபட எல்லாம் வல்ல இறைவனைப் பிராத்திக்கின்றேன்.

நன்றி

திருமதி. ரஞ்சினி பிரேமநாத்
தமிழ்ப்பிரிவு பொறுப்பாசிரியர்

*With Best Compliments*

*from*

**Brainthra Anandaeaswaran**

**7 - C**



# மன்றப்பொறுப்பாசிரியரின் ஆசிச்செய்தி


''உலகத்தின் முதன் மொழியும்
உயர்ந்தமொழி என்பதுவுந் தமிழேயாகும்
இலக்கியமும் இலக்கணமும்
இணையின்றித் தழைத்துதவுந் தமிழேயாகும்
பலகற்றார் பன்னாட்டுப்
பேரறிஞர் மொழியியலார் புகலுகின்றார்
நலமற்றார் இவை மறுப்பார்
நாமென்றும் மறுத்துரைக்காலாகாதன்றே''

தமிழ்மொழி இலக்கியத்தை இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என மூன்று இயல்களாகத் தமிழறிஞர் வகுத்துக்கூறுவர். நவீன யுகத்தின் வேகமான வளர்ச்சிக்கும் மாற்றங்களுக்கும் ஈடுகொடுக்கும் வகையில் இன்று தமிழ்மொழியும் பல துறைகளில் வளர்ச்சி கண்டு வருகின்றது. நவீன இலக்கிய வகைகள் வேகமான வளர்ச்சியைப் பெற்று வருகின்றன. தமிழ் இலக்கியமன்றம் வழமைபோல் பாடசாலை மட்டத்திலும், ஏனைய பாடசாலைகளுக்கிடையிலும் போட்டிகளை நடாத்தி மாணவர்களின் திறமைகளை வெளிக் கொணர்ந்து வந்துள்ளது. 2012 ஆம் ஆண்டு எமது மன்றம் தமது எழுபத்து நான்காவது விழாவைக் கொண்டாடுமுகமாகத் ''தமிழ் நயம்'' என்ற சஞ்சிகையையும் வெளியிடுகின்றது. விழா சிறப்புற நடைபெற எனது நல்லாசிகள் உரித்தாகுக!''

*இவ்வண்ணம்*
*S.R. ஜெயக்குமார்*

*With Best Compliments*

*from*





# மன்றத் தலைவரின் வீரமுழக்கம்.....

"கொடி வருடி பூந்தென்றல் குழாவுகின்ற
தென்பொதிகை மடிவருடிப் பூத்தவளே
மணித்தமிழே!"

றோயல் கல்லூரி தமிழ் இலக்கிய மன்றம் பெருமையுடன் நடாத்திக் கொண்டிருக்கும் "கலைவிழா 2012" இல் வெளியிடப்பட்டிருக்கும் "தமிழ்நயம் 2012" இன் ஊடாக உங்கள் அனைவரையும் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்

"பாரெங்கும் பரவட்டும் பைந்தமிழ்" என்ற மத வாக்கிணங்க அன்று தொட்டு இன்று வரை இயல்தமிழை உலகலாவிய ரீதியல் பரப்பிக் கொண்டிருக்கும் எம் மன்றமானது இவ்வருடம் தனது 74 வது அகவையான கலைவிழா 2012 இனை நடாத்திக் கொண்டிருப்பதன் ஊடாக இளம் சமுதாயத்தின் தமிழாற்றலையும் ஆளுமையையும் வளர்த்துக் கொண்டிருக்கின்றது என்று கூறின் மிகையாகாது.

இவ்வருடமும் எம் மன்னறமானது பாடசாலைக்குள்ளான பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்திறன் காண போட்டிகளை நடாத்தி இலைமறைகாய்களாக இருந்த நம் தமிழ் சிறார்களின் ஆற்றலை வெளிச்சமிட்டு காட்டியுள்ளது. மாணவர்களின் தமிழ் ஆற்றலை மட்டுமன்றி சுவர்களின் ஆளுமையை வெளிப்படுத்தும் வகையிலும் போட்டிகள் அமைந்தன.

அத்துடன் மாணவர்களின் தமிழ் அறிவை உயர்த்தும் வகையில் இவ்வருடத்திலிருந்து தமிழ் அறிவுப் போட்டிக்கு 'சிவானந்தநாயகம்" நினைவுக் கேடயமும் வழங்கப்படவுள்ளது என்பதனையும் இவ் தமிழ்நயம் 2012 பதிவு செய்ய விரும்புகின்றேன். காலங்கள் பல கடந்தாலும் தமிழ்நயம் 2012 என்றும் நிலைத்து நிற்கும் வகையில் இயல் தமிழின் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.


வந்தோம்! சென்றோம்! என்று இல்லாமல் தமிழ் இலக்கியவாதிகளையும் தமிழ் பேச்சாளர்களையும், தமிழ் விவாதிகளையும், வீரத்தமிழர்களையும் செதுக்கியுள்யோம் என்ற மனநிறைவுடன், நிறைவாக எம் பயணங்களில் எமக்கு இடையூறுகள் வருகையில் எமக்கு வழிகாட்டிய அதிபர், பிரதி அதிபர், சங்கங்கள், கழகங்கள், பொறுப்பாசிரியர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் அனைவருக்கும் எனது நன்றிகள். அனைவரினதும் ஆசியுடன் கலைவிழா 2012 வெற்றிகரமாக திகழ எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதிலோர் மகிமை இல்லை, திறமான புலமை எனில் வெளிநாட்டோர் அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்.

*"பாரெங்கும் பரவட்டும் பைந்தமிழ்"*

யோ. திருக்குமரன்
மன்றத் தலைவர்

*With Best Compliments from*



## செயலாளர் சிந்தையிலிருந்து......

செந்தமிழை வளர்த்து பைந்தமிழை பாரெங்கும் பரப்பி தமிழர் தம் மரபை தரணியெங்கும் எடுத்துரைக்கும் வகை செய்வதில் பெரும்பங்கு ஆற்றிவரும் றோயல் கல்லூரி தமிழ் இலக்கிய மன்றமானது தனது 74வது வருட பூர்த்தியை மனநிறைவுடன் கொண்டாடி மகிழும் இந்த இனிய வேளையில் அந்த மகிழ்ச்சியின் பிரசிவப்பாய் வெளிவந்த ''தமிழ்நயம் 2012'' இனூடாக உங்களை சந்திப்பதில் எல்லை கடந்த மகிழ்ச்சி!

எங்கள் தோழர்களின் அயராத உழைப்பினாலும், ஆசிரியப் பெருந்தகைகளின் வாழ்த்துக்களினாலும், பழைய மாணவர்களின் அன்பார்ந்த ஆதரவினாலும், நல்லோர்கள், ஆன்றோர்களின் ஆசியி-னாலும் எங்கள் ''கலை விழா 2012'' இனிதே அரங்கேறுகிறது. பாடசாலைகளுக்கு இடையிலான தமிழ்த்திறன் காண் போட்டிகளும், கல்லூரிக்குள்ளான தமிழ்த்திறன் காண் போட்டிகளும் செவ்வனே நடைபெற உதவிய பிற பாடசாலைகளுக்கும், நடுவர்களாக பணியாற்றி உதவிய நன்நெஞ்சங்களுக்கும் மனமார்ந்த நன்றிகள் பலகோடி உரித்தாகட்டும்.

வேத்தியத்தாயின் துணைகொண்டு தமிழ்மரபு பேணும் நம்மவர் பணி என்றும் எத்தடையும் இன்றி தொடர எல்லாம் வல்ல இறைவ-னின் நல்லாசி வேண்டுவதோடு எங்கள் முயற்சிகளை எல்லாம் திருவினையாக்க உதவி நின்ற அனைத்து நல்ல இதயங்களுக்கும் என் மனமார்ந்த நன்றிகள்.

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்;
பாடரராய் விலங்குகளாய், உலகனைத்தும்
இகழ்ச்சிசொலப் பான்மை கெட்டு,
நாமமது தமிழரெனக் கொண்டுஇங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர்!
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்!

- வ. சதானந்தன்
செயலாளர்

*With Best Compliments*

*from*

**PARTHI BROTHERS**

*General Merchants & Commission Agents*

# 123, 5th Cross Street, Colombo 11
Tel : 011-4555552, 011-5738155, 011-5736595, 011-4377076
Mobile : 077-2311425

**MILLENNIAUM TRADING CO.**

*General Merchants & Commission Agents*

No. 220, Prince Street, Colombo 11
Tel: 011-4555551, 011-4377067

**RADHA STORES**

*Wholesale & Retail Dealers in Groceries*

No. 02, Colombo Road, Avissawella.
Tel: 036-4270294, 036-4927112, 036-4927113

# OFFICE BEARERS 2012

PRESIDENT
**MR. H.A.U. GUNASEKARA**

SENIOR VICE PRESIDENT
**MR. S.R. JEYAKUMAR**

SENIOR TREASURER
**MR. S.K. SOTHILINGAM**

VICE PRESIDENTS
**MRS. S. KATHIRGAMATHAMBY**
**MR. I.M. ANZARY**
**MR. V. SHANTHAKUMAR**
**MRS. V. SARVANANTHA**
**MISS. K. THADSHAAYANI**

CHAIRMAN
**Y. THIRUKUMARAN**

SECRETARY
**V. SATHANANTHAN**

DEPUTY SECRETARY
**V. SUDARSHAN**

TREASURERS
**R. RAGULAN**
**MOHAMED ZUHUD ZUHRI**

ASST. TREASURER
**T. THIVIYAN**

EDITORS
**J. HARSHANTH**
**S. ARUNAN**
**A. DANIEL ANOJAN**
**J. KARTHIGAN**
**T. KISHATHANAN**

SUB EDITORS
**L. NITHAS AHAMED**
**H.B. ASMATH AZAD**

*Best Wishers from*



# Crest Fashions (Pvt) Ltd.



Manufacturers of Garments for Export

Our Factories are approved for GAP/KOHL'S/COLUMBIA and M & S, Compliance standards.

Specialised for Men's/Ladies/Kids woven bottoms.

**Main Factory**
Crest Fashions (Pvt) Ltd.
1038 B, Pothuarawa Road,
Malabe.

Tel. : 2561259
Fax : 4406301
E-mail : crest.m@mymail.lk

**Branch Factory**
Crest Fashions (Pvt) Ltd.
558, Pahala Bomiriya,
Kaduwela.

Tel. : 4408813
Fax : 4408812
E-mail : crest.k@mymail.lk


**Branch Factory**
Crest Fashions (Pvt) Ltd.
Turuwiyana, Bulugolla,
Pothuhera.

Tel. : 077-2253733

**Branch Factory**
Crest Fashions (Pvt) Ltd.
Colombo Rd, Boyagane,
Kurunegala.

Tel. : 037-4930450
Fax : 037-4930451
E-mail : berty@crestfashions.com

# SENIOR COMMITTEE



Seated L-R : M.Z.M. Zuhud (Treasurer), Mr. V. Shanthakumar, Mr. S.K. Sothilingam (Senior Treasurer), Mr. S.R. Jeyakumar (Senior Vice President), Mr. M.T.A. Rauf (Senior Games Master), V. Sathananthan (Secretary), Mr. H.A.U. Gunasekara (Principal), Y. Thirukumaran (Chairman), Mr. B. Shanmugarajah, V. Sudarshan (Deputy Secretary), Mrs. Ismiya Ansari, Ms. S. Kathirgamathamby, Mrs. V. Sarvanantha, R. Ragulan (Treasurer),

Standing L-R : L. Nithas Ahamed (Sub Editor), H.B.A. Azad (Sub Editor), S. Arunan (Editor), T. Kishathanan (Editor), T. Thiviyan(Editor), A.D. Anojan(Editor), J. Karthigan(Editor), J. Harshanth (Editor)

*With Best Compliments*

*from*

**Sathananthan Varatharajah**

**13 MT**

# ORGANIZING COMMITTEE



**Seated L - R :** T. Kishathanan(Editor), S. Arunan (Editor), M.Z.M. Zuhud (Treasurer), V. Sathananthan (Secretary), Y. Thirukumaran (Chairman), V. Sudarshan (Deputy Secretary), R. Ragulan (Treasurer), J. Harshanth (Editor), J. Karthigan (Editor), A.D. Anojan(Editor)
**Standing first row L-R :** M.N.M. Naishaban, Faslan, A. Daniel, K. Sasitharan, M. Arshad, L. Nithas Ahamed, H.B.A. Azad, T. Thiviyan, M.Z.M. Irzan, M.N. Musthaq, N. Nazeef, N.T. Rimash, Indiran,

*With Best Compliments*

*from*

"கலை விழா" இனிதே நிறைவேற நல்வாழ்த்துக்கள்

த. விவேதன்

3C




**Seated (L to R) :** Ms. S.Kathirgamathamby, Mrs. L. Thavakumar, Mrs. S. Selvadas, Mrs. Y.M. Munas, Mr. S. R. Jeyakumar, Mr. S. Liyanagunawardana ( Senior Games Master), Mr. Sarath Keerthisena (Senior Deputy Principal), Mr. H.A.U. Gunasekara (Principal), Mr. B. Shanmugarajah, Mr. M.T.A. Rauf (Senior Games Master), Mrs. Magilrajan, Mrs. V. Elayathamby, Mrs. Z. Mizriya Nizar, Mr. S. Kirubaharan
**Standing 1st Row (L to R) :** Mr. S. Sivakumar, Mr. A. Saravanan, Mr. S. K. Sothilingam, Mr. R.M. Hayeez, Mr. S. Sundaralingam, Mr. V. Shanthakumar, Ms. S. Annetnira, Mrs. V. Sarvanantha, Mrs. Mackreen, Ms Anne Subo Alfred, Mrs. S. Vijayarathnam, Mrs Ismiya Ansari, Mrs. V. Yogaswary, Mrs. U. Jeyasingam, Ms. K. Thadshaayani,
**Standing 2nd Row (L to R) :** Mr. M. Sureshkaran, Mr. V. Parameswaran, Mr. K. Sri Ragavarajan

*With Best Compliments*

*from*

# CHEAP STORES

356, Galle Road,
Colombo 6

---

*With Best Compliments*

*from*

# HOTEL ROLEX

**Jaffna Colombo Bus Booking Centre**

No. 360, Galle Raod,
Colombo 6
Tel : 2360462

No. 340, Hospital Road
Jaffna
Tel : 0212222808

# Royal College Tamil Literary Association

## Past Chairmans & Secretaries

| Year | Chairmans | Secretaries |
|---|---|---|
| 1950 | N.Amirthalingam | N.Sundaralingam |
| 1952 | K.Kailasapathy | N.Ramachandran |
| 1959 | S.Viknaraja | N.Sivarajaram |
| 1960 | N.Sivabalan | S.Rajasundaram |
| 1962 | M.Jeyakumar | T.Vasanthan |
| 1963 | M.Swaminathan | S.Rathinaathikkam |
| 1964 | P.Ramachandran | T.Ramachandran |
| 1965 | K.Gowrinathan | V.Thiruchelvam |
| 1966 | K.Kantharooban | V.Devendra |
| 1967 | I.Sirikanthan | I.Rathneswaran |
| 1969 | S.Ragavan | K.Moganarooban |
| 1970 | M.Thayananthan | K.Sivanathan |
| 1971 | T.Rajkumar | I.Kajendran |
| 1972 | K.Kulapoobathy | S.Vinokaran |
| 1973 | B.Dharmaraja | M.Sugubalan |
| 1974 | T. Premakumar | S. Jahendran |
| 1975 | S. Manoharan | A. Dayananda |
| 1976 | S. Jeyabalasingam | S. Ramachandran |
| 1977 | S. Ramachandran | S. Vasanthakumar |
| 1978 | S. Vasanthakumar | A.H.M. Dulip Nawaz |
| 1979 | A. Arulnathan | V.R. Nadeswaran |
| 1980 | C. V. Prathipan | S. Vengadeshan |
| 1981 | K. Vasikaran | M. Varagunam |
| 1982 | S. Sivapriyan | A.S. Subaratham |
| 1983 | V. Anandhan | M. Sritharan, M. Sutharsan |
| 1984 | T. Paraneetharan | P. Selvarajah |
| 1985 | N. Ratnasiva | S. Sivakumaran |
| 1986 | W. Sivaharan | R. Nirajanan |
| 1987 | S.S. Mohan | D. Richard, A. Anuraj |
| 1988 | S. Prabahar | K. Thayaparan |
| 1989 | T. Soumyrajah | A. Suwaminathan |
| 1990 | W. Udayashakar | M. Manivannan |
| 1991 | P. Giritharan | J. Devashankar, G. Amuthan |
| 1992 | N. Kumarakulasingam | E.D.J. Verthanayagam |
| 1993 | E.D. J. Verthanayagam | Y. Muhunthan |
| 1994 | Y. Manoharan | K. Nareshkumar |
| 1995 | S. Niluckshan | Y. Arunan |
| 1996 | K. Ramananaran | L. Jeyanthan |
| 1997 | G.S. sethukavalar | P. Thiruvarangan, S. Sutharshan |
| 1998 | S. Bawa | B. Yamunaharan |
| 1999 | T. Saravana | R. Rathisan, S.S. Kirubananthan |
| 2000 | S. Mayuran | N. Sangethakanna, T. Yogendran |
| 2001 | S. Karthick | M. Nesajeevan, S. Nimalshan |
| 2002 | U.L.M. Resha | M. Sidharth, M. Amsaraj |
| 2003 | K. Pratheepan | S. Vithushan, M. Alam |
| 2004 | N. Nishanthan | T. Sanjeewan, S. Samson |
| 2005 | S. Arujuna Jeyakumaran | B. Parthipan |
| 2006. | B. Aravinth | N.H. Muhamath, M. Sinas Aleem |
| 2007 | N.K. Ashokbharan | V. Umesh, D. Raakesh |
| 2008 | T. Kapilan | M. Pranavan |
| 2009 | R. Arunothayan | T. Abienash |
| 2010 | J.Nijanthan | N.Arjuna, M.M.M. Ajmal |
| 2011 | R. Piranavan | K. Sasibalan |

# Royal College Tamil Literary Association

## Past Editors

| Year | Editors |
|---|---|
| 1976 | S. Sivakumaran, Chandreshan |
| 1977 | N. Navanethan |
| 1978 | A.H.M. Dulip Nawaz, R. Loganathan |
| 1979 | T. Shrivijayan, M. Gobiraj |
| 1980 | P. Jagatheesan, T. Shrikumaran |
| 1981 | S. Sivapriya, A.S. Sabarathnam |
| 1987 | S. Sureshkumar, S. Pirabahar |
| 1990 | Y. Aravindh, S. Senthikumar |
| 1991 | V. Sukathiswaran |
| 1992 | Nareshkumar, Satheeshkumar |
| 1994 | S. Aravinthan |
| 1995 | M. Ziharaniz |
| 1996 | C.I. Azziyan |
| 1997 | Vaseekaran |
| 1998 | M. Rumy |
| 1999 | R. Baramvinayagam |
| 2000 | P.S. senthuran |
| 2001 | S. Geethan |
| 2002 | S. Dinesh |
| 2003 | Azeem A. Makeen |
| 2004 | P. Sutharkumar, M. Nishath, J. Nitharshan |
| 2005 | M.S.A.M. Sinhas Aleem, B. Aravinth, M.I.M. Infas |
| 2006 | P. Pratheepan, M. Mothies, S. Veeshman |
| 2007 | S. Vishakan, T. Ragavan, S. Atchunna |
| 2008 | E. Arjunar, S. Mayuran, S. Shujan, M.A.C.M. Shariq |
| 2009 | G. Kulashangar, M.N.M. Hashim, G. Ramesh, R. Mathusagar |
| 2010 | Y.Anujon, M.N.M. Afsar, S.Lavan, T.Thanancheyan |
| 2011 | Shaan Kulasingham, M. Malik, E. Pragalathan, M. Mathithayanan |

# மாமனிதர் சிவானந்தநாயகம்

இவர் ஒரு பல்துறை விற்பன்னர். ஆசிரியர், பகுதித் தலைவர், உதவி அதிபர், கிரிக்கெட் விளையாட்டுவீரர், கிரிக்கெட் துடுப்பாட்ட நடுவர், கிரிக்கெட் விமர்சகர், பௌதிகவியல்வல்லுநர், சிறந்த சமய பக்தர், ஆங்கில மொழிப் புலமையாளர் என அடுக்கிக் கொண்டே போகலாம்.

சிறந்த பௌதிகவியல் வல்லுநரான இவர் பௌதிகவியல் ஆசிரியர்களுக்கு இடையே ஒற்றுமையைப் பேணவும், அவர் தம் பாட அறிவை விருத்தி செய்யவும் அவர்களுக்கென PHYTA என்ற ஒரு சங்கத்தை உருவாக்கி வழிநடத்தினார். இச்சங்கம் பௌதிகவியல் பொதுப் பரீட்சைகளை நடாத்தி தமிழ்மொழி மூல மாணவர்களுக்கு அளப்பரிய சேவைகளைச் செய்தார். ரூபவாஹினி மூலம் பரீட்சைக்குப் பயன்படத்தக்க சொற்பொழிவுகளையும் ஆற்றியிருந்தார். ''அடிப்படை இலத்திரனியல்'' போன்ற பௌதிகவியல் பாடத்துடன் சம்பந்தமுடைய பல நூல்களை வெளியிட வழிகாட்டினார்.

றோயல் கல்லூரியின் கிரிக்கெட் பொறுப்பாசியராகவிருந்த காலத்தில் சிறந்த துடுப்பாட்ட ஆடுகளம் ஒன்றை அமைக்க வழிகாட்டினார். (Island) ஐலண்ட பத்திரிகையில் துடுப்பாட்டம் பற்றி நல்ல விமர்சனங்களை எழுதிப் பாராட்டுப் பெற்றிருந்தார்.

இவர் தமிழ் ஆசிரியர்களுக்கென ஒன்றுகூடல் கழகத்தை உருவாக்கினார். வருட இறுதியில் குடும்ப அங்கத்தவர்கள் அனைவரும் பங்கு கொள்ளக் கூடிய விருந்துபசாரம் சுற்றுலா நிகழ்ச்சிகள் போன்றவற்றை ஏற்படுத்தினார். இவர் அமரராகி நான்கு வருடங்கள் கடந்துவிட்டன. இத்தருணத்தில் உயர்ந்த பண்பாளராகிய அவரை நினைவு கூருவதில் தமிழ் இலக்கிய மன்றம் பெருமையடைகின்றது.

*செயற்குழு 2012*

*With Best Compliments*

*from*

# Modern Plastics Centre

**Distibutors for**
**Fmj Plastics, Nippon Plastics, J.K. Plastics,**
**Yoghurt Cups &**
**ICE Cream Containers**

No. 60, Dam Street, Colombo 12, Sri Lanka.
Phone : 011-2320296, 011-2433018
Fax : 011-2436754

# புகலிட இலக்கியங்களும் தமிழும்

பேராசிரியர். செ. யோகராசா
மொழித்துறை
கிழக்குப் பல்கலைக்கழகம்

## 1. ஆய்வின் நோக்கம்:

ஏறத்தாழ 1980 தொடக்கம் இடம்பெறத்தொடங்கிய ஈழத்தமிழரது புலப்பெயர்வு காரணமாக ஈழத்து நவீன இலக்கிய வளர்ச்சியில் முக்கிய மாற்றங்கள் ஏற்பட்டு வந்துள்ளன. இவை பற்றிய முக்கியமான ஆய்வுகள் நடைபெற்றுவந்துள்ளன[1]: அதேவேளையில் அவ்வாறான புகலிட இலக்கியங்கள் மொழி என்ற ரீத-யில் தமிழில் ஏற்படுத்துகின்ற மாற்றங்கள் பற்றிய குறிப்பிடத்தக்க ஆய்வுகள் எதுவும் நடைபெற்றதாகக் கூறுவதற்கில்லை. ஆகவே, இவ்விடயம் பற்றி நோக்குவதாக இவ் ஆய்வு அமைகிறது.

## 2. புகலிடமொழிச்சொற்களும் சொற்றொடர்களும் நேரடியாக இடம்பெறுதல்:

**2.1.** புகலிட இலக்கியங்களால் தமிழில் ஏற்பட்ட முக்கிய மாற்றங்களுள் முதன்மையானது பிறமொழிச் சொற்கள் தமிழில் வந்து கலக்கின்றமையாகும். தமிழில் பிறமொழிச்சொற்கலப்பு சங்ககாலந் தொடக்கம் காலத்திற்குக்காலம் ஏற்பட்டு வந்துள்ளது. ஏறத்தாழ 15ம் நூற்றாண்டுவரை சமஸ்கிருதமொழிச்சொற்களும் 15ம் நூற்றாண்டிலிருந்து ஐரோப்பிய மெ-ாழிகளான போர்த்துக்கேய, பிரெஞ்சிய, டச்சு மொழிச்சொற்களும் தமிழில் அவ்வப்போது வந்து கலந்துள்ளன. ஐரோப்பியர்கள் கீழை நாடுகளுடன் ஏற்படுத்திய வியாபாரத்தொடர்பு, ஆட்சித்தொடர்பு, மதமாற்றங்கள் முதல-ியன இதற்குக் காரணங்களாக அமைந்தன.2 1980 களில் குறிப்பாக ஈழத்துத் தமிழர் ஈழத்திலேற்பட்ட அரசியல் நெருக்கடி காரணமாக ஐரோப்பிய நாடுகளுக்கும் (ஜேர்மன் பிரான்ஸ்இ டென்மார்க் சுவிஸ் நோர்வே முதலியன) கனடா, அவுஸ்திரேலியா ஆகியவற்றிற்கும் புலம்பெயர்நதனர். இவர்களுள் சிலர் எழுத்தாளர்களாகவும் கவிஞர்களாகவும் இருப்பது காரணமாக தமது படைப்புகளில் தத்தமது புகலிட நாட்டுச் சொற்களை கையாண்டு வந்துள்ளனர்.

### 2.1.1. நோர்வேஜியன் மொழிச்சொற்கள்:

மொப் - நிலத்தைச்சுத்தமாக்குதல்[3], ஹாய் - சிநேகபூர்வமாக வாழ்த்துதல், கர்த்தர் - இறைவன், மக்பை - பறவையின் பெயர்[3அ] , பேர்ச் -மரத்தின்

பெயர், ஓரா- ஜேர்மனியநாணயம்[3ஆ], ஸ்வாட்ட் பான் (svarta faen) - (கறுப்பர்களுக்கெதிரான) வசைச்சொல்

### 2.1.2 ஜேர்மன் மொழிச்சொற்களும் சொற்றொடர்களும்[4]

Nein , Niemal - இல்லை இருக்காது, Doch,Doch – அப்பிடித்தான், Liebling Tier – செல்லப்பிராணி, Tante – அத்தை , Scheisse, Dumme Leune and I hre Kommischen Regeln – முட்டாள்களும் முட்டாள்தனமான சட்டங்களும் , Lich – காதல், Egal – பரவாயில்லை , Heiraten – கல்யாணம் , Shade – pity, Nicht zu schlimm – அத்தனை மோசமாக இல்லை, Hubschen maedschen – வெகு அழகான குட்டி , Schoeme – அழகான , Zohn putzen – பல்லை விளக்குதல், Zu viel – ஏராளம், Heim - இல்லம், Ich glaube nicht – நான் நம்ப மாட்டேன், Volfuf காரர்கள் - அவசர அழைப்புக்காரர்கள்4 ,Guten Tag – Good day/ வணக்கம், Pension – லொட்ஜ். U-Bahn – சுரங்க ரயில், Papier – பத்திரம்/பேப்பர், StarBe – வீதி, Sozial-amt – சமூக உதவிகள் நல்கும் அலுவலகம், Meyer – ஒரு சூப்பர் மார்க்கற், Lehrer – டீச்சர், Kneipe – Pup/பார், Pizza – அப்பம் (இத்தாலிய வகை), Tschuss – பை பை bye bye , Termin – Appointment/ சந்திப்பு இணக்கம், Danke – நன்றி, Tour – சுற்று/திடம், Buro – bereau/ஒபிஸ், Schlitz – பிளவு, Schnell – வேகம் , Nocheine - இன்னொன்று, Bundesamt – அரசாங்க அலுவலகம், Keine Arbeit - மிகப்பெரிய சூப்பர் மார்க்கெட் ஒன்று, Abschiebung – deportation/ திருப்பி அனுப்புதல் , Lunda/ Trodet Market – பழம்பெரும் அங்காடி, Keller – (நில) களஞ்சியம், KADEWE – மிகப்பெரிய சூப்பர் மார்க்கெட் ஒன்று, Automat – சிகரெட் /ப்லிம் ராக்கலேட் போன்றவற்றுக்கான தானியங்கிகள், Chef – முதலாளி, Stadt – நகரம், Prosit – Cheers - சியர்ஸ், Kollege – நண்பன், Puff – விபச்சாரவிடுதி, Scheisse – Shit என்பது போன்ற வசவு வார்த்தை

### 2.1.3. பிரெஞ்மொழிச் சொற்கள்[5]

செவ் - chief, அவிசி – notice, எஸ்கலியர் - escalator, கார்டு – card, போன்கு – good day , பாத்துமா – apastment, மேத்ரோ – underground railway, பீரோ – office , பே சீற் - pay sheet , கொப்பன் - boy friend, கத்கோ – கேக், மிசு – ஐயா, அத்தோசியம் - கவனம், இனியான் - வாடிக்கையாளர்கள், வீப் துஸ்வித்தாய் - உடனேயே, காத் ஒரேஞ் (carte orance) – (பிரெஞ் நாட்டு) சீசன் ரிக்கெற், பத்திரோன் - முதலாளி , முவா – நான், துவா – நீ, சலாத் - பிரெஞ்சுக்காரர் சாப்பாட்டிற்கு முன்னோ பின்னோ எடுக்கும் பச்சிலை உணவு, அடையான் - பிரான்சில் வாழும் தமிழர்களுக்கு அல்ஜீரியர்

கொடுத்துள்ள பட்டப் பெயர், எயிட் குசினியர் - சமையல் உதவியாளர், பீவ்தேக் - இறைச்சித் துண்டு, மேர்ஸி – நன்றி, யுவல் - அசுத்தங்களைக் கழுவ பயன்படும் ஒரு திராவகம், சுப்பிளி மோந்தையர் - ஓவர் ரைம் காசு, கய்ஸில் - காசுப் பட்டறை, புளோசிங் - கோப்பை கழுவுதல், கபேக்கிரும் - பால்கோப்பி, கபே – காப்பி, திறேசோந்தி – மிக இனியவர், குப்பு – சிநேகிதி, சிண்டிக்கா – தொழிற்சங்கம், பப்பி – விசா, கிறேவ் - வேலைநிறுத்தம், கொனார் - பிரெஞ்சில் வழங்கும் தூஷணை வார்த்தை, ஹரிஸா –ஒரு வகை மிளகாய்ச்சம்பல், புறமா ஜூம் - சீஸ், சோமாசு – வேலையிழந்து சொற்ப உதவிப் பணத்துடன் இருக்கும் காலகட்டம், Pourquai pas? – ஏன் கூடாது

**2.1.4. இற்றாலிய மொழி[6]:**

**2.1.4.1.பழமொழி:**

Donnee buoi paese tuoi (பெண்களும் காளை மாடுகளும் உங்களுங்கள் நாட்டிலேயே..எடுக்கப்பட வேண்டும்)

**2.1.5. கனேடிய மொழி7:**

Il mondo e paese – the world is a village/L'animasoul

**2.2.** மேற்கூறியவாறான பிறமொழிச்சொற்கள் புகலிடத் தமிழ் படைப்புகளில் நான்கு விதமான முறைகளில் இடம்பெறுகின்றன. அவையாவன:

i . பிறமொழிச்சொல்லை தமிழ் வடிவத்தில் எழுதுதல்:

எ- டு. "மொப்பும் வாளியும் என்னை வேலைக்குத் துரிதப்படுத்த...."[8]

ii. அடைப்புக்குறிக்குள் மூலமொழிச் சொல்லிற்கான விளக்கம் தருதல்

v- L. " வயது பதினாறாக ஒரு கொப்பனும் (boyfriend) நெருக்கமானது"[9]

iii. மூலமொழிச் சொல்லை எழுதிவிட்டு அடைப்புக்குறிக்குள் அதற்கான தமிழைத் தருதல்

v - L. I ch glaube nicht (நான் நம்ப மாட்டடேன்)[10]

iv. மூலமொழிச் சொல்லை மட்டும் எழுதுதல்

v - L. பொப்பலவாய்11
ரோவகெத

**2.3.** ஆங்கிலமொழி பேசாத ஐரோப்பிய நாடுகளுள் பிரான்ஸ், ஜேர்மன், நோர்வே ஆகிய நாடுகளுக்கே ஈழத்தமிழர் பெருமளவு புலம்பெயர்ந்து சென்றுள்ளார்கள். அவ்வந்நாடுகளிலிருந்தே பெருமளவு படைப்புகளும் எழுந்துள்ளன. எனவேதான் மேற்குறிப்பிட்ட மொழிச்சொற்கள் தமிழில் இடம்பெற்றுள்ளன.

மேற்குறிப்பிட்ட மொழிகளுள் பிரெஞ்மொழிச்சொற்கள் சில முன்னைய காலங்களில் தமிழில் இடம்பெற்றிருப்பினும் நோர்வேஜிய மொழிச் சொற்களும் ஜேர்மன்மொழிச் சொற்களும் முதன்முதலாக இப்போதுதான் தமிழில் கலக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னைய காலங்களில் கலந்துள்ள பிறமொழிச்சொற்களுள் பெரும்பாலானவை பெயர்ச்சொற்களேயாகும். மாறாக இப்போது பெயர்ச்சொற்கள் மட்டுமன்றி சொற்றொடர்களும் கலந்துள்ளமை கவனத்திற்குரியது. முன்னைய காலப் பிறமொழிச்சொற்களுள் பெரும்பாலானவை அன்றாட வீட்டுப் பாவனைப் பொருட்கள் சார்ந்தனவாக அமைய இவை அவற்றோடு போக்குவரத்து, உரையாடல், தொழிலகம், உறவு முதலான பயன்பாடுகள் சார்ந்தனவாக உள்ளமை விதந்துரைக்கற்பாலது.

**3.1.** புகலிடமொழிச்சொற்கள் படிமங்கள், குறியீடுகள், அணிகள் என்ற விதங்களில் இடம்பெறுதல்:

**3.1.1 குறியீடுகளுக்கு** உ-ம்: (நேரடியாகப் பயன்படுத்தல்)

"..................................

இலையுதிர்த்தி நிற்கும்
ஓக் மரத்தின் கீழே
துனித்தலையும் மக்பாய் இழிவாக எனை நோக்கும்!
'மக்பாய் மக்பாய்
எல்லாப் பறவைகளும்
என்னுடைய தாய் நாட்டின் திசைகளிலே
சூரியத் திசை தேடிப் புலம்பெயரும்
குளிர் நாளில்
நீ மட்டும் இந்தத் துருவத்தில் தரித்ததென்ன?'
மக்பையோ "உனக்கிவைகள் புரியாது
என்பதுபோல் தலையசைக்கும்
'எனக்கிவைகள் புரியாதா?'
'உனக்கெப்படிப் புரியும் ?

(துருவப்பிரதேசத்து ஏனைய பறவைகள் குளிர் காலத்தில் இடம்பெயர்ந்தாலும் 'மக்பை' பறவை இடம்பெயர்வதேயில்லை: ஆகவே மக்பை இடம்பெயராதோரின் குறியீடு ஆகும்)

**3.1.2. படிமங்கள்:** உ-ம்: (தமிழ் வடிவில் பயன்படுத்தல்)

v-L:.i. கட்டிடக்காட்டினில்[13]

v-L:.ii. பனிவயல் உழவு[14]

v-L.iii. நிலவு மெல்ல இறங்கி வந்து
பனி வயலில் மேய்கிறது[15]

v - L. iv. இலையுதிர்த்துப் பனியுடுத்திய
மரங்களுடே[16]

v- L. v. "துருவக் கண்ணில்
தூக்கக் கலக்கம்"[17]

**3.1.3. அணிகள்:**

v - L. i (நேரடியாகப் பயன்படுத்தல்)
"வைக்கிங் வீரர் கை ஈட்டிகள் போல
விறைப்பாய் நின்ற பைன் மரக் காட்டை"18

v- L. ii (தமிழ் வடிவில் பயன்படுத்தல்)
வான் நோக்கிக் கையுயர்த்தி தொழுகின்ற
கறுப்பர்கள் போல்
இலையுயர்த்தி நிற்கும்
ஓக் மரங்களின் கீழே...[19]

v-L.iii. சூல் கொண்ட பன்றியின் கருவறை போன்ற
பிராங்போட் நகரச் சந்தில் ஓர் அறை20

v - L. iv. இரு மருங்கிலும்
ஏவுகணைகளாய்க் கொங்கிறீட் எழுந்து
முகில்களுக்கு முதுகுசொறியும்
நியூயோார்க் நகர வீதியில்[21]

**4. வாக்கிய அமைப்புகளில் மாற்றங்களேற்படுத்தல்:**

புகலிடத் தமிழ் எழுத்தாளர்கள் ஆங்கில மொழியை அதிகளவு பயன்படுத்துவது காரணமாக ஆங்கிலமொழி வாக்கிய அமைப்புகள் அறிந்தோ அறியா-மலோ அவர்களது படைப்புகளில் இடம்பெற்றுவிடுவதை அறிய முடிகிறது. உதாரணமாக நாவலாசிரியை இராஜேஸ்வரி நீண்ட காலமாக லண்டனில்

வாழ்ந்தவராதலால் அவரை அறியாமலே ஆங்கில மொழியின் வசன அமைப்பு அவரது தேம்ஸ்நதிக்கரையில் என்ற நாவலில் ஊடுருவி நிற்பதைக் காணலாம். இதனால்இ தமிழ் வாக்கியம் தமிழ் முறைப்படி எழுவாயுடன் ஆரம்பித்து பயனிலையுடன் முடிவுறுவதற்குப் பதிலாக ஆங்கில முறைப்படி எழுவாய் பயனிலை என்பவற்றின் பின்னரும் முற்றுத்தொடராக (Clause) நீண்டு செல்வதை பின்வரும் உதாரணங்களுடே அவதானிக்க முடிகிறது.

i. "அவன் குரலில் தெரிந்தது எவ்வளவு தூரம் நடுங்குகிறான் என்று"[22]
ii. "மேசை நிறையக்கிடந்த புத்தகங்களிலிருந்து தெரிந்தது யோகன் எப்படிப்பட்ட ஆள் என்று"[23]
iii. "எரிச்சலுடன் கத்தினான் யசோதரனைப் பார்த்து"[24]

## 5. உரையாடல்களும் தலைப்புகளும் பிறமொழிகளில் அமைதல்:

**5.1** ஆங்கிலமொழி பேசுகின்ற நாடுகளாயினும்சரி ஆங்கிலமொழி பேசாத நாடுகளாயிஞ் சரி படைப்பாளர்கள் பலர் பாத்திர உரையாடல்களில் ஆங்கில மொழியை பெருமளவு கையாள்கின்றமை குறிப்பிடத்தக்கது. இது பல விதங்களில் அமைகின்றது.

### 5.1.1 மொழிப்பிரயோகம் ஆங்கிலத்தில் அமைதல்:

v-L i. "தாடையில் வழிந்த இரத்தத்தைத் துடைத்துக் கொண்டு 'கை you understand only the language of violence, then come..' என்று கோ தயாரானான். இந்தப் பிரதிபலிப்பை கரிசன் சற்றும் எதிர் பார்க்கவில்லை." [25]

v - L ii. Tram ஆல் இறங்கி சும்மா கால்போன போக்கில் நடந்தாள் சாந்தி26

v - L iii. "தந்தையின் கடை இருக்கும் இடத்தில் இருந்து கொண்டு தொட்டாட்டு வேலைக்காக கொண்டுவரப்பட்ட பையனோடு இவளுடைய அக்கா தொட்டாட்டு வேலைகளில் ஈடுபட்டதால் வீங்கிய வயிற்றைக் கண்டு அந்தத் தோட்டக்காட்டுப்பெடியனை கசைந பண்ணி (அதாவது நெருப்பால் சுட்டு வேலையிலிருந்து நீக்கி) பிள்ளைக்கு வயித்தில கட்டி வளருது என்று ஊர்வாயை மூட முயற்சித்து யாரோ ஒரு பரியாரியைப் பிடித்து அவளுடைய கற்பை fall reconditioning செய்து இவளுடைய அத்தாருக்கு 'கன்னிகாதானம்' செய்து கொடுத்தது போல்....மூன்றாம் வகுப்புடன் உயர் கல்வியை முடித்துக்கொண்டு சீமெந்து பையில் சுற்றிய உடமைகளுடன் on the jop training க்காக சிங்கள நாட்டுக்கு யாரோ ஒரு முதலாளியுடன் அனுப்பப்பட்டு தொழிலைக் கற்றுக் கொண்டு minding his own business செய்யும் ஐந்து விரல்களிலும் மோதிரம் போட்ட யாராவது ஒரு

முதலாளிக்கு திருவிழாக்காலங்களில் இரவுகளில் கோயிலுக்குப் பக்கத்தில் இருக்கும் பள்ளிக்கூடத்திற்குள் என்னோடு ஒதுங்கியும் தன் கற்பைத் தவிர மற்ற எல்லாவற்றையும் இகழ்ந்த இவளை குடும்ப பாரம்பரியத்தை மீறாமல் கட்டிக்கொடுத்திருக்கக் கூடும்"[27]

v - L: iv.

"ஒரு சிறு story

(Dialoque..rk:ghrid...... Dialoque rk;ghrid... Dialoque)

தத்துவங்கள் வித்துவங்கள்தான் தொக்கும் உத்தியெல்லாம். 'ம' 'கித்துவங்கள்' ஆகிவிட....மண்டை...

ஆ. with the bullshit world wouldn't change you wouldn't change, virtually although bold blunder may change the virtue

'உனக்குப் புரியாதவற்றையும் எனக்கும் எவருக்கும் புரியாத மாதிரியானவற்றையும் வெறும் தண்ணீர் - பச்சை உருசாக் கிழங்கு – முட்டாள் தத்துவமாய் பேசி எதைக்கிழுத்தெடுக்கப் போகிறாய்

ஆ. Don't. don't even open your. friken mouth you noodle head! I think your brain e-quilibrium has been smashed by your so- called intciotual by perbole,you stupid..."[28]

### 5.1.2. மொழிப்பிரயோகம் இருமொழிகளிலும் அமைதல்:

v - L. "டெலிபோன் மணி கிணுகிணுக்கிறது
மச்சான் டெலிபோனை ஒருக்கா எடு
'ஹலோ' ........................
ஸ்பீக் டு சாந்தன் ...who is speaking there? மீரா ? From where ...preston ...ok Just a minute."[29]

**6.** இதுவரை எடுத்துக் காட்டியவாறு புகலிடத்தமிழ் பெறுகின்ற மாற்றங்கள் ஏன் ஏற்படுகின்றன என்று சிந்திப்பது அவசியமாகின்றது.

**6.1.** பிறமொழிச்சொற்களைப் பொறுத்தளவிலே அவை தமிழில் இடம்பெறுவது தவிர்க்கவியலாதது. ஏனெனில் புகலிடத் தமிழ் மக்கள் தாம் வாழ்கின்ற நாட்டவரோடு தொடர்புகொள்ளாமல் இருப்பதென்பது இயலாததொன்று. எனவே, இச்சூழலைப் பிரதிபலிக்கின்ற படைப்புக்களில் அவர்தம் மொழிப் பிரயோகங்களைப் பயன்படுத்தவேண்டியதும் இன்றியமையாததேயாம். இதுபற்றி ஆய்வாளரொருவர் பின்வருமாறு கூறியிருப்பது கவனிக்கத்தக்கது:30

"புலம்பெயர்ந்தோரின் புதிய சமூகம், சூழல், பண்பாடு என்பவற்றோடு சம்பந்தப்பட்ட பல அம்சங்கள் அவ்வவ் மொழிகளிலேயே உணர்த்தப்படுகின்றன. மொழி பண்பாட்டோடு இரண்டறக் கலந்திருப்பதால் சில பதங்கள் இலகுவாக மொழிபெயர்க்க முடியாது. எனவே தமிழில் சிலர் பேசும் போது ஜேர்மன், சுவிடீஸ், டேனிஸ் பதங்களைக் கலந்து பிரயோகிப்பது நடைமுறைக்கு வந்துவிட்டது. இதைக் குறியீட்டு மாற்றம் (code switching) என மொழியியலாளர் அழைப்பர்"

படிமங்கள், குறியீடுகள், அணிகள் என்பவற்றின் பயன்பாட்டுநிலையும் இத்தகைய சூழலால் உருவாவதேயாம்.

**6.2.** ஆயின் தமிழ் படைப்புகளிலே ஆங்கிலச்சொற்கள், தொடர்கள் வாக்கியங்களின் பயன்பாடு தவிர்க்கவியலாத சூழலில் ஏற்படுகின்றதா என்ற கேள்வி எழுகின்றது.
பாத்திரங்களின் உரையாடல் அவர்தம் பேச்சுமொழியில் இடம்பெறுவது தவிர்க்கவியலாததே. இடம்பெறும் பாத்திரங்கள் புகலிட நாட்டுப் பாத்திரங்களாயின் அவர்தம்மொழி இடம்பெறுவது இயல்பானதே. (5.1.1. v - L: I அத்தகையது)

ஆயின், பெரும்பாலான படைப்புக்களில் தமிழ்ப் பாத்திரங்கள் உரையாடுகின்றபோது சூழலைப்பொறுத்துச் சில சந்தர்ப்பங்களில் பிறமொழிச்சொற்கள் இடம்பெறுவதில் எத்தகைய தவறுமில்லை.

ஆனால், நடைமுறையில் பெரும்பாலான படைப்புகளில் ஆங்கிலச் சொற்கள் வசனங்கள் அநாவசியமாக இடம்பெறுவதனை அவதானிக்க முடிகின்றது. (5.1.1.v-L.iii)

படைப்பாளர்கள் தமது அன்றாட வாழ்வில் அவ்வாறு ஆங்கில மொழியைப் பயன்படுத்தி வருவதே இதற்குக் காரணமாக வேண்டும். அல்லது ஆய்வாளரொருவர் கூறியது போன்று[31]

"அதிகப்படியான ஆங்கில வாக்கியங்களின் பிரயோகமும் இவர்கள் தங்கள் கதைகளைச் சொல்வதிலுள்ள அவசரத்தைக் காட்டுகிறது"

எவ்வாறாயினும் இதனால் தமிழ் வசனநடை பெறுகின்ற சிறப்புகள் எதுவுமில்லை என்றே கூற வேண்டும். ஈழத்தில் வதிகின்ற எழுத்தாளர்களின் படைப்புகளில் இவ்வாறான ஆங்கில மொழிப் பிரயோகம் பெருமளவு இடம்பெறுவதில்லை.

ஒப்பீட்டு ரீதியில் தமிழக எழுத்தாளர்கள் ஆங்கில மொழிப்பிரயோகத்தை மேற்கொண்டாலும் புகலிடத் தமிழ் எழுத்தாளர்கள் போன்று அதிகளவில் கையாள்வதில்லை.

**7. முடிவுரை:**

இதுவரை எடுத்து விளக்கியவாறு புகலிடத்தமிழ் காரணமாக தமிழில் கலந்த பிறமொழிச் சொற்களின் வரவும், வசன அமைப்பு பிரயோகங்களும் முன்னைய காலங்களில் பிறமொழிகள் காரணமாக ஏற்பட்ட மாற்றங்கள் போன்று பரந்துபட்ட அளவிலும் வலுவாகவும் ஏற்பட்டதாகக் கூற முடியாது. ஏனெனில், முன்னர் ஏற்பட்ட மாற்றங்களுக்கான வலுவான காரணங்கள் (v-L: ஆட்சிச் செல்வாக்கு) புகலிட நாடுகளில் உருவாகியிருக்கவில்லை.

மேலும் மேற்கூறியவாறு புகலிட இலக்கியங்களூடாக தமிழில் ஏற்பட்ட மாற்றங்கள் எண்ணிக்கை குறைந்த வாசகர் மட்டத்திலேயே அறியப்பட்டுமுள்ளது.

அதேவேளையில் பிறமொழிச் செல்வாக்கு இலக்கியப் பயன்பாட்டிற்கப்பால் பேச்சுமொழிப் பயன்பாட்டில் இடம்பெற்று வந்துள்மை பற்றியும் கவனிப்பதவசியமாகும். இதுதொடர்பாக ஆய்வாளரொருவர் பின்வருமாறு குறிப்பிட்டிருப்பதும் கவனத்திற்குரியது.[32]

''பிறமொழிச்சொற்கள் பேச்சு வழக்கிலே அதிகம் இடம்பெறுகின்றன. உரை நடையில் ஓரளவுதான் இடம்பிடிக்கின்றன. செய்யுளில் அந்நியமொழிச் சொற்கள் அருகியே இடம்பெறுகின்றன. அதனால் எழுத்து மொழியை மாத்திரம் வைத்துக்கொண்டு பிறமொழிச்சொற்களுக்கு எல்லை வகுக்க முடியாது. பேச்சு வழக்கில் மாத்திரம் இடம்பெறும் அந்நிய மொழிச் சொற்கள் காலப்போக்கில் விழவும்கூடும். உரைநடை தற்காலத்தில் முக்கிய இடம்பெறுவதாலும் பேச்சுவழக்கையொட்டி உரைநடையமைய வேண்டும் என்ற கருத்து உரம்பெற்று வருவதாலும் இன்றைய பேச்சு வழக்கிலிடம்பெறும் பிறமொழிச் சொற்கள் தமிழ் மொழியில் நீண்ட ஆயுள் உடையனவாகலாம்''

புகலிடத் தமிழர் மத்தியிலும் அவ்வந்நாட்டு மொழிப் பிரயோகங்கள் தவிர்க்கவியலாத விதத்தில் கணிசமாக இடம்பெற்றிருக்கும் என்று கருதுவதில் தவறில்லை. ஆயின் கால அடைவில் இது அபரிமிதமான வளர்ச்சியை எட்டுமாயின் தமிழ்மொழி வெவ்வேறு கிளைமொழிகளாவதற்கும் வாய்ப்புள்ளது. எனவே இவ்விதத்திலான ஆய்வொன்றும் அவசியமாகின்றது.

## அடிக்குறிப்புகள்

1. இவ்விதத்திலான முக்கியமான சில ஆய்வுகள்:
சித்திரலேகா மௌனகுரு, இலங்கைத் தமிழரின் புலம்பெயர் இலக்கியம், சுதந்திர இலக்கிய விழா அமைப்புக் குழு, நுகேகொட, 1995.

2. வேலுப்பிள்ளை.ஆ.பேராசிரியர், தமிழ் வரலாற்று இலக்கணம், குமரன் புத்தக இல்லம், மீள் அச்சு 2002, பக். 22-29.

3 .தம்பா, துளிர்க்கும் கனவுகள் துருவச்சுவடுகள், நோர்வே, 1989, பக்.30

3அ. ஜெயபாலன் வ.ஐ.ச., வ.ஐ.ச.ஜெயபாலன் கவிதைகள் - பெருந்தொகை, சென்னை 2000, பக்.151

3ஆ. நக்கீரனார் சுவடுகள் - 53 நோர்வே 1993/94

4. i. கருணாகரமூர்த்தி பொ., கிழக்கே போகும் சில மேகங்கள், ஸ்நேகா சென்னை, 1995 பக்.134
   ii. கருணாகரமூர்த்தி பொ., கூடுகலைதல் கனவுப்பட்டறை, சென்னை, 2005, பக். 72, 74, 82, 84, 86, 87, 80, 92

5. கலாமோகன், நி'டை எக்ஸில் வெளியீடுஇ பரீஸ் 1999, பக்.37 – 48, 57

6. சிறீசுக்கந்தராசா அளவெட்டி, சிறீசுவின் சில கவிதைகள், மித்ர வெளியீடு, சென்னை 2003, பக். 24 பக். 52 பக். 63

7. சிறீசுக்கந்தராசா அளவெட்டி, மே.கு.நூா. பக்.24, 52, 63

8. தம்பா துளிர்க்கும் கனவுகள் துருவச் சுவடுகள் நோர்வே 1989 பக். 30

9. கலாமோகன் மு.கு.நூா. பக்.5

10. கருணாகரமூர்த்தி பொ. மு.கு.நூா.பக்.72

11. முல்லையூரான் சுழற்சி தொகுப்பு மு.கு.நூா.பக்.164-165

12. ஜெயபாலன் வ.ஐ.ச. வ.ஐ.ச. ஜெயபாலன் கவிதைகள் பெருந்தொகை சென்னை 2000 பக்.151

13. செல்வம், கட்டிடக் காட்டுக்குள் ஆசியா, பிரான்ஸ் 1992

14. திருமாவளவன், பனிவயல் உழவு, எக்ளில் வெளியீடு, பிரான்ஸ் 2000

15. திருமாவளவன் மே.கு.நூா.பக். 38

16. திருமாவளவன் மே.கு.நூ.பக். 45
17. திருமாவளவன் மே.கு.நூ.பக். 71
18. ஜெயபாலன்.வ.ஐ.ச. மு.கு.நூ. பக். 118
19. ஜெயபாலன்.வ.ஐ.ச. மே.கு.நூ. பக். 151
20. ஜெயபாலன்.வ.ஐ.ச. மே.கு.நூ. பக். 213
21. ஜெயபாலன்.வ.ஐ.ச. மே.கு.நூ. பக். 219
22. இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், தேம்ஸ் நதிக்கரையில், பாரி நிலையம் சென்னை, 1992 பக்.95
23. இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் மே.கு.நூ. பக்.105
24. இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் மே.கு.நூ. பக்.46
25. மாத்தளை சோமு, ஒரே இனம், தொகுப்பு பனியும் பனையும்.மு.கு.நூ. பக். 35
26. ரதி நிறமில்லை தொகுப்பு: பனியும் பனையும் மு.கு. நூ. புக்.80
27. ஜோர்ஜ் குருசேவ் Ex. அலைகளில் தொகுப்பு மு.கு.நூ. பக்.364
28. சிறீசுக்கந்தராசா அளவெட்டி மு.கு.நூ. பக். 100
29. யாழ் பாஸ்கர் ஓய்வு நாள் தொகுப்பு: பனியும் பனையும் மு.கு.நூ.பக்.63
30. சுரேஸ் கனகராஜா இன்னுமொரு காலடி லண்டன் தமிழர் நலன்புரிச் சங்கம் 1998 பக். 36
31. சுஜாதா கோபுரவாயில் தொகுப்பு பனியும் பனையும் மு.கு.நூ. பக். 6
32. வேலுப்பிள்ளை பேராசிரியர் ஆ. மு.கு.நூ. பக்.27-28


*With Best Compliments*

*from*

# NEW FEMINAH TEX

**All kinds of Textiles, Gifts, Eversilver, Cosmetics & Baby Items Etc.**

No. 272, Galle Road,
Bambalapitya Govt. Flats,
Colombo 04
Tel : 2594756



*With Best Compliments from*

# SUNRISE
FOOD CITY

Groceries, Fresh Vegetables,
Fruits & Jaffna Products Wholesale & Retail
Home Delivery available

No. 6, 37th Lane, Wellawatte, Colombo 06
Tel : 0117207046

# கவிதைப் போக்குகள்

''உள்ளத்துள்ளது கவிதை - இன்பம்
உருவெடுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த தமிழில் - உண்மை
தெரிந்துரைப்பது கவிதை''

என்னும் கவிமணி தேசியவிநாயகம் பிள்ளையின் குரல் மறுமலர்ச்சிக் கவிதையுலகில் தனியிடம் பெற்றுள்ளது. கவிதைக்கு உருவம் அமையும் போதே இன்பம் விளைகிறதென்றும், உண்மையைத் தெரிந்துரைப்பதில் குறிக்கோள் நிறைவேறுமென்றும் கவிமணி கவினுறவே உணர்த்துகின்றார்.

திரைப்பாடல்களில் கண்ணதாசன் பழந்தமிழ் மரபுச் செல்வத்தை விடாது அமைத்துப் போற்றிப் புது வடிவம் ஆக்கியதைச் சில சான்றுகளில் காணலாம்.

''அன்று வந்ததும் அதே நிலா
இன்று வந்ததும் அதே நிலா''

என்று பாடுங் கவிஞர்

''அன்றைத்திங்கள் அவ்வெண்ணிலவின்
எந்தையும் உடையேம் எம் குன்றும் பிறர்கொளார்
இற்றைத் திங்கள் இவ்வெண்ணிலவின்
வென்றெறி முரசின் வேந்தர் எம்
குன்றும் கொண்டார் யாம் எந்தையும் இலமே?

என வரும் புறநானூற்றுப் பாடலை மறவாது பாடியுள்ளார்.

''அன்றொருநாள் அவனுடைய பேரைக் கேட்டேன்
அடுத்தநாளில் அவனுடைய ஊரைக்கேட்டேன்''

என்னும் திரைப்படப்பாடல்,

''முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவளிருக்கும் வண்ணங் கேட்டாள் ....

எனவரும் திருநாவுக்கரசர் வாக்கின் மறுகுரலாக ஒலிக்கின்றது.

தமிழினத்தின் தொன்மை குறித்துப் பேசுவோர்

''கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு
முன் தோன்றி மூத்தகுடி''

என்ற புறப்பொருள் வெண்பாமாலை அடிகளைக் குறிப்பிடுவர். இதனை மறவாது கண்ணதாசன்

''கல்தோன்றி மண் தோன்றுமுன் தோன்று தமிழே
கவிமழையில் ஆடிவரும் கன்னி இளமயிலே''

என்று தமிழ், முன்னைப் பழமைக்கும் பழமையாயப் பின்னைப் புதுமைக்கும் புதுமையாய்ப் பெயர்ந்தொளிரும் பெற்றியினைப் புலப்படுத்தியுள்ளார்

''எனக்கும் உனக்கும் இசைந்த பொருத்தம்
என்ன பொருத்தமோ!''

என்று இராமலிங்க அடிகளார் பாடிய பாடல்.

''அவர்க்கும் எனக்கும் உறவு காட்டி
அருள் புரிந்தது கதையா?''

என்று மீண்டும் ஒரு வடிவந்தாங்கி வந்துள்ளது இக்குரல்,

''உனக்கும் எனக்கும் உறவு காட்டி
உலகம் சொன்னது கதையா?''

என்ற இசைப்பாடலில் மேலும் தெளிவாக ஒலிக்கக் கேட்கலாம்.

''விதியென்னும் குழந்தை கையில் உலகந்தன்னை
விளையாடக் கொடுத்திட்டாள் இயற்கையன்னை''

என்று பாடும் பட்டுக்கோட்டையார் தத்துவநோக்கிலும் பாடி மக்கள் மொழி நடையில் மக்களின் இதயங்களைக் கவர்ந்து காலம் மறவாப் பெருமைக்குரிய பாவலரானார்.

''இரை போடும் மனிதருக்கே
இரையாகும் வெள்ளாடே''

என்று பட்டுக்கோட்டையார் பாடிய திரைப்படப்பாடல் அரும் வாழ்க்கைத் தத்துவம் கொண்டு திகழ்கிறது.

இரையுண்ணும் வெள்ளாடு இரையாகும் அவலம் போலவே மனிதரும் உணவு தேடியுண்டு காலனுக்கு உணவாகின்றனர். இதைப் பாரதியார்

''தேடிச்சோறு நிதந்தின்று - வெகு
சின்னஞ்சிறுகதைகள் பேவி - மனம்
வாடித்துன்பமிகவுழன்று - பிறர்
வாடாப் பல செயல்கள் செய்து - நரை
கூடிக் கிழப்பருவம் எய்தி - கொடுங்
கூற்றுக்கிரையெனப்பின் பாயும் - சில
வேடிக்கை மனிதரைப் போலே - நானும்
வீழ்வேன் என்று நினைத்தாயோ?''

என்று கவிதைக் குரலாக்கினார்.

''செய்யுந் தொழிலே தெய்வம் - அந்தத்
திறமைதான் நமது செல்வம்
கையுந் காலுந்தான் உதவி - கொண்ட
கடமை தான் நமக்குப் பதவி''

என்னும் பட்டுக்கோட்டையாரின் பாடலடிகள் உழைப்பாளரின் உயரிய வேதமாகின்றது. எளிய திரைக்கீதமானகின்றது. ''உலகத்தொழிலனைத்தும் உவந்து செய்வோம்'' என்று பாரதியார் பாடிய செய்தியில் தொழிலின் கண்ணியம் மட்டும் உணர்த்தப்படுகிறது. பட்டுக்கோட்டையின் மேற்காணும் பாடலில் உழைப்பாளரின் உள்ளக் குரல் புத்துலகிற்கேற்ப இசைக்கின்றது.

வாழ்வின் உண்மைகளோடு தத்துவங்களுக்கும் பட்டுக்கோட்டையார் மனிதன் ஒவ்வொருவனுக்கும்,

''சட்டப்படி பார்க்கப்போனா
எட்டடிதான் சொந்தம்''

என்று உருகப் பாடினார்.

உவமைக் கவிஞர் சுரதா இதே செய்தியைப் பாடும் போதே

''ஆடி அடங்கும் வாழ்க்கையடா
ஆறடி நிலமே சொந்தமடா''

என்று நயமுறப்பாடி, பாடையைக் காலில்லாக் கட்டில் என்னும் மரபுணர்த்தி இசைத்தார்.

‘‘காதல் காதல் காதல்
காதல் போயின்
சாதல் சாதல் சாதல்’’

என்று பாடினார் பாரதியார், மேலும் அவர்

‘‘காதலினால் அறிவெய்தும் - அந்தக்
காதற்கவிதைப் பயிரை வளர்க்கும்’’

என்றும் பாடினார்.

காதற் கவிதைகளை இசைப்பாடல் வழியே கேட்கும் இக்காலத்தே,

‘‘காதல் என்பது தேன்கூடு - அதைக்
கட்டுவதென்றால் பெரும்பாடு’’

என்று இசைக்கக் கேட்கின்றோம்.

கபிலரின் நற்றிணைப் பாடலில்

‘‘தாமரைத் தண் தூது ஊதி மீமிசைச்
சாந்தின் தொடுத்த தீந்தேன் போல’’

எனவரும் கருத்தே மிளிரக் காண்கிறோம். காதலைப் போற்றும் வளமார்ந்த சொற்களில் பட்டுக்கோட்டையார்.

‘‘நெஞ்சில் கூடுகட்டி வாழுங் குயிலோ’’

என வருணிப்பது பழமையான உணர்வுக்குப் புது வடிவம் தருவதாகும்.

சங்க இலக்கியம் முதல் பாரதியார் காலம் வரை போற்றப்பட்ட காதல், இக்காலக் கவிஞர் குரலிலும் சிறந்து ஒலித்து உணர்வில் ஓங்கி மறுமலர்ச்சித் தமிழினை வளப்படுத்தி வருகின்றது. பழமையில் வேர் விட்டுப் புதுமையில் கிளை படர்ந்து செழித்து நிற்கும் ஆலமரமாய்க் கவிதை பிறக்கிறது. மரபுக் கவிதைகளில் காணலாகும் மாட்சிமைகளைக் காண்பதோடு சமுதாய நோக்கமைந்த கீர்த்தியும் இக்காலக் கவிதைகளில் இலங்கிடக் காணலாம்.

திரு. எஸ். சிவகுமார் B.A.(Dip in Edu)

# அறிவியல் தமிழ்

அறிவியல் தொழிலியல் கல்வியில் முன்னேற்றம் காணச் சிறந்த முறை தாய்மொழி வாயிலாகக் கற்பது தான் என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. தாய்மொழியில் எல்லாக் கல்வியும் கற்பிக்கப் பெற்றால் தான் நம் நாட்டு மாண-வர்கள் மிக விரைவில் கல்வியறிவு நிரம்பியவர்களாக விளங்குவார்கள். தாம் பெற்ற கல்வியைப் பற்றி மேலும் ஆழ்ந்து சிந்தித்து அறிவு வளம் பெற்றால் பல புதுமைகளைப் படைக்கின்ற ஆற்றலை அவர்கள் பெறுவார்கள். நமது குறிக்கோளை அடைய இக்கலைச் சொல் தொகுப்புப் பெரிதும் பயன்படும்.

*1. மொழிபெயர்ப்பும் புதுச்சொற்படைப்பும்*

தமிழ் அறிவியல் நூல்களிலும் கட்டுரைகளிலும் காணும் கலைச் சொற்கள் அமைப்பை மூவகைப்படுத்தலாம்.

1. ஆங்கிலத்திலிருந்து மொழி பெயர்த்து அமைத்தல்
2. புதுச் சொற்கள் படைத்தல்
3. ஒலிபெயர்ப்பு (Transliteration)

இவ்வியல் எங்ஙனம் கலைச்சொற்கள் மொழி பெயர்க்கப்பட்டுள்ள என்பதையும் புதுச் சொற்கள் படைக்கப்பட்டுள்ளன என்பதையும் விளக்குகின்றது.

*மொழிபெயர்ப்பு*

பிறமொழிக் கலைச்சொற்களை மொழி பெயர்ப்பதன் மூலம் தமிழ்மொழியில் கலைச் சொற்களைப் பெருக்கிக் கொள்ளலாம். பிற மொழிக் கலைச்சொற்களைத் தமிழில் மொழிபெயர்க்கப் பயன்படும் மொழிபெயர்ப்பு முறைகள் பின்வருமாறு.

1. ஆங்கிலச் சொல்லை நேருக்குநேர் பெயர்த்துச் சொல்லாக்கம் செய்யும் முறையில் பல சொற்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

உ+ம் :
eye drop - கண்சொட்டு
air ship - காற்றுக்கப்பல்
injection fold - ஊசி மடிப்பு

2. பிறமொழிச் சொற்களிலுள்ள மூலக்கருத்தை உணர்ந்து மொழி பெயர்க்கும் முறையும் காணப்படுகின்றது.

உ+ம் : life cycle - வாழ்க்கை வரலாறு

3. ஆங்கிலத்தில் சுருக்கக் குறியீடாகக் காணப்படும் 'PH' போன்றவற்றில் விளக்கமான மொழி பெயர்ப்பும் காணப்படுகின்றது. சிலர் 'PH Level' என்பதை அமிலத்தன்மை வரம்பு என மொழி பெயர்த்துள்ளனர்.

அறிவியல் துறைகளை விளக்க 'இயல்' என்ற சொல் பயன்படுத்தப்படுகின்றது.

உ+ம் :
ecology - சூழ்நிலையியல்
physics - பௌதிகவியல்

தமிழில் முன்னொட்டு மறு, எதிர் என இருவகையாக மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

உ+ம் :
readjustment - மறுநிலை
reaction - எதிர்வினை

mess என்ற விகுதி சில சொற்களில் தத்துவம் என வடமொழி விகுதியைப் பயன்படுத்தி எழுதப்பட்டுள்ளது.

மருத்துவ ஆங்கிலக் கலைச் சொற்களில் வரும் 'itis' என்ற விகுதிக்கு இணையாகத் தமிழில் 'அழல்' என்னும் சொல்லைக் காணலாம்.

உ+ம் :
Lymphangitis - வடிநீர்க்குழல்அழல்
Laryhgitis - மிடற்றழல்
eucephalitis - மூளை நரம்பு வட உரையழல்

செயல்வினைகளை எடுத்துக் காட்டும்சொற்கள் 'தல்' விகுதியை இணைப்பதன் மூலம் உருவாக்கப்பட்டுள்ளன.

உ+ம் :
திரளுதல் - coagulation
கசிதல் - exudation
சிதைதல் - cracking
எரியூட்டுதல் - ighite

வினையடியோடு தொழிற் பெயர் விகுதியான 'வு' வைச் சேர்ப்பதன் மூலம் சில சொற்களை உருவாக்கியுள்ளனர்.

உ+ம் :
Vibration - அதிர்வு
Pour - பாய்வு

Leakage - கசிவு

தொகையாற்றல் பெற்ற சொற்கள் சொல்லாக்கத்திற்கு உதவுகின்றன. 'மின்' என்பது மின்சாரத்தைக் குறிக்கும் சொல்

உ+ம் :
electricity - மின்சாரம்
electro magnetism - மின் காந்தம்

*புதுச்சொல் படைப்பு*

இரு பெயர்ச் சொற்களை ஒன்றாகச் சேர்த்துத் தொகைகளை உருவாக்குவதன் மூலம் பல புதுச் சொற்கள் ஆக்கப்பட்டுள்ளன.

உ+ம் :
உடற்கவசம் - armour
கற்காரை - concrete
உடற்புரதம் - Vitamin

பண்புத் தொகைகளும் வினைத் தொகைகளும் சொல்லாக்கச் சொற்களில் மிகுதியாக இடம் பெறுகின்றன.

உ+ம் :
வெண்காரம் - Borax
உழுபொறி - Tractor

'ஆன்' பகுதியைச் சேர்த்தும் பல சொற்கள் ஆக்கப்பட்டுள்ளன.

உ+ம் :
நுரைப்பான் - Aoaming agent
உமிழ்வான் - Emitter
இறைப்பான் - Pump

*ஒலி பெயர்ப்பு*

பிறமொழிச் சொற்களைக் கடன்வாங்கும் போது அம் மொழியின் சிறப்பொலிகளைத் தமிழில் எழுதுவதே ஒலிபெயர்ப்பாகும். இன்றியமையாத இடங்களில் பிறமொழி ஒலிகளைத் தமிழ் ஒலிப்படுத்தி ஏற்கலாம் எனத் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். ஆனால் இப்பொழுதுள்ள அறிவியல் நூல்களில் பிறமொழிச் சொற்களைத் தமிழ் ஒலிப்படுத்துவதில் ஒரு சீரான முறை காணப்படுவதில்லை.

ஆங்கிலச் சொல்லிலுள்ள ஒலிப்பின் வல்லொலியும் ஒலிப்பிலோ வல்லொலியும் தமிழில் ஒரே வடிவத்திலேயே குறிக்கப்படுகின்றது.

உ+ம் :
turbine - டேர்பைன்
diesel - டீசல்

மொழி முதல் 'N' பெரும்பான்மைச் சொற்களும் 'ந' வாகவே பெயர்க்கப்பட்டுள்ளது. ஏனைய இடங்களில் 'ன' ஆங்கில 'N' ஐக் குறிக்கின்றது.

உ+ம் :
Nylon - நைலோன்
Dynamo - டைனமோ

எனவே ஒலிபெயர்ப்புச் சொற்களில் ஒருமைப்பாடு காணப்படவில்லை. ஒரே பிறமொழிச் சொல் பல அறிவியல் அறிஞர்களாலும் பலவிதமான வடிவ வேறுபாடுகளுடனும் மொழி பெயர்க்கப்படும் சூழ்நிலை அதிகமாகக் காணப்படுகின்றது. சொற்களை ஒலிபெயர்ப்புச் சொய்யும் போது சில ஆசிரியர்கள் மரபு நெறிப்படி பெயர்க்கின்றனர். மற்றச் சிலரோ, மரபு இலக்கணத்திற்கு நெகிழ்ச்சியளித்து ஒலிபெயர்க்கின்றனர்.

***Rubber* - *ரப்பர்***

பிறமொழிக் கலைச் சொற்களுக்கு இணையான புதிய சொற்களை நாம் படைத்துக் கொள்கிறோம். சில மொழி பெயர்க்கப்படுகின்றன. அடுத்து, சொல்லாக்கத்திற்குப் பயன்படுவது தொகைச் சொற்களாகும். தொகைகளை ஆக்கிக் கொள்வதிலும் மொழி ஓர் ஒழுங்குமுறையைக் கையாள்கிறது. கைக்கடிகாரம் என்ற தொகைச்சொல் ஒத்துக் கொள்ளப்பட்ட ஒன்று ஆனால் விரல் மோதிரம் என்ற தொகை வழக்கில் இல்லை என்று கூறுவர். சில அறிஞர்கள் மொழி பெயர்ப்புச் சொற்களை இலக்கணப் புணர்ச்சி விதிகளுக்கு முக்கியத்துவம் அளித்துப் படைத்துள்ளனர். Bone - என்பு, ஏறக்குறைய வழக்கிழந்த சொல்லாகி விட்ட இதனைப் பயன்படுத்துவதை விட, தற்போது வழக்கிலிருக்கும், மிகவும் பழக்கமான 'எலும்பு' என்ற சொல்லே மிகப் பொருத்தமாக இருக்கும்.

கலைச்சொல் மொழி பெயர்ப்பில் இது போன்ற இலக்கண விதிகளைச் சிறிது தளர்த்துவதன் மூலம் தமிழ்மொழி வளத்தைப் பெருக்கலாம்.

***S.R. Jeyakumar***
*B.Sc, PGDE, PGDCT*

# என்னை குத்திக் காட்டியது - என் தமிழ்!!!

தாத்தாவின் மூக்குக் கண்ணாடிகை தவறி விழும் முன்
சொன்னேன் ('Sorry') தாத்தா என்று ...

தூங்கும் போது கழுத்து வரை போர்த்தி விடும் கருணை
தூக்கத்திலும் சொல்வேன் ('Thanks'ம்மா) என்று ....!

நாளை நண்பனின் பிறந்தநாள் - இன்றே வாழ்த்து அட்டையில்
எழுதினேன் ('Happy Birthday da') என்று

காலையில் என் நண்பர்களை பார்க்கும் போது முதலில் ('Hai')
என்று சொல்லித்தான் .... ! பேச ஆரம்பிப்பேன் ....

என் எழுத்தை தொடரமுடியாமல் மை தீர்ந்துவிட்டது
உன் ('Pen')ஐத் தா என்றேன்

முன்னால் ஓடியவர்களைப்பிடிக்க ஓடினேன்
மயங்கிய என் தலைமேல் சுற்றிய ('Fan') ஐக் கண்டேன்

எவ்வாறழைப்பது ('what you call') என்றேன்
என்னவர்கள் செய்வதை ('Very good') என்றேன்

இரவில் வீட்டிற்கு செல்லும் வழியில் - என் காலில் குத்தியது
முள் 'அம்மா' என்று அலறினேன் குத்தியது முள்ளில்லை

என்னைக் குத்திக் காட்டியது - என் தமிழ் ...!
நீ தமிழன் என்று, (தமிழனிடம் தமிழில் பேசுங்கள்)

*S.R. Jeyakumar*

**இருக்கிறது**

இல்லாததாய்
இருக்கிறது
குட்டிசுவர்
மட்டும்

**வீடு**

எருக்கலம் பூத்தாலும்
பாழாய்ப் போகவில்லை
செருக்களப்படைகள்

**காவல்**

முன்றில்
எருக்கலப்
பூக்காடு
பாழாகாதபடி
காக்கும் படைகள்
பெருநோக்கோடு

**பாத்திரங்கள்**

சிதறிக் கிடந்தன
பாத்திரங்கள் வீட்டில்
சிதறிக்கிடந்த
என்
பெற்றோரைப்போல.

**அகம்படும்பாடு**

ஓய்ந்தது போர்
பார்த்த போது
விட்டோடிய
உயிர்களின்
தடங்களோடு
பாடுபடுகிறது
வீடு

**விளைச்சல்**

சல்லடையாய்
குட்டிச்சுவர்
தெறித்துப்போன
தருக்கள்
தெரிந்தது
போரின்
விளைச்சல்

**தமிழனுக்கு.... இனி**

எரிந்த குடிசை
எழுந்த பறவை
பரந்த தரணி
பரணி காட்சி
பாலை வனமாய்
எரிகிற வெயில்
மண்ணுக்கு இல்லை
ஒரு உயில்
தமிழனுக்கு.... இனி

**அறுவை**

தெருவின் நடுவே
சிகிச்சை செய்யினம்
அறுவை
என்ன?
வீதி
திருத்தப்படுகிறது

ஆசிரியர்
வ. சாந்தகுமார் B.A.(Hons) PGDE
றோயல் கல்லூரி

# பரதக்கலையும் யோகக்கலையும்

கலைகள் அறுபத்து நான்கு என பாரத தேசம் வகைப்படுத்தியுள்ளது. அவற்றுள் பரதம் யோகம் என்னும் இரு கலைகளும் மனிதனின் உடல், உள ஆரோக்கியத்திற்கு ஆற்றும் பங்கு சொற்களுக்குள் அடங்காது இவ்விரு கலைகளும் மனித வாழ்வின் பூரணத்துவத்திற்கு உதவுகின்றது.

நாம் இத்தரணிதனில் பிறந்ததன் நோக்கம் என்ன? என்று பார்ப்போமேயானால் நம் பிறவிக்கடனைத் தீர்ப்பதற்காகவே தான். அந்த வகையில் இக்கலைகள் அக்குறிக்கோளை அடைய இலகுவான வழிகளாகும். இரண்டுமே தெய்வீக கலை களாக மட்டுமன்றி பல்லாயிரம் ஆண்டுகள் தொன்மை சிறப்பு நிறைந்தவை என்றால் யாரும் மறுப்பதற்கில்லை. ஏனைய கலைகள் மனிதனின் தனிப்பட்ட திறமையை எடுத்துக் காட்டுவனவாய் இருக்கையில் யோகக்கலையும் நாட்டியக்கலையும் அதற்கு மாறாக இருக்கின்றது. இயற்கையில் இறைவனைக் காணும் பண்பும் இறை இன்பத்தை தான் பெறுவது மட்டுமன்றி மற்றவர் பெறவும் வழிசெய்யும் இரு கலைகளாக திகழ்கின்றன எனலாம். இயற்கையில் இறைவன் உறைகின்றவன் என்பதையும் மனிதன் தன் ஐம்புலன்களான மெய், வாய், கண், மூக்கு, செவி என்பவற்றின் மூலம் இவ்நாட்டிய யோக கலையை வெளிப்படுத்துவதன் மூலம் தாம் மட்டுமின்றி ஏனையவரும் அதனுள் ஈடுபட செய்கின்றது எனலாம். இவ்விரு கலைகளும் "ஓம்" என்னும் பிரணவ வடிவாய் திகழ்கின்றது.

நாட்டியக் கலையும் யோகக்கலையும் இன்பமே வடிவாய் விளங்குபவை. இவை மனிதனுக்கு துன்பம் வரம் முன் காக்கும் வல்லமை கொண்டவை. மனிதனில் சிந்தனையை ஒருமுகப்படுத்தி காக்க வல்லவை.

பரதக்கலையும், யோகக்கலையும் பாரத தேசத்தில் தோன்றினாலும் இன்றைய அளவில் இரு கலைகளும் உலக நாடுகளில் பரவி திகழ்கின்றன. சீன நாட்டில் காணப்படும் கராத்தே, குங்பு போன்றவற்றின் அடிப்படை யோகக் கலையாகவே காணப்படுகின்றன.

யோகக்கலை பாரதத்திற்கு முன்பாகவே பாரசீகத்தில் இருந்திருக்க வேண்டும் என்று ஆய்வாளர் கருத்து யுஜ் என்ற பதத்தில் இருந்தே யோக என்ற பதம் வந்திருத்தல் வேண்டும்.

சீனச் சண்டை பயிற்சிகள் கூட யோகக் கலையை அடிப்டையாகக் கொண்டே பயிற்றுவிக்கப்படுகிறது. இதனால் அத்தகைய சண்டை முறைகளைப் பயின்றவர்கள் நிதானமும் தீர்க்கமுமான முடிவையும் பொறுமையும் கடைப்பிடித்தனர்.

யோகக் கலையானது ஒரு புனிதமான கலையாகும் மனிதனின் எத்தகைய தேவவை-களையும் இறை நம்பிக்கையையும் வளர்க்கும் உன்னதமான கலையாகும். இத்தகைய அபரிமிதமான சக்தி யோகக் கலைக்கு உள்ளது என்றால் அது மிகையாகாது.

இனி பரதக்கலையினை பார்த்தோமேயானால் இக்கலை சுமார் சிலப்பதிகாரம் தோன்ற முன்னமே தோன்றியதாகக் கூறப்படுகின்றதே தவிர இன்று வரை சரியாக அறியமுடியாத நிலையில் இருந்து வருகின்றது.

பரதக் கலையானது ஓர் அற்புதக் கலையாகும். இக்கலையானது ஜீவாத்மா, பரமாத்மா பரம தத்துவத்தைக் கொண்டுள்ளது. இவ் ஜீவாத்மா பரமாத்மா தத்துவமானது அக்கலையை கற்றவரும் பார்ப்பவரும் உணரும் வகையில் அமைந்துள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது.

யோகக் கலையானது எமது உடலை மட்டுமல்லாது எமது உள்ளார்ந்த இறை உணர்வை தூய்மையை ஏற்படுத்தவல்ல ஒரு அருங்கலையாக திகழ்கின்றது.
இவ் இரு கலைகளும் எம்பெருமான் ஈசனால் அருளப்பட்டதாக கூறப்படுகிறது. இறைவனாலேயே அருளப்பட்ட இக்கலை ஆன்ம ஈடேற்றத்திற்கு வழி செய்கின்றது என்பதும் கவனிக்கத்தக்க ஓர் விடயம் ஆகும்.

இவ்விரு தொடர்பு கொண்டுள்ளதை நாம் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டுள்ளதை நாம் அவதானிக்க கூடியதாக உள்ளது. அந்த வகையில் எமது மனதை அமைதிப்படுத்த இரு கலைகளான நாட்டியக்கலையும் யோகக்கலையும் உதவுகின்து.

இரண்டுமே ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டுள்ளது. அதன் தோற்றம், வரலாறு அதன் ஆடல் அமைப்புக்கள் என்பவற்றை நோக்கும் போது அதை உணரலாம். மனதை அமைதிப்படுத்தவல்லன. அதுவும் இன்றைய இயந்திர வாழ்க்கையை மேற்கோள்ளும் எம்மனைவருக்கும் ஏற்றது.

பரதக் கலையினதும் யோகக்கலையினதும் தொடர்பை நாம் நடராசரின் 108 கரண நிலைகளிலும் யோக ஆசன நிலைகளின் வாயிலாக காணக்கூடியதாக உள்ளது.

மேலும் எமது உடலின் ஒவ்வொரு உடல் பாகங்களினதும் ஆரோக்கியத்தைப் பேண இவ்விரு கலைகளிலும் அடவுகள், யோக ஆசனங்கள் மூலமாக ஏற்படுத்திக் கொள்ள முடிகின்றது. நரம்பு தசை என்பவற்றை ஆரோக்கியமானதாக செயற்படுத்த யோக, பரத நிலைகள் உதவுகின்றன.

ஆசிரியை : செல்வி. க. தாட்ஷாயணி BFA
றோயல் கல்லூரி

# வீழ விடுவமோ நாம்?

நீர் கண்டு பல நாட்களாகிப்போன
நிலம் போல நின்றார்கள் சோதரர்கள்.
யார் கண்டு அவர் புண்ணை ஆற்ற வந்தார்?
எதைக்கொண்டு அவர் நெஞ்சச்சூடணைப்பீர்?
ஊர் கண்டு ஒதுங்கித்தான் போனபோதும்
உலகத்தின் ஒளி இல்லாத் துயரின் போதும்
வேர்செத்த மரம்போல வீழும் அவர்கள்
விம்மியழும் உயிரோசை கேட்குதம்மா.

நோயுற்ற உடல் அழுகி சீழும் வீழ
நுரைதள்ளித் தெருவோரம் கிடந்து வாழும்
தேய்வுற்ற சோதரர்கள் கண்ணீர் எல்லாம்
தேகத்தைக் கண்டல்ல! ஒதுங்கிச்செல்லும்
ஓய்வற்ற மானிடர்காள்! நீங்கள் தள்ளி
ஒதுக்கிட்ட நிலை தந்த கண்ணீரன்றோ!
சாய்வுற்றுக்கிடக்கின்ற அவர்கள்பாடல்
சாவுக்கும் வாழ்வுக்கும் நடுவிலம்மா!

விடுதலையும் சுய உணர்வும் வேண்டும் என்ற
வேட்கையினால் கோஷமிடும் எனது மக்காள்!
தொடுதலுக்கும் அஞ்சி மிகத் தூரத்தள்ளி
தீண்டாமை வட்டத்தைக் கீறிப் போனீர்.
முடிவதில்லை அவர்களாலே வட்டம் தாண்ட!
முன்பு நின்று கதறுகின்ற குரலைக்கேட்பீர்!
விடுதலையும் சுய உணர்வும் யார்க்கு வேண்டும்?
விம்மியழும் குரல் கேட்டு அழுவோர்க்கம்மா!

உலகத்தின் துன்பமெல்லாம் கூடினாலும்
உங்கள் நிராகரிப்பளித்த துயரைத் தாண்டா.
உலகத்தின் இருப்பிற்கு அப்பால் உள்ள
இருண்ட பெரு வெளிக்குள் அவர் தள்ளப்பட்டார்.
மலரொன்றைப் பிய்த்தெறிந்து பூச்சிதின்ன
மகிழ்ததனைப் பார்க்குமொரு வாழ்வும் வாழ்வா?
பலர்வாழ சிலர் சாகச் சொல்லும் உங்கள்
பசிமிக்க பேய்க்கூட்டம் மாறாதம்மா!
கனவுக்குள் இல்லையிந்த வாழ்க்கை! சுற்றிக்
காணுவீர் துன்பங்களே எஞ்சி நிற்கும்!
கனவுக்குள் நெய்யப்பட்ட ஆடையில்லை!
காணுவீர் கந்தல்களே விஞ்சி நிற்கும்!
கனவுக்குள் கனவொன்றாய் மாறிப்போனால்
காண்பதற்கு நீர் இருக்க மாட்டீர் மக்காள்!
கனவுக்குளிருக்காமல் இறங்கி வந்தால்
கண்ணீரைக் கண்டழுது மனிதராவீர்!

இழிவு, பழி, புறக்கணிப்பை சோதரர்க்கு
எழுதிவைத்தார் தலைவிதியாய் முன்னவர்கள்.
இழிந்தவர்கள் யார் என்றே கேட்கும் காலம்
இப்போது வந்ததடா! கேட்பாய் தம்பி!
பொலிவுபெற்ற வாழ்க்கையினைக் கனவுகாணப்
புலம்புவோர்க்கு சோதரரில் அன்பு இல்லை.
நலிவு பெற்று நடுநடுங்கி விட்ட கண்ணீர்
நாம் துடைத்து அணைக்காமல் நிற்பதில்லை.

புறக்கணிப்பைத் தவிர பெருங் கொடுமையில்லை
புறக்கணிக்க அவர்களென்ன பாவஞ்செய்தார்?
இரக்கமிக்க இதயமொன்றை எடுத்துப் பூட்டி
இது பற்றிச் சிந்திக்க எழுந்து வாரும்.
புறக்கணிக்கும் கொடுமையாலே உரிமை போகும்
புதைகுழிக்குள் விழுந்தவர்க்கு கைகொடுக்க
இரக்கமிக்க மனிதர்களாய் எழுந்து வாரீர்.
இன்று மாற்றம் இல்லாவிட்டால் நாளை இல்லை.

**வி விமலாதித்தன்**
கல்லூரி மாணவத் தலைவர் 2004/2005
உபதலைவர், றோயல் கல்லூரி தமிழ் விவாத அணி 2004/2005
செயலாளர், இந்து மாணவர் மன்றம் 2003/2004

*With Best Compliments*

*from*

**NIMAL HARDWARE**

**General Hardware Supplier,
Government & Co-operation
Garments Factory,
Cement, Torsteel,
Specialist in Bolt & Nut**

No. 315, Colombo Road,
Kiriwandala, Puwakpitiya,
Avissawella.
Mob : 071-2334599, 077-3416028
Tel: 036-3791619

*With Best Compliments*

*from*

**CHANDRA TRADING**

405, Galle Road,
Wellawatte, Colombo 06
Tel : 0112 364190

*Best Wishes*

*from*

**WINDSOR BOOK SHOP**

No. 372, Galle Road,
Colombo 6
Tel : 0112589081

*With Best Compliments*

*from*

**Shower BASE**

STYLE INNOVATION

*Bathware, Sanitaryware, Accessories,
Tiles & Granites*

GROHE

Asian Standard

24/1, Main Street, Dharga Town, Sri Lanka
Tel : 0777 308227, 034 2270930
Email : showerbase@yahoo.com

# புதுக்கவிதைகளில் இளைஞர்கள்

20ஆம் நூற்றாண்டின் இலக்கியக்காலத்தை ஆய்வாளர்கள் நாவல் இலக்கியம், சிறுகதைஇலக்கியம், புதுக்கவிதை இலக்கியம் என்பர். இந்நூற்றாண்டில் புதுக்கவிதையே வானளாவிய வளர்ச்சியடைந்துள்ளது. இப்புதுக்கவிதைகளில் இளைஞர்களின் நம்பிக்கைகளையும் வெற்றிகளையும் குறித்த செய்திகளை இக்கட்டுரையில் காணலாம்.

**கவிதை:**
மனிதன் உணர்ச்சிகளின் மொத்த உருவம். சூழ்நிலைக்கு ஏற்றவாறு உணர்ச்சி அலைகள் எழுகின்றன. மலையைப்பார்க்கும் பொழுதுமனம் உயர்வுபெறுகின்றது, விம்முகிறது. வறுமையைக் காணும் போது வாடி வதங்குகிறது. இது போன்ற உணர்ச்சி அலைகள் தான் கவிதைகளாக மலர்கின்றன. கவிதைகளில் பாடு பொருள்கள் ஆண்டிற்கு ஆண்டு மாற்றம் பெற்று வருகிறது. குறிப்பாக இப்பத்தாண்டு கால எல்லைக்குள் அதிகமாக இளைஞர்களின் கனவுகளைப் பற்றியும் அவர்களின் எதிர்கால இலக்குகளையும் குறிவைத்து எழுதி குவித்துள்ளனர்.

**நம்பிக்கை:**
ஏழைகளின் எல்லையில்லா சொத்து நம்பிக்கை. இதனை இன்றைய இளைய சமுதாயத்திற்கு ஏசுவிற்கு விழுந்த சாட்டையடியாக இளைஞனைப் பார்த்து கவிஞர்சிற்பி,

"இளைஞனே
பருவநெருப்பில்
காய்ச்சியவாளே!
நாளைஎன்பது
உன்திருநாளே
நினைவிருக்கட்டும்
உன்
புருவநெருப்பில்
பூகம்பங்கள்
இமையைத்திறந்தால்
சூர்யோதயங்கள் ..."

என்றுஆசிரியர் இளைஞனின் நம்பிக்கைக்குத்தூபம் இட்டுள்ளதைக் காணமுடிகின்றது. மேலும் நம்பிக்கையை மட்டும் இழந்துவிடக்கூடாது என்பதனை,

"நீ
தலை நிமிர்ந்து நடந்தால்
நீலவானம் குடை பிடிக்கும்
தாழ்ந்து இழிந்து குனிந்தால்
கைக்குட்டையும் எட்டாத
வானமாகும்"

என்ற வரிகளைப்படிக்கும் ஒவ்வொரு இளைஞனும் தன்னையறியாமல் தன்னம்பிக்கையை வளர்த்துக்கொண்டு பூமித்தாயை முத்தமிடுவான்.

**சிறுத்தையேவெளியேவா!**

சோம்பித்திரிபவர்களையும் வாழ்க்கையின் பயனை அறியாதவர்களுக்கும் துப்பாக்கியிலிருந்து புறப்படும் தோட்டாக்களாக சிற்பி இளைஞனை விழித்து அழைக்கின்றார்.

"வா
நீ வெல்ல
விண்வெளி காத்திருக்கிறது
நீ பந்தாட
கிரகங்கள் காத்திருக்கின்றன
புழுதிகளையும்
பிரளயமாக்க
விழிதிற!
வெற்றி உனக்கு முன்
கொடியெடுத்துப்போகிறது
வருக இளைஞனே! வருக"

என்ற வரிகள் நம்பிக்கை முடமானவனை நன்னம்பிக்கை முனையாக தட்டி எழுப்புகிறது.

**தவறவிட்டதைப் பிடித்துக்கொள்:**

இன்றைய இளைஞர்கள் வயதில் வாலிப விளையாட்டுகளிலும் திரைப்படச் சுருளிலும், கல்ர்கனவுகளிலுமே காலத்தை தொலைத்து விடுகின்றனர். மேலும் தொலைப்பதற்கு என்ன இருக்கிறது? தயங்காதே என்று தமிழன்பன்,

"சந்தனம் மணத்தைச்
சந்தைகளில் தேடுவதில்லை
தென்றல் குளிர்ச்சியைத்
தெருக்களில் பெறுவதில்லை

உன் வாழ்வை
உன்னைத் தவிர்த்து
வேறெங்கு தேடுகிறாய்"

என கேட்கும் பொழுது கவிஞரும் ஒரு சில காலங்களில் தன் வாழ்வை தொலைத்து விட்டுத்தான் பின்பு தேடிக்கண்டுள்ளார் என்பதை இவ்வரிகளில் காண முடிகின்றது.

இவர் இளைஞர்களின் கடமையாக, குறிப்பிடும்போது,

"கடமைவாக்கியத்தில்
வார்த்தைகளாய்
இருப்பவர் மட்டுமே
உரிமை உதடுகளால்
உச்சரிக்கப்படுவார்கள்"

என்று இளைஞர்களின் மனநிலையை உளவியல் பார்வைக்கொண்டு தெளிவுபடுத்துகிறார்.

**ஏமாறாதே:**
வாழ்க்கையில் ஏமாறாமல் வெற்றி பெற்றவர்கள் ஒரு சிலரே. ஏமாறியவர்கள் பல. எனவே இளைஞனைப் பார்த்து மேலும் சில நம்பிக்கை மழையைத்தனவுகிறார்.

"உன் கிழக்கில் கூட
அஸ்தமனம்தான்
விதைக்க மறந்தவனே
உனக்கேன் அறுவடை ஞாபகம்"

என்னும் போது ஊமை இளைஞனும் கண்ணீர் விடுகிறான். இனி நாம் ஏமாறலாமா? என தன்னைத்தானே வினா எழுப்பிக் கொள்கிறான்.

**இளைஞன் இளைஞிகளின் ஒற்றுமை:**
இன்றைய இந்திய இளைஞர்களின் ஒற்றுமையும் முன்னேற்றமும் மேலோங்கிய நிலையில் உள்ளது என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். இதனை கவிஞர் மீரா தம் கவிதைகளில் பல்வேறு இடங்களில் சுட்டிக் காட்டியுள்ளார். அவைகளில்,

"இந்திய இளைஞனே
இந்திய இளைஞியே
காந்தி நேரு
அப்துல்கலாம் அடிகளார்

அருகாடேவீஸ் அருணா ஆசப்
இந்திரா சரோஜினி
இவர்களையெல்லாம்
நெஞ்சில் பச்சைக்குத்தி
நிறுத்துங்கள்"

என்று குறிப்பிடுகிறார். இவ்வரியைப்படிக்கும் ஒவ்வொரு இளைஞனின் இதயத்திலும் ஏதோ ஒன்று கனக்கிறது. மேலும் வாழப்பிறந்தவனுக்கும் சாதிக்கத்துடிக்கும் இளைஞனுக்கும் வானம், கிரகம், பூமி, கடல் இவையெல்லாம் ஏணிப்படிகளாகஉள்ளது என்பதனை கவிஞன் தமிழன்பன்,

"உன்னுள் கடல்
கடலுள் நீ.
இந்தப் பெருமிதத்தோடு
எழுந்து நில்
உன் உச்சிக்கான
ஏணி கேட்டு
நாணிக்குனியும"

என்று இளைஞனின் மனதில் நம்பிக்கைப்பாலை ஊட்டும் கவிஞரின் வரிகள் முடமானவர்களையும் முழு மனிதனாக்கும் என்பது உறுதி.

முடிவில், 21-ஆம் நூற்றாண்டின் இளைஞர்களைப் பூமிப்பந்தையே புரட்டிப்போடும் புத்தி கூர்மையுடையவர்களாக உருவாக்க புதுக்கவிதைகள் பல வழிகளில் ஏணிப்படியாக உள்ளன. இளைஞன் இளைஞியர்கள் ஒற்றுமையுடன் ஏமாறாமல் நம்பிக்கையோடு முன்னேற வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது.

"இன்றைய
இளைஞர்கள்
இடிமின்னலையும்
காலடியில் வைப்பார்கள்"
என்பது மட்டும் மறுக்க முடியாத உண்மை ஆகும்.

விஷாகன் சுந்தரமூர்த்தி
மாணவ தலைவர் 2008/2009
இதழாசிரியர் தமிழ் இலக்கிய மன்றம் 2007/2008
தலைவர் தமிழ் நாடக மன்றம் 2007/2008

# இந்த ஞாலமும் பொய்தானோ?

மழைத்தூவானம் ஜன்னலில் பட்டு புத்தகத்தில் தெறித்துக் கொண்டிருந்தது. ‘நீர்நிலையியல்’ புத்தகம் நீர்த்திவலைகளில் நிறைந்து கொண்டிருந்தது. மெதுவாக ஜன்னலை சாத்தியவாறே நேரத்தைப் பார்த்தான் ஹரி.

‘அடடா 5.30 ஆயிடுச்சே’ என்ற முணுமுணுப்போடு புத்தகத்தை மூடிவைத்து விட்டு எழுந்துநின்றான். வழமைக்குமாறாக அந்த நூலகமே வெறிச்சோடிக் கிடந்தது. மனித நடமாட்டமே இல்லை வாயில்காப்பாளன் கூட அங்கே இல்லை. அந்த சூழ்நிலையை வியந்தவாறே நூலகத்தை விட்டு வெளியே வந்தான். வெளியிலும் யாருமே இல்லை. பல்கலைக்கழகத்தை விட்டு வெளியில் வந்து பார்க்கையில் அந்த இடமே ஏதோ மயான அமைதியில் ஆழ்ந்திருந்தது. வழக்கமாக 5.30 மணிக்கு திருவிழாவாக இருக்கும் அவ்விடம் ஏதோ சூன்ய பிரதேசமாக மாறியிருந்தது. ஆனால் தூரத்தில் ஒரே ஒரு மனிதன் மட்டும் வித்தியாசமாக கையில் ஏதோ துண்டுப் பிரசுரங்களை வைத்துக் கொண்டு யாருக்காவது கொடுக்க நின்றிருந்தான்.

‘‘யாருமே இல்லாத இடத்தில் யாருக்கடா நோட்டீஸ் கொடுக்கிற’’ என்று நினைத்தவாறு ஹரி அவனை நோக்கிச் சென்றான். திடீரென்று கையை நீட்டி ஒரு நோட்டீசை ஹரியின் கையில் அவன் திணித்தான். அந்த மனிதன் ‘‘இவனுகளுக்கு வேற வேலையே இல்லை’’ என்று புலம்பியவாறு என்னதான் அது என்று விரித்துப்பார்த்த ஹரிக்கு திக்கென்றிருந்தது. அது ஒரு மரண அறிவித்தல். அதுவும் ஹரியின் மரண அறிவித்தல் ... பேய்த்தனமாக யாரோ சிரிக்கும் சத்தம் - அந்த இடம் முழுதும் எதிரொலித்தது. அந்த சிரிப்பு சத்தம் மெதுவாக எந்திர ஓசையாக மாறியது. மிகவும் கொடுமையான ஒலி; காலையில் அலறும் அலார ஒலி போல - அவ்வளவு கொடுமையாக இருந்தது. இல்லை அது உண்மையிலேயே அலார ஓசைதான்.

மெதுவாக கையை நீட்டி அலாரத்தை நிறுத்த யத்தனித்தான் ஹரி. வழக்கமாக வைக்கும் இடத்தில் அலாரம் இல்லை. ‘‘சே! அதுக்குள்ள விடிஞ்சிருச்சா!’’ என்று சலித்தவாறு மெதுவாக கண்ணைத் திறந்து பார்த்தபோதுதான் விளங்கியது அவன் இருப்பது படுக்கையறையில் இல்லை நூலகத்தில் என. ‘‘இங்கேயே இரவு தூ ங்கிட்டனோ’’ என சுற்றும் முற்றும் பார்த்தான் ஹரி. அலாரம் இன்னும் அடித்துக் கொண்டுதான் இருந்தது. ‘‘நூலகத்தில் யாருடா அலாரம் வைத்தது!’’ என அதிசயித்தவாறே மேசைக்கு அடியில் தேடிப்பார்த்தான் ஹரி. அங்கும் இல்லை. ‘‘ஆனால் மிக அருகில் சத்தம் கேட்கிறதே’’ என நினைத்தவாறு மெதுவாக நிமிர்ந்தான். அவனுக்கு எதிரில் ஒருவர் அவனையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்.

ஹரி பயத்தில் கத்தியே விட்டான்.

அந்த மனிதரோ சாவகாசமாக ‘‘பயப்படாதீங்க ஹரி!’’

‘நீங்க யாரு? எப்பிடி இங்க வந்தீங்க? என் பெயர் எப்பிடி இவங்களுக்குத் தெரியும்?’’

- கேள்விகளை அடுக்கினான் ஹரி.

‘‘எங்களுக்கு எல்லாருடைய வரலாறும் தெரியும்!’’

‘‘என்ன சார் ஞானி மாதிரி பதில் சொல்றீங்க நீங்க யார் அதச் சொல்லுங்க!’’

‘‘நாங்கதான் உங்களைப் படைத்தவர்கள்’’ - அந்த மனிதர் சிரித்தார்.

‘‘அப்படியே வெளியில போனீங்கன்னா 134ம் நம்பர் பஸ் வரும் அதில ஏறி அங்கோடைக்கு போயிடுங்க! இப்ப என்ன படிக்க விடுங்க!’’ ஹரி கத்தினான்.

‘‘இப்ப உங்களுக்கு கனவில நோட்டீஸ் கொடுத்தாரே. அவரும் எங்கட ஆள்தான்’’ - ஹரிக்கு வியர்த்துவிட்டது.

‘‘யாருங்க நீங்க? உங்களுக்கு என்ன வேணும்?’’ - பயத்துடன் கேட்டான் ஹரி.

‘‘சரி முதல்ல நாங்க எங்களப் பற்றித் தெளிவா சொல்றோம்! பிறகு நாங்க கேட்கிறத நீங்க செய்ய வேண்டும் சரியா?’’

‘‘........’’

‘‘நாங்க உங்களுக்கு ரொம்ப அருகில் இருக்கும் ஒரு கிரகவாசிகள். கிட்டத்தட்ட 350 ஒளியாண்டுகள் தான் தூரம். நாங்க முதன்முதலாக பூமியைக் கண்டுபிடிக்கும் போது அங்கு மனித இனமே இருக்கவில்லை. பாரிய மிருகம் ஒன்றுதான் பூமியை ஆண்டது. அதை நீங்க ‘டைனோசர்’ என்று பெயரிட்டிருக்கீங்க! அப்பொழுது எங்க மூதாதையர்கள் ஒரு பெரிய இரசாயன ஆயுதம் ஒன்றை பூமியில போட்டு அந்த மிருகங்கள அடியோடு அழிச்சாங்க! நீங்க இன்னும் டைனோசர் எப்பிடி அழிஞ்சிச்சுன்னு ஆராய்ந்து கொண்டிருக்கீங்க. பிறகு பல மில்லியன் ஆண்டுகளுக்குப் பிறகு இன்னொரு குழு பூமியை அடைந்த பொழுது கூர்ப்பின் உச்சியில் இருந்தது மனிதக் குரங்குகள் என்ற இனம்தான். நாங்க அதில ஒரு ஜோடியை பிடிச்சுக்கொண்டு போய் சில செயற்கையான மாற்றங்களை செய்து பூமியில் விட்டோம்! அவங்க யார் தெரியுமா?’’

‘‘தெரியாது சார்’’ - வெறுப்போடு கூறினான் ஹரி.

‘‘ம்! ஆதாமும் ஏவாளும்’’ தான் அவங்க!

சரி! பிறகு பல மில்லியன் ஆண்டுகளுக்கு பிறகு இன்னொரு ஆராய்ச்சிக்குழு

வந்திறங்கிய போதுதான் ஒரு உண்மையை உணர்ந்தாங்க! அதாவது மனித இனம் மிகவேகமாக கூர்ப்பில முன்னோக்கி போய்கொண்டிருக்கு! இப்படியே பே-ானா பூமிக்கு மட்டுமில்ல! எங்களுடைய கிரகத்துக்கே கூட ஆபத்து வரலாம் என உணர்ந்து கொண்டாங்க!''

''இதற்கும் எனக்கும் என்ன சம்பந்தம்?''

''நீயும் மனிதன் தானே! - அவன் சிரித்தான். பிறகு தொடர்ந்து பேசத் தொடங்கினான்.

''இந்த கூர்ப்பின் வக்கிரத்தை நாங்க நிறுத்தப் போறோம்!''

''இவ்வளவு சக்தியிருக்கிற நீங்க பேசாம 'டைனோசர' அழிச்சமாதிரி மனிதனையும் குண்டு போட்டு அழிச்சிருக்கலாமே?''

''பிறகு எங்கட வேலைகளைச் செய்ய அடிமைகளுக்கு நாங்க எங்க போறது?''

''என்ன வேலைகள் நாங்க உங்களுக்கு செய்றோம்?''

''அதுதான் எங்கட திறமை! நீ எப்படியாவது சிந்திச்சிருக்கியா நாங்க ஏன் பிறக்கிறோம்? படிக்கிறோம்? சிரிக்கிறோம்? அழுகிறோம்? சாகிறோம்? என?''

''எனக்கு விளங்கவில்லை!''

''அவ்வளவுதான் உங்க அறிவின் வரம்பு! - இத நீங்க கடந்தீங்க என்றால் தான் எங்களுக்கு பிரச்சினை!''

''நான் என்ன செய்யோணும்?'' - ஹரி புரியாமல் விழுந்தான்.

''உங்கட வளர்ச்சிய நிறுத்த சில மனிதர்களை நாங்க ஆராய்ச்சி செய்ய வேணும் அதுக்கு நீங்க ஒத்துழைக்கோணும்''

''அதை நீங்களே செய்யலாமே? எதுக்கு எங்கட அனுமதி!''

''அங்கதான் இயற்கையின் மகிமை! அதாவது ஒருத்தர்ட ஆழ்மனத்தையும் கூர்ப்பின் மையத்தையும் ஆராய்ச்சி செய்ய அவரின் பூரண சம்மதம் வேண்டும் கிட்டத்தட்ட 'பாஸ்வேர்ட்' மாதிரி!''

''ஓ! அப்படியா அப்ப கஷ்டம் சார்! நீங்க வேற ஆளைத் தேடுங்க!''

''நீங்க ஒத்துழைச்சா! எங்களின் பூரண அனுக்கிரகம் கிடைக்கும் என்ன சொல்லுறீங்க?''

''அப்படியே ஓடிப்போயிடு! எனக்கு எங்க பூமிதான் முக்கியம்'' - ஹரி

''தம்பி நல்லவங்கள கண்டுபிடிக்கிறதுதான் கஷ்டம்! துரோகிகளை இல்லை!'' என்றவாறு அவன் பேய்த்தனமாக சிரித்தான். அது மீண்டும் எந்திர ஓசையாக மா-றியது - அலார ஒலியாகக் கேட்டது.

''டேய்! இவ்வளவு நேரம் எலார்ம் அடிக்குது எப்பிடி படுக்குது பார்!'' எழும்புடா!'' அம்மா காதுக்குள் கத்தியது தெளிவாகக் கேட்டது.

''அம்மா! விடிஞ்சிடுச்சா!'' - ஹரி

''நேரம் 8 மணியாகுது! கம்பஸ்க்கு போகல்லயா''

''ம்! போகோணும்'' - ஹரி கொட்டாவியுடன் சொன்னான்.

''என்னடா உடம்பெல்லாம் வியர்த்துக்கிடக்கு கனவெதாச்சும் கண்டியா?''

''ம்! ஆனா என்ன கனவென்டுதான் மறந்துபோச்சு!'' - ஹரி கூறினான்.

''போ! போய் குளிச்சிட்டு வா!'' - அம்மா.

ஹரி எவ்வளவு யோசித்தும் வந்த கனவைப் பற்றி துளி கூட நினைவு வரவில்லை. யாரோ வேண்டுமென்று நினைவை அழித்துவிட்டது போல் வெற்றிடமாகவே இருந்தது. பிறகு பல்கலைக்கழகத்திற்கு அவசரமாக ஓடிச்சென்று, விரிவுரைகள் முடிந்த பின்பு மாலை 4 மணியாகிவிட்டது. ஹரி இன்னும் தனக்கு என்ன கனவு வந்தது என்றே சிந்தித்து கெண்டிருந்தான்.

''என்னடா இன்டைக்கு லைப்ரரி பக்கம் ஆளையே காணல்ல?'' - ஹரியின் நண்பன் யுவன் கேட்டான்.

''இல்லடா ஒரே தலைவலி! வந்த கனவு மறந்து போச்சுடா!''

''இதெல்லாம் ஒரு பிரச்சினையா! அதவிடு லைப்ரேரியன் பயங்கர கடுப்புல இருக்கார்டா?''

''என்ன விஷயம்?''

''யாரோ, 'நீர் நிலையியல்' புத்தகத்தை மழையில நனைய விட்டுட்டுப் போயிட்டாங்களாம்!'' ஹரிக்கு ஏதோ பொறிதட்டியது போல இருந்தது.

தூரத்தில் அலாரம் அடிக்கும் ஒலி மெதுவாகக் கேட்கிறது!

**முற்றும்**

வி.விபூஜிதன்
கணிதப்பிரிவு - 2010

# உன்னுள் மாய்வேன் என் தமிழே....

எண்ணும் எழுத்தும் அறிந்த பின்னர்
தண்ணென்ற தமிழ்ப் பெருங்கடலோரம்
நின்றுகொண்டிருந்தேன் சில காலம்..

பின்னர் ஓர் நாள் பிறந்த ஆசையில்
தண்ணீரில் கால் நனைத்திட வேண்டி
மண்விடுத் தந்த தண்ணீர் தொட்டேன்

கரையில் நின்றிருந்த காலம் வீணென்று
நுரைகடல் தொட்ட நொடியினில் உணர்ந்தேன்
தண்ணீரல்ல இது தமிழ்நீரென்று
விண்ணை நோக்கி வாரியிறைத்தேன்

அகத்தியன் குடித்து உமிழ்ந்த நீர்
தொல்காப்பியன் தோள்களில் களித்த நீர்
வள்ளுவன் குறள்கொண்டு வடித்த நீர்
கம்பன் மூழ்கிக் குளித்த நீர்
இளங்கோ என்னும் சிகரம் மூழ்கி
சிலம்பை எடுத்த செவ்விய நீர்
பத்து வயதில் பாரதி என்னும்
பித்தன் குடித்த சித்த நீர்

இத்தனை தெரிந்ததும் இறங்கிட நினைத்து
சட்டெனத் தாவி சமுத்திரம் புகுந்தேன்
நினைத்த வாறெல்லாம் நீந்திக் களித்தேன்..

இளைப்பாற வேண்டி இடம் தேடிப்போகையில்
தமிழர்கள் என்றொரு பாசறை கண்டேன்
வந்தமர்ந்தென் சிறகுகள் உதற
சிந்தியது சிறகினில் ஒட்டிய நீர்த்துளி

சிலர் இதைக் விவாதமென்றார், கவியென்றார்
உவர்ப்பென்றார் இனிப்பென்றார்
ஓர் நாள் இது உலரும் என்றார்

ஒட்டிய துளிக்கே இத்தனை என்றால்
உமிழ்ந்த துளிகளில் எத்தனை இருக்கும்

வருவேன் என் பெருங்கடலே
வந்துன்னில் விழுவேன்
விழுந்தமுதம் எடுப்பேன்
எடுத்திங்கே இறைப்பேன்
ஆழத்தில் நீ அமிழ்தத்தை வைத்தாலும்
மூழ்கி வந்தெடுப்பேன்
முடியவில்லை எனில் மூச்சடக்கி

உன்னுள் மாய்வேன் என் தமிழே....

தமிழுக்கு வயதது வளருமென
தமிழுக்கு தமிழே துணையென
தமிழர் மனம் உணர்வுபெற
தமிழே வாழ்கவென சங்கது முழங்கே!

# ROYAL COLLEGE TAMIL DEBATERS COUNCIL

## றோயல் கல்லூரித் தமிழ் விவாதக் கழகம்



# விவாத சுவடுகள் 2012

*With Best Compliments*

*from*

**SCOTTGUARD PRIVATE LTD.**

**Office :**
130/25, Samanala Place,
Old Road, Nawinna, Maharagama.
Tel: 011 2841957
Mobile : 077 3595400, 0777 304707
E-mail: scottguardinfo@yahoo.com

**Branch Office:**
No. 56, 2nd Floor, Welikada Plaza, Rajagiriya
Tel/Fax : 2863178

*"We Secure You Better"*

# றோயல் கல்லூரி
# தமிழ் விவாத அணி
# 2012-2013

## தலைவர்

பா. அஜன்

## உறுப்பினர்கள்

சு. அனுஷன்

ஜீ. ஹர்ஷாந்த்

செ. அர்ஜுன் குமார்

கி. பிரபஞ்சன்


பா. கஜீவ்

*With Best Compliments*

*from*

# NEW DEVAN STORES

*E Bike Directly Imported from Japan*



No. 22, Mill Road,
Vavuniya
Tel: 024 2221263, 0754986845

# Royal College
# Tamil Debaters Council

## Debate Team - Past Captains

| | |
|---|---|
| 1976/1977 | S. Ramachandra |
| 1977/1978 | R. Rajakariya |
| 1978/1979 | A.R. Hakeem |
| 1979/1980 | S. Janarthanan, S. Balamohan |
| 1980/1981 | C.V. Partheeban, S. Venkadesan |
| 1981/1982 | M. Varagunan, M.A. Sumathiran |
| 1991/1992 | M.R. Rushdhy Ameer |
| 1993/1994 | B. Chandaraprakash |
| 1994/1995 | S. Nilakshan |
| 1995/1996 | G.S. Sethukavalar |
| 1996/1997 | C.I. Azziyan |
| 1997/1998 | G.S. Sethukavalar |
| 1998/1999 | R. Sasitharan |
| 1999/2000 | R. Bramavinayagan |
| 2000/2001 | T. Yogendran |
| 2001/2002 | S. Gajendran |
| 2002/2003 | U.L.M. Resha |
| 2003/2004 | T. Jeyapragash |
| 2004/2005 | N. Neshanthanan |
| 2005/2006 | S. Sivaganesh |
| 2006/2007 | S. Sooriyaprathap |
| 2007/2008 | N.K. Ashokbharan |
| 2008/2009 | N.K. Ashokbaran |
| 2009/2010 | T. Kapilan |
| 2010/2011 | R.Arunothayan |
| 2011/2012 | J. Nijanthan |
| 2012/2013 | B. Ajan |

*With Best Compliments*

*from*

**JEYECHANDRANS**

*The Act of Fashions*

No. 433, Galle Road, Wellawatte,
Colombo 06
Tel : +94 11 4528438/5, Fax : +94 112362822
Email: info@jeyechandrans.com
Web: www.jeyechandrans.com
Skype: jeyechandrans888

# TAMIL DEBATE TEAM



**Seated L - R :** Mr. M.T.A. Rauf, B. Ajan, Mr. H.A.U. Gunasekara (Principal), S. Anushan, Mr. Sarath Keerthisena (Senior Deputy Principal), Mr. K. Sri Ragavarajan (Teacher-in-charge),
**Standing L - R :** J. Harshanth, S. Arjunkumar, K. Pirabanjan, B. Gajeev, Y. Thirukumaran

*With Best Compliments*


*from*

**CD WORLD**
**MUSIC CENTRE**





Blu-ray Disc DVD COMPACT disc DIGITAL AUDIO



#298, Galle Road, Wellawatte,
Colombo 06, Sri Lanka.
Tel : 2554481

---

*With Best Compliments*

*from*

# Organizing Committee

# 2012

# வேத்தியர்களின் விவாத கண்ணோட்டம்

விவாத உலகில் வீறுநடைபோடும் வேத்திய வேங்கைகளின் இப்பருவ காலத்துக்கான அணித்தலைமைப் பொறுப்பை ''சிம்மக்குரலோன்'' பா. அஜன் ஏற்ப இரண்டாம் விவாதியாகக் ''கருத்துவிவாதி'' யோ. திருக்குமரன் தன்னை உறுதிப்படுத்திக்கொள்ள மூன்றாம் இடத்தை ''அதிரடி விவாதி'' ஜீ.ஹர்ஷாந்தும் நான்காம் விவாதியா ''கவர்ச்சிவிவாதியா'' சு.அனுஷனும் பொறுப்பேற்றுக்கொள்ள கன்னி விலாதிகளாக எஸ். அர்ஜுன்குமார், சி. பிரபஞ்சன், பா. கஜீவ், சி. சஜீஸ்நவன், மு. மயூரன், த. மயூரன் ஆகியோர் கைகோர்க்க வேத்தியரின் விவாதப் பயணம் இனிதே ஆரம்பித்தது.

இப்பருவகாலத்துக்கான முதல் விவாதமாக கொ/மகளீர் கல்லூரியால் ஒழுங்கு செய்யப்பட்ட விவாத தொடரில் முதல் சுற்றில் கொ/உவெஸ்லிக் கல்லூரியை வெற்றிகொண்டு இறுதிச் சுற்றில் சர்ச்சைக்குரிய தலைப்பாகிய ஆண்களை விட பெண்களே புத்தசாலிகள் என்னும் தலைப்பில் கொ/இந்துக் கல்லூரியிடம் தோல்வி அடைந்ததாக அறிவிக்கப்பட்டது.

தொடர்ந்து எம் அணியானது சட்டபீடத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட விவாதச் சுற்றில் மூன்று அணிகளாக களம் இறங்கி முதல் முறையாக வருகைதந்த நாடளாவிய முப்பதிற்கும் மேற்பட்ட அணிகளில் முதல் எட்டு அணிகளுக்குள் மூன்று அணிகளும் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. கால் இறுதிப்போட்டியில் சிரேஸ்ர அணி ஆனது ஹட்டன் பொஸ்கொஸ்சையும் கனிஸ்ட அணியானது கொ/மகளீர் அணியையும் வெற்றி கொண்டு அரையிறுதிச் சுற்றுக்கு முன்னேறின. சற்றும் எதிர்பாராத விதமாய் எம்மவர் சிரேஸ்ர அணியும் கனிஸ்ர அணியும் அரையிறுதியில் சந்திக்க நேர்ந்தது சொந்தத் தம்பியை அண்ணாமார் வீழ்த்துவதாய் ஓர் துர்ப்பாக்கிய நிலையில் இறுதிப்போட்டிக்கு முன்னேறியது சிரேஸ்ர அணி. இறுதிப்போட்டியில் விறுவிறுப்பான ஒரு விவாதத்தில் தனக்கே உரிய பாணியில் விவாதித்த போதிலும் கொ/இந்துக் கல்லூரியிடம் தோல்வி அடைந்ததாக அறிவிக்கப்பட்டது.

அதை அடுத்து கொ/முஸ்லீம் மகளீர் கல்லூரியால் ஒழுங்கு செய்யப்பட்ட விவாதத் தொடரில் கொ/மெதடிஸ் கல்லூரியை வெற்றிகொண்டு இறுதிச் சுற்றுக்கு முன்னேறிய எம் அணி இறுதிச் சுற்றில் கொ/இந்துக் கல்லூரியை வெற்றி கொண்டு சுற்றை தம்வசப்படுத்தியது.

அதனைத் தொடர்ந்து கல்வித் திணைக்களத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட தமிழ்த் தினப் போட்டியில் கோட்டமட்டத்தில் கொ/விபுலானந்தாக் கல்லூரியை இலகுவாக வெற்றி கொண்டு எம் அணியானது வலைய மட்ட போட்டிக்கு தெரிவானது. வலைய மட்டப் போட்டியில் முதல் இரு சுற்றுக்களையும் வெற்றி கொண்ட எம் அணி இறுதிச் சுற்றில் கொ/இந்துக் கல்லூரியிடம் தோல்வி அடைந்ததாக அறிவிக்கப்பட்டது.

மேலும் சட்டக் கல்லூரியால் ஒழுங்கு செய்யப்பட்ட விவாதத் தொடரில் முதல் சுற்றில் கொ/இந்துக் கல்லூரியை வெற்றி கொண்ட போதிலும் இறுதிச் சுற்றில் காதல் திருமணமா? நிச்சயித்த திருமணமா? என்ற சர்ச்சைக்குரிய தலைப்பில் கொ/இந்துக் கல்லூரியிடம் தோல்வியடையந்ததாக அறிவிக்கப்பட்டது.

மேலும் கொ/றோயல் கல்லூரியின் பழைய விவாதிகளின் ஒன்றியத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட ''விவாதி'' போட்டித் தொடரில் முதல் மூன்று சுற்றுக்களையும் வெற்றி பெற்றதன் மூலம் இறுதி எட்டு பாடசாலைகளுக்குள் தெரிவாகியது எம் அணி கால் இறுதிப் போட்டியில் கொ/சைவ மங்கையர் கழகத்தையும் அரை இறுதிப் போட்டியில் ஹட்டன் ஹைலண்ட ஐயும் வெற்றி கொண்டதன் மூலம் இறுதிச் சுற்றுக்கு முன்னேறிய எம் அணி இறுதிச் சுற்றில் கொ/இந்துக் கல்லூரியிடம் தோல்வியடைந்ததாக அறிவிக்கப்பட்டது.

தடைகளைத் தாண்டி புது மூச்சுடன் புறப்பட்ட எமது அணி புனித ஆசீர்வாதப்பா கல்லூரியினால் ஒழுங்கு செய்யப்பட்ட விவாதத் தொடரில் முதல் சுற்றில் கொ/ட.எஸ். சேனாநாயக்க கல்லூரியை வெற்றி கொண்டு இறுதிச் சுற்றில் கொ/இந்துக் கல்லூரியிடம் தோல்வியடைந்ததாக அறிவிக்கப்பட்டது.

மேலும் 'சக்தி' நிறுவனத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட 'த.டிபேற்றர்'' போட்டித் தொடரில் கலந்து கொண்ட எம் அணி தேர்வுச் சுற்றில் கொ/சாகிறாக் கல்லூரியையும் கொ/விவேகானந்தாக் கல்லூரியையும் வெற்றி கொண்டதன் மூலம் போட்டித் தொடருக்கு தெரிவு செய்யப்பட்டது.

முதலாம் சுற்றில் திருகோணமலை உவர்மலை விவேகானந்தாக் கல்லூரியையும் இரண்டாம் சுற்றில் இக்கிரிகொல்லாவ முஸ்லீம் மகா வித்தியாலயத்தையும் வெற்றி கொண்டதன் மூலம் மூன்றாம் சுற்றுக்கு முன்னேறி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்பருவகாலத்தில் எமது அணி தமது உச்ச திறமையை வெளிப்படுத்தி சிறப்பாக விவாதித்த பொழுதும் சிலப் புறக்காரணிகளால் எதிர்பாராத முடிவுகளையும் சந்திக்க நேர்ந்தது. வெற்றிகளுக்கு நாம் அடிமையும் இல்லை தோல்விகள் எம்மை தோற்கடிப்பதும் இல்லை தரத்தையே முதன்மையாகக் கொண்ட வேத்திய விவாதப் பயணம் தொடரும்.

''விழுதுகள் தாம் வேர் என்று நினைக்கலாம்
ஆனால் என்றுமே ஆணிவேர் வேத்தியரே''

செயலாளர்

தமிழ் விவாதக் கழகம்

# தமிழரின் தற்காப்புக் கலைகள்

கலைகளையும் தமிழர்களையும் பிரித்துப் பார்க்க முடியாது. ஆதி தொட்டே தமிழர்கள் கலையுணர்வுடன் வாழப் பழகியவர்கள்.

இசை, நடனம், ஓவியக்கலை, சிற்பக்கலை, செதுக்கட்கலை, தற்காப்புக்கலை என எல்லாக் கலைகளிலும் பண்டைத் தமிழர்கள் வல்லுனர்களாகவே காணப்பட்டு வந்திருக்கின்றனர்.

இக் கலைகளானவை 64 வகைப்படும் என தமிழரது வரலாறு கூறுகிறது.
இந்த 64 கலைகளைப் பற்றியும் அவற்றை தமிழர்கள் கையாண்டமையையும் விளக்குவதற்கு இந்த ஒரு நூல் போதாது. ஆகவே தமிழர்தம் தற்காப்புக் கலைகள் என்ற ஒரு பகுதியில் ஒரு சிறிய விளக்கத்தை தருவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இன்றைய காலகட்டத்தில் தற்காப்புக் கலைகளின் தாயகமாக சீனாவையும் ஜப்பானையும், அண்ணார்ந்து பார்த்து வாயைப் பிளந்து நிற்கும் நிலையே தமிழரிடம் காணப்படுகிறது. ஆனால் இக்கலைகள் தமிழ் நாட்டிலேயே தோற்றம் பெற்று பரவலானதை இன்றைய தமிழர் தம் சிந்தனையில் இல்லை எனலாம்.

நடனம் இசை மொழி போன்றே ஒவ்வொரு இன அல்லது மக்கள் குழுவும் தனித்துவமான தற்காப்புக்கலை மரபினைக் கொண்டுள்ளது.

தமிழர் தற்காப்புக் கலைகள், தமிழ் மன்னர்களான பல்லவ, சேர, சோழ, பாண்டிய வழிவந்த தற்காப்பு வழிமுறைகள், மரபுகள், நுட்பங்கள், ஆயுதங்கள் ஆகியவற்றைக் குறிக்கின்றன.

தமிழரின் கலைகள் பல பிரிவுகளைக் கொண்டிருந்தன. அவற்றை
1. ஆயுதக் கலைகள்
2. வெறுங்கைக் கலைகள் என இரண்டாகப் பிரிக்கலாம்.

## 1. ஆயுதக் கலைகள்

ஆயுதம் தாங்கிய கலைகள் பல வகைப்படும்.
ஒவ்வொரு ஆயுதத்திற்கும் தனியான பயிற்சிகளும், பணிகளும் பின்பற்றப்பட்டன. சிலம்பம் சுற்றுதல், முச்சாண் சண்டை (Short Staff), இரட்டை முழங்கோல் என்பவை உறுதியான மரப்பலகையால் ஆக்கப்பட்ட தடிகளை வைத்து பயிற்றுவிக்கப்படும்

கலைகளாகும். இது கிராமப்புறங்களில் அவற்றின் காவலர்களுக்கு பெரும்பாலும் பயிற்றுவிக்கப்பட்டன.

இவற்றுக்கென்று சோழர் காலத்தில் உறையூரில் 100 க்கும் மேற்பட்ட சிலம்பம் சுற்றும் பயிற்சி நிலையங்கள் காணப்பட்டனவென, நீலகண்ட சாஸ்திரிகள் A history of South India நூல் குறிப்பிடுகின்றது.

இரட்டை வாள் (Souble Sword), வாள் (Sword), கேடயம் (Shield), சூலம் (Trident) போன்ற ஆயுதங்கள் இராணுவப் பயிற்சியளிக்க பயன்பட்டன. குறிப்பாக இரட்டை வாள் வீச்சின் முன்னோடிகள் தமிழர்களே.

பிற்கால சோழர்கள் இக்கலையை நன்றாகப் பயன்படுத்திக் கொண்டார்கள். சோழர் படையில் அனுபவம் வாய்ந்த வீரர்களுக்கு இரட்டை வாற்பயிற்றிக் கலையின் நுணுக்கங்கள் போதிக்கப்பட்டன. ''விஜயாலயச் சோழன்'' என்ற சோழச் சக்கரவர்த்தி இரட்டைவாள் சுழற்றலில் கைதேர்ந்தவர் என பல கல்வெட்டுக்களில் காணக் கிடைக்கின்றது.

வெட்டரிவாள் (Marchete), கத்தரி (Small Dagger), வீச்சுவா (Double Edge Kris), சுருள்பட்டை (Spiral Steel Chip), மடுவு (Deer Horns), மற்றும் வளரி. இது போன்ற ஆயுத பாவனைகளும் தமிழ் படை வீரர்களிடையே காணப்பட்டிருக்கின்றன.
படை வீரர்கள் மட்டுமல்லாது, கொள்ளைக் கூட்டங்களும் இவற்றைப் பயன்படுத்தி உள்ளன.

இவற்றுள் குறிப்பாக வளரி என்னும் உபகரணம் மிகச் சகதி வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது. ஒரு வகை வளரியானது இலக்கை அடைந்து விட்டு திரும்ப ஏவப்பட்ட இடத்திற்கே வந்து சேரும் வகையில் வடிவமைக்கப் பட்டிருந்திருக்கின்றன. சொல்லப்போனால் அவுஸ்திரேலியாவின் ஆதிகுடிகளின் பூமராங் (Boomerang) ஐ போன்ற ஒன்றாக இருந்திருக்கின்றது.

ஆக பூமராங்கை கண்டறிந்தவர்கள் யார் என்பதிலும் வரலாற்றாசிரியர்களிடம் தற்போது சந்தேகம் எழுந்துள்ளது.

பல்லவர்களாலும் பாண்டியர்களாலும் பெரிதும் வளர்க்கப்பட்ட இவ் தமிழர் கலைகளானவை பெரிதும் பயன்பாட்டிற்கு வந்தது பிற்கால சோழர்கள் காலத்திலேயே ஆகும். தமிழ் வீரர்களிடம் ஏகப்பட்ட தற்காப்புக் கலை நுணுக்கங்கள் காணப்பட்டதாக நூலாசிரியர் M Cory இன் Ancient Explorers நூலில் கூறப்பட்டுள்ளது. இதுவே

தென்னாசியா, கிழக்காசியா என்பன தமிழ்ப் படைகளின் முன்னால் மண்டியிடவும் காரணமாக அமைந்தது எனலாம்.

## 02. வெற்றுக் கைக்கலைகள்

அடிதடி, குத்து வரிசை என்பவை இக்கலைகளின் ஆரம்பக் கலைகளாகக் கருதப்படுகின்ற. அடிதடி தற்காலத்தின் Kick boxing விளையாட்டை ஒத்ததென வரலாற்று வல்லுனர்கள் கூறுகின்றனர். குத்து வரிசை இதன் அடுத்த கட்டமாகும். ஆனால் இவற்றின் நுணுக்கங்கள் அடிதடியில் இருந்து மாறுபட்டே காணப்படும். (Grapling) மல்யுத்தம் இக் கலையானது அக்கால கட்டத்தில் சமூகத்தில் மிகப் பிரபல்யம் வாய்ந்ததொரு கலையாகவே காணப்பட்டது. மல்யுத்த வீரர்களுக்கு மெய்க்காப்பாளர்கள் பதவிகள் அதிகளவில் வழங்கப்பட்டதாகவும் வரலாற்றுச் சான்றுகள் மூலம் தெரிய வருகிறது.

எப்படி ஐப்பானில் சுமோ (Sumo) மல்யுத்தமானது பிரபல்யமாக இருந்ததோ அல்லது இன்னும் இருந்து வருகிறதோ அதே அளவு பிரபல்யத்துடன் அன்று தமிழ் நாட்டில் மல்யுத்தமானது போற்றப்பட்டிருக்கின்றது.

''களரிப் பயிற்சி'' என்ற கலையானது இவற்றுள்ளே சுற்று வித்தியாசமானது. இது கலைநயத்துடன் ஆடற் பயிற்சி போன்று பயிற்றப்படும் தற்காப்புக் கலையாகும். கிட்டத்தட்ட இன்றை Kungfu பாணியை ஒத்தது ஆகும். இராணுவ வீரர்கள் அனைவரும் இப்பயிற்சியினை மேற்கொண்டமையை பல நூல்கள் விவரிக்கின்றன.
சேரர்கள் இக்கலைகளில் கைதேர்ந்தவர்கள் ஆவர். நூற்றுக்கணக்கான கூலிப்படைகளுக்கு இக் கலையானது ஓர் அடிப்படை அறிவாக போதிக்கப்பட்டு வந்தது.

### வர்மக்கலை

வெற்றுக்கைக் கலைகளினுள்ளே அடங்கும் கலைதான் இதுவாகும். ஆனால் தமிழ்த் தற்காப்புக் கலைகளிலேயே அதிமுக்கியத்துவம் வாய்ந்த கலையாக இக்கலையே போற்றப்படுகின்றது.

இக்கலையின் மரபுகளும் நுணுக்கங்களும் மிக ஆழமானவை.
இக் கலையானது மருத்துவத்தை பாரியளவில் உள்வாங்கியுள்ளது. வர்மக்கலையில் கைத்தேர்ந்தவர்கள் சிறந்த சித்த மருத்துவர்களாவர். சித்த அறிவியலை முழுமையாக புரிந்துகொள்ள வர்மக் கலையானது சிறப்பாக உதவுமென்பது சித்த மருத்துவர்களின் கருத்தாகும்.

இவ் வர்மக் கலையானது இன்றும் பல இடங்களில் பயிற்றுவிக்கப்படுகிறது ஆனால் அவை மிக இரகசியமாகவே பேணப்படுகின்றன.

தற்காலத்தில் சீனாவிலும் ஜப்பானிலும் பயிற்றுவிக்கப்படும் கராத்தே, ஜுடோ Kunfu, Shaolin fights என்பன இதன் வழிவந்தவையே ஆகும்.

போதிதர்மனின் கதைகள் யாவும் இன்று நாம் ஓரளவு அறிந்தவையே.
இக்கலையைப் பற்றி பல சித்தர்களின் குறிப்புகள் கிடைக்கப் பெற்றுள்ளன. அவற்றுள் போகர் வர்ம சூத்திரம் பிரபல்யமானது. இது போகர் சுவாமிகளால் அருளப்பட்டது.

தலைப்பகுதி வர்மங்கள் - 37
நெஞ்சுப்பகுதி - 13
உடலின் முன்பகுதி வர்மங்கள் - 15
முதுகுப் பகுதி - 18
கைப்பகுதி 17
கால்பகுதியில் - 32 வர்மஸ்தானங்கள் உள்ளதாக அந்நூல் மேலும் விபரிக்கின்றது.

**நோக்கு வர்மம் (மெய் தீண்டாக்கலை)**

வர்மங்கள் 3 வகைப்படும்.
1. படு வர்மம்
2. தொடு வர்மம்
3. நோக்கு வர்மம்

என்பவையாம் தற்காப்புக் கலைகளிலே சிறந்தது வர்மம்.

வர்மங்களுள் சிறந்ததும் பயங்கரமானதுமானதும் நோக்குவர்மம் ஆகும்.
இது சாத்தியமா? அல்லது கட்டுக்கதையா? இது இக் கலை தொடர்பாக அனை-வராலும் எழுப்பப்படும் கேள்வியாகும்.

இது சாத்தியம் என்பது சித்தர்களின் குறிப்பாகும். அகத்தியர் போகர் போன்ற சித்தர்கள் பல கல்வெட்டுக்களிலும் செய்யுள்களிலும் இது தொடர்பாக விளக்கியுள்ளனர். ''ஒடிவு முறிவு சாரி, வர்ம சாத்திரம், வர்ம சூடாமணி என்பவையும் வர்மத்தைப் பற்றி அறிய உதவும் நூல்களாகும்.

எமது உடலில் 72000 நாடிகள் உள்ளதாக சித்தரியல் கூறுகின்றது. அவற்றுள் மிக மிக முக்கியமானவை 10 ஆகும். இவற்றினூடே 10 வித வாயுக்கள் ஓடுவதாக சித்தர் பெருமக்கள் கூறியுள்ளனர்.

| | |
|---|---|
| பிராணன் - உயிர்வாயு | அமாணன் - மலக்காற்று |
| வியானன் - தொழிற்காற்று | உதானன் - ஒலிக்காற்று |
| சமானன் - நிரவுக் காற்று | நாகன் - விழிக்காற்று |
| கூர்மன் - இமைக்காற்று | சிருகரன் - தும்மற்காற்று |
| தேவதத்தின் - கொட்டாவி | தனஞ்செயன் - வீங்கல் காற்று |

இவ்வாயுக்கள் அந்த 10 நாடிகளினூடு ஓடுகின்றன. இவை நாடிகளின் முடிச்சுகளோடு ஒன்றோடொன்று சந்திக்கும் இடர்களே வர்மஸ்தானங்கள் ஆகும்.

இவ் வர்மஸ்தானங்களில் கவனக்குவிப்போடும் முனைப்போடும் பார்வையை செலுத்தும் போது பார்வையின் தீவிரம் பொறுத்து விளைவுகள் உண்டாக்கப்படலாம். தமிழர்களிடையே, கண் திருஷ்டி, கண் படுதல், கெட்ட பார்வை போன்ற வார்த்தைப் பிரயோகங்களையும் கருத்திற் கொண்டு பார்க்கும் போது, தமிழர்களிடையே நோக்கு வர்மக்கலையானது மிகப் பரவலாகவே காணப்பட்டு வந்திருக்கின்றது. ஆனால் இக் கலையினை கற்றுக் கொள்வது அவ்வளவு எளிதாக இருக்கவில்லை. ஒருவர் ஒரு கைதேர்ந்த குருவிடம் முறையாக சேர்ந்து தியானம் முதலானவற்றை முதலில் பயில வேண்டும். அதன் பின்னர் 12 வருடங்களின் பின்னரே குருவானவர் குறிப்பிட்ட நபருக்கு நோக்கு வர்மத்தை கற்றுத் தரலாமா வேண்டாமா எனத் தீர்மானிப்பார். சீபரின் பக்குவ நிலையை அறிந்த பின்னரே இது கற்று கொடுக்கப்படும்.

> ''மறைவில் வைப்பதென்றால் மைந்தா கேளு
> வகை விபரம் கை பாகம் மறைப் பொன்றில்லை
> உறவாடிச் சிலபேர் நூல் தாவென்று
> ஓவியம் போல் மொழி பேசி உனை மேய்ப்பார்
> திறமான நூலவற்று வெளியிடாதே
> சீடனென்று 12 வரும் காத்தால்
> அறிவான பக்தியவர்க் கிருந்தால்
> அப்பனே நிலையறிந்து நூலை ஈயே.
>
> \- போகர் சுவாமிகள்

பிற்காலத்தில் ஐரோப்பாவில் தோன்றியதும் இன்னும் மருத்துவத்தில் அதிகம் பயன்படுத்தப்படுவதுமான ''மெஸ்மரிசம்'' நோக்குவர்மத்தில் ஒரு பகுதியே ஆகும்.

அதுமட்டுமல்லாது அன்றைய காலத்தில் வர்மாளிகளிடம் சிறந்த மருத்துவம் இருந்திருக்கின்றது. கிட்டத்தட்ட இன்றைய X-ray மருத்துவத்திற்கு இணையான மருத்துவமுறை தமிழர்களிடம் இருந்துள்ளது என்பதை மேற்கு வரலாற்றாசிரியர்களே ஒப்புக் கொண்டுள்ளனர்.

இவ் வர்மக்கலையையும் மருத்துவத்தையும் பிரித்துப் பார்க்க முடியாது. கோ-மா நிலையை அடைந்த நோயாளிகளைக் கூட படுவர்மம், தொடுவர்மம் துணைக்கொண்டு வர்மஸ்தானங்களில் அவற்றை செயற்படுத்தி குணப்படுத்தி விடலாம் என்கிறது தமிழரது சித்த மரபு.

நோக்கு வர்மமானது சீனாவில் ''திம் மாக்'' என்றும் ஜப்பானில் 'அக்கிடே'' எனவும் அழைக்கப்படுகின்றது.

நோக்கு வர்மத்தை தாண்டி படுவர்மம், தொடுவர்மம் என்பவையும் நொடிப்பொழுதில் எதியை சாய்த்து தன்னை பாதுகாத்துக் கொள்ள பயன்பட்டன.
இவ் வர்மங்களின் பெயர்களிலேயே இவற்றின் விளக்கங்கள் தெளிவாகின்றன.
படுவர்மமென்றால் மிக நுணுக்கமான வர்மஸ்தானங்களில் ஏதாவது ஒன்றை படச் செய்வதன் ஊடாக மேற்கொள்ளப்படுவது ஆகும். தொடுவர்மமென்றால் வர்மஸ்தானங்களை தம் கைகளால் தொடுவதனூடு மேற்கொள்ளப்படுவதாகும்.
சங்குதிரிகால வர்மம் இதைப்பற்றி

சரளமான சங்கத்தின் ஒரு விரல் கடை
உள்தள்ளி நின்ற வர்மமடா
இதனில் தாக்கமது நிகழ்ந்தால் ஓலமிட
ஓசையது எழாது
எழாமலே இரு விழியது அந்தக் காரமது
சூழ்ந்து தெறித்து
இரு மலது தோன்றி மயக்கமுமாகுமே.

என அகத்தியர் குறிப்பிடுகிறார்.

தட்சண கால வர்மம்

போகுமடா மைந்தா வெள்ளையது
உள்ளங்கையில் பொருந்திநின்ற தட்சணைக்
காலம் சொல்வேன்
ஆகுமடா இந்த வர்மம் கொண்டால்
கேளு உயிரது பிரியும் நேரமாகும்
புண்ணியனே மாத்திரையது
மீறிரைக்கால் மரணமாகும்

- அகத்தியர்

மேலுள்ள செய்யுள் பாடல்களிரண்டும் படு, தொடு வர்மக் கலைகளைப் பற்றியதாகும்.

வர்மக் கலையைப் பயின்றோருக்கு பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் பாரிய செல்வாக்கு நிலவியது.

ஏனைய தற்காப்புக் கலைகள் எவ்வாறு பாதுகாவலருக்கும் இராணுவத்தினருக்கு அதிகளவு பயிற்றப்பட்டது என்றால் வர்மக் கலையானது மன்னர்களுக்கும் உயர் அதிகாரிகளுக்கும் பயிற்றப்பட்டது.

தமிழ் மன்னர்கள் யாவரும் வர்மக் கலையில் தேர்ந்தவர்களாக காணப்பட்டுள்ளனர். அவர்கள் பெயர்கள் பின்னால் 'வர்மன்' என்ற பெயர் ஏற்படுவதற்கு இதுவும் ஒரு காரணமாக அமைந்திருக்கலாம்.

(உ+ம்)
அருள்மொழிவர்மன், நரசிம்மவர்மன், மகேந்திரவர்மன், ஆதித்தவர்மன் போன்றோரைக் கூறலாம்.

இப் படு, தொடு வர்மங்களை வைத்துதான் ''படாத இடத்தில் பட்டுவிடப் போகிறது'' என்ற பேச்சு வழக்கு ஏற்பட்டிருக்கின்றது என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

ஒட்டுமொத்தத்தில் தமிழர்கள் தொன்று தொட்டே தற்காப்புக்கலையில் வல்லவர்களாக இருந்திருக்கிறார்கள் என்பது கண்கூடாகின்றது. இன்று சீனாவிலும், ஜப்பானிலும் பிரசித்தி பெற்று விளங்குவது தமிழரின் கலைகளே என்பதில் நாம் பெருமைப்பட்டுக்கொள்ளலாம். ஆனால் இந்த அரும்பெரும் பொக்கிஷம் இன்று தமிழர்களிடத்திலேயே இல்லை என்பது வேதனையளிக்கக்கூடிய உண்மையே!
ஒரு காலத்தில் தமிழராய் இருந்து இன்று மலையாளிகள் என கூறிக்கொண்டு வசிக்கும் கேரளத் தேசத்தில் கூட தமிழர் கலைகள் காணப்படும் நிலையில் தமிழ்நாட்டிலும் தமிழர் வாழும் பகுதிகளிலும் இவை தொடர்பான தேடலோ அறிவோ கூட இல்லாத நிலையே நீடிக்கின்றது.

தமிழரக்குரிய மதிப்பும் மாண்பும் மாண்டுபோய் கொண்டிருக்கும் இந்நிலையில் தமிழராகிய நாம் நம் வரலாற்றையும் அடையாளங்களையும் கட்டிக் காக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கின்றோம்.

உலகளாவிய ரீதியில் எமது தமிழினத்தை அடக்கி ஒடுக்க பல சக்திகள் முனைந்து நிற்பது நாம் அறிந்ததே. இப்படியொரு நிலைமையில் எமது நிலத்தை இழந்ததைப் போல் அடையாளங்களையும் மறந்து இழப்போமானால் வருங்காலத்தில் வரலாற்றுப் புத்தகங்களில் மாத்திரமே தமிழையும் தமிழினத்தையும் காணமுடியும்.
ஆனால் இந்த இக்கட்டான நிலையைப் புரிந்து கொள்ளாமல் தமிழர் இன்று தம் அடையாளங்களை துறந்து விட்டு பயணிக்கின்றனர். குறிப்பாக சமுதாயத்தை முன்னேற்ற வேண்டிய இளைஞர்கள் இன்று சினிமாவையும் தத்தமது பொழுது போக்குக்குமே முக்கியத்துவம் அளிக்கின்றனர். தமிழினத்தின் அபாய பாதையை மறந்துவிட்டு அஜித் படம் சிறந்ததா அல்லது விஜய் படம் சிறந்ததா என விவாதம் செய்கிறார்கள்.

இக்கட்டுரையை எழுதுவதற்கான ஆதாரங்களில் கிட்டடத்தட்ட அரைவாசிப் பங்கை முகப்புத்தகத்தின் வாயிலாகவும் இணையத்தின் வாயிலாகவுமே தான் பெற்றுக்கொண்டேன். முகப்புத்தகத்தில் எவ்வளவோ சிறப்பான விடயங்கள் இருந்தும் அவற்றைத் தேடிப் பெறாமல் பொழுதுபோக்குக்காகவும் வேறு வேலைகளுக்காகவும் இளைஞர் இவற்றை பயன்படுத்துவதும் வேதனையளிக்கக் கூடியது.

இக்கட்டுரையைப் படித்த ஒருவரேனும் தமிழையும் தமிழரையும் காக்க வேண்டும் என உணர்வராயின் அதுவே இக்கட்டுரையின் மாபெரும் வெற்றியாகும். அந்த வெற்றி இக்கட்டுரைக்கு கிடைக்குமென நம்புகிறேன்.


''சொந்த சகோதரர்கள் துன்பத்தில் சாதல்
கண்டும் விந்தையிரங்காரடீ - கிளியே
செம்மை மறந்தாரடீ!

*சு. அனுசன்*
*(பௌதீக விஞ்ஞான பிரிவு)*
*13MSE*

# தமிழ் இலக்கிய மன்றம்

## செயற்திட்டங்கள் 2012

### 1. நற்சிந்தனை சுவரொட்டிகள்




சுவாமி விவேகானந்தரினால் கூறப்பட்ட நற்சிந்தனைகள் அடங்கிய சுவரொட்டிகள் மாணவர்கள் மனதில் நல்லெண்ணங்களை உண்டு பண்ணும் பொருட்டு தரம் 1 தொடக்கம் 13 வரையிலான வகுப்பறைகளில் ஒட்டப்பட்டன.

### 2. பாடசாலையினுள் செயற்திட்டம்





திகதியன்று கல்லூரியின் இரசாயனவியல் ஆய்வுகூடம் மன்ற உறுப்பினர்களால் சுத்தம் செய்யப்பட்டு பூச்சு பூசப்பட்டது.

## 3. கலைப்பிரிவு மாணவர்களின் வகுப்பறையை சுத்தம் செய்தல்



29.03.2012 திகதியன்று கலைப்பிரிவு மாணவர்களுக்கான வகுப்பறை, மன்ற உறுப்பினர்களால் சுத்தம் செய்யப்பட்டு கற்றல் கற்பித்தல் செயற்பாட்டிற்குரிய சிறந்த இடமாக ஒழுங்கு செய்யப்பட்டது. அருகில் இருந்த வெளிகள் சுத்தம் செய்யப்பட்டு மேசைக்கு பூச்சு பூசப்பட்டது.

## 4. பாடசாலைக்குள்ளான தமிழ்த்திறன்காண் போட்டிகள் (மத்திய பிரிவு, மேற்பிரிவு) மாணவர்களுக்கு

05.06.2012 திகதியன்று எம் பாடசாலை மாணவர்களின் தமிழ் இலக்கியம், மொழி சம்பந்தமான ஆற்றல்களை வளர்க்கும் நோக்குடன் மூன்று பிரிவுகளில் மேற்படி போட்டிகள் நடாத்தப்பட்டன. தரம் 6, 7, 8 மாணவர்கள் கீழ்ப்பிரிவிலும் தரம் 9, 10 மாணவர்கள் மத்தியபிரிவிலும் தரம் 11, 12 மாணவர்கள் மேற்பிரிவிலும் அடக்கப்பட்டனர். கட்டுரை, சிறுகதை, கவிதை, இலக்கியம் நயத்தல், பேச்சு போன்ற போட்டிகள் ஒவ்வொரு பிரிவிலும் நடாத்தப்பட்டது. மேற்படி போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்கள் வெற்றி மாணவர்களாகத் தெரிவு செய்யப்பட்டு கலை விழா 2012 இல் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

## 5. பாடசாலைக்குள்ளான தமிழ்த்திறன் காண் போட்டிகள் (கீழ்ப்பிரிவு)

வழமைபோல் இல்லாமல், இம்முறை சற்று வித்தியாசமாக மாணவர்களின் சிந்தனா சக்தியை வளர்க்கும் பொருட்டு ஆக்கக் கட்டுரை, தமிழ் வினாவிடை, நாட்டார் பாடல், பேச்சு போன்ற போட்டிகள் 05.06.2012 அன்று நடாத்தப்பட்டன. மாணவர்களுக்கு சூழல், சுற்றுப்புறம், சுகாதாரம் என்பவை பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஆக்கக்கட்டுரை, பேச்சு போட்டிகளும் தமிழ் மொழிசார் அறிவினை மேம்படுத்த தமிழ் வினாவிடைப்போட்டியும் இசைக்கலையை வளர்க்க நாட்டார் பாடல் போன்ற போட்டிகளும் அமையப் பெற்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். இப்போட்டிகளில் மாணவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு ஒவ்வொரு வகுப்பில் இருந்தும் மூன்று வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.


### 6. பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்திறன்காண் போட்டிகள்



09.06.2012 திகதியன்று வெளிப்பாடசாலை மாணவர்களினது தமிழ் அறிவை வளர்க்கும் பொருட்டு தமிழ்த்திறன்காண் போட்டிகள் நடாத்தப்பட்டன. கட்டுரை, சிறுகதை, கவிதை, பேச்சு போன்ற விடயங்களின் கீழ் போட்டிகள் கீழ், மத்திய, மேல் பிரிவுகளில் நடைபெற்றன. இப்போட்டிகளுக்கு இருபத்து மூன்று (23) பாடசாலைகளில் இருந்து 525 மாணவர்கள் பங்குபற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது.

போட்டிகள் நிறைவுறும் வேளையில் போட்டியாளகளின் திறனையும் சமயோகிதத்தையும், பேச்சாற்றலையும் வெளிக்கொண்டுவரும் முகமாக 'கருத்துக்கணிப்பு' நிகழ்ச்சி நடைபெற்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

### 7. தமிழ் அறிவு வினாவிடைப் போட்டி



09.06.2012 திகதி நடைபெற்ற தமிழ்திறன்காண் போட்டியில் தமிழ் அறிவுப் போட்டி ஓர் முக்கிய இடம் வகித்துள்ளது. இம்முறை இப்போட்டியில் விதிமுறைகள் என்பவற்றை மிகவும் கடினப்படுத்தி சிறந்த தமிழ் அறியுந் தேடலுக்கான போட்டியாக அமையப்பெற்றது. இப்போட்டியில் மாணவர்கள் நான்கு பேர் கொண்ட அணிகளாக தத்தமம் பாடசாலைகளைப் பிரதிநிதித்துவப்படுத்த

அனுமதிக்கப்பட்டனர். இங்கு மாணவர்கள் எழுத்துப்பரீட்சை மூலமாகவும் பின்னர் வாய்மொழிப் பரீட்சை மூலமாகவும் சோதிக்கப்பட்டு வெற்றி பெறும் அணிக்கு 'சிவானந்தநாயகம்' சுற்றுக்கேடயம் கலைவிழா 2012 இல் வழங்கப்பட்டது. 'சிவானந்தநாயகம்' சுற்றுக்கேடயம் இவ்வருடமே அறிமுகப்படுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

திரு. சிவானந்தநாயகம் அவர்கள் றோயல் கல்லூரியில் பல வருடங்களை சேவையாற்றி மாணவர்களுக்கு சிறந்த ஆசானாக விளங்கினார். அவர் நினைவாக இச்சுற்றுக்கேடயத்தை அறிமுகப்படுத்துவதில் தமிழ் இலக்கிய மன்றம் பெருமை அடைகிறது.

**8. விவாதத்திறன் காண் போட்டிகள்**



விவாதக்கலையினை வளர்க்கும் பொருட்டு 09.06.2012 திகதி நடைபெற்ற தமிழ்திறன்காண் போட்டிகளிலே தமிழ் விவாதக் கழகத்துடன் இணைந்து விவாதத் திறன் காண் போட்டிகள் நடாத்தப்பட்டன. இப்போட்டிக்கு எட்டு பாடசாலைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி நான்கு விவாதிகளையும் இரண்டு உதிரி விவாதிகளையும் கொண்ட எட்டு அணிகள் சமூகம் தந்திருந்தன. மரபு ரீதியான விவாதப் போட்டிகள் நடைபெற்றன. மாணவர்களின் பரந்த அறிவை சோதிக்கும் பொருட்டு ஒவ்வொரு சுற்றிலும் இலக்கியம், அரசியல், சமூகம் சார்ந்து தலைப்புகள் விவாதங்களுக்கு வழங்கப்பட்டன. மேற்படி போட்களுக்கு ஆசிரியர்களும், முன்னாள் பாடசாலை விவாதிகளும் தலைமை வகித்தனர்.

**9. தமிழ்நயம் 2012**

வழமைபோல் புதுமையுடன் வெளிவரும் தமிழ்நயம் இம்முறை தமிழ் இலக்கிய மன்றத்தின் 74 வது அகவையில் 'தமிழ் நயம் 2012' என்ற வடிவில் தமிழர்களின் சிறந்த அடையாளமாகக் வெளிவந்துள்ளது.

## 10. கலைவிழா 2012

அன்றும் இன்றும் என்றும் தமிழர்களின் அடையாளங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் றோயல் கல்லூரி தமிழ் இலக்கிய மன்றம் பெருமையுடன் நடத்தும் தமிழர் கலாசார திருவிழா.

கலைவிழா 2012 புதுமைகளுடன் இத்தருணத்தில் (01.1.2012) அரங்கேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

*செயற்குழு*

*தமிழ் இலக்கிய மன்றம் 2012 - 2013*

*With Best Compliments*

*from*

W. C.

**WOODLANDS COMPANY**

*Importers exporters & Commission Agents*
*Dealers in all kinds of local produce*

192, 4th Cross Street,
Colombo 11
T'Phone : 2327451-2422426

*With Best Compliments*

*from*


**KALA TRADERS**

343, Main Street, Passara,
Badulla

*With Best Compliments from*

**Music World**

*Bland DVD, CD, Computer Accessories,*
*Mobile Phone accessories, Movies Tamil, English &*
*Children Rhymes, All Memory Card Ipod Mp4 Available*







No. 01, Manning Place, Wellawatta, Colombo
Tel : 0772261691, 0779582558
Email : musicworld-009@hotmail.com

**Music World**

**Van for Hire to Airport**



No. 01, Manning Place,
Wellawatta, Colombo
Tel: 0772261691, 0779582558
Email: musicworld-009@hotmail.com

# பாடசாலைகளுக்கிடையிலான போட்டி முடிவுகள்

**Essay Writing**

***LowerDivision***

| | | |
|---|---|---|
| 1st place | R.Mayoori Menaka | St. Jhon's M.V |
| 2nd place | Y.Pramiya | Good Shepherd G.M.V |
| 3rd place | Yathurshini Ganeshalingam | C/Hindu Ladies College |

***Middle Division***

| | | |
|---|---|---|
| 1st place | K.T.Kirsanthani | C.C.T.M.V.Puwakpitiya |
| 2nd place | F.Kolastica | St. Ann's G.M.V |
| 3rd place | S.Dilukshani | C.C.T.M.V.Puwakpitiya |
| 3rd place | Jesper rooth Richard | C/Good shepherd G.M.V |

***Upper Division***

| | | |
|---|---|---|
| 1st place | A.Hana Mohideen | C/Muslim LadiesCollege |
| 2nd place | Umaira Mohideen | C/Muslim LadiesCollege |
| 3rd place | S.Mythrika | C/Ramanathan Hindu Ladies College |

***Short Story***

***Lower Division***

| | | |
|---|---|---|
| 1st place | Hana Ifham | C/Muslim Ladies College |
| 2nd place | M.Mayoori | C/Kanapathy Hindu Ladies College |
| 3rd place | K.A.S.Kamarudeen | St.Thomas College Mt |

***Middle Division***

| | | |
|---|---|---|
| 1st place | J.Keshika | C/Good Shepherd G.M.V |
| 2nd place | M.A.M.Simak | D.S.Senanayake College |
| 3rd place | M.N.F.Naseeha | Al-Gazzali |

***Upper Division***

| | | |
|---|---|---|
| 1st place | M.M.M.Mufeeth | D.S.Senanayake College |
| 2nd place | Mizaya Bhanu | C/Muslim Ladies College |
| 3rd place | Keshangi Rajavijayan | Holy Family Convent |

**Poetry Writing**

***Lower Division***

| | | |
|---|---|---|
| 1st place | Rushna Razick | C/Fathima Muslim Ladies College |
| 2nd place | C.Praveena | St. Anne's G.M.V |
| 3rd place | B.Harshini | C/Good Shepherd G.M.V |

***Middle Division***

| | | |
|---|---|---|
| 1st place | Munawara Mohinudeen | C/Muslim Ladies College |
| 2nd place | A.F.F.Farsana | Al-Gazzali |
| 3rd place | Nafla Anver | C/Muslim Ladies College |

*Upper Division*

| | | |
|---|---|---|
| 1st place | S.Priyanthi | Dehiwala Tamil M.V |
| 2nd place | R.Sayeeshvaran | C/Hindu College |
| 3rd place | Navam Nahulraj | Muthuval Hindu College |

***Speech***

*Lower Division*

| | | |
|---|---|---|
| 1st place | R.Parunithan | C/Hindu College |
| 2nd place | M.Eladsya | C/Good Shepherd G.M.V |
| 3rd place | S.Rajagopal | C/Hindu College |

*Middle Division*

| | | |
|---|---|---|
| 1st place | I.Luxshani | C/Hindu Ladies College |
| 2nd place | L.Keerthana | C/Good Shepherd G.M.V |
| 3rd place | V.Sinthuja | C/Hindu College |

*Upper Division*

| | | |
|---|---|---|
| 1st place | G.Shamila | C/Hindu Ladies College |
| 2nd place | Fazniya Madhany | C/Muslim Ladies College |
| 3rd place | S.Princy Rebecca | St. anne's G.M.V |

**"Tamil Arivu" Quiz Competition**

| | |
|---|---|
| 1st place | C/Hindu Ladies College |
| 2nd place | Holy Family Convent |
| 3rd place | D.S.Senanayake College |

Debate

| | |
|---|---|
| 1st | Colombo Hindu College |
| 2nd | Fathima Muslim Ladies College |
| 3rd | St. Benadict's College |

# Primary Results

## 4D

### நாட்டார் பாடல்கள்

1st S. Suchendra
2nd S. Niththilan
3rd M. Ilham

### பேச்சு

1st J. Bilal Sultan
2nd S. K. Theenasaran
3rd T. Kanusha
3rd R. Harish

### பொது அறிவு

1st T. Kanushan
2nd A. A. Raazaan
3rd S. K. Theenasaran

### படம் பார்த்து எழுதல்

1st S. Saildendra
2nd I. Afkar
3rd G. Prithviram

## 5D

### நாட்டார் பாடல்கள்

1st M. F. M Rizni
2nd V. Kavishcan
3rd K. Balavan
3rd M. A. flal Ahmed

**பொது அறிவு**

1st M. F. M. Rizni
2nd A. A. Asny Ahmed
2nd M.R.Amhar Ahmed

**படம் பாத்து எழுதல்**

1st V. Kavishkan
2nd M. U. Ahamed Shamran
3rd P. Shashank

**5C**

**நாட்டார் பாடல்**

1st S. Branavan
2nd S. Sucha
3rd J. Adcharan

**பேச்சு**

1st J. Kavienan
2nd T. Sathushan
3rd R. Nikesh

**பொது அறிவு**

1st S. Thevajan
2nd S. Branavan
3rd M. S. M. Suhail

**படம் பார்த்து எழுதுதல்**

1st R. Nikesh
2nd J. Kavienan
3rd T. Sathushan

## 4C

### நாட்டார் பாடல்

1st G. Saranapavan
2nd S. Abilash
3rd I. Ishfaaq

### பேச்சு

1st S. Vikashan
2nd B. Somesshwar
3rd S. Subeetshan

### பொது அறிவு

1st S. Subeetshan
2nd S. Vikashan
3rd N. Shathushan

### படம் பார்த்து எழுதுதல்

1st B. Somesshwar
2nd S. Vivujaan
3rd N. Shathushan

*With Best Compliments*

*from*

**Mr. S. Varmam**

Bsc. (Hons) Dip.in.Ed

19B, 32nd Lane, Colombo 06
Tel: 011-2360079

*With Best Compliments*

*from*

**Lt. T. Nagarathnam**

Bsc. (Ceylon) Dip.in.Ed
All Island J.P

Personal Chemistry classes in
Tamil, English and Sinhala Mediums

078334959, 011-3159184

*Best Wishes*

*from*

**Mr. R.P. Kaneshan**

**Peronal Group classes**
**Combined Mathematics**

*With Best Compliments*

*from*

**பத்மநாபன் ஷாஸ்வதன்**
**8 -C**

பாடசாலைக்குள்ளாக நடாத்தப்பட்ட தமிழ்த்திறன்காண் போட்டிகளில்

கீழ்ப்பிரிவில் முதலிடம் பெற்ற கவிதை

## வானவில்

திரை தெரியாத வானில்
உன்னை விதைத்தது யாரோ....?

பஞ்சு மேகங்களின் மத்தியிலே
நீ ஒரு பூ விழி ...
பச்சை மரங்களின் இடையிலே
நீ ஒரு தீப்பொறி...

உன்னைக் காண்பதற்காக
நான் காத்துக்கொண்டிருப்பேன்...
நீ சென்ற வழியில்
நான் நிறமெடுப்பேன்..

நீ வரமுன் மழை பொழியும்...
நீ கரைந்தால் பூ மணம் வீசும்..
உன்னை வானிலே வைத்து
நிறந் தீட்டியது யாரோ...?

நீ கறை சேர்ந்த பின்பு
உன்னை மறைத்தது யார்?
முகில் வரும் போது
உன்னை முளைத்தது யார்?

ஓ! வானில் மிதக்கும் வானவில்லே
உன்னைக் காணாமல் நான் தவிக்கின்றேன்..

உன்னை கூட்டப் பறவைகள் விரட்டியதா?
அல்லது கூடிவரும் முகில்கள் துரத்தியதா...?

**பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்பட்ட தமிழ்த்திறன்காண் போட்டிகளில்**

**கீழ்ப்பிரிவில் முதலிடம் பெற்ற சிறுகதை**

# முடியுமா?

"தேவி தூங்கலயா?" "இல்ல அம்மா தூக்கம் வரல." "சரி சீக்கிரமாக தூங்கு" என்ற கூறிய தேவியின் அம்மா நித்திரைக்குச் சென்றாள். தேவி இயற்கையை இரசிக்க யன்னல் பக்கம் திரும்பினாள். "என்ன இதமான காற்று" என்று கூறிக்கொண்டே தன் குடும்பத்தைப் பற்றி எண்ணினாள்.

தேவி பிறக்கும் போதே தன் தந்தையை இழந்தாள். தனது தந்தையை அவள் நேரில்கூட பார்த்ததில்லை. அவளுக்கோ சகோதர சகோதரிகள் யாரும் இல்லை. தன் தாயுடனே வாழ்க்கை நடாத்துபவள். உண்பதற்குக்கூட அரைவயிற்றுக்குத்தான் சோறு, வெறும் பருப்புக்கரியுடன். இன்று அவளது வயது பதினெட்டு. ஆனாலும் அன்றும்கூட அவள் கேட்டாள் "எப்போதுதான் என்வாழ்வு விடியும்" என.

காலையில் சூரியனைப்பார்தாள். இரவில் சந்திரனைப்பார்த்தாள். இவை மாறுவது போல் என்வாழ்வும் மாறும் என நினைத்தாள்.

பாவம்! அவள்

எறும்பு தீனியை சேகரிப்பதுபோல, பணத்தை சேகரித்தாள் படிப்பதற்கு. ஆனால் அவளது வயதோ! கடந்துவிட்டது பதினெட்டை!

என்ன செய்வது? தனது தாயோ, நான்கு வீட்டில் பாத்திரம் தேயக்கிறாள். வெறும் நாற்பது ரூபாய் சம்பளத்திற்காக போதாது சம்பளம் என்றே நிதம் தவிக்கிறாள். போகப்போகிறாளாம். மூட்டை தூக்கும் தொழிலுக்கு, இவ்வாறே என்றும் கண்கலங்குவாள்.

ஆனால் தேவியோ! "விதியை மதியால் வெல்ல முடியுமா?" என்றே நிதம் தன் கவலையை போக்குகிறாள். "உண்பதற்கு இன்று மட்டும் தான் இந்நிலை என்று கூறியே தன் நாற்பது வயதும் தாண்டிவிட்டது" என்று தாய் துடிக்கிறாள். அவளுக்குத் தெரியும், தன்னிடம் தாலியைத்தவிர வேறு ஒன்றும் இல்லை என்று.

"இது சரியாக இல்லை என்று" எண்ணிய தாயும் மகளும் குடிசை கட்டுகிறார்கள் கடலருகே! கடலின் அழகை ரசிக்க! மீனை கடலிலிருந்து எடுத்து உண்கிறாள், மீனின் சுவையை ருசிக்க!

இவ்வாறே தற்போது நாட்கள் போகின்றன. நிரந்தர வீடு இல்லை. குடிசையில் வாழும் இவர்களுக்கு ஒவ்வொரு நொடிப்பொழுதும் பயங்கரமாக உள்ளது. ஒரு சிறிய காற்றடித்தாலே போதும், வீடு இடிந்து விழுவதற்கு, அவளது தாயான தெய்வம் தவிக்கிறாள். "இவ்வாறான வாழ்க்கை தேவையா? என்று. ஆனால் தேவியோ "நம் வாழ்வு விடிவது எப்போது?" என்று தவிக்கிறாள்.

எத்தனையோ, கடன்! இவற்றை தீர்ப்பது எவ்வாறு? கடன் தீர்ப்பதை விட்டு, ஒழுங்காக வாழவே முடியவில்லை! என்று ஏங்குகிறாள் தினம்.

எத்தனை சொந்தங்கள் பந்தங்கள் இருந்தாலும், இவற்றில் வேலையில்லையே! பணம் கடனுக்காகவே தருகின்றார்கள்.

தாயின் கடையில் பொருட்கள் வாங்க வருவதில்லையே! அங்கு கடனுக்கு வாங்கி குவித்தவையோ, பாதிக்கு மேல். "க்'டப்படுபவனுக்குத்தான் க்'டமா?" என்று தேவி முனுமுனுக்கிறாள். ஒரு நாளைக்கு ஒரு முறைதான் உண்கிறாள். இவளது சோகநிலையை யார் விசாரிப்பது? அந்தக்கடவுளே நேரில் வந்தாலும் இவளது வாழ்வு விடியுமா?

தினம் அவளது தாய் உறங்க முன் "தன் மகள் படிப்பிக்கயேனும் உழைக்க உடலில் பலம் தா!" என்று வேண்டுகிறாள். ஆனால் நானோ! "எனது வாழ்வில் விடியலையைத்தேடித்தா!" என்கிறேன்.

என்று கூறியவாறு தேவி தன் கைகளால் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, உள்ளே செல்லவும், "என்னம்மா இன்னும் தூங்கலயா?" என்று தனது அம்மா கேட்கவும், "இப்பதான் தூங்கப்போறன்" என்று கூறிய தேவி நித்திரைக்குச் சென்றாள்.

## பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்பட்ட தமிழ்த்திறன்காண் போட்டிகளில் மத்தியபிரிவில் முதலிடம் பெற்ற சிறுகதை

# உண்மை உறவு

"ஐயோ! என்ட அம்மா! என்னை விட்டுட்டுப் போயிட்டியே! நீ இல்லாம நான் எப்படி உயிர்வாழ்வது? என்னை இங்கே தன்னந்தனியாகத் தவிக்க விட்டுவிட்டாயே! உன்ட சாவுக்கு என்னை ஆளாக்கிவிட்டாயே! இத்தனை நாளா நீ கொட்டின பாசத்தை நான் அலட்சியம் செய்துவிட்டேனே! இப்ப உன் நிரந்தர அன்பைத் தொலைத்து தனியாக நிற்கிறேனே! எங்கே போகிறாய்? என்னையும் அங்கே அழைத்துச் செல், அம்மா .... அம்மா..." என்று கத்திக், கதறி, தன் அடக்கமுடியாத துயரத்தை அள்ளிக்கொட்டுகிறாள் ரேணு அன்று அவள் வீடே ஒப்பாரி ஓலங்களில் மூழ்கிக் கிடக்கிறது. ரேணுவைப் பத்து மாதம் பல க'டங்களுடன் சுமந்து, ஈன்றெடுத்த அன்புத்தாய் இன்று தன் முன்னே பிண-மாகக் கிடப்பதைப் பார்க்க ரேணுவின் கண்கள் என்ன பாவம் செய்தனவோ தெரியவில்லை. தன் தாயின் மஞ்சள் பூசிய கரங்களைத் தன் கைகளால் பொத்திப்பிடித்து தன் நெஞ்சோடு அணைத்துப் புலம்பிக்கொண்டிருக்கிறாள் ரேணு அவளின் உறவுகள் கூறும் ஆறுதலைக் கூட கேட்கும் நிலைமையில் ரேணு இல்லை. தாயின் நினைவுகளோடு தன் கடந்தகால நிகழ்வுகளையும் மீட்டுகிறாள்.

அன்புக்கு இலக்கணமாகி, பாசத்தைப் பகிர்ந்தளித்து, இன்பத்தைப் பொழிகின்ற கருணைக்கடல், ரேணு எனும் அழகிய மகவைப்பெற்ற நிகரில்லா அன்புத்தாய், தேவகி. சிறு வயதிலேயே தன் தாய், தந்தையரை இழந்த தேவகி ஓர் கன்னிமரியாள் ஆச்சரமத்தில் சிறந்த ஒழுக்கத்துடனும் கற்புடனும் வாழ்ந்தாள். இவ்வழகிய கவரிமானை செல்வநாதன் எனும் பிணை மான் கவர்ந்து கைப்பற்றியது. ஓர் அநாதைப் பெண்ணை திருமணம் செய்ததனால் நாதன் குடும்பத்தார் இருவரையும் வீட்டை விட்டுத் துரத்தியது. அன்று முதல் அவ்விணைபிரியா ஜோடி தனிக்குடித்தனம் சென்று தம் இல்லறத்தை நல்லறமாகக் கழித்து வந்தது. சாடிக்கேற்ற மூடியைப் போல இருவரும் உயிரும் உடலுமாகத் திகழ்ந்தார்கள். தேவகி தன் கணவன் மீது அளவுகடந்த பாசத்தைப் பொழிந்தாள். இருவரும் இருவரையும் பற்றி நன்கு புரிந்து வைத்திருந்தனர். அதனால் அவர்களுக்கிடையே எந்தவித சண்டை சச்சரவும் இன்றி சந்தோ'மாக வாழ்ந்தனர்.

இவர்களின் அன்புகலந்த உண்மை உறவின் பயனாக ரேணு எனும் அழகிய மகள் தோன்றியது. தன் வாழ்வில் என்றும் நல்லவையே நடக்கின்றன என்று உச்சி குளிர்ந்தவளுக்கு, தலையில் ஓர் இடி வந்து விழுந்தது. ஆம்! வழமைபோல தனது கடைக்குத் தெருவோரமாக நடந்துவந்த நாதனை ஓர்லொறி இடித்து அவன் உயிரைப் பிடித்துச் சென்றது. பாவம் நாதனுக்கு லொறி-தான் யெமன் என்பதை அறிந்திருக்க மாட்டான் போலும். நாதனின் அகால மரணத்தைக் கேள்வியுற்று நடு நடுங்கித் திடுக்கிட்டுப் போனாள் தேவகி. தானும் உடன்கட்டை ஏறத்தயாரான தேவகியைக் குழந்தை ரேணு தவழ்ந்து வந்து தடுத்தாள். தன் மகளை ஓர் உயர் நிலைக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காகத்தான் தேவகி உயிர்வாழ்ந்தாள்.

அன்று முதல் தேவகி ரேணுவிற்காகத் தன்னை அர்ப்பணித்தாள். தன்னலம் கருதாமல் ரேணுவைப் படிப்பித்து பராமரிப்பதில் கவனம் செலுத்தினாள். அதுவரை காலமும் நாதனின் சம்பளத்தில் உயிர்வாழ்ந்த அந்தக் குடும்பம் இன்று தேவகி புரியும் கூலி வேலையிலேயே காலம் கழிக்கிறது. தனக்கு ஒரு வேளை உணவு கிடைக்காவிட்டாலும் ரேணுவை மூன்று வேளையும் உண்பதற்கு உணவைத் தேடிக் கொடுத்தாள். இவ்வாறு க்'டங்கள் நிறைந்த வாழ்க்கையைக் கழித்து வந்த தேவகி, ஒருவாறு தன் புதல்வியை நன்கு படிக்கவைத்து ஒரு டொக்டராக ஆக்குமளவுக்கு உயர்த்திவிட்டாள். தன் மகள் இப்போது டொக்டராகிவிட்டாள். இனி என் கவலைகள் தீர்ந்துவிடும் என்று மகிழ்ந்தவளுக்கு ஓர் சத்திய சோதனை ஏற்பட்டது.

கல்வி உயர்ந்தால் அறிவு பெருகுவது வழமை. ஆனால் இங்கு ரேணுவுக்குத் தலைக்கணம் தலையை மீறிப் பெருக்கெடுத்துவிட்டது. ஆம்! ரேணுவின் நலனுக்காகப் பாடுபட்ட தேவகிக்கு உடுத்துவதற்கு ஓர் நல்ல ஆடை கூட இன்றி ஓர் பிச்சைக்காரியைப் போலவே தோற்றமளித்தாள். தெருவில் ஒருநாள் தேவகி கூலிவேளை செய்தபோது ரேணு தன் நண்பிகளுடன் காரில் வந்ததைக் கண்டு, தேவகி மெய்சிலித்து தன் மகளை ஆசையால் அரவணைக்கச் சென்றாள்.

தேவகியின் புண், காயம் நிறைந்த கைகளைப் பார்த்து அவள் நண்பிகள் முகத்தைச் சுழித்தனர். மறு கணமே தன் தாயைப்பற்றி சிரிதும் வருந்தாமல், அவள் மனம் புண்படுவதைக் கூட கணக்கெடுக்காமல், “யார் நீ? இங்கே வராதே! போய்த் தொலைந்து விடு” என்று ஏசிவிட்டுச்சென்றாள் அந்தக் கல்நெஞ்சக்காரி. பாவம் தேவகி, அவ்வார்தையைக் கேட்டவுடனே தலை கிறுகி மயங்கி விழுந்துவிட்டாள். “நான் என் மகளை எவ்வாறெல்லாம்

வளர்த்தேனே, அதையெல்லாம் மறந்துவிட்டு ஒரு கணத்திலேயே தூக்கி எறிந்து விட்டாளே! அவளுக்காக வாழ்ந்த என்னை இன்று அறுத்து விட்டு என் உறவை அழித்துவிட்டுப் போய்விட்டாளே! இனி நான் உயிருடன் இருந்து என்ன பிர-யோசனம்? இக்கொடும் வார்த்தைகளைக் கேட்கக் கூடாதென்று கருதியோ என் கணவர் என்னை விட்டு எனக்கு முந்தியே வானுலகத்திற்கு சென்று என் வருகைக்காகக் காத்திருக்கிறார்?" என்று மனத்திற்குள்ளேயே புலம்பிக்கொண்டு சென்றாள் தேவகி.

திடீரென்று ஒரு நாள் ரேணுவின் நண்பிகள் அவளின் சுயரூபத்தை அறிந்து விட்டு அவளது நட்புறவை அறுத்துவிட்டுச் சென்றனர். அந்த ஆத்திரத்தில் காரை வேகமாகச் செலுத்திய ரேணு ஓர் முதியவப்பெண்ணை இடித்துக் கொலை செய்தாள். மறுநாள்தான் ரேணு அப்பெண் வேறுயாருமில்லை தன்னை ஈன்றெடுத்த தாய் என்பதை அறிந்துகொண்டாள். தான் தன்னைச் சூழ்ந்திருந்த எத்தனையோ உறவுகள மீது தன்நம்பிக்கையும், அன்பையும் வைத்தாள். ஆனால் தன்னை ஈன்றெடுத்த தாயையே இன்று கொலை செய்த மகாபாவியாக, இந்த வையகத்திலே வாழத்தகாத ஜீவனாக வருந்தியே மனத்திற்குள் புழுங்கினாள் ரேணு. தான் இத்தனைகாலமும் உயிர்வாழந்தும் தன் தாயின் உண்மையான உறவினைப் புரிந்து கொள்ளமுடியவில்லையே என்று ஏங்கியே தாயின் காலடியில் கண்ணீர் சிந்திக்கொண்டிருக்கிறாள்......

"நல்லதோர் வீணை செய்தேன் - அதை
நலம்கெடப்புழுதியில் எறிவதுண்டோ......"

**பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்பட்ட தமிழ்த்திறன்காண் போட்டிகளில் கீழ்ப்பிரிவில் முதலிடம் பெற்ற கவிதை**

# தேன் கூடு

மலர்த் தோட்டத்திலே
மலர்ந்த பூவே உனைக் காண,
மலையேறி வந்தேனடி
மலர்ந்த முகத்துடன்!

உனை பறிக்கும் போதிலே-யாரோ
உனக்காக அழும் சத்தம் கேட்டு
உன் அருகில் பார்த்தேனடி
உனக்காக இடர்ப்பட்டு வந்த தேனியது!

உனது அமுதை ஓர் நொடியில்
உறிஞ்சிய அத் தேனீ - பின்
உனை விட்டு சென்றது அதன் இல்லத்திற்கு
உன் அமுதை எடுத்துக்கொண்டு!

பின் தொடர்ந்தேன்!
பல லட்ச தேனீக் கூட்டம்!
பல்லாயிரம் தேன் சுவடுகள் !
பார்த்தவுடன் திகைத்தேனடி நான்!

மஞ்சள் நிறக் கூடது!
மயக்குகின்ற தேன் கூடது - நான்
மயங்கினேனடி கண்டவுடன்
மன்னரசனை எப்படிப் புகழ்வது?

கடவுள் தந்த அற்புதம்?
கண்ணைப் பறித்துச் சென்றது
கண்டவுடன் மதி மயங்கினேனடி அங்கே
கண் கவரும் கூடு அது!

அது தேன் இல்லையடி- ஒன்றாக சேர்ந்து பாடுபட்ட
அந்த தேனீக்களின் வியர்வையடி!
அத்தேனியின் அதிசய கண்டுபிடிப்பை
அளவிட வார்த்தைகள் இல்லையடி!

தேன்களின் கூடது!
தேனீக்களின் வீடது - தேனீக்களுடன் உரையாட
தேடினேன் புது மொழியினை!
தேனீக்களே கற்றுத்தாருங்கள் உங்களது வாழ்க்கை வரலாற்றினை.

**பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்பட்ட தமிழ்த்திறன்காண் போட்டிகளில் மத்தியபிரிவில் முதலிடம் பெற்ற கவிதை**

# இழந்தோமா?

தாய் நாட்டிலே அகதிகளாய் இருந்தும்
தாய் நாட்டை இழந்தோமா?
தமிழர்களாய் பிறந்திருந்தும்
தமிழின் இனிமையை இழந்தோமா?

உலகிற்கு வந்த நாள்
உன்னத கருவறையை இழந்தோமா?
உயிர்கள் பல சென்ற பின்பும்
இந்த சாதிபிரிவினையை இழந்தோமா?

உயிரானவர்கள் இந்த
உலகை பிரிந்து சென்ற பின்பும்
ஊன், உறக்கம் இன்றி
உயிரை இழந்தோமா?

பருவ வயதினிலே
பாதிப்படிப்பினிலே
இதயத்தை இழந்தோமா?
இன்னொருவரிடம்....

காலங்கள் கடந்த பின்பு
கண்ணுக்கு எட்டா தூரத்தில் இருந்தும்
நண்பர்கள் சிலரின்
நட்பை இழந்தோமா?

மங்கையின் அழகில் மயங்கி
மதியை இழந்தோமா?
தென்றலிடம் நம்
தேக வியர்வையை இழந்தோமா?

பெற்றிருந்த சுதந்திரத்தை
போர்க்களத்தில் இழந்தோமா?
சமுதாய சீர்க்கேட்டை கண்டு
சிந்தை இழந்தோமா?

மரண தருவாயில்
மூச்சை இழந்தோமா?
மாணவர்கள் மத்தியில்
மணி மகுடத்தை இழந்தோமா?

இழந்ததை தட்டிக் கேட்காமல்
இழந்தோமா? உரிமையை...
இறைவனிடம் கண்ணீர் விட்டு
வெட்கத்தை இழந்தோமா?

இழக்க வேண்டியதை இழக்காமல்
இழக்கக் கூடாததை இழக்குமளவு
சுய சிந்தனை இழந்தோமா? இதை சிந்திக்காமல் எம் சிந்தையை
இழந்தோமா?

சுய சிந்தனையை எங்கு
இழந்தோமோ
சுதந்திரத்தை அங்கே
இழந்தோமா?

எங்கு உயிரை
இழந்தோமோ
அங்கே உடலையும்
இழந்தோமா?

ஈட்டி வைத்திருந்ததை
இழந்து செல்கையில்
இழந்தோமா?

இன்னும் இதை
சிந்திக்க சிந்தை
இழந்தோமா?

*பாடசாலைக்களுக்கிடையில் நடாத்தப்பட்ட தமிழ்த்திறன்காண் போட்டிகளில் கீழ்ப்பிரிவில் முதலிடத்தைப் பெற்ற கட்டுரை*

# இயற்கையை நேசிப்போம்

இயற்கையை நேசிப்போர் இவ்வுலகில் எத்தனைபேர்? இயற்கை வளம் எமது இயற்கை அன்னை கொடுத்த வரமாகும். நாம் அதிகாலை எழுவது ஒரு இயற்கை. அதாவது நாம் துயில் எழுவதற்கு முன்னர் சேவல் கூவும், காகம் கரையும், குயில்கள் பாடும், மலர்கள் மலரும், வண்டுகள் ரீங்காரமிடும் இவை அனைத்தும் நாம் துயில் எழுவதற்கு முன்னர் இடம் பெறும்.

இயற்கை எவ்வளவு சுவாரஷியமானது நாம் காணும் ஒவ்வொரு பொருளும் இயற்கையுடன் சேர்ந்தவை. நாம் பூந்தோட்டத்திற்கு சென்றால் அங்கு உள்ள ஒவவொரு மலரிலும் இயற்கை அழகு உண்டு. அழகு நிறைந்த இயற்கையை இவ்வுலகில் நேசிப்போர் யாவர்? தம்முடன் இணைந்த நாளாந்த செயற்பாடு ஒரு இயற்கை அழகு ஆகும். இப்போது நாம் இயற்கை வளங்களை பார்ப்போமாயின் அவை எவ்வளவு? இயற்கை வளங்களுள் காலைக்காட்சி, மாலைக்காட்சி, கடற்கரைக்காட்சி, பூந்தோட்டம், காடுகள் என்னும் இயற்கை வளங்கள் உள்ளன. இதை தவிர இன்னும் பல உள்ளன. இயற்கைக்கு எல்லையே இல்லை எனலாம்.

**காலைக்காட்சி**

இளம் வானிலே இளஞ்சிவப்பு நிறத்தில் சூரியன் எழுவான். அதைக் கண்ட சேவல் நம்மைக் கூவி எழுப்பும். காகங்கள் கரையும் சூரிய ஒளி தெறிக்கும் போது குயில்கள் பாடும். மனிதர்கள் தமது வேலைகளுக்கு சனசனமாக செல்வார்கள். மாணவர்கள் வெள்ளைப்பறவை போல் பாடசாலைக்கு பறந்து செல்வார்கள். சூரியன் இதைக்கண்டு மகிழ்வான். சிறுமிகள் மலர்ந்திருந்த பூக்களை பறித்துக்கொண்டு கோயிலுக்குச் செல்வார்கள். கோயில் மணி ஒலிக்கும். சூரியன் உச்சிவானில் இருப்பான்.

**மாலைக்காட்சி**

நீளவானில் சூரியன் மெல்ல மெல்ல இறங்குவான். சில பூக்கள் மலரும், சில பூக்கள் உதிரும். மல்லிகை மனம் மயக்கும். சிறுவர்கள் மைதானத்தில் விளையாடுவார்கள். மனிதர்கள் வேலைக்குச் சென்று திரும்புவார்கள். எங்கும் மங்கிய வெளிச்சம், குயில்களில் கீச் ...கீச் ... என்ற சத்தங்கள். காகங்கள் இரை தேடி கூடுகளுக்குச் செல்லும். ஒவ்வொரு வீட்டிலும் மனம் மயக்கும் சாம்பிராணி வாசங்கள். கோயில் மணி ஒலிகள், தேவாரப்பாடல்கள். பௌத்த கானம் என்பன மாலைக்காட்சியில் கண்ணை குளிரவைப்பவைகளாகும்.

**மழைக்காட்சி**

சிறுவர்கள் மைதானத்தில் விளையாடுவார்கள். அம்மா துணிகளை காய வைப்பாள். அப்பா மரம் வெட்டுகிறார். வானில் கரு முகில்கள் சஞ்சமிக்கின்றது. எங்கும் இருளால் சூழப்பட்டது. பளிச் ... என்ற கண்ணிமைக்கும் வேகத்தில் மின்னல், இடிச்சத்தம் காது வெடிக்கும் வகையில் அமைந்தது. மழை வரும் என்ற அயலார் கூவினார்கள். அம்மா ஓடி துணிகளை எடுத்தாள். அப்பா கத்தியுடன் வீட்டிற்குள் நுழைந்தார். சோ... என்ற சத்தத்துடன் மழை பயங்கரமாக பெய்தது. சிறுவர்கள் மழையில் துள்ளிக் குதித்தனர். செடிகள் எல்லாம் குளிரால் நடுங்கியது. கம்பளி உடையை போத்திக்கொண்டு இருந்தார்கள் மனிதர்கள்.

**கடற்கரைக்காட்சி**

கடற்கரையில் நின்ற போது அலைகள் என்னை ஆதரித்துச் சென்றன. மணல்கள் தொடர்ந்து வந்தது. தென்றல் காற்று காதுகளில் இரகசியம் சொன்னது. இளஞ்சூரியன் கடலில் மூழ்கி... மூழ்கி ... எழுந்தான். சிறுவர்கள் பட்டம் விட்டனர். கடலை, வடை என்பனவற்றின் வாசம் மூக்கைத் துளைத்தது. கடலலைகள் வருபவர்களை வரறேற்றுக் கொண்டிருந்தது. சிறுமிகள் ஊஞ்சலில் விளையாடிக் கொண்டிருந்தனர். பிஞ்சுக் குழந்தைகள் மணலை வருடி நடந்தது.

**பூந்தோட்டம்**

பல வர்ணங்கள் கண்ணைக் கொள்ளை கொண்டது. மஞ்சள், சிவப்பு, வெள்ளை போன்ற பல வர்ணங்களில் மனதைக் கொள்ளையிட்டது. ரோஜா, செவ்வந்தி, அலரி போன்ற பூக்களும் அதையும் விட அழகான பூக்களும் இருந்தன. அதற்கு வேலிகள் அமைத்து அழகாக, பாதுகாப்பாக வைத்திருந்தனர். மலர்கள் சிறுவர்கள், பெரியவர்கள் பாராது எல்லோர் மனதையும் கொள்ளை கொள்ளும். தாமரை, சூரியகாந்தி ஆகியவை சூரியன் உதிக்கும் போது மலருபவை ஆகும். மல்லிகை இரவில் மலருபவை ஆகும். தொட்டசாசுருங்கி தொட்டவுடன் சுருங்கும் மலராகும். இவ்வளவு பல அதிசயங்களை மலர்கள் கொண்டுள்ளது. நாம் திருவிழா, பண்டிகைகள் செல்லும் போது தலையில் நிறைய மல்லிகைப்பூ, நந்தியாவட்டை போன்ற மலர்களை வைப்போம். எவருமே மலர்களை விரும்பாதவர்கள் இல்லை. பூந்தோட்டத்தில் மலர்களை விடவும் வண்டுகள் நிறைய ரீங்காரமிட்டுக் கொண்டு தேனை அருந்தும்.

இவ்வாறு தான் நாம் யாவரும் ஒரு வகையில் இயற்கையை நேசிக்கின்றோம், நேசிப்போம். இதில் இன்னும் பல இயற்கை அழகு நிறைந்தவை உள்ளது.

நாம் இயற்கையை நேசிப்போம் என்ற வகையில் காடுகளை பார்த்தோம் என்றால், எமக்கு இடைவிடா பெரும் உதவியைப் புரிகிறது. நமக்கு உகந்த காற்றையும், நிழலையும் தருகிறது. நாம் சுவாசிக்க ஒட்சிசனும் நாம் இவற்றில் இருந்தே பெறுகின்றோம். மண்ணரிப்பை தடுப்பதற்கு காடுகளே உதவுகிறது. எப்படியென்றால் நமக்கு வானில் இருந்து நேராக வரும் மழை நீரானது காடுகளில் உள்ள மரங்களுக்கிடையில் சென்று மெதுவாக பூமியைத் தொடுகிறது. ஆகையால் மண்ணரிப்பை தடுக்கிறது.

காடுகள் என்பது எமக்கு இயற்கை அன்னை கொடுத்த வளமாகும். அதனால் நாம் இயற்கையை தூய்மையாகவும், அழகாகவும் வைத்து நேசிப்போம். இயற்கையை நாம் அனைவரும் நேசிப்போம்.

‘‘எங்கள் இயற்கை வளம்’’
‘‘நாம் பாதுகாப்போம்’’
‘‘நாம் நேசிப்போம்’’
‘‘இயற்கையை நேசிப்போம்’’

**முற்றும்**

*பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்பட்ட தமிழ்த்திறன்காண் போட்டிகளில் மத்திய பிரிவில் முதலிடத்தைப் பெற்ற கட்டுரை*

# சூழலைப் பாதுகாப்போம்

நாம் வாழும் இயற்கைப் பரப்பு நிறைந்த அழகிய மரம், செடி, கொடிகள் போன்றன சூழ்ந்து காணப்படும் பொழில் நிறைந்த இடப்பரப்பு சூழல் ஆகும். இச்சூழலில் பல இயற்கை மாற்றங்கள், செயற்கை மாற்றங்கள், சூழல் மாற்றங்கள் போன்று பலவிதமான மாற்றங்கள் நடைபெறுகின்றன. அக்கால மக்கள் சூழலை மிகவும் வனப்பாகவும், சுத்தமாகவும் வைத்திருந்தனர். இக்கால மக்களும் அவ்வாறு தான் பேணுகின்றனர். இருந்த போதிலும் சிறு சிறு பிரச்சினைகள், மாற்றங்கள், நன்மை, தீமை போன்று எல்லாவற்றையும் காண முடிகிறது. ஏன் என்றால் அக்கால மக்களை விட இந்தக்கால மக்கள் சுறுசுறுப்பாகவும், இயந்திரங்களின் தொழிற்பாட்டாலும் பெரிதும் மாறி வருகின்றனர். இப்படியான சூழ்நிலையில் சூழலை எப்படி பாதுகாப்பது என்று நாம் சற்று நோக்குவோம்.

சூழல் என்றால் பல மக்கள், பறவைகள், விலங்குகள், மரங்கள், செடிகள், கொடிகள், வாகனங்கள் போன்ற எல்லா அம்சங்களையும் கொண்டிருக்கும். இவ்வாறான சூழலில் மிகவும் அவசியமாக நாம் வாழும் சூழலை பாதுகாப்பது மிக மிக அவசியமானதொன்று. மக்கள் பல செயற்பாட்டால் சூழலை மாசடையச் செய்கின்றனர். அவை வளி, நீர், நிலம், ஓசை என்பனவாகும். இவற்றில் எல்லா அம்சங்கள் மூலமும் சூழல் பெரிதும் மாசடைகின்றது. நீரின் மூலம் சூழல் மாசடைகிறது என்பதற்கான காரணம் பல உண்டு. விவசாயிகள் விவசாயத்திற்கு தேவையான மருந்துகள், கிருமிநாசினிகள் போன்றவற்றை பாவனை முடிந்ததும் நீரில் வீசுகின்றனர். இதனால் நீர் மாசடைகிறது. குடிப்பதற்கு, குளிப்பதற்கு பொருத்தமற்றதாக விளங்குகிறது. இது மட்டுமா! தொழிற்சாலைக் கழிவுகள், துணித்துண்டுகள், மாசுகள் போன்ற அனைத்தும் வடிகால்கள் மூலம் நீரை வந்தடைகிறது. இதனால் நீர் துர்நாற்றத்துடன் அசுத்த நிலையை அடைகிறது.

இவற்றின் மூலமும் மக்கள் தாம் அன்றாட வாழ்வில் நீரை மிகவும் அதிகமான வீண்விரயம் செய்வதனாலும், உணவு மற்றும் பானங்கள், மின்சாரம் போன்ற உற்பத்திகள் மேற்கொள்வதனாலும் நீர் பற்றாக்குறை பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இதனால் நாம் அதிகம் வீண் விரயம் செய்யாமல் நீரை சிக்கனமாகவும் சுத்தமாகவும் வைத்திருந்தோமானால் நீர் பற்றாக்குறை நிலவாது. அத்தோடு சூழலில் நீரின் மாசுக்கள் இல்லாமல் சுத்தமாக பாதுகாக்கப்படும். அது மட்டுமா? ஒலியின் மூலம் சூழல் மாசடைகிறது. வாகனங்களின் சத்தம், கூட்டங்களின் போது ஒலிப்பெருக்கியின் சத்தம், பட்டாசு, வானவெடிக்கைகள் மூலம் சூழல் நெரிக்கல் ஏற்படுகிறது.

இக்காரணங்கள் மூலம் காட்டுவிலங்குகள் நகரம், கிராமம் என்பவற்றில் நுழைந்து விடுகிறது. இதனால் மக்கள் பெரிதும் உயிர்படுகாயங்கள், சில சமயங்களில் உயிரிழப்புக்கள் கூட ஏற்படுகின்றது. இதனால் சூழல் விலங்குகளால் அழிவுக்கு உள்ளாகின்றது. இதைப் போன்று தான் நிலத்தின் மூலமும் பல பிரச்சினைகள் இருக்கின்றது. அதை கொஞ்சம் விபரித்துப் பாக்கும் போது,

நிலத்தில் தான் பல உயிர்கள் வாழுகின்றன. அவ்வாறு இருக்கும் போது அங்கும் சூழல் சமநிலைப் பேணப்படுவது இல்லை. மக்கள் சூழலில் குப்பைகளை வீசுகின்றனர். அதற்கான உரிய இடங்களில் குப்பைகளை வீசுவது இல்லை. கண்ட கண்ட இடங்களில் எச்சில் துப்பதல், பொலித்தீன் போன்ற உறைகளை முறையற்ற இடங்களில் போடுதல்; சிரட்டை, ரெஜிப்போம், டயர் போன்ற நீர்தேங்கி நிற்கும் பொருட்களை சூழலில் போடுதல் போன்ற காரணங்களால் சூழலில் பிரச்சினைகள் ஏற்படுவதுடன் நோய்களும் ஏற்படுகின்றன. நீர்த்தேங்கி நிற்கும் பொருட்களை சூழலில் போடுவதனால் மழைக் காலங்களில் அவற்றில் நீர் காணப்படும். இதனால் டெங்பு, மலேரியா, யானைக்கால் போன்ற இன்னும் பல்வேறு நோய்களுக்கு உள்ளாகின்றோம். இதனை எண்ணிப் பார்க்கும் போது இவ்வாறு பல நோய்களால் பல மக்கள் உயிரிழந்து இருக்கின்றனர். மக்கள் வீட்டுக்கழிவுகள் மற்றும் இறப்பர் பொருட்கள், கடதாசிப் பொருட்கள் போன்றவற்றை சூழலில் போடுவதால் அனைத்துப் பொருட்களும் கலந்து நமக்கு நுகர முடியாத நாற்றத்தையும் உண்டுபண்ணுகிறது. இவ்வாறு பல காரணங்களால் நிலம் மாசடைகின்றது. இன்னும் கூறுவதற்கு பல விடயங்கள் இருக்கின்றது.

மக்கள் அகற்றும் கழிவுகள், விலங்குகளின் கழிவுகள் போன்றன மண்ணில் கலப்பதால் மண் பொருத்தமற்ற நிலையை அடைகிறது. இவ்வாறான பொருட்கள் மண்ணில் கலப்பதை தடுக்க முறையான வழிமுறைகள் எடுக்க வேண்டும். கடதாசி, பொலித்தீன், டயர், சிரட்டை, இலை குலைகள், சறுகுகள் போன்றவற்றை வெவ்வேறாக வேறாக்கி மண்ணில் புதைத்தல் அல்லது எரித்து விடுதல் வேண்டும். துணித்துண்டுகள் என்பவற்றையும் எரித்துவிட வேண்டும். மழை நாட்களில் மண்ணரிப்பு, மண்சரிவு, வெள்ளப்பெருக்கு, சூறாவளி என்பவற்றின் மூலமும் சூழல் மாசடைகின்றது. மண்ணரிப்பு, மண்சரிவின் போது சூழலில் பல சீரற்ற நிலைகளை அவதானிக்க முடிகிறது. வெள்ளம், சூறாவளி போன்றவற்றில் மாட்டிக்கொண்டு அவதிப்படும் மக்கள் தங்குவதற்கு இடம் இல்லாமை போன்ற பல காரணங்கள் உள்ளது. இது மட்டுமல்ல இன்னும் பல காரணங்களினால் சூழல் மாசடைகின்றது.

வளி என்பது காற்று ஆகும். இவ்வளியும் பலவித காரணத்தால் மாசடைகிறது. வாகனத்தில் இருந்து வெளிவிடப்படும் புகைக் காரணமாகவும், தொழிற்சாலை அணு மின் உற்பத்தி நிலையங்கள் அடுப்பில் இருந்து வெளிவிடப்படும் புகை, நிலக்கரி உற்பத்தி நிலையங்கள் போன்றவற்றில் இருந்து வெளிவிடப்படும் புகைகள்

காரணமாக வளி பெரிதும் மாசடைகிறது. இதனால் வளிமண்டலம் மாசடைகிறது. வளிமண்டலம் மாசடைவதனால் ஓசோன் படை தேய்வடைகிறது. வளிமண்டலத்தில் அதிக மாசுக்கள் படிவதால் நாம் பலவித அனர்த்தங்களை எதிர்நோக்க நேரிடும். புகைப்பிடித்தல் மூலம் சூழல் மாசடைகிறது. புகைப்பிடித்தல் மூலம் புற்றுநோய் ஏற்படுகிறது. இதனால் தனிநபர் ஒருவர் சூழலில் பல பிரச்சினைகளை சந்திக்க வேண்டி இருக்கும். இதனால் இவ்வாறான செயல்களை தடுப்பதற்கு வழிவகுக்க வேண்டும். சூழலில் கண்ட கண்ட இடங்களிலும், பொது இடங்களிலும், திருத்தலங்களிலும், அரசாங்க நிறுவனங்களிலும், வைத்தியசாலையிலும், பாடசாலையிலும் புகைப்பிடிப்பவர்களைக் கண்டால் அவர்களுக்கு சரியான தண்டனை கொடுத்து, அவர்களிடம் இருந்து தண்டனைப் பணம் வசூலிக்க வேண்டும்.

அரசாங்க சட்ட விதிகளை மதிக்காமல் வாகனம் ஓட்டுபவர் மற்றும் புகைப்பிடிப்பவர் என்பவற்றை கைது செய்து தண்டனைப் பணம் வசூலித்தல். மற்றும் வாகனம் ஓட்டுபவர்கள் அதிகப் புகைகள் வெளிவிட்டால் அதற்கும் தக்க தண்டனை கொடுத்தல் வேண்டும். இதுமட்டும் அல்லாமல் காட்டு மரங்களை வெட்டுவதன் மூலம் மழைவீழ்ச்சி குறைவடைகிறது. இதனால் விவசாயம் பெரும் பாதிப்பை எதிர்நோக்கும். இதனால் சூழலுக்குத் தான் ஆபத்து இவ்வாறான பல விடயங்கள் மூலம் சூழல் மாசடைகிறது. அதனால் இவற்றை ஒரு தீர்வுக்கு கொண்டு வர வேண்டும். உரிய சுகாதார அதிகாரிகளிடம் தக்க சட்டங்கள் நியதிகளைப் பெற்றுக் கொள்ளுதலும், நாம் செய்ய வேண்டிய சூழலுக்கு பொருத்தமான விடயங்கள் மூலமும் சூழலை பாதுகாக்க முடியும். முன்னர் சூழல் மாசடைந்து காணப்படுவதை நாம் பார்த்தோம். அதற்கு தேவையான தீர்வுகளையும் பார்த்தோம். நாம் எமது சூழலை பாதுகாப்பதற்கு பல நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம். மரம், செடி, கொடிகள் நாட்டி சூழலை வனப்பாக செய்யலாம், குப்பைக் கூளங்கள் உரிய இடத்தில் வைத்து குப்பைகளை கீழே வீசுவதைத் தடுக்கலாம். சூழல் மாசடைவதனால் ஏற்படும் நோய்களை தடுக்க முறையான மருத்துவத்தை நாடுதல், முறையான ஊசிகள் அடித்தல் போன்ற செயற்பாடுகளை செய்யலாம். நாம் வாழும் சூழலை பாதுகாக்க வேண்டியது எமது கடமையாகும்.

நாம் வாழும் சூழலை பாதுகாத்து சுகமாக வாழ்ந்திடுவோம். சூழல் எமது சொத்து அதை பாதுகாப்பதும், மாசுபடுத்துவதும் எமது நடவடிக்கை மூலமே. சூழலை பாதுகாப்பது எமது தலையாயக் கடமையாகும்.

## பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்பட்ட தமிழ்த்திறன்காண் போட்டிகளில் மேற்பிரிவில் முதலிடம் பெற்ற கட்டுரை

# தமிழில் இணையம்?

"தித்திக்கும் மொழியாம் தமிழ்மொழி, தேன்மதுரை மொழியாம் தமிழ் மொழி," எனும் பெரியோர் வாக்குகளுக்கு இணங்க தமிழ் மொழி நம் நாட்டின் சர்வதேச மொழிகளில் ஒன்றாக திகழ்கிறது. வள்ளுவர் தொடக்கம் பேராசிரியர்களாக திகழும் விபுலானந்தா அடிகள், ஆறுமுகநாவலர், செல்வநாயகம் ஏன் கலாநிதி ஆனந்தன் வரை வளர்ந்து போற்றப்படும் மொழி தேன் இனிய மொழி எங்கள் தமிழ் மொழி. பல நூற்றாண்டுகளுக்கு முன் தோற்றம் பெற்ற தமிழ் மொழி பல இன்னல்கள் அனுபவித்து வந்திருக்கும் அழியாது பளிச்சென தோற்றமளிப்பது எம் தமிழ் மொழி. இம் மொழியின் சேவைகள் சொல்லுக்கடங்காதவை.

முதலில் நவீன தமிழ் மொழி பற்றி சிறிது ஆராய்வோம். நாம் வாழ்ந்துக் கொண்டிருக்கும் இந்த 21ஆம் நூற்றாண்டானது தகவல், தொழிநுட்ப வளர்ச்சியால் சர்வதேச கிராமம் என பெயர் பெற்றுள்ளது. இத் தொழில்நுட்ப வளர்ச்சியானது இன்று மக்கள் மத்தியில் பாரிய சேவைகளை ஆற்றிவருகிறது. அந்த வகையில் அவ்வளரச்சி பொருளாதார அபிவிருத்தியில் மாத்திரம் அங்கம் வகிக்காது மொழிகளில் சிறந்து விளங்கும் தமிழ் மொழியில் பங்காற்றியுள்ளது. இம் மொழி விருத்தி தமிழ் புலவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், மேதைகள் வியந்து நிற்கும் வகையில் அவர்களது வலக்கரமாக நின்று பாரிய சேவையை பணிபுரிகிறது. ஒரு வகையில் இது கூடதன் நாட்டின் அபிவிருத்திக்கு இட்டுச் செல்கிறது எனக் கூறலாம்.

தகவல் தொழிநுட்பம் எனும் ஓர் மரத்தின் கிளையாக வளர்ந்ததே இவ்விணையம். இணையம் எனப்படும் இவ் மென்பொருள் கணனிகளின் ஊடாகவே செயற்படும். இது பரந்த ஒரு வலையமைப்பு என்று கூட கூறலாம். உலகலாவிய தகவல்களை உள்ளடக்கிய இவ் மென்பொருள் இன்று மக்கள் மத்தியில் பரவலாக காணப்படும் ஓர் சாதனமாக திகழ்கிறது. ஒவ்வொரு மனிதனும் தனது அன்றாட கருமங்களை, சுலபமாகவும், விரைவாகவும் மேற்கொள்ள இது உசாத்துணையாக அமைகிறது. அதுமட்டுமல்லாது நாட்டுக்குநாடு, இடத்துக்கு இடம் தொடர்பு கொண்டு தன் நாட்டின் அபிவிருத்தியை மேலும் மேலும் மேலோங்கச்செய்ய இவ் இணையம் பாரிய சேவையை ஆற்றி வருகிறது.

அந்த வகையில் இவ்வனைத்து கருமங்களையும் மேற்கொள்ள ஒரு மொழி இன்றியமையாத ஓர் காரணியாகும். அதில் ஒன்றாக திகழ்வது தான் எம் செந்தமிழ் மொழி. இணையத்தில் தமிழ்மொழியின் பங்கானது அளப்பெரியது சொல்லுக்கடங்காதவை. அவற்றுள் ஒரு சில விடயங்களை ஆராய்வோம்.

கணனி, இணையம் என்றாலே நம் அனைவரினதும் மனதில் குடிக்கொள்வது ஆங்கில மொழியாகும். அது பிழை என்று நான் கூறவில்லை. ஆனால் அதுவே தமிழிலும் தோற்றமளித்திருப்பதை நாம் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டிய ஒரு முக்கியமான விடயமாகும். உதாரணமாக இணைய வலையமைப்பில் ஒரு செயற்திட்டமாக அமைவது Google Search Engine. அவ்வமைப்பு ஆங்கிலத்தில் மட்டுமல்லாது இன்று தமிழிலும் தனது பங்காற்றுகிறது.

இதனூடாக எதிர்காலத் தலைவர்களாகிய மாணவர்கள் அதிலும் குறிப்பாக தமிழ் மொழி மூலம் கல்வி கற்கும் மாணவர்கள் பெரிதும் பயனடைவர். அவர்கள் தமக்கு தேவையான தகவல்களை தான் இருந்த இடத்திலிருந்தே பெற்றுக்கொள்ளலாம். அதுமட்டுமல்ல மேலும் பல இணையதளத்தினூடாக பல வியத்தகு விடயங்களை அவர்கள் பெற்றுக் கொள்ளலாம். இன்னுமொறு இணையத்தளத்திற்கு உதாரணமாக றுமைமிநனயை வைக் குறிப்பிடலாம். தமிழ்மொழிக்கு சிறந்த ஒரு இணையதளமாகும். அதில் “இல்லை” என்ற சொல்லே இல்லை என்ற எனும் அளவுக்கு மாணவர்களுக்கு, அறிஞர்களுக்கு, மேதைகளுக்கு தேவையான சகல விடயங்களையும் கைநொடிப்பொழுதில் தன் கண் முன்னே காட்சியளிக்கும்.

மேலும் நவீன மொழிநுட்பம், நவீன கற்றல் என்ற சொல்லுக்கிணங்க இன்று கற்றல் நடவடிக்கைகள் வீட்டில் இருந்த படியே இணையம் மேற்கொள்கிறது. அந்த வகையில் தமிழ்மொழி மூலம் கல்வி கற்கும் மாணவர்களுக்கென Dialog இனால் அறிமுகப்படுத்தப்பட்ட ந-வநயஉாநச எனும் செயற்திட்டம் இன்று பிரபல்யமானதொன்றாகும். விஷேடமாக O/L, A/L மாணவர்களுக்கு என்றே அறிமுகப்படுத்தப்பட்டதொன்றாகும். இதில் மாணவர்கள் இவ்விணையதளத்தை பயன்படுத்தி நேரடியாக பிரசித்தி பெற்ற ஆசிரியர்களுடன் தனது சந்தோகங்களையும், பிரசினங்களையும் , தீர்த்து கடந்த வினாப்பத்திரங்களை பார்வையிடக் கூடிய வாய்ப்பும் கிட்டுகிறது. இதனால் தமிழ் மொழி இன்ற நாடெங்கும் பரவி மக்கள் மத்தியில் பாரிய அடிமானத்தை பெற்றுள்ளது.

மேலும் நுவளையடயவ நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட Web Padhasala வும் இத்தகையதொன்றாகும். இதில் தமிழ் மொழிக்கும் சிறந்த இடம்

வகித்துள்ளது. கல்வி கற்கும் மாணவர்கள் தனது கற்றல் நடவடிக்கைகளை மேலும் இலகுபடுத்த இச் செயற்றிட்டம் பாறிய சேவையை வழங்குகிறது. இது போன்று மேலும் பல இணையதளங்கள் உள்ளன. Tamil beat, Tamil 99 போன்றன இதற்கு சிறந்த உதாரணங்களாகும்.

கல்வி நடவடிக்கைகளில் மாத்திரமல்லாது பொழுது போக்கு துறையிலும் பாரிய பங்கை இணையம் ஆற்றி வருகிறது. தமிழ் திரைப்படங்கள், தமிழ் பாடல்கள் போன்றவற்றை பார்வையிட, சேமிக்க இது உதவுகிறது. இணையத்தின் ஊடாக எமது வீட்டை Home theatre System ஆக மாற்றலாம். ஆனால் அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு எனும் வாக்குக்கு இணங்க ஒரு கட்டுப்பாட்டுடனே அனைத்து செயற்பாடும் அமைய வேண்டும்.

இவ்வாறு இணையமானது தமிழ் மொழி வளர்ச்சிக்கு பாரிய பங்காற்றி வருகிறது. இதனால் பெரிதும் பயனடைவது மாணவர்களே. குறிப்பாக தமிழ் மொழி கற்கும் மாணவர்கள் எவ்வித துன்பத்தையோ அல்லது நஷ்டத்தையோ அடையவேண்டியதே இல்லை. தானும் சாதிக்கலாம் என்ற தூய எண்ணத்துடன் துணிந்து முன்வர வேண்டும். அதற்கு பூரண அறிவு அத்தியாவசியம். அதற்காகவே இணையம் அவன் சட்டைப்பையில் இருக்கிறது. ஆனால் அதனை எவன் தவறான நோக்கத்துடனும், எண்ணத்துடனும் பயன்படுத்துகின்றானோ அன்றே அது தமிழ் மொழியை இழிவு படுத்துவதாக அமைந்து விடுகிறது.

எனவே தான் ஒவ்வொரு பிரஜையும் நன் நோக்கத்துடன் நாட்டின் அபிவிருத்திக்காகவும், தமிழ்மொழியின் விருத்திக்காகவும் தனது பூரண ஒத்துழைப்பை வழங்கி சிறந்த எதிர்கால தலைவர்களை உருவாக்குவதற்காகவே நல்வழியில் இணையத்தை பயன்படுத்த வேண்டும்.

இணையத்தை பயன்படுத்தி தமிழ் மொழியை வளர்த்து தமிழை சர்வதேச மொ-ாழியாக பிரகடனப்படுத்த நாம் அனைவரையும் ஒன்று திரள எல்லாம் வல்ல இறைவன் வழிகாட்டுவானாக.

நன்றி

# INTERGRADE COMPETION RESULTS

## ESSAY WRITING (LOWER DIVISION)

| | | |
|---|---|---|
| 1ST | S.Narayanan | 7D |
| 2ND | S.Sathyan | 6C |
| 3rd | S.Rukshanth | 8C |

## SHORT STORY (LOWER DIVISION)

| | | |
|---|---|---|
| 1st | G.Viputhesh | 8C |
| 2nd | P.Yugendra | 7D |
| 3rd | Gowthaman | 7D |

## POETRY WRITING (LOWER DIVISION)

| | | |
|---|---|---|
| 1ST | Izyaan Imthiaz | 8H |
| 2ND | A.G.Balaratnarajah | 8D |
| 3rd | M.N. Shabeer Ahamed | 8D |

## SPEECH (LOWER DIVISION)

| | |
|---|---|
| A.G. Balaratnarajah | 8D |
| S. Narayanan | 8D |

## ESSAY WRITING ( MIDDLE DIVISION)

| | | |
|---|---|---|
| 1ST | S.Megajan | 10D |
| 2ND | A. Sanjayan | 10D |
| 3rd | J. Abishek | 10D |

## SHORT STORY ( MIDDLE DIVISION)

| | | |
|---|---|---|
| 1ST | T. Mayooran | 9C |
| 2ND | S. Srisubathson | 10C |
| 3rd | M. Mayooran | 9D |

## POETRY ( MIDDLE DIVISION)

| | | |
|---|---|---|
| 1ST | S.A.S. Sharma | 10D |
| 2ND | S.Ziyan Santhosh | 9C |
| 3rd | S. Kanishkar | 9C |

## SPEECH ( MIDDLE DIVISION)

| | | |
|---|---|---|
| 1ST | T. Mayooran | 9C |
| 2ND | S. Sajishnavan | 9C |
| 3rd | M. Mayooran | 9D |

## ESSAY WRITING (UPPER DIVISON)

| | | |
|---|---|---|
| 1ST | B. Gajive | 11C |
| 2ND | B. Sharounthan | 11D |
| 3rd | A. Asif Ali | 11C |

## POETRY WRITING (UPPER DIVISON)

| | | |
|---|---|---|
| 1ST | Musthaf | 11D |
| 2ND | R. Mithooshan Baanath | 11D |

## SPEECH (UPPER DIVISON)

| | | |
|---|---|---|
| 1ST | B. Gajive | 11C |
| 2ND | F.A.M Shihan | 12COMT |
| 3rd | R. Mithooshan Baarath | 11D |

## பாடசாலைக்குள்ளாக நடாத்தப்பட்ட தமிழ்த்திறன்காண் போட்டிகளில் மத்தியபிரிவில் முதலிடம் பெற்ற கவிதை

# சுவடுகள்

சுவடுகளே சுவடுகளே
கவிச் சுவடுகளே - உள்ளம்
உருக வைக்கும்
அருட் செல்லமே

இறைவா உன் சிறப்பு
எங்கே எங்கே - அன்பு
சொற்களை பொழியும்
சுவடுகள் இங்கே

அன்பு மாலையாக
சூட்டுகின்ற சுவடுகளே - மன்னன்
கோடி கோடி வணக்கம்
தேன் போன்ற இனிமை

முற்காலத்தில் சுவடுகள்
ஓலைச் சுவடுகள் - அச்சில்
ஊன்றி எழுதி
பெயர் படைத்த சுவடுகளே

முனிவர்களும் ஞானிகளும்
பொழிந்த கூற்று - மெய்
மயக்கச் செய்து
சிறப்பை பெற்றது சுவடே

அன்பை அருளும்
பண்பை வளர்க்கும் - கட்
கடவுளே வாழ்க
சுவடுகளின் செயலே

ஓலைச் சுவடுகளே
நன்றிக் கடன் பணிவேன் - உன்
அடிகளைச் காண
சரணம் புகவேன்

சுவடுகளை வாசிக்க
தைரியம் பெருக - சேய்
ஒன்றும் இல்லை
வெண்டாமரையே

கழுகு பறக்கின்றது
காலம் செல்கின்றது - இனி
எப்பொழுது வாசிப்பேன்
கட்டுச் சுவடுகளை

அர்த்தம் புரியவில்லையே
சுவடுகளின் தந்திரம் - அறிவேன்
வாசிப்பேன் வாசிப்பேன்
கற்று இனியேன்

நளனைப் புகழும்
நளவெண்பா யாப்பு - இனிது
சித்தரித்தது பலகோடி
சுவடுகளிலே

கண்ணைப் போல உருப்பு
வேரெதுவும் இல்லை - மாலை
சூட்டிய அரசன்
சுவடுகளின் மூலம் உணர்ந்தான்

மணி மணியாக சொரியும்
சுவடுகளின் அடுக்கே - ஆசைதீர
வாசித்தேன் அறிந்தேன்
உன் சிறப்பை அறிந்தேன்

கோடி கோடி மாந்தர்கள்
அருளிய சுவடுகளே - மழை
பொழிந்து குளிர்ந்தனவே
உன் சிறப்பு யாதே.....

## பாடசாலைக்குள்ளாக நடாத்தப்பட்ட தமிழ்த்திறன்காண் போட்டிகளில் மேற்பிரிவில் முதலிடம் பெற்ற கவிதை

# மனதில் மறைந்த ஈரம்

பள்ளிக்கூடம் செல்லும் நாள் முதல் - என்னைப்
பற்கள் காண சிரிக்க வைத்து
அமுதத்தால் நனைந்திருந்த என் இதயத்தை
காய்ந்து விட வைத்தாயே!

ஐந்தாம் வகுப்பில் இருந்து
ஐம்பது வயது வரை
எனக்கு நீ கொடுத்த இன்பங்களோ
எண்ணிப் பார்க்க முடியாதடீ

பள்ளியிலே படிக்கும் போது - என்
படிப்புக்கு உதவி செய்தாய்
இனிப்புக்கள் வாங்கிக் கொடுத்தால்
முகம் மலர்ந்து சாப்பிடுவாய்

ஏட்டிக்குப் போட்டியாய்ப் படித்தோம் - நாங்கள்
ஒன்றாய் பல்கலைக்கழகம் நுழைந்தோம்
மற்றவர்களுக்கும் எடுத்துக்காட்டாய்
ஒன்றாகவே திரிந்தோம்

கடற்கரை, சினிமா, உணவகம் என்று
சேர்ந்து நாங்கள் சுற்றினோமே
படிப்பையும் இடைவிடாது
பக்குவமாய்ப் படித்தோமே!

அப்பா அம்மாவின் சம்மதத்துடன் - நாம்
கல்யாணமும் கட்டிவிட்டோம்
அன்று முதல் நேற்று வரை - எனக்கு
நீ துணையாய் இருந்தீயே !

எனக்கு நீயோ மனைவியானாய்
இரு குழந்தைகளுக்குத் தாயானாய்
நமக்குள் ஏற்படும் பிரச்சினைகளை
நல்லாய் நீ தீரத்திடுவாய்!

காலையிலே எழுந்து - நாம்
வேலைக்குப் போயிடுவோம்
மாலையிலே வேலை முடிந்து - நாம்
உலாவப் போயிடுவோம்

காற்றிலே அடித்துச் சென்றதடா - அந்த
இனிய பொற்காலம்
இனியே வராதடா - அந்த
அழகிய வசந்த காலம்

என்ன நடந்ததடீ கண்ணே - உனக்கு
என்ன நடந்ததடீ
என்னை விட்டுப் போனாயே - நான்
இனி என் செய்வேன்.
சந்தோசம் நிரம்பி வழிந்த என் மனதைக்
காய்த்து வடித்தாயே நீ காய்த்து வடித்தாயே
அமுதத்தில் நனைந்திருந்த என் மனதை
காய்ந்து சுருங்க வைத்தாயே!

## பாடசாலைக்குள்ளாக நடாத்தப்பட்ட தமிழ்த்திறன்காண் போட்டிகளில் கீழ்ப்பிரிவில் முதலிடம் பெற்ற சிறுகதை

# ஏணி

அன்று அதிகாலை எழுந்து நீராடி இறைவனை மெய்யன்போடு வழிபட்டு பக்திப் பரவசத்துடன் ஹாஸ்டலில் இருந்து பாடசாலை அடைந்ததும் நேரே ஏலெவல் (யுடு) ரிசல்ட் தாளை பார்க்க விழுந்தடித்து ஓடினான் மாதவன். அவனது கண்கள் தனது சுட்டெண்ணைத் தேடி ஆராய்ந்தது. அவனுக்கு அவனது கண்களை நம்பவே முடியவில்லை. கணிதம், விஞ்ஞானம், தமிழ் ஆகிய பாடங்களில் சித்தியடைந்தவர்களின் பெயரில் முதலில் இருந்தது அவன் பெயர் தானே. ஒரு கணம் தனக்கு இவ்வாறான ஓர் அரிய நிமிடத்தை கொடுத்த இறைவனுக்கு நன்றி கூறினான்.

சில மணிநேரத்தின் பின்பு தபாற்காரர் வந்து "மாதவா உனக்கு ஒரு லெட்டர்" என்றார். பெறுபேற்றை அறிந்து சில மணிநேரத்திற்குள்ளே வாழ்த்துக்களை தெரிவிக்க தொடங்கிவிட்டனர் என எண்ணினான். அவனது முகத்தில் ஒரு புன்சிரிப்பு. லெட்டரை வாங்கிப்படித்தான்.
"அண்ணா! அம்மாவுக்கு கடும் காய்ச்சல் பெரிய ஆஸ்பத்திரியில சேர்த்து இருக்கிறம், உடன வரவும். பாசத்துடன் தங்கை" என எழுதியிருந்தது. அவனது சந்தோ'ம் டாக்டராகும் கனவு என்பவற்றின் மேல் இடி விழுந்த மாதிரி ஒரு பிரம்மை. ஏனெனில் அவனது தந்தை இறந்த பின் அவனுக்கு ஒரு ஏணி போல் இருந்தது அவனது அம்மாவே. உடனே தான் தங்கியிருந்த ஹாஸ்டலிற்கு ஓடி-னான். அங்கு அவனை வாழ்த்த ஒரு கூட்டம் கூடியிருந்தது. அதையெல்லாம் புறக்கணித்து விட்டு தனது அறைக்கு ஓடினான். நாளை ஊருக்கு செல்ல தனது பொருட்கள், ஆடைகளை எடுத்து ஆயத்தப்படுத்தினான். பின் கட்டிலில் சாய்ந்தான். அவனுக்கு தூக்கம் வரவில்லை. தனது அம்மாவைப்பற்றியும், தங்கைகளின் தனிமையையும் நோக்கி அவனது எண்ணங்கள் சுழன்றன. ஒவ்வொரு முறையும் லெட்டர் எழுதும் போது "நான் நல்ல சுகம் நீ உன் உடம்பைக் கவனி. நன்றாக படி" என்று எழுதும் அம்மாவுக்கு என்ன வருத்தம் என்ன நடந்தது...

தந்தை இறந்த பின். வீடுகளில் கூலிக்கு வேலை செய்து அவனை பராமரித்தது அவனது அம்மா. "வெளிநாட்டுக்கு அனுப்பினா நல்லா உழைத்து பணம் அனுப்புவான்" என்று ஊரார் கூறியதையும் கேட்காமல், என்னை சிறந்த டாக்டராக்கும் நினைவுடன் க'டப்பட்டு யாழ்பாண உயர்தரப்பாடசாலையில் படிக்க வைத்தார் அவனது தாய். அவன் யாழ்பாணத்தில் மாடமாளிகை போன்று கட்டப்பட்டிருக்கும் பாடசாலையைக் கண்டதும் அவனுக்கு பொறாமையாக

இருந்தது. அங்கு கூட்டாக இருந்த ஏனைய மாணவர்கள் அவனை அழைத்து ஆங்கிலத்தில் ஏதோ கூறினர். பின்பு "எங்கோ பட்டிக்காட்டில் இருந்து வந்திருக்குது ஆங்கிலம் தெரியாம என்னசெய்யப்போகுதோ" என்று பேசிக்கொண்டனர். அவன் ஆங்கிலம் தெரியாததை நினைத்து பயந்தான். தனது வகுப்பறையை அடைந்தான். பெரிய மண்டபம் போலிருந்தது. நூறு மாணவர்களுக்கு கிட்ட அமர்ந்திருந்தனர். பின் ஆசிரியர் வந்து ஆங்கிலத்தில் ஏதோ கேட்க தலைகுனிந்து நின்றான். அன்றைய நாள் வெறுப்பை அளித்தது. அதைப் பற்றி தனது தாய்க்கு லெட்டர் எழுதினான். "சலித்து விடாதே மகனே நமது பக்கத்து வீட்டு ரவி அண்ணா அங்குதான் படிக்கிறார், எதுவானாலும் அவரிடம் கேள் என மறுமொழி வந்தது. அடுத்த நாள் ரவி அண்ணனை தேடிப்பிடித்து தெரியாத அனைத்தையும் விளங்கிய பின் அவனுக்கு ஒரு ஆனந்தம். இன்று படித்து முடித்து அம்மாவின் கனவை நனவாக்க போகிறேன் என்று நினைத்து அதிகாலையிலே பேரூந்தில் ஏறினான். வீட்டை அடைந்தான் ஒருவார பராமரிப்பின்றி பூட்டியிருக்கும் வீட்டை கண்டு கலங்கினான். எதிர்வீட்டு தாமசாமி "தம்பி அம்மாவுக்கு சுகமில்லை, தங்கச்சிகளுக்கு சரியான கவலை, ஆஸ்பத்திரிக்கு செல்" என்றார். அங்கு சென்றவுடனே அவனது இரு தங்கைகளும் அழுது புலம்ப தொடங்கினர். பின் ஊராரின் உதவியால் அம்மாவுக்கு ஆப்பிரேசன் நடந்து முடிந்தது. அவனது பெறுபேற்றை நினைத்து அவனது அம்மாவுக்கு மட்டற்ற மகிழ்ச்சி. தொடர்ந்து படித்து ஒரு சிறந்த டாக்டரானான் மாதவன்.

## பாடசாலைக்குள்ளாக நடாத்தப்பட்ட தமிழ்த்திறன்காண் போட்டிகளில் மத்தியபிரிவில் முதலிடம் பெற்ற சிறுகதை

# கண்துடைத்த கைகள்

ஏழைக் குடிசை ஒன்றினுள் சுவர்க் கரையொன்றின் ஓரமாக, குப்பி பிளக்கொன்றின் மங்கிய ஒளியினில் உருவம் ஒன்று எதையோ நினைத்து சங்கடப்பட்டுக் கொண்டு இருந்தது. அறுபது அகவையை எட்டியிருக்கும் அவளது பெயர் மங்களம். ஆனால் அவள் இதுவரையில் சந்தித்த யாவுமே அமங்கலம். பெற்றெடுத்த மகளே இவளை உதறிவிட்டுச் சென்றுவிட்டதால் அவள் வாழ்வே இருண்டதாகி விட்டது. கடந்த கால நிகழ்வுகளை நினைக்கையில் அவள் கண்களிலிருந்து தாரை தாரையாக கண்ணீர் வழிந்தது. அவளது கண்ணீரின் ஆழத்தைக் கணிப்பதற்காக காலச்சக்கரம் பின்னோக்கிச் சுழல்கின்றது.

வறிய குடும்பமொன்றில் பிறந்த மங்களம், சிறுவயதிலேயே வறுமையின் கோரப் பிடிக்குள் சிக்கிக்கொண்டாள். பெற்றோரின் கட்டாயத்தினால் படிப்பை இடையி-லேயே கைவிட்டு திருமணம் எனும் வலையினுள் வீழ்ந்தாள். குழந்தையும் பெற்றெடுத்து, அதற்கு கண்ணன் என்றும் பெயரிட்டாள். அருமைக் குழந்தையும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தது. ஆனால், என்ன ஒரு துரதி'டம்! கண்ணன் தந்தையையும் இழந்தான். மங்களம் விதவையானாள்! உயிரை விட்டுவிடத் துணிந்தாள். ஆனாலும் குழந்தையின் எதிர்காலத்தை எண்ணி அதற்காகவே தன் வாழ்வை நீடித்தாள். தன் குடும்பநிலையை உணர்ந்த அருமை மகனும் சிக்கனமாகவும், பண்புடையவனாகவும் வளர்ந்தான்.

மங்களமும் ஒரு வீட்டில் வேலை செய்ய ஆரம்பித்தாள். கிடைத்த சொற்ப பணத்தில் எளிமையாக வாழ்க்கை நடாத்தினாள். பணத்தை மிச்சம் பிடித்து மகனையும் ஒரு பாடசாலையில் சேர்த்தாள். மகனும் சிறப்பாகக் கல்விகற்று புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தான். அதன் மூலமும் சிறு தொகை-கயை பெற்றுக்கொண்டாள் மங்களம்.

ஒருவாறாக வருடங்கள் சுழன்றன. கண்ணன் க.பொ.த. உயர் தரத்தில் விஞ்ஞானப்பிரிவில் விசேட சித்தியடைந்து, பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடத்தில் சேர்ந்தான். மங்களத்தின் கனவும் ஒருவாறு நிறைவேறும் தறுவாயில் சென்றது. கண்ணன் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றுக்கொண்டிருக்கையில் ஒருநாள் காலையில் “அம்மா, நான் உங்களிடம் ஓர் வி'யத்தை சொல்ல வேணும்,” என்று இழுத்தான். மங்களமும் சங்கதி புரியாமல் “என்னடா” என்று வினவினாள். கண்ணன் “கல்லூரி முடிச்சு வந்த பிறகு சொல்லுறன்” என்று

கூறிவிட்டு ஏதோ யோசனையில் கல்லூரிக்கு விரைந்தான். மங்களம் கற்பனை உலகினில் மிதந்தாள். என்ன விடயத்தை சொல்லப்போகிறான் என்று ஆவலுடன் எதிர்பார்த்திருந்தாள்.

கல்லூரி முடித்து வந்தவன் நேராக மங்களத்திடம் "அம்மா, நான் சிவதர்சினி என்ற பொண்ணை காதலிக்கிறன். அவளையே கல்யாணம் கட்டப்போறன்" என ஒரே மூச்சில் கூறிமுடித்தான். மங்களம் ஏமாந்து போனாள். "உன்னை கல்லூரிக்கு படிக்கத்தானே அனுப்பினது? இந்தமாதிரி ஊரில இருக்கிற காவாலித்தனத்த பழகவா அனுப்பினது," என்று வாய்க்கு வந்தபடி திட்டினாள். கண்ணனும் பேசா-மலேயே அன்றைய நாளைக் கழித்துக் கொண்டான்.

அடுத்தநாள் கல்லூரிக்குப் போனவன் திரும்பி வரவே இல்லை, வாழ்க்கை எனும் படகை கரைகாணா கடலில் தொலைத்த மங்களம் செயலற்றுப் பே-ானாள். ஒரு வருடத்தின் பின்னர் திரும்பிய கண்ணன் தாய்ப்பாசத்தை எதிர்பார்த்து வாசற்கதவருகில் வந்து நின்றான். மகனைக் கண்ட மங்களமும் கோபத்தையெல்லாம் மூட்டை கட்டி வைத்து விட்டு மகனை வரவேற்றாள். கூடவே அவன் மனைவியும் அவள் கையில் ஒரு பிஞ்சுக் குழந்தையும் இருப்பதைக் கண்டு பூரித்துப் போனாள். சிறிது நேரம் உறவாடிய அவர்கள் பின் வீட்டிற்குச் சென்றனர்.

அன்றொரு நாள் மங்களத்தின் வீட்டின் கதவருகில் அழுகுரல் ஒலித்தது. சென்று பார்த்த பொழுது தான் தெரிந்தது, அது தன் மருமகளென்று! "அத்தை, அவருக்கு கிட்னில ஏதோ பிரச்சினையாம், இப்ப வைத்திய சாலைல இருக்காறு - இன்னும் மூன்று நாளுக்குள்ள கிட்னிக்கு ஏற்பாடு பண்ணாட்டி அவர காப்பாற்றவே முடியாதுன்னு டாக்டர் சொல்றாரு, நான் என்ன செய்வன்?" என்று விம்மினாள். பெரிய முதலையொன்றின் பற்களுக்கிடையில் மாட்டிய மங்களம் மனதைத் தேற்றிக்கொண்டு ஒரு முடிவுக்கு வந்தாள். மகனுக்கான தன் சிறுநீரகத்தைக் கொடுக்க முன்வந்தாள்.

மீட்டிய கனவுகளின் கோரத்தை சகித்துக்கொண்ட மங்களம் ஒருவாறு எழுந்து நின்றாள். தனக்கென்றிருந்த குடிசையையும் விட்டு வெளியே வந்தாள். வாழ்க்யையின் கசப்பை புரிந்து கொண்டாள். அவளுக்காக வாசலிலே "அம்பியூலன்ஸ்" வண்டி காத்திருந்தது.

*பாடசாலைக்குள்ளாக நடாத்தப்பட்ட தமிழ்திறன்காண் போட்டியில் கீழ் பிரிவில் முதலிடம் பெற்ற கட்டுரை*

# மாதா, பிதா, குரு, தெய்வம்

மாதா, பிதா, குரு மற்றும் தெய்வம் என்று சொல்லும் போது நாங்கள் அவை ஒவ்வொன்றைப் பற்றியும் யோசிப்போம். அதாவது மாதா என்பது அம்மா, பிதா என்பது அப்பா, குரு என்பது ஆசிரியர் மற்றும் தெய்வம் என்பது கடவுள் ஆகும்.

முதலில் மாதா (அம்மா)வைப் பற்றிப் பார்ப்போம். எம்மைப் பத்து மாதங்கள் தனது கருவிலே சுமந்து எம்மைப் பெற்று எடுத்தவள் எமது அம்மாவே ஆகும். எமது அம்மாதான் நாங்கள் பிறந்தவுடன் எம்மை அன்பாகக் கவனித்து எமக்குத் தேவையான எல்லா உணவுகளையும் கொடுத்து எம்மிடம் உள்ள அறிவை வளர்த்தவள். வள்ளுவர் பெருமான் மாதாவைப் பற்றி பல திருக்குறள்கள் கூறியுள்ளார்.

அடுத்ததாக பிதா (அப்பா)வைப் பற்றிப் பார்ப்போம். அப்பா தான் நாம் பிறந்தவுடன் எமக்குத் தேவையான உணவு, உடை மற்றும் உறையுள் ஆகியவற்றை வாங்கித் தருபவர். எமக்கு எமது அப்பா நாம் வளந்த பின் எம்மைப் பாடசாலையில் சேர்த்து எமக்குப் படிக்கத் தேவையான அனைத்தும் (பயிற்சிப் புத்தகங்கள், நாம் எழுதுவதற்கு கொப்பிகள், பென்சில், பேனா மற்றும் அழிறப்பர்) வாங்கித் தருபவர். எமக்கு எமது விடுமுறையின் போது எமது அப்பா எங்களை வெளி இடத்திற்குக் கூட்டிச் செல்வார். இவர்களைப் பற்றி வள்ளுவர் பெருமான்,

> ''மாதா பிதா குரு தெய்வம்''
> ''தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை''
> ''தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை''

என்று உள்ளத்தால் இவ் அடிகளைக் கூறினார்.

அடுத்ததாக குரு (ஆசிரியர்) ரைப் பற்றிப் பார்ப்போம். நாம் பிறந்தவுடன் எமது அறிவுக் கண்களை திறந்து வைக்கும் முதல் தெய்வமே குருவாகும். நாம் பாடசாலையில் சேர்ந்தவுடன் எம்மை மகிழ வைத்து மிகவும் சந்தோஷமாக எம்மை கற்பித்தவர். நாம் என்ன தவறு செய்தாலும் எம்மை தண்டித்து எம்மை வழிநடத்தியவர்கள். இவ்வாறான எமது குரு சொற்படி நாங்கள் நடந்து, அவர்கள் தரும் வீட்டுவேலைகளை செய்து, அவர்களின் மனதை துன்புறுத்தாமல் இருக்க வேண்டும்.

அடுத்ததாக தெய்வத்தைப் (இறைவன்) பற்றிப் பார்ப்போம். இறைவன் தான் இந்த உலகைப் படைத்தவர். ஒவ்வொரு மதங்களுக்கும் ஒவ்வொரு முழுமுதல் கடவுள் இருப்பார். உதாரணமாக : சைவ மக்களின் முழுமுதற் கடவுள் சிவபெருமான் ஆவார். பௌத்த சமய மக்களின் முழுமுதற் கடவுள் புத்தர், இஸ்லாமிய மக்களின் முழுமுதற் கடவுள் அல்லா மற்றும் கிறீஸ்தவ மக்களின் முழுமுதற் கடவுள் ஜீஸஸ் ஆகும். நாங்கள் தினமும் இறைவனை வழிபட வேண்டும். அவ்வாறு நாம் இறைவனை வழிபட்டால் அவர் எம்மீது கருணை கொண்டு, எமக்கு அருள் புரிவார். எனவே நாமும் மாதா, பிதா, குரு, தெய்வம் போன்றவர்களை வழிபட்டு எமது அடுத்த சந்ததியினரிற்கும் வழபடக் கூறுமாறு சொல்வோமாக.

### பாடசாலைக்குள்ளாக நடாத்தப்பட்ட தமிழ்த்திறன்காண் போட்டிகளில் மத்தியபிரிவில் முதலிடம் பெற்ற கட்டுரை

## தமிழர் கலாசாரம்

ஆயிரம் ஆயிரம் வருடங்களுக்கு முன்பு தோன்றியது நமது தமிழ் மொழி ஆகும் நமது மூதாதேயர் நம் மொழியையும், சமயத்தையும் வளர்ப்பதற்காக பற்பல சடங்குகள், சம்பிரதாயங்கள், மற்றும் கலாச்சார முறைகளையும் உருவாக்கி அதனைப்பின்பற்றி அதை அடுத்தடுத்து வரும் தமிழ் தலைமுறைகளுக்கும் பின்பற்ற சொல்லிக்கொடுத்தனர். நம் தமிழ் இன்னும் அழியாமல் நிலைத்து நிற்பதற்கு நாம் பின்பற்றும் இந்த சடங்குகளும் கலாச்சாரமும் ஒரு வகையில் நல்ல உறுதுணையாக அமைகிறது.

இன்று நாம் ஒவ்வொருவரும் நமது பண்பாட்டையும், கலாசாரத்தையும் மதிக்காமல் அதைப்புறந்தள்ளி விட்டு நம் பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் எதிர்க்கும் வகையிலேயே எமக்கு எவ்விதத்திலும் ஒத்துவராத மேற்கத்தைய நாடுகளின் கலாச்சாரத்தை பின்பற்றி அதை நமது சமூகத்திற்கு நாமே பரப்ப முனைகின்றோம். முன்பு பெண்கள் (வயது வந்தவர்கள்) பெற்ற தாய், தந்தையரை மதித்து அவர்கள் வயது முதிந்தவர்கள் என்ற நிலையை அடையும் போது தனது பெற்றோர்கள் அவள் எப்படி குழந்தையாக இருக்கும் போது அவளைப்பராமரித்தார்களோ அதே போன்று அவளும் அவர்களை அன்புடன் அரவணைத்து தமது குழந்தைகள் போலவே பராமரிப்பர். அதே போல் அவர்கள் திருமணம் முடித்த பின்னர் அவளும் அவளது கணவன் அவனின் தாய், தந்தை மற்றும் அவளது தாய், தந்தையோடு ஒரு நல்ல கூட்டுக்குடும்பமாக வாழ்வர். ஆனால் இன்று வயது வந்த பெண்கள் நாட்டில் அரைவாசிக்கும் அதிகமானோர் மேற்கத்தய கலாசாரத்தை பின் பற்றி நம் கலாசாரத்தையே சீர்குலைக்கின்றனர். கற்பழிப்பு மற்றும் கொலை இன்று நாட்டில் அதிகம் இடம்பெறுவதற்கான காரணம் நம் பெண்கள் இன்ற மேற்கத்தைய கலாச்சாரத்தை பின்பற்றுவதால் ஏற்படும் விளைவுகளின் சில என குறிப்பிடலாம். முன்னர் ஆண்கள் மனைவியைத்தவிர மற்ற எல்லாப்பெண்களையும் தமது தாயாகவே மதித்தனர். இன்று தாயைத்தவிர மற்ற எல்லோரையும் தம் மனைவியாகவே பார்க்கின்றனர். இதற்கும் ஒருவகையில் இக்காலத்து பெண்களும் காரணம். முன்னர் கூட்டமாக வாழ்ந்தோம். இன்று தனித்தனி குடும்பமாக பல விதமான பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றோம். அதே போல் கலாசாரம் என்ற பெயரில் இன்று மூட நம்பிக்கைகள் தலைதூக்கி விட்டன. ஆட்டை பலி கொடுப்பதும், மழை பெய்யா விட்டால் தெய்வ

குற்றம் எனவும் அதற்கு பரிகாரமாக வித்தியாசமான முறைகளில் தீர்த்தும் வைக்கப்படுகின்றன. இதுவும் நம் கலாசார அழிவுக்கு இன்னும் ஒரு காரணம் ஆகும்.

நம் கலாசாரத்தை நாம் பின்பற்றாததால் நமக்கே பல பிரச்சனைகள் உண்டாகின்றன எனில் நாம் பின்பற்றினால் எத்தனை நன்மைகள் ஏற்படும். இன்று நம் கலாசாரத்தை வளர்பதற்காக நாமே பல கலாசார நிகழ்ச்சிகள் செய்ய வேண்டியதாக உள்ளது. பெண்களும் தானாக நம் கலாசாரத்தை பின்பற்றினால் இன்று நடக்கும் அட்டூழியங்களுக்கு கிட்டத்தட்ட ஒரு முடிவு காலமாக அமையும் அழியும் ஆண்களும், இம்மொத்த சமுதாயமும் திரும்பவும் நம் கலாசாரத்தை பின்பற்றினால் இவ்வட்டூழியங்கள் மொத்தமாக அழிந்துவிடும். முக்கியமாக கலாசார மற்றும் சமூக விளிப்புணர்வு நிகழ்ச்சிகள் கிராமங்களுக்கிடையே மேற்கொள்ளப்பட்டால் அங்கு வாழும் மக்களுக்கிடையே கலாசாரத்திற்கும் மூடநம்பிக்கைக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை உணர்ந்து செயற்படுவர். இதுவும் நம் கலாசாரம், பண்பாடு வலுப்பெறுவதற்கான சந்தர்ப்பமாக அமையும்.

நமது தமிழ் இன்னும் பல நூற்றாண்டுகள் வாழ வேண்டுமெனில் நமது கலாசாரத்தையும், பண்பாட்டையும் கட்டாயம் பின்பற்ற வேண்டியது அவசியம் ஆகும்.

*பாடசாலைக்குள்ளாக நடாத்தப்பட்ட தமிழ்திறன்காண் போட்டியில்
மேற் பிரிவில் முதலிடம் பெற்ற கட்டுரை*

# தமிழ்ப் பாடல்களிற்குக் கைகொடுத்த கண்ணதாசன்

இன்று நாம் 21ம் நூற்றாண்டில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்த நூற்றாண்டு வரையிலான காலப்பகுதியில் மனிதன் பல துறைகளில் முன்னேறி சிறப்பாக வாழக் கற்றுக் கொண்டிருக்கின்றான். இத்தகைய காலத்தில் மொழி, மதம், இலக்கியம் போன்ற அனைத்து விடயங்களும் சிறப்பான நிலையில் உச்சத்தை அடைந்து கொண்டு இருந்தன. இத்தகைய உச்சத்தைத் தமிழ் மொழியும் அடைய உதவி செய்த கலைஞர்களில் சிறந்தவர் கண்ணதாசன் ஆவார்.

கண்ணதாசன் பாடல்கள் கூறும் கருத்துக்களோ ஏராளம். அனைத்து உணர்ச்சிகளையும் காட்டும் பாடல்கள் பலவற்றைக் கண்ணதாசன் இயற்றியுள்ளார். தமிழில் தத்துவப்பாடல்கள் குறைந்து சென்ற காலப்பகுதியில் தமிழிலே பல பாடல்களை இயற்றித் தமிழ் பாடல்களிற்குப் புத்துயிர் கொடுத்தார்.

''பரமசிவன் கழுத்திலிருந்து பாம்பு கேட்டது கருடா சௌக்கியமா
இருக்கிறவர் இருக்கும் இடத்தில் இருந்தால் எல்லாம் சௌக்கியம் தான்
கருடன் சொன்னது அதில் அர்த்தமும் உள்ளது''

கருடனானது பாம்பை ஒரே கொத்தில் உண்ணும் வல்லமை கொண்டது. எனினும் சிவனுடைய கழுத்தில் இருக்கின்ற பாம்பினைக் கருடன் உண்ண முடியாது. எனவே இங்கே கருடனுடைய நிலை கீழே செல்கிறது. ஒரு காலத்தில் பெரியவராக இருப்பவர் சிறிது காலத்திலே சிறியவராக மாறலாம். இது மிக வேகமாக மாறும் உலகத்தை எமக்கு விளக்கி நிற்கின்றது.

''அடி உதவுவதைப் போல அண்ணன் தம்பி உதவ மாட்டார்கள்'' என்று கூறுகின்றது பழமொழி. மாறிவரும் உலகிலே சகோதர பாசமானது நலிவுற்றுச் செல்கிறது இதனைக் கண்ணதாசன் பாடியிருக்கிறான்''

''அண்ணன் என்னடா தம்பி என்னடா அவசரமான உலகத்திலே'' என்று இன்றைய சமூகத்தை அப்படியே பிரதிபலித்துக் காட்டுகிறார் கண்ணதாசன். வாழ்க்கைச் செலவுகளைப் பற்றிப் பாடிய கவிஞராக கவிஞர் கண்ணதாசன் விளங்குகிறார். ஆடம்பர மோகம் அளவிற்கு மேல் சென்றால் அது நம்ம அழிவிற்கு நாமே கட்டிய பாலம் ஆகும் நாம் நம் வரவிற்கு மீறி செலவு செய்வது நமக்கே ஆபத்தானதாகத் தோன்றும் ''வரவு எட்டணா செலவு பத்தனா அதிகம் இரண்டணா கடைசியில் துண்டடா'' என்று வரவை மீறி செலவு செய்பவரிற்கு எச்சரிக்கை விடுகிறார் கண்ணதாசன்.

கண்ணதாசன் காலத்திலே மக்கள் மதத்தால் மதம் பிடித்து மதத்திற்காக சண்டை சச்சரவுகளை மேற்கொண்டு இருந்தனர். இதனால் தாக்கமுற்ற கண்ணதாசன் கூறுகின்றார். ''பறவையைக் கண்டான் விமானம் படைத்தான் பாயும் மீனினுள் படகினைக் கண்டான் எதிரொளி கேட்டான் வானொலி படைத்தான் எதனைக் கண்டான் மதத்தைப் படைத்தான்'' என்று மதச் சண்டைகளைா் மேற்கொள்ளும் மக்களைத் தூற்றுகின்றார்.

மனிதனுடைய வாழ்க்கை எவ்வாறு இருக்க வேண்டும் என்று கண்ணதாசன் கூறுகின்றார் ''சிரித்து வாழவேண்டும் பிறர் சிரிக்க வாழ்ந்திடாதே உழைத்து வாழ வேண்டும் பிறர் உழைப்பில் வாழ்ந்திடாதே என்று வாழ்க்கையை நமக்கு விளங்க வைத்திருக்கிறார் கவிஞர் கண்ணதாசன். பணமோகம் பிடித்து பணத்தின் பின் அலைபவர்களைப் பார்த்துக் கண்ணதாசன் கூறுகின்றார் ''பணம் என்னடா பணம் பணம் குணம் தானடா நிரந்தரம்'' என்று உண்மையைக் கூறுகின்றார் மேலும் கூறுகின்றார் ''இரக்க மனத்தைக் கெடுக்கும் அரக்கன் பணம் பணம் பணம்''. இதிலிருந்து பணத்தை கால் தூசென மதித்து அதற்கு அடிமை ஆகாது அதை நமக்கு அடிமையாகப் பாவிக்க வேண்டும் என்ற உண்மையை எமக்கு உணர்த்துகிறார் கண்ணதாசன்.

நம்பிக்கைத் துரோகம் என்பதின் கொடுமையைக் கண்ணதாசன். தன் பாடல்களினால் உலகிற்கு உணர்த்தியிருக்கிறார். ''கண்ணுக்கு இமை எல்லாம், முள்ளாகி வரும் போது கண்ணை யார் காப்பது'' என்று கவிஞர் கண்ணதாசன் பாடுவது ஓர் ஆழ்ந்த பொருள் கொண்டதாக உள்ளது. நம் உறவுகள் தான் நம்பாது காவர்கள் அவர்-களே நம்மைப் பகைத்துக் கெணர்டால் நம் நிலை என்னாவது. இவ் உலகிலே வாழ்வதற்கு நல்ல உறவுகள் அவசியமானது திருவள்ளுவரே இதனை நமக்குக் கூறுகின்றார்.

> ''உலகத்தோடு ஒட்ட ஒழுகார் பலகற்றும்
> கற்றார் அறிவிலாதார்''

''நல்லவர்க்கெல்லாம் சாட்சிகள் ரெண்டு ஒன்று மனசாட்சி மற்றது தெய்வத்தின் சாட்சியம்மா நம்பிக்கை வைத்து கல்லையும் பார்த்தால் தெய்வத்தின் காட்சியம்மா அது தான் உண்மைக்கு சாட்சியம்மா''

என்று இன்றைய உலகமானது நல்லது நினைப்பதை விட்டு தீயதின் வழி செல்கிறது. நல்லவர்க்கு அவரவர் மனசாட்சியும் தெய்வமும் தான் சாட்சி என்று நமக்கு அழக-ாகக் கூறியுள்ளார்.

இன்று மனிதர்கள் எவ்வாறு இருக்கின்றனர் என்று பாடுகிறார். கண்ணதாசன் ''சிலர் சிரிப்பார் சிலர் அழுவார் நான் சிரித்துக் கொண்டே அழுகின்றேன்'' என்று இன்றைய மக்கள் கவலை மகிழ்ச்சி என்பவற்றை வெளியிடவும் முடியாமல் மறக்கவும் முடியாமல் தவிக்கும் அவல நிலையை கண்ணதாசன் அழகாக விளங்க வைத்திருக்கின்றார். மேலும்

''போனால் போகட்டும் போட இந்தப் பூமியில் நிலையாய்
வாழ்ந்தவர் யாரடா போனால் போகட்டும் போடா''

என்று கண்ணதாசன் வாழ்வின் யதார்த்தத்தை பாடியிருக்கின்றார். இவ்வாறு தத்துவங்கள், நவீன உலகில் சகோதர பாசம், மதப்பிரிவினை, வாழ்க்கை முறை, பணம், நம்பிக்கை துரோகம், நேர்மை, மனித வாழ்வு என சகல துறைகளிலும் தன் பாடல்களைப் பாடி இருக்கின்றார்.

எனவே கவிஞர் கண்ணதாசனின் பாடல்கள் தமிழ்ப்பாடல்களின் தரத்தை மிகவும் உயர்த்தி தமிழ்க் கவிஞர்களின் மத்தியில் சிறந்தவராக தமிழ்பாடலிற்குக் கை கொடுத்தார். இன்றைய கவிஞர்களும் அவரைப்போல் அனைத்துத் துறையிலும் பாடல்களை பாடித் தமிழை வாழவைப்பார்கள்.

# திருக்குறளில் மனிதநேயச்சிந்தனை

நாகரீக வளர்ச்சியில் பின்தங்கிய காலத்தில் மலர்ந்த நேயப்பண்பை விட இக்காலச் சூழலில் மனிதன் மற்ற உயிர்களையும் தன்னையும் நேசிக்கும் பண்பு தேய்மானத்தை நோக்கியும், தனது வளர்நிலையில் சிக்கலையும் எதிர்நோக்கி உள்ளது. தொய்வடையும் தோழமை உணர்வான நேயப்பண்பை சட்டத்தையும், அதிகாரத்தையும், பண பலத்தையும் கொண்டு வலுப்படுத்த் முடியாது. இழந்து கொண்டிருக்கும் ஒழுக்கங்களையும் மனித விழுமியங்களையும் மீட்டுருவாக்கம் செய்தல் வேண்டும். மீட்டுருவாக்கத்தின் அடிப்படை என்பது உயர்ந்த பண்புகளை வலியுறுத்தும் பண்டைய நூல்களை திருப்பிப் பார்த்து உள்ளப்புனைத்தலாகும். இந்த அடிப்படையில் வாழ்வியல் இயங்கியல் பொருண்மையைக் கொண்ட வள்ளுவத்தில் பொதிந்துள்ள மனிதநேயச் சிந்தனையைப் பகிர்ந்து கொண்டும், செத்துக் கொண்டிருக்கும் உயிரின் மேன்மைக்குச் செழுமை சேர்க்கும் வண்ணமாக இக்கட்டுரை உதிக்கின்றது. மனித நேயம் என்பது தேடிக் கொண்டிருக்கும் அதே சமயம் உயரப் பிடித்து ஒலிக்க வேண்டிய வார்த்தையாகத் தான் உள்ளது. மனமே நேயத்தின் அடிப்படை என்றாலும் அடுத்த அறிவைத் தேடும் மனம் தனது சுயத்தை, முழுமையை மெல்ல மெல்ல தனக்கத் தெரியாமலேயே இழந்து கொண்டிருக்கின்றது என்பது தான் உண்மை. நேசிப்பிற்கான கருத்துருவாக்கம் வேறு வேறு பரிமாணங்களையும், பரினாமங்களையும், பெற்று விட்டதே இந்த பின்னடைவிற்கான காரணம்.

* அறிவியலின் அசுர வளர்ச்சியும், அதன் வழியாக நிகழ்ந்து வரும் பண்பாட்டின் வீழ்ச்சியும்.
* நாகரிகம் என்ற பெயரில் மனிதனைப் பழிவாங்கும், உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் மனநிலை பரவிக் கிடத்தல்.
* நேசம் தன்னிலை திரிந்து பாசம், பற்று என்ற நிலை கடந்து பற்று வெளியா-கி வெறியுடன் சுற்றித் திரியும் இந்தக் கலாச்சார சீரழிவுதான் பண்பாட்டின் உச்சம் என்று கருதும் நிலை.

என்ற மேற்கண்ட செயல்நிலைகளைத் தோழமை தொய்வடையக் காரண-மாகக் கொள்ளலாம். இந்த எதிர்முரணான நிகழ்வின் மூலாதரம் வாழ்வியல் உயர் விழுமியங்களை மதிக்கவும், போற்றவும், வளர்க்கவும் தவறிவிட்டோம் என்பதின் ஈவு என்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

## அன்பு:

ஏதோ ஒரு வகையில் உறவு முறையை புதுப்பித்தும், புதிதாக உருவாக்கவும் எல்லா வகையான கொள்கலனுக்கும் இடையீடாக இருப்பதுதான் அன்பு, எப்படி உணர்வது? எப்படி உள்வாங்குவது? என்ற கேள்வி விரும்பியவர் மீது பொருளையும், நேரத்தையும் விரயமாக்கும் விதமாக அன்பை உணர்ந்து கொள்ளவும் அடையாளப்படுத்தவும் முடியும். தனிமனிதன், குடும்பம், சமுதாயம் என்ற தொடரமைப்பில் குடும்பமாக இருக்கும் இல்வாழ்க்கையே சில வாழ்க்கைப் பாடங்களைக் கற்றுத் தருகின்றது. இந்த இல்வாழ்வின் பயன் அன்பும் அறனும் உட்கூறுகளாக இருப்பதேயாகும் என்று வள்ளுவம் (குறள் 45) குறிப்பிடுகின்றது. பயத்துடன் மனித நிலைக்குமேல் பார்க்கும் கடவுட் கோட்பாட்டைத் தவிர்த்துப் பாசத்துடன், அன்புடன் வணங்கும் கணவன் மீது கொள்ளும் அன்பே நேயத்தின் முழுமையாகும் என்பதை வள்ளுவம் தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழு தெழுவாள் (குறள் 55) என்று பதிவு செய்துள்ளது. பெறுதற்கரிய இந்த உடலும் உயிரும் இயைந்த மனித வாழ்வு அனைத்து உயிர்களின் மீதும் அன்பு செலுத்துவதற்கேயாகும் (குறள் 73). எல்லோருக்கும் சொந்தப்படுத்துவது அன்பு (குறள் 72), அறம் செய்து வாழும் வாழ்க்கைக்கு அன்பே அடிப்படை (குறள் 6) என்றெல்லாம் அன்பின் உச்சம் பரந்து விரிந்து கிடக்கின்றது. பண்பாட்டு விழுமியங்களுக்கும், அன்பு அடிப்படையானது என்பது குறள் கூறும் செய்தியாகும். இந்த அன்பு தான் நேயத்தின் அடிப்படை, இந்நிலை மாறும் போது அன்பின் பன்முகம் பழுதடைந்தும் நேயம் காய்ந்து போகின்றது.

''அரம் போலும் கூர்மையரேனும் மரம்போல்வர் மக்கட் பண்பில்லாதவர்'' (997) இங்கு குறிப்பிடும் மக்கட்பண்பு என்பதுவும் தோழமை, நேய உணர்வு என்பது குறிப்பிடத்தக்கது.

## நட்பு:

வேறு வேறு தளங்களில் சிதறிக் கிடக்கும் மனிதச் சமூகத்தைப் பிணைத்துப் பார்ப்பது நட்பு எனும் நந்தவனமே புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான் நட்பாம் கிழமை தரும் (குறள். 785) உணர்ச்சிதான் நட்பின் வலிமையாகக் கருதப்படுகின்றது. இந்த வலிமையே நட்பின் அடையாளமாகவும் வெளிக் கொணரப்படுகின்றது. இவ்வுலகம் இன்றளவும் தழைத்திருக்கின்றது என்றால் சிலக்கூறுகளில் ஒன்றான நட்பின் பலம் என்றே கருதலாம். மன உணர்வின் மிகப் பெரிய பாலமாக அமைவதே கேண்மை நெறி. இந்த நட்பைப் பகிர்ந்து கொள்ளும் போது வெறுமனே மகிழ்வதற்காக மட்டுமல்லாமல், தவறு நேரும்போது மிகுதிக்கண் மேற்சென்று இடித்தற்பொருட்டு என்று (784) நட்பின் விசாலத்தை வள்ளுவம் குறிப்பிடுகின்றது. நட்பின் தன்மையைப்

பற்றிக் குறிப்பிடும் போது உடுக்கை இழந்தவன் கைபோலவே (788) என்று குறிப்பிடுகின்றார். உடுக்கப்பட்ட உடை நழுவுமானால் எந்த உத்தரவுமின்றி கை சென்று உடைபற்றிக் கொள்ளும். இது போன்று யாருடைய அனுமதியுமின்றி உதவுதல் என்பது தான் நட்பின் பலம் என்றும், உண்மை என்றும் கொள்ள முடியும். மற்றவரைப் பற்றிச் சிந்தித்தல், மற்றவர் மீது அக்கறைக் கொள்ளுதல் என்ற தன்மையே மனிதநேயத்தின் மகத்துவமாகும். நட்பின் ஆழத்தையும் அகலத்தையும் குறிப்பிடும் பொழுது விசம் கூட நட்பிற்கு இனிமை தரும் என்கிறார் வள்ளுவர்.

> ''பெயக்கண்டும் நஞ்சுண்டமைவர் நயத்தக்க
> நாகரிகம் வேண்டு பவர்'' (580)

இதே கருத்தை நற்றிணை

> ''முந்தை இருந்து நட்டோர் கெடுப்பின்
> நஞ்சும் உண்பர் நனி நாகரிகர்'' (நற் 355)

என வலியுறுத்துகின்றது. உள்ளன்போடு கொண்ட கேண்மையின் வளமை எப்போதும் தோற்றுப் போவதில்லை.

## ஜீவகாருண்யம்:

அன்பு என்னும் தாயும் அருள் என்னும் சேயும் இருந்தால் மட்டுமே ஜீவகாருண்யத்தைப் போற்ற முடியும் (குறள் 757). அனைத்து உயிர்கள் மீதும் அன்பைச் செலுத்தும் நிலை, அது ஈகையாக, கருணையாக, பரிவாக, பல்வேறு பரிமாணங்களைப் பெற்றுத்திகழும். அன்பையும், அருளையும் கொடுத்து நேசிக்கும் பண்பைக் கொண்டவனே மனிதன். மற்ற உயிர்களின் மீதும் அன்பு செலுத்தும் மனப்பக்குவம் தான் இன்னும் மனிதனைத் தன் நிலையிலிருந்து தாளாமல் மனிதனாகவே அடையாளாப்படுத்துகின்றது. தம் பெற்றோர்களையே முதியோர் இல்லத்தில் சேர்க்கும் இந்தத் தலைமுறையினருக்கு வள்ளுவத்தை முழுப் பொருளாழத்துடன் கற்றுக் கொடுப்பது சமூகத் தேவையாகும்.

வகுப்பறை மட்டுமல்லாமல் வெளிப்புறச் சூழலிலும் வள்ளுவம் ஒலிக்கும் வகைசெய்யும் கட்டாயச் சூழலை உருவாக்குவதே மனிதநேயத்தை மலரச் செய்வதற்கான முதற்படியாகும். நேய மறுமலர்ச்சிக்கான வழியைச் சொன்ன வள்ளுவர், வெறுமனே போற்றும்படியான ஒழுக்க நிலைகளைக் கடைப்பிடிப்பதோ தவறுகளைத் தட்டிக்கேட்கும் மற்றொரு நிலையும் நேயப் பாதுகாப்பாகக் கொள்ள முடியும். தோழமை உணர்வு, நேயப்பண்பு சாயும் போது தாங்கிப் பிடித்துக் கொள்வதினால் அவ்வப்போது நேசிப்பு காப்பாற்றப்படுகின்றது. தழைக்கின்றதா? செழிக்கின்றதா? என்றால் இல்லையென்று தான் சொல்ல முடியும்.

நமக்கென்ன என்று ஒதுங்கிச் செல்லும் சுயநலமும், கொடுமைகளைக் கண்டு பொறுத்துக்கொள்ளும் கோழைத்தனங்களுமே நேசத்தளவின் செழுமை இன்மைக்கு ஏதுவாகக் கருதலாம். இதுபோன்று தவறு நடக்கும் போது தட்டிக் கேட்டு தோழமையை வளர்த்துக் கொள்ள வள்ளுவத்தில் வழிமுறைகள் காணப்படுகின்றன. மற்ற மனிதர்களின் சுக துக்கங்களையும் உள்வாங்கிக் கொள்வது மட்டுமல்லாமல் அதனைத் தனதாக்கிக் கொண்டு உணர்தல் வேண்டும். இதுவே தன்மையும் மற்ற உயிர்களையும் பேணிப் பாதுகாக்கும் பண்பாகக் கொள்ளப்படுகின்றது.

ஒத்தறிவான் உயிர்வாழ்வான் (214) என்று குறிப்பிடுவதும் இந்தக் கருத்தையே வலியுறுத்துகின்றது. அஞ்சுவதற்கு அஞ்சல் வேண்டும் என்று வள்ளுவர் குறிப்பிடுவது (428) அஞ்சக் கூடாததற்கு அஞ்ச வேண்டாம் என்பதை வலியுறுத்தவே, இந்த பொருளாழத்தை முன் வைக்கின்றார். மிகுதிக்கண் மேற்சென்று இடிக்கும் துணிச்சல் (784) அனைவருக்கும் இயல்பாக மிளிர வேண்டுமென்பதே மனித நேய மிளிர்வின் அடையாளமாக இருக்கும். பிறர்பழி எப்பொழுது தன்பழியாக மதிக்கப்படுகின்றதோ அப்பொழுது காயமாகும் நேயம் கூட செழிப்புறும். இதில் மேலோர் கீழோர் என்பவர்கள் இல்லை. உயர்வு தாழ்வு கிடையாது. எந்தப்புற அளவுகோலும் மனிதத்திற்கான முழுமையை தீர்மானிப்பதில்லை. எனவே தான் பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் (972) என்று வள்ளுவம் அழுத்தமாகக் குறிப்பிடுகின்றது. இதுபோன்று தோழமை உணர்வு, நேய உணர்வு தொடர்ந்து மிளிர்வதற்கு அடிப்படை பண்புகளை மக்கள் யாருடைய திணிப்புமின்றி இயல்பாக உள்வாங்கிக் கொண்டு செயலாக்கத்தில் ஈடுபடுத்த வேண்டும் என்பதை வள்ளுவம் பதிவு செய்துள்ளது.

மனித நேயத்திற்கான முழுமையான கருத்தாழத்தை, செறிவாகப் பதிவு செய்ததோடு பல ஒழுக்கநெறிகள் எப்போதும் உயரிய மதிப்புகளைக் காத்து நிற்க வேண்டுமென்பதற்காக மேற்கண்ட பல உயர்பண்புகளையும் வள்ளுவம் பதிவு செய்துள்ளது. இருண்ட காலத்தில் வெளிவந்த வள்ளுவத்தில் நேசிப்பு செழுமையடைந்ததற்குச் சில அடிப்படைகளை கூறமுடியும்.

* சங்க காலத்திலும் அதற்கு முந்தையக் காலத்திலும் மனித உயிர்கள் மலிவாக எடுக்கப்பட்டதன் விளைவாக மனிதன் நேசிக்கவும், உயர் பண்புகளை நிலை நிறுத்தவும், உயர் விழுமியங்களை மேன்மையடையச் செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்க வேண்டும்.
* இயற்கையோடு வாழ்ந்து, நேசித்த மனிதன் தன்னையும், தன்னைப் போன்ற பிற உயிர்களையும் நேசித்ததாலேயே நேயப் பண்பு வலுப்பெற்றிருக்க வேண்டும் என்று புரிந்து கொள்ளலாம். இவ்வாறு கருத்தாழமும் மனிதப் பண்பின் பன்முகங்களையும் நேசத்தின் ஊற்றுக்களையும் தன்னுள் அடக்கி உயர் விழுமியங்களை உள்கட்டுமானமாக்கி, இயங்கியல் பொருண்மையோடு இயங்கி வருகின்றது வள்ளுவம், மனித குலத்திற்குப் பெரும் வெளியையும், ஜீவ ஒளியையும் கொடுத்த வள்ளுவத்தின் காலம் பொற்காலம் என்று சொல்வது சாலப் பொருத்தமாக அமையும்.

*N.K. Abishekbharan*

# தமிழ்த் தாயின் ஐஞ்சிறும் புதல்வர்கள்

''தமிழ்!
உலகின் முதல் அதிசயம்;
சத்தமிடும் இரகசியம்
கலைவெள்ளம்;
தேங்கிநிற்கும் காலக்குளம்!'' என்றெல்லாம்
சிறப்பிக்கப்படும் செந்தமிழின் அதிசயங்களோ எத்தனை? எத்தனை?
அன்று தொல்காப்பியத்தில் ஆரம்பித்து இன்றைய சினிமா வரிகள் வரை பரந்துள்ளது. அந்தச் செந்தமிழ் எமக்களித்த காப்பியங்களில் ஐஞ்சிறுங் காப்பியங்கள் பற்றிப் பார்ப்போம்.

நீலகேசி, உதயணகுமார காவியம், நாககுமார காவியம், சூளாமணி, யசோதரகாவியம் என்பன அந்த ஐந்து சிறிய காவியங்களாகும். அவை அனைத்திலும் உள்ள ஒரே சிறப்பு அவை அனைத்தும் சமண நூல்கள் என்பதேயாகும். அத்தகைய அந்த நூல்கள் சங்கமருவிய காலத்தில் எழுதப்பட்ட காப்பியங்களாகும். இந்த நூல்கள் பற்றிய முழுத் தகவல்களும் இன்னும் கிடைக்கப்பெறவில்லை இருந்தும் கிடைத்த சில தகவல்களைக் கொண்டு யான் இதை உங்களுக்கு அளிக்கின்றேன்.

முதலில் நாம் நீலகேசியைப் பற்றிப் பார்ப்போம். செந்தமிழின் முதலாவது தருக்கநூல் இது. இந்த நூலை எழுதியவர் பற்றிய சரியான விபரங்கள் என்னும் கிடைக்கப்பெறவில்லை. ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான குண்டலகேசிக்கு எதிர்ப்பாக எழுந்த இந்நூல் கடவுள் வாழ்த்தினையும் அது தவிர்ந்த 10 பதிகங்களையும் கொண்டது. இவை அனைத்தும் சேர்த்து 695 பாக்களைக் கொண்டது. இருந்தும் இந்நூலின் கதை பற்றிய விரிவான தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை.

அடுத்து உதயணகுமார காவியம். 7 ஆம் நூற்றாண்டில் வடமொழியில் குணாட்டியார் என்பவர் எழுதிய 'பிருகத்கதா என்னும் நூலை கொங்குவேளிர் என்பவர் 15 ஆம் நூற்றாண்டில் எழுதியிருந்தார். இப் பாட்டுடைத் தலைவனான உதயணன் கௌசாம்பி எனும் நாட்டின் இளவரசன் ஆவான். அவனின் இன்பதுன்பங்கள் வாழ்வின் மேடுபள்ளங்கள் என்பவற்றையும் கூறும் நூல் இது. இவை 367 விருத்தப்பாக்களில் ஆறுகாண்டங்கள் வகுக்கப்பட்டு கூறப்பட்டுள்ளது.
அதைத் தொடர்ந்துள்ளது சூளாமணி. ஐஞ்சிறுங்காப்பிய நூல்களில் கிடைக்கப்பெற்ற நூல் இது. இதன் முதல் பாடல்

''மஞ்சுசூழ் மணிவரை யெடுத்த மாமலர்
இஞ்சிசூ ழணிநக திருக்கை நாடறு
விஞ்சைநீ ளுலகுடன் விழாக்கொண் டன்னது
துஞ்சுநீள் நிதியது சுழமை யென்பதுவே''
என நாட்டின் சிறப்பையும் எழிலையும் விளக்கும் பாடல் மூலமாக ஆரம்பித்தது.
''சுடரொளி மிகுசோதி சூழ்கழற் காளை மார்தம்
அடரொளி முடிமன்ன னேவலா னாய் பொன் னாகத்
தொடரொளி சுடர் ஞாயிற் சூளிகை சூழு நெற்றிப்
படரொளி நெடுவாயிற் பன்னிலம் பலங்கள் சேர்த்தார்''

என பாட்டுடைத் தலைவன் திவிட்டனின் தந்தை பயாபதியின் களிப்பேருவகையுடன் முடிவடைகிறது. இது தோலா மொழித் தேவர் என்பவரால் 10ம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது. அதுமட்டுமன்றி ஜின்சேனர் என்பவர் எழுதிய ஸ்ரீபுராணத்தை தழுவி எழுதப்பட்டது. இது 12 சுருக்கங்களையும் 7254 பாடல்களையும் கொண்டது.

இந்த கதையின் சுருக்கம் என்னவென்றால் சுரமை நாட்டின் இளவரசன் திவிட்டன் என்பவன் வித்தியாதார நாட்டு இளவரசியை மணந்ததால் அவனுக்கு ஏற்பட்ட சிக்கல்களும் அதனால் அவன் செய்த வீரச் செயல்களையும் கூறுகின்ற நூல்தான் இது.

அதைத் தொடர்ந்துள்ள காவியம் நாககுமார காப்பியம். கௌதமரால் எழுதப்பட்ட இக்காப்பியம் 170 பாக்களைக் கொண்டதாய் விளங்குகின்றது. இளமையிலேயே அத்தனை இன்பங்களையும் அனுபவித்த ஒருவன் முதுமையில் திருந்துவதுடன் தான் பெற்ற அத்தனை இன்பங்களையும் துறந்து துறவறத்தில் ஈடுபடும் ஒருவனின் கதைதான் இது.

இறுதிக் காப்பியம் யசோதர காப்பியம். மாரிதத்தத்தன் என்ற அரசனின் ஆட்சியில் உயிர்ப்பலி கொடுப்பது நடைபெற்று வருகிறது. அப்படி உயிர்ப்பலி கொடுப்பதனால் ஏற்படும் தீமையையும் அதன் கர்மவினைப் பயனையும் கூறுவதே இந்த நூல். இது 4 சங்கங்களாக பாடப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆசிரியர் அன்றைய சமுதாயத்தின் மிகப்பெரும் பிரச்சினையான உயிர்ப்பலியை நீக்க முயன்றுள்ளார். இத்துடன் ஐந்து காவியங்களையும் சுருக்கமாக பார்த்து விட்டோம்.

அடுத்து இன்றைய காலத்தில் ஐஞ்சிறுகாப்பியங்களின் பரவுகை பற்றியும் நிலவுகை பற்றியும் பார்ப்போம். இன்று ஐஞ்சிறுங் காப்பியங்கள் எவை? என்பதுவே பலருக்கு தெரியாமல் இருக்கின்றது. அப்படிப்பட்ட நிலமையில் இருந்துவரும் இன்றைய சமூகத்திற்கு எமது தாய் மொழியாம் தமிழ் பற்றியும் தமிழரின் நிலைமை பற்றியும் எடுத்துக் கூறவேண்டும். இன்றை காலத்தில் எமக்கு ஐஞ்சிறுங்காப்பியங்களைந்தையும் எடுத்து ஒவ்வொரு பாடலாய் படிப்பதென்பது நிச்சயமாக இன்றைய விஞ்ஞான உலகிற்கு முடியாத ஒன்றாகும்.

ஆகவே அவற்றின் சுருக்கங்களையும் ஒரு சில பாடல்களையாவது தெரிந்து வைத்திருப்பது தமிழன் என்ற வகையில் சாலச்சிறந்தது. இன்று நாம் எது தேவை-யோ அவற்றை கற்காமல் எதை எதையோ கற்கிறோம். அதை விடவும் எம்மால் இயலக்கூடிய சிறிய சிறிய தகவல்களையாவது தெரிந்து வைத்திருப்பது சிறப்பு.

சிறு நரியன்று
சீறும் சிங்கம் என்று
சீராக உணர்த்திடு இன்று

**நன்றி**

சி.சஜிஷ்ணவன்
தரம் 9C

# ஆனைக்கும் அடி சறுக்கும்

ஆனை மிகப்பெரிய மிருகம். அதற்கு உறுதியான கால்கள் உண்டு. வேகமாக நடக்கும் சக்தி உண்டு. மிக்க பலம் வாய்ந்த யானைக்கு சிலவேளைகளில் அடி சறுக்குவது உண்டு என்ற கருத்தை இப்பழமொழி கூறுகின்றது. இதன் மூலம் மறைமுகமாக மற்றோர் பொருளையும் இப்பழமொழி உணர்த்துகின்றது அறிவில் சிறந்த மேதைகள் கூடச் சந்தர்ப்பவசத்தால் சிலவேளைகளில் தவறு விட்டு விடுகின்றனர். ஒழுக்க சீலர்களும் நிலை தடுமாறித் தவறிழைத்து விடுகின்றர். அச்சந்தர்ப்பமாக எப்பொழுதோ ஒன்று நிகழ்ந்து விடுகிறது. அதற்காக குறை காண்பது முறையல்ல என்ற கருத்தையும் இப்பழமொழி கொண்டுள்ளது எனலாம்.

இதன் மூலம் சில தவறுகளை வைத்து கொண்டு பெரியவர்களை நாம் மட்டிடக் கூடாது. தவறு விடுவது மனிதருக்கு இயல்பு எனவே ஒருவரிடமுள்ள குறைகளை மட்டும் பெரிதுபடுத்திக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை குற்றம் களைந்து குணம் கொள்வதே சிறந்த பண்பாகும் என்ற கருத்தை இது புலப்படுத்துகின்றது.

யானை மிக்க பலம் பொருந்தியது. அதன் பலத்தை மனிதன் தனக்குச் சாதகமாகப் பலவழிகளிலும் பயன்படுத்திக் கொள்கிறான். அது அடி சறுக்கிவிட்டது என்பதற்காக அதன் பயன்களை மறந்துவிடக் கூடாது.

பெரியவர்கள் பெற்றோர்கள் சமூகத்திற்கு பல வழிகளில் உதவுகின்ற நல்ல செயல்களைச் செய்கின்றார்கள. அவர்களையும் மீறிச் சந்தர்ப்பவசத்தால் சில தவறுகளைச் செய்து விட்டார்கள் என்பதற்காக அவர்கள் விட்ட தவறுகளைப் பெருப்பித்துப் பிரசாரம் செய்வது நன்றல்ல.

ஒருவரிடம் நல்ல பண்புகள், குணங்கள் மேலோங்கி இருந்தால் அவற்றை நாம் பாராட்ட வேண்டும் அவரிடமுள்ள சிறு குறையை மட்டும் பெரிதுபடுத்திப் பேசுவது முறையன்று. நன்மையும் தீமையும் கலந்ததே மனித வாழ்க்கை. நல்லனவற்றைப் பாராட்ட நாம் பழகிக் கொள்ள வேண்டும் தவறுகளைத் திருத்திக் கொள்ள முயல வேண்டும் எந்த மனிதனும் நூற்றுக்கு நூறு வீதம் நல்லவனாக இருப்பதில்லை. எனவே நல்லனவற்றை நன்மை பயக்குவனவற்றையும் பாராட்டவும் தீயனவற்றை மறந்துவிடவும் நாம் பழகிக் கொள்ள வேண்டும்.

வாழ்க்கைக்குத் தேவையானவற்றைக் கற்றுக்கொள்வோம். தேவை யற்றனவற்றை புறந்தள்ளவும் நாம் பழகிக்கொள்வோமாயின் தேவையற்ற பிரச்சினைகளிலிருந்து விடுபட முடியும்". ஆனைக்கும் அடி சறுக்கும்" என்ற பழமொழி சான்றோர்களும் சந்தர்ப்பவசத்தால் தவறு விடக்கூடும் அவற்றைப் பெரிதுபடுத்தாதீர் என்ற அறிவுரையை நமக்குத் தருகின்றது அதனை நாமும் வாழ்வில் கடைபிடித்து ஒழுகுவோமாயின் நன்மையும் விளையும்.

நன்றி

Done by R. Lakshan

*With Best Compliments*

*from*

# JONISON

***Dealers in Dry Fish, Importers & Commission Agent***

12-18, Old Butcher Street,
Colombo 11
Phone : 2445227 Fax : 2347474

# நாவலியூர் சோமசுந்தரப்புலவர்

தமிழ் கூறும் நல்லுலகம் பெற்றெடுத்த நல்முத்துக்களில் நவாலியூர் சோமசுந்தரப் புலவரும் ஒருவராவார்.

இவர் 1876 ஆம் ஆண்டு ஆனி மாதம் 28ஆம் திகதி யாழ்ப்பாணத்து நாவலியூரிலே கதிர்காமருக்கும் இலக்குமிப்பிள்ளைக்கும் மகனாகப் பிறந்தார்.

மானிப்பாய் அருணாசலப் புலவரிடம் செந்தமிழையும் மாரிமுத்து உபாத்தியாயரிடம் ஆங்கிலத்தையும் கற்று ஆசிரியப் பணியை தொழிலாகக் கொண்டார். சித்தங்கேணியிலுள்ள கலட்டி ஆங்கிலப் பாடசாலையில் ஆங்கிலம், தமிழ், சமயம் ஆகிய பாடங்களை மாணக்கர நன்கு விளங்கிக் கொள்ளுமாறு கற்பித்தார். இவர் பிறந்த மண்ணின் பெருமையினை அழகுற இலகுவில் விளங்கிக்கொள்ளக்கூடிய அழகு தமிழில் பாடல்களாக அப்படியே படம்பிடித்துக் காட்டுகிறார். இயல்பாகவே கவிதையாற்றல் மிக்கவரான இப்புலவர் தம் வாழ்நாளில் பல்லாயிரக்கணக்கான பாடல்களைப் பாடியுள்ளார். தங்கமயமான தோற்றத்தோடு களங்கமில்லா உள்ளத்தோடு அகத்தினழகு முகத்தில் தெரிய தன் வண்ண தாடியினை மென்விரல்களால் தடவிக் கொண்டு இவர் இயற்றிய பிரபந்தங்கள் சிறுவர் செந்தமிழ் சிறுவர்களுக்கான பாடல்கள் பொது நூல்களென இவர் பலதுறைகளிலும் பாடல்களை இயற்றியுள்ளார்.

பெங்களூரிலிருந்து வந்த பெரியார் சுப்பிரமணிய சுவாமியாரை தமது குருவாக ஏற்றுக்கொண்டார். தமது தாய்மாமன் வேலுப்பிள்ளையின் மகள் சின்னம்மையை மணந்து இல்லறத்தை நல்லறமாக நடாத்தினார். இவருக்கு 3 பிள்ளைகள் உண்டு.

ரிஷிஹேசாண் நவரட்ணம்

*Best Wishes*

*from*

A. Shiam Sundar 4 -C
A. Kumaran 6 - C

*Best Wishes*

*from*

Devin Franklyn Singh
Grade 4 - C - 2012

*With Best Compliments*

*from*

# K. Venuganan
# 3 - C

# கல்விச் செல்வம்

அறிவு வளர, ஒழுக்கத்தைப் பேண, தொழில் ஒற்றை பயில, அதைத் திறமையுடன் செய்ய கல்வி அவசியமானது.

மன்னராட்சி காலத்தில் மன்னர்கள், கல்வியில் சிறந்தவர்களை அமைச்சர்களாகவும், புலமைமிக்கவர்களை ஆஸ்த்தானப் புலவர்களாகவும் நியமித்து ஆதரித்தார். அன்றைய ஜனநாயக ஆட்சியிலும் எல்லாத்துறையிலும் கல்வியிலும் சிறந்தவர்களே உயர் பதவிகளை வசிக்கின்றார். சொந்தத் தொழில் புரிபவர்களும் தமது கல்வியை பொறுத்தே உயர்ச்சியடைந்தார்கள்.

கல்வி என்பது அரசாங்கத்தில் ஒருதேவனம் பெறும் பதவி வகிப்பது மட்டுமல்ல. தான் ஈடுபடும் எந்தத் தொழிலையும் சிறப்புடன் செய்யவும், மேலும் தொழிலை விருத்தி செய்வதற்கு கல்வி அவசியமானது. கல்வியானது நூல் அறிவோடு மட்டும் தொடர்புடையதல்ல. இன்று நாம் பெறும் வாழ்க்கை அனுபவங்கள் யாவும் அதற்குள் அடங்குவதாக பரந்து விரிந்துள்ளது.

இமைகளைப் போல கல்வியானது. இளமைக்காலம் கல்வி கற்பதற்கு மிகவும் பொருத்தமான காலமாகும். பொறுப்புகள் அதிகமல்லாது இளமைக்காலத்தில் பல விடயங்களை கூடிய கவனத்தோடு படிக்க வேண்டும்.

இளமையிற் கல்வி சிலையில் எழுத்து

**நன்றி**

*S.Manoharan Kaushall*
*6C*

*With Best Compliments*

*from*

**B. Gobiraam - 3-C**
**and**
**K. Piragathesan 3 -C**

*Best Wishes*

*from*

**S. Adersh**
**Grade 4-C**


*Best Wishes*

*from*

Mr. S.H.M. Nasar
Principal
R/Al-Aqsa M.M.V.
Eheliyagoda
& son
M.N.M. Naishaban
13 MT (2013 Batch)

*With Best Compliments*

*from*



**NIZAM GEMS**

*M.S.M. Nizam Haji*

*Mahingoda*
*Eheliyagoda*

# ஆற்றில் போட்டாலும் அளந்து போடு

நம் நாட்டில் வழங்கி வருகின்ற ஏராளமான பழமொழிகள் இன்று நேற்று அல்ல பழங்காலத் தொட்டு நம் முன்னோர்களால் வழங்கப்பட்டு வந்து இருக்கின்றன என்பது கண்கூடு. அந்த வகையில் அப்பழமொழிகள் வெறுமனே வீராப்பாக பேசும் போது நம் நாவில் அடித்துப் பிடித்து வருவதற்கு அல்ல. மாறாக நம் வாழ்க்கையின் அனுபவத்தினைச் சந்தர்ப்பங்களிலும் எடுத்து சிந்தனையுடன் ஏற்று நடப்பதற்காகும் என்றால் மிகையாகாது. ''ஆற்றில் போட்டாலும் அளந்து போடு'' என்ற பழமொழிகள் நம் வாழ்க்கைக்கு பயன்படுவனவாய் திகழ்கின்றன.

பழமொழிகள் எப்போதும் காலத்தால் வென்றவைகளாகக் காணப்படுகின்றது. ஏனெனில் எப்போதும் எச்சந்தர்ப்பத்திலும் பொருந்தக்கூடியனவாகவே காணப்படுகின்றது. அவ்வாறான பழமொழிகளுள் ஒன்றாகக் காணப்படும் பழமொழியாக அமையப் பெறுகின்றது ஆற்றில் போட்டாலும் அளந்து போடு. அதாவது நாம் எவ்விடயத்தைச் செய்யினும் அதில் ஓர் எல்லையிட்டுக் கொள்ள வேண்டும். எதிலும் அளவுக்கு மிஞ்சிய தன்மையைக் கைக்கொள்ளலாகாது. எதையும் ஒரு எல்லையறிந்து, அளவறிந்து செய்வதனால் எமக்கு கிடைக்கும் நன்மைகள் அளவு கடந்தன.

ஆற்றில் போட்டாலும் அளந்து போடு எனும் பழமொழியானது பல்வேறு அர்த்தங்களை முன்னிலைப்படுத்தக்கூடியதாக அமையப் பெறுகின்றது. எந்தவொரு விடயமாக இருந்தாலும் அதனைச் சிறப்பாகச் செய்ய வேண்டும். அவ்வாறு சிறப்பாகச் செய்ய வேண்டும் என்பதற்காய் மிதமிஞ்சிச் செயற்பட்டால் நாம் செயற்பட்ட செயற்பாட்டிலும் அர்த்தம் இன்றிக் காணப்பட்டு விடும்.

அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு என்பது பழமொழி. இப்பழமொழி எமக்கு எதை ஆழ்ந்து சிந்திக்க வைக்கின்றதென்றால் நாம் எவ்விடயத்தையும் அளவறிந்து செய்வது சாலச் சிறந்ததாகும். உதாரணமாக நாம் அளவுக்கதிகமாகக் கதைத்தால் கூட வாயாடி, பேச்சில் பெருச்சாலி என்றெல்லாம் பட்டம் சூட்டுவார்கள். அது மட்டுமன்றி ''அதிகம் பேசுபவர்கள் குறைவாகச் சிந்திப்பார்கள்'' என்று கூடச் சொல்லுவார்கள். இன்னும் நாம் மிகவும் குறைவாகப் பேசினால் ஊமை என்று கூடப் பட்டம் சூட்டுவார்கள். ஊமை ஊரைக் கெடுக்கும் என்பார்கள். எனவே எமக்கு அதிலிருந்து என்ன விளங்குகின்றது? நாம் எதையும் அளவோடு செய்ய வேண்டும் என்பதில் எவ்விதச் சந்தேகமுமில்லை.

ஒருவனுக்கு மக்கள் நலமாக வாழ வேண்டும் என்று விரும்பினால் அவனால் முடியுமானவரை நற்செயற்பாடுகளை மேற்கொள்ளக் கூடியவனாகவும் நற்கருத்துக் களை முன்வைக்க கூடியவனாகவும் காணப்படுகின்றான். அவ்வாறு செயற்படுவது அவனுக்குச் சிறப்பாக அமைந்தாலும் அவன் அளவோடு தனது செயற்பாட்டை

மையப்படுத்தக் கூடியதாக அமைய வேண்டும். இன்றேல் அப்படியான ஒரு நல்லவனுக்கும் அளவுக்கு மிஞ்சிய செயற்பாடு என்று கூறக்கூடியதாகவும் சமூகம் அமையப் பெறும்.

உணவு மனிதனின் இன்றியமையாத ஒரு விடயமாகும். அவ்வுணவை எடுத்துக் கொண்டாலும் அளவோடு உட்கொள்ள வேண்டும். அவ்வாறு அளவோடு உட்கொள்வதன் மூலம் உடம்புக்கும் பாதகம் இல்லாமல் அமையப்பெறும். அளவு இன்றிக் கூடுதலாக உட்கொள்வதன் மூலமோ அல்லது குறைவாக உட்கொள்வதன் மூலமோ நோய்களில் அகப்படக் கூடிய ஒரு நிலமையில் காணப்படுகின்றது. எதனையும் அளவோடு செய்வது சிறப்பாக அமையும் என்பதனை எடுத்துக் காட்டக் கூடியதாக காணப்படுகின்றது.

மனிதன் எப்போதும் தம் வாழ்வை அர்த்தமுள்ளதாக மனிதன் அமைத்துக் கொள்ள வேண்டும். அர்த்தமுள்ள ஒரு வாழ்வே வாழ்க்கையை சந்தோஷப்படுத்தக் கூடியதாக அமையக்கூடும். இந்த வகையில் ஒவ்வொரு மனிதனும் தமது செயற்பாடுகளை தகுந்த முறையில் முன்வைக்க வேுண்டும். அதற்காக அளவுக்கு மிஞ்சி செயற்பட்டால் ஒரு இன்னலான நிலையில் மனித வாழ்வு அமையப் பெறக்கூடியதாக மாறிவிடும். எனவே எதனையும் அளவோடு செயற்படுத்தல் வேண்டும்.

ஆற்றில் போட்டாலும் அளந்து போடு எனும் பழமொழியானது பல்வேறு வகையில் கருத்துக்களை முன்வைக்கும் விதமாக அமையப் பெறுகின்றது. ஒருவன் தனக்குப் பொருந்தும் என்று ஒரு செயற்பாட்டில் ஈடுபட்டாலும் அச்செயற்பாடு அவனுக்கு ஆர்வத்தை ஏற்படுத்தக் கூடியதாக அமைந்தாலும் அதனை அளவாகவும் அர்த்தமுள்ளதாகவும் அமைத்துக் கொள்ளல் வேண்டும்.

அளவுக்கு மிஞ்சிய செயற்பாட்டின் மூலம் அர்த்தமின்றிக் காணப்படும். அப்படி ஒரு செயற்பாட்டில் ஈடுபடுவதனை விட அச்செயற்பாட்டினை மேற்கொள்ளாமல் இருப்பது சிறப்பானதாக அமையும். ஏனெனில் அர்த்தமற்றதாக அமையக்கூடியதாகக் காணப்படும். எனவே எந்தவொரு செயற்பாட்டினை எடுத்துக் கொண்டாலும் அதனைச் சிறப்பாக அமையப் பெறச் செய்யக் கூடியதாக மாற்றியமைக்க வேண்டும்.

எனவே வாழ்வை வெற்றி பெறவும் வாழ்வில் பல சாதனைகள் புரியவும் ஆற்றில் போட்டாலும் அளந்து போடு எனும் பழமொழியானது பல்வேறு கருத்துக்களை முன்வைக்கின்றது. இந்த வகையில் இப்பாரினில் பல சாதனைகள் படைத்து ஜெயம் கொண்டு வாழ வேண்டும் என்பதில் பழமொழிகளும் கூடிய பங்களிக்கின்றது என்பது ஐயமில்லை

*M.R.M. Rishad*
*13ST*

# விழந்தும் விடியாத பொழுதுகள்

''அம்மா எனக்கு இன்னைக்கு சப்பாத்து இல்லாம ஸ்கூல் போகவே ஏலாது. நான் போகமாட்டேன். சப்பாத்து இல்லாட்டி 'பிரிபெக்ட்' அண்ணாமார்கள் வெளில நிப்பாட்டி வச்சிருவாங்க. சப்பாத்து வாங்கித் தாங்க''.

விடிந்ததும் விடியாத நேரத்தில் தன் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதற்காக எழுப்ப பிரயத்தனம் செய்து கொண்டிருந்த அவளின் இதயத்தை உலுக்கிய தன் மகனின் கெஞ்சல், தன் மகனின் மனதை புரிந்து கொண்டு ''இல்லப்பா இன்னைக்கு மட்டும் போங்க'' நாளைக்கு எப்படியும் அப்பாக்கிட்ட சொல்லி வாங்கித்தாரேன்'' விழிக-ளின் ஓரம் கசிந்த கண்ணீர்த்துளிகளை பிள்ளைகள் அறியாமல் தன் இத்துப்போன சேலைத் தலைப்பால் துடைத்து விட்டுக் கொண்டே கூறினாள் ராசாத்தி.

''நீங்க எந்த நாளுமே இப்படித்தான் ... ஆனா வாங்கித் தர மாட்டீங்க. எந்த நாளும் எனக்கு ஏச்சுத்தான். நாளைக்கு மட்டும் வாங்கித் தராட்டி நான் ஸ்கூலுக்கு இனிமே போக மாட்டேன்'' என்று முனங்கியவாறு எழுந்து கொல்லைப்பக்கம் சென்று கொண்டிருந்தான் சுபான்.

அவன் சொல்வதையே பார்த்துக் கொண்டிருந்த ராசாத்தியின் மனது எதை எதையோ நினைத்து ஓலமிட்டது. கவலையை அடக்கக் கடைசி முயற்சியாக இரு துளி கண்ணீர் பீறிட்டுப் பாய்ந்து கன்னங்களில் கால்வாய் வெட்டி நெஞ்சை நனைத்துச் சென்றது.

விலைவாசியின் வலை வீச்சில் விழுந்து கரை காணும் மார்க்கம் தெரியாமல் அல்லற்படும் ஒரு குடும்பத்தினால் எத்தனை செலவைத்தான் சமாளிக்க முடியும்? வறுமை, வேலை நிறுத்தம் என்ற கொக்கிகளால் வக்கிரமாகக் கெலவிருத்திரத் தாண்டவம் ஆடிக்கொண்டிருக்கிறது. மறுபுறம் இயற்கை தனது சோகத்தை மழை-யாக வெடிக்க இந்த காலகட்டத்தில் ஒரு சாப்பாத்து என்பது ராசாத்திக்கும், அவள் கணவன் ராமனுக்கும் எட்ட முடியாத எல்லைக்கோடு.

ராமன் அதிகம் படிக்காதவன், சிறுவயதில் இயன்ற மட்டும் நண்பர்களுடன் இணைந்து ஊர் மேய்ந்தான். விளைவு விபரீதமானது. உதவாக்கரை என்னும் பட்டத்துடன் வேலையில்லாப் ''பட்ட''தாரியாக அலைந்தவனின் காதல் வலையில் விழுந்தாள் ராசாத்தி. காதல் மோகத்தில் இன்பமாகத் தொடங்கிய இவ் வாழ்க்கை காலதேவ-னின் பிடியில் சிக்கித் தவித்தது.

நெற்றி வியர்வை வடிய சுற்றம் மறந்து, சுயம் இழந்து சுழன்று சுழன்று சுற்றினாலும் வறுமையின் கொடுமையை இருவராலும் தடுத்து நிறுத்த முடியவில்லை. அவர்களது வாழ்க்கை விருட்சத்தில் ஒரு மகனும் மகளும் ஆக இரண்டு அழகான மலர்கள்.

மகன் சுபான் நான்காம் தரத்திலும், சுபானி இரண்டாம் தரத்திலும் கல்வி பயில்கின்றனர். இருவரையும் எப்படியோ சமாளித்து பாடசாலை அனுப்பி விட்டு கணவனை எழுப்புவதற்காக கயிற்றுக் கட்டிலை அணுகியவள் துணுக்குற்றாள்.

ராமனின் உடல் வெடவெடத்துக் கொண்டிருந்தது. ராசாத்தி அவனின் நெற்றியில் கை வைத்துப் பார்த்தாள். அனலாக கொதித்தது உடல். பயத்தால் விறைத்துப்போன ராசாத்தியை நோக்கிய ராமன் இருமலுடன் வந்த காரலைத் துப்பியவாறே அவ-ளிடம் ''அது ஒண்ணுமில்லை'' ராசாத்தி நேற்று வேலை செய்யும் போது லேசா மழ பேஞ்சிச்சா... அது தான் காச்சல். கொஞ்சம தூங்கி எழும்பினா சரியாகிடும்'' என்று திரும்பிப்படுத்தான்.

சுமார் இரண்டு மணி நேரத்துக்குப் பிறகு எழுந்த மனைவியின் பேச்சையும் அசட்டை செய்து விட்டு அவன் மகனுக்கு சப்பாத்து வாங்க வேண்டும் என்பதைக் காரண-மாகக் கூறிவிட்டு இரவு எஞ்சிய பழைய சோற்றை ஊறுகாயின் உதவியுடன் உள்ளே தள்ளிவிட்டு வேலைக்காகப் புறப்பட்டான்.

அன்று தோட்டத்துரையின் பங்களாவைச் சுற்றி சுத்தம் செய்வதற்கு இருப்பதாக கதிர்வேல் சொன்னான். தோட்டத்துரையிடம் சென்றால் எப்படியும் உதவி செய்வார் என்ற நம்பிக்கையில் சென்றான். அவன் எண்ணியது வீண் போகவில்லை. தன் உடல் தனக்கு ஒத்துழைக்க மறுத்தாலும் மகனின் பிஞ்சுக் கண்களின் ஏக்கப் பா-ர்வை கனத்தை தாங்க முடியவில்லை. சுத்தம் செய்து கொண்டிருக்கும் போதே கால்களில் ஏதோ இடிபட்ட உணர்வு தோன்ற குனிந்து காலைப்பார்த்தான். கீழே பார்த்ததும் அவனது கண்களில் அது தட்டுப்பட்டது. அங்கே குப்பை மேட்டில் வெண்ணிறமான சப்பாத்து தூக்கி எறியப்பட்டிருந்தது. அதைக் கண்ட அவனது கண்களில் சந்தோஷ ரேகை படர்ந்தது.

அந்தச் சப்பாத்துக்கள் தன் மகன் சுபானின் கால்களுக்கு அளவாக இருக்கும் என்று அவன் கண்கள் உறுதி கூறின. அதை எடுத்து நன்றாகக் கழுவி கொடுத்தால் இப்போதைய பிரச்சினை தீர்ந்தது என்று அவனது ஏழை மனம் எண்ணிக் கொண்டது. சுற்றும் முற்றும் அவதானித்து மெதுவாக குனிந்து எடுத்தான். ''என்ன ராமா குப்பையில் நின்னுகிட்டு என்ன பண்ணுற'' என்ற குரல் கேட்க திரும்பிப் பார்த்தான். அங்கே தோட்டத்துரை நின்று கொண்டிருந்தார்.

தனது எண்ணத்தை வெளியிட நினைத்தாலும் இவரிடம் போய் .... என்று சுய கௌரவத்தை பார்த்தால் குழந்தையின் நிலை? வெட்கத்தை விட்டு கேட்டு விடலாம் என்று நினைத்து ''இல்ல தொரை இந்த சப்பாத்தை நான் எடுத்துக் கொள்ளட்டுமா? இன்னைக்கு காலைல என் மகன் சப்பாத்து இல்லாம ஸ்கூலுக்கு போக மாட்டேன் என்று அடம் பிடிச்சான் ராசாத்தி ஏதோ சமாதானப்படுத்தி ஸ்கூலுக்கு அனுப்பினா இந்த சப்பாத்த கொடுத்தீங்கனா இரண்டு மாசத்துக்கு ஒப்பேத்தலாம்'' என்று மென்று விழுங்கினான்.

''இந்த சப்பாத்து உன் மகனுக்கு சரியா இருந்தா எடுத்துப் போ'' என்றார். அவை-களை எடுத்து அவசர அவசரமாக தனது பையினுள் இட்டு வேலைகளை விரைவாக முடித்து வீட்டை நோக்கி செல்லலானான்.
வீட்டுக்கு சென்றவுடன் மனைவியுடன் இணைந்து முதல் வேலையாக சப்பாத்தைக் கழுவத் தொடங்கினான். கழுவிக் கொண்டிருக்கும் போதே அது எப்படி வந்தது என்பதை ராசாத்தியிடம் விளக்கினான். கூறும் போது அவனது முகத்தில் மின்னிய ஆனந்தமும், பெருமிதமும், அந்தத் தாயுள்ளத்தின் கண்களை பனிக்கச் செய்தன.

மகன் பாடசாலை விட்டு வருமுதலே சப்பாத்தைக் கழுவி காயவைத்து மகனுக்காகக் காத்திருந்தான் ராமன். சுபான் பாடசாலை விட்டு வந்ததும் அவனிடம் சென்று பையைக் காட்டி ''மகன் இதில ஒரு சாமான் இருக்கு. மகனுக்கு வேண்டுமா?'' என்று பீடிகை போட்டான்.

''காட்டுங்க அப்பா காட்டுங்க'' என்றான் சுபானும் கெஞ்சலாக. அந்தப் பையை வாங்கி உள்ளே பார்த்தான். உள்ளே சப்பாத்தைக் கண்டதும் அவனது ஆவலையும் மலர்ச்சியையும் கண் கொண்டாமல் ரசித்தான்.

சப்பாத்தை அணிந்து பார்த்த சுபான் அதைக்காட்ட தங்கையிடம் ஓடினான். சுபானி அதைப் பார்த்த மாத்திரமே ''எனக்கும் ஒன்று கொண்டுவரலியா?'' என்று கேட்ட வண்ணம் அழ ஆரம்பித்தாள்.

அந்த சப்பாத்துக்காக இருவரும் சண்டை போட்டுக் கொண்டனர். இதைக் கண்டு எழுந்து வந்த அப்பா ''உனக்கும் ஒன்னு வாங்கித்தாரேன்'' என்று சமாதானப்படுத்தினான் முடியவில்லை. ''அப்பா என்னோட விளையாடுற பிள்ளையள் எல்லாம் சப்பாத்து போட்டுக் கொண்டு தான் வருவாங்க. எனக்கும் சப்பாத்து வாங்கித் தாங்க'' என அழுது ஆர்ப்பாட்டம் செய்தாள்.

''இல்லாட்டி இந்தச் சப்பாத்த கொஞ்சம் தாங்க விளையாடிட்டு தாறன்'' என்று அழுதாள். அதைக் கேட்டு ராமன் ''அது ஆம்புளப்புள்ளங்க போடற சப்பாத்து அதப்போட்டா உன்னை எல்லோரும் கிண்டல் பண்ணுவாங்க'' தந்தை கூறியதும் கேட்காமல் ஓடிவிட்டாள். ஓடும் போது இடையிடையே சப்பாத்து கழன்று கழன்று விழுந்தது. அதனை சரிபண்ணிக் கொண்டு ஓடினாள். தன் நண்பர்களிடம் சப்பாத்தின் பெருமையினை கூறி ஓடினாள்.

''இந்த சப்பாத்து நல்லமாடி'' முகம் முழுக்க மகிழ்ச்சியுடன் கூடிய உவகை நண்பர்களின் ''க்ளுக்'' என சிரிப்பொலி, அவளது கன நேர மகிழ்ச்சியை தடதடக்கச் செய்து விட்டது. ''பாருடி இவள் போயிஸ் சப்பாத்த போட்டுக்கிட்டு வந்திருக்கின்றாள்''.

தனது சப்பாத்துக்களை கையில் தூக்கிக் கொண்டு தளர்ந்த நடையுடன் வீடு நோக்கிச் சென்றாள். வழியெல்லாம் ''ஆம்புளப்புள்ளங்க சப்பாத்து'' என்ற வாக்கியம் எதிரொலித்துக் கொண்டிருந்தது. சின்னவளின் பிஞ்சு மனம் அவமானத்தாலும் கோபத்தாலும் துடித்துக் கொண்டிருந்தது. கோபம் அதிகமாகவே சப்பாத்துக்களைத் தூக்கி அருகில் ஓடிக் கொண்டிருந்த ஆற்றுக்குள் வீசி விட்டாள். இது இயன்றவரை தூரத்தில் போய் விழுந்தது.

கோபத்துடன் ஆற்றையே வெறித்துக் கொண்டிருந்தவளுக்கு இப்போது என்ன செய்வது என்று தெரியவில்லை. அண்ணாவின் சப்பாத்துக்களல்லவா அவை. இப்போது வீட்டிற்கு சென்றால் உதைபட வேண்டி வரும் என்று அவளது உள்மனம் உறுத்திக்கொண்டிருந்தது. அவளது உடல் பயத்தால் படபடத்து உதறத் தொடங்கியது. எதையும் யோசிக்க இவளுக்கு அவகாசமில்லை.

ஓடிச்சென்று ஆற்றில் குதித்தாள். அவள் உள்ளே நீரில் நீட்டிக் கொணடிருந்த குத்துக்கட்டையில் பட்டது. அதையும் பொருட்படுத்தாது சப்பாத்தைக் கண்டாள். சப்பாத்தைக் கையில் எடுத்து அணைத்ததும் சுயநினைவிழந்தாள். ஆற்று நீரோ இயல்பாக சலசலத்து ஓடியது.

''தங்கை, தங்கை'' என்று தன்னை அழைப்பதை உணர்ந்து விழிகள் உயர்த்திப் பார்த்தாள் சுபானி. அங்கே முகம் தெரியாத ஒருவர் நின்று கொண்டிருந்தார். அவளது கைகளுக்குள் சப்பாத்து உறங்கிக் கொண்டிருந்தது.

எம்.என்.எம்.நைசபான்
2013 கணிதப்பிரிவு

# 2012 உலக அழிவு

உலகளாவிய ரீதியில் இன்று மக்களிடையே அதிகமாகப் பேசப்படுகின்ற ஒரு விடயமாக இந்த 2012 உலக அழிவு காணப்படுகின்றது. அதேவேளையில் 2012 உலக அழிவு பற்றி மக்கள் ''ஆம்'' எனவும் ''இல்லை'' எனவும் கூறுகின்றனர். அந்த வகையில் நான் இந்தக் கட்டுரையை ''உலகம் அழியும்'' என்றும், ''உலகம் அழியாது'' என்றும் கூற உள்ளேன்.
உலகம் அழியும்

* இந்த உலக அழிவிற்குக் காரணமாகவும், இதற்கு தொடர்புள்ளவர்களாகவும் காணப்படுபவர்கள் மாயன்கள் ஆவர். இந்த மாயன்களின் சிறப்புக்களை முதலில் நான் கூறுகின்றேன்.

  - ''21ம் நூற்றாண்டில் ஒரு விண்வெளி வீரர் எப்படி இருப்பார்'' என்று கி.மு.2500 ஆண்டுகளுக்கு முன்னே மாயன்கள் சிலையாக செதுக்கி இருக்கின்றார்கள் என்றால் அனைவரும் அதிசயிக்கக்கூடிய ஒரு விடயம் தான். அடுத்ததாக

  - நாம் பாரதி என்றாலும் சரி ஔவையார் என்றாலும் சரி அவரவர்களுக்கு நாம் ஒரு வடிவத்தை கற்பனை செய்கிறோம். அதே போலத்தான் ''ஏலியன்கள்'' என்றாலும் நாம் ஒரு வடிவத்தை கற்பனை செய்கிறோம். ஆனால் மாயன்கள் தாம் வாழ்ந்த குகைகளில் இவர்களின் படத்தை வரைந்திருக்கின்றார்கள். இது தொடர்பாக விஞ்ஞானிகள் குறிப்பிடுவதாவது ''மாயன்கள் ஏலியன்களோடு தொடர்பு வைத்திருப்பார்கள்'' என்பதாகும்.

  - சாதரணமாக ஒரு சிறுவன் தோட்டத்தில் ஒரு தடியைக் கண்டால் கானும், மண்ணில் அவன் பெயரையோ / சித்திரத்தையோ வரைவான். ஆனால் அவ-னால் நேராக வரையவோ எழுதவோ முடியாது. ஆனால் மாயன்கள் 2500 வருடங்களுக்கு முன் எத்தனையோ kmக்கு மண்ணில் நேர்கோடுகளை வரைந்திருக்கிறார்கள். கொழும்பின் அளவிற்கு ஒரு குரங்கின் படத்தையே வரைந்திருக்கின்றார்கள். இது பெரு நாட்டில் இனங்காணப்பட்டுள்ளது.

* இப்படிப்பட்ட சிறப்பையெல்லாம் கொண்டுள்ள இந்த மாயன்கள் யார்? தற்போதைய தென்னமரிக்க நாட்டில் நாகரிகத்தில் சிறந்து விளங்கியவர்கள் தான் மாயன்கள். மிகவும் எளிதில் நீங்கள் கருதிவிட முடியாது ''இவர்கள் காட்டுவாசிகள்'' என்று, உண்மையாக இவர்கள் எகிப்திய நாகரிகத்தையும் விஞ்சியவர்களாக காணப்படுகின்றனர். அதுமட்டுமல்லாமல் ''இவர்கள் தீடீர் எனத் தோன்றி தீடீரென மறைந்த ஒரு இனம்'' என்று விஞ்ஞானக் குறிப்புக்கள் கூறுகின்றன.

* மாயன்களிற்கும் 2012 உலக அழிவிற்கும் உள்ள தொடர்பு என்னவெனில்

மாயன்நாட்காட்டி தான். 3 வகையான நாட்காட்டிகள் உள்ளன. அதில் சூரியநாட்காட்டியில் தான் 2012 உலகம் முடிவுக்கு வரும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கி.மு. 2500 வருடங்களுக்கு முன்னே இவர்கள் இதைப்பற்றி கணித்திருக்கின்றார்கள் என்றால் ''அவர்கள் இலேசுப்பட்டவர்கள் இல்லை'' என்பது புலனாகின்றது.

* இவை எல்லாவற்றையும் தாண்டி இன்றைய 21ம் நூற்றாண்டில் ஒரு நாடானது ஒவ்வொரு நிமிடமும் இதைப் பற்றி சிந்தித்துக்கொண்டிருக்கின்றது. ''வேறொரு நாடுமில்லை'', அமெரிக்கா தான் உலக அழிவைப் பற்றி சிந்தித்துக் கொண்டிருக்கிறது. அமெரிக்காவில் ஏரியா 51 என்ற ஒரு பிரிவில் ஒரு ஏவியன் விண்கலமும் ஏவியன்களும் அகப்பட்டிருக்கின்றது. ஒரு ஏவியனின் பிணத்தின் அருகில் இருந்து ஒருவர் படம் பிடித்துள்ளார். இப்படமானது அவனது மகனின் மூலம் இணையத்தளங்களுக்கு வெளியிடப்பட்டது. 2012 உலக அழிவு பற்றி அமெரிக்கா ''ஏவியன்களால் தான் ஏற்படும்'' எனக்கருதுகின்றது.

**உலகம் அழியாது**

* உலகில் வதந்திகள் காணப்படுவது இயல்பு தான். ''2012 உலக அழிவும் ஒரு வதந்தியாக இருக்கலாம்'' என சிலர் நினைக்கின்றனர்.

* ''ஆனைக்கும் அடிசறுக்கும்'' என்பது உண்மை. ஆகவே ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ச்சியின் போது சில தவறுகளை விட்டிருப்பார்கள்.

* அதுமட்டுமில்லாமல் இன்றைய அரசாங்கம் பல திட்டங்களை முன்னெடுத்துள்ளது. அதாவது ''2014 பாலம் கட்டுதல்'' போன்ற சில திட்டங்களை தயாரித்துள்ளது. இதனால் மக்களானவர்கள் 2012 உலக அழிவை பொருட்படுத்தாமலும் கவனிக்காமலும் விடுகின்றனர். ஆகவே இது உண்மையிலேயே வதந்தியாக இருக்கலாம்.

❖ இந்த ''2012 உலக அழிவு'' ஒரு கேள்விக்குறியான விடயமாகத்தான் காணப்படுகின்றது. இதற்கு மக்களாகிய நாம் பதில் சொல்ல முடியாது. காலம் தான் பதில் சொல்ல வேண்டும்.

ஆனால் மக்களாகிய நாம் வதந்திகளை நம்பாது உண்மைகளை மட்டும் நம்புவோமாக!

நன்றி

*து. துவாரகன்*
*8 C*

# நான் கடற்கரையில் பொன்மாலைப் பொழுதில் கண்ட காட்சிகள்

நான் எனது பெற்றோருடன் வெள்ளவத்தை கடற்கரைக்கு பொன்மாலைப் பெ-ாழுதில் சென்றேன் அங்கு நான் சென்றபொழுது சிலர் கடலில் குளித்துக் கொண்டு இருந்தனர். பெரிய அண்ணாமார் கிரிக்கெட் அதாவது துடுப்பாட்டம் விளையாடிக்கொண்டிருந்தனர். சில மாணவர் பட்டம் விட்டுக் கொண்டிருக் கின்றார்கள். நான் அதை எல்லாம் விட்டு விட்டு கடலை பார்த்தேன். அப்போது நீலக்கடல் நீண்டு பரந்து விரிந்திருக்கின்றதை பார்த்தேன். கரையோரத்தில் வெண்மணல் பரவிக் கிடக்கிறது. அந்த வெண்மணலை எடுத்து சிறுவர்கள் வீடு கட்டியும், கிடக்கு கிண்டியும் விளையாடுகின்றனர். வெண்மணலினுள் அதாவது கரையில் சிப்பிகள், சங்குகளும் ஆங்காங்கே காணப்படுகின்றன. அதை சிறுவர்கள் எடுத்து சேமிக்கிறார்கள். இடையிடை சுண்ணாம்புக் கற்கள் காணப்படுகின்றன அதை கட்டடத் தொழிலாளர்கள் கட்டடம் கட்டுவதற்கு அதை எடுத்துக் கொண்டு செல்கிறார்கள். பொங்கிவரும் அலைகள் கடலினுள் இருக்கும் பாறைகள் அதாவது பவளப்பாறைகளின் மீது மோதுகின்றன. மறுகணமே நுரையாகிப் பின் கடலினுள் மீண்டு விடுகின்றன. அலை மோதும் சத்தம் அங்கு தொடர்ந்து கேட்கக் கூடியதாக இருக்கிறது. இவ் ஓசை எம்மை மெய்மறக்கச் செய்கிறது. கதிரவன் ஒளி பட்டுக் கருங்கடல் வெள்ளி போலச் சுடர்கிறது. இது எம்மை ரசிக்கச் செய்கிறது.

கரையோர மண்ணிற் சின்னஞ்சிறு நண்டுகள் பூப்போல தம் கால்களை பதித்து செல்கின்றன. சில நொடிகளில் அலைகள் அவை வரைந்த கோலங்களை அழித்து விடுகின்றன.

மாலை வேளைகளில் வலை சுமந்த மீனவர்கள் மீன்களை தேடி கடலினுள் செல்கின்றனர். அவர்கள் தமது படகுகளில் ஏறி வலை போன்ற மீன்பிடிக்கும் உபகரணங்களையும் எடுத்துக்கொண்டு செல்கின்றனர். கரையில் நிறுத்தி வைக்கப்பட்ட படகுகள் எல்லாம் மீன் பிடிக்கச் கடலை நோக்கி செல்கின்றன. மங்கிய செவ்வொளி கடற்பரப்பில் படருகின்றது. மங்கிய செவ்வொளி கடற்பரப்பில் படருகின்றது. மாலைப்பொதில் உல்லாச பயணிகள் கடலின் அழகை கண்டு மகிழ்கின்றன. பின்னர் புகையிரத வண்டி ஒன்று ஊதுகுழலை அடித்துக் கொண்டு சென்றது. பின்னர் நடுக்கடலில் இருந்து கப்பலும் ஊதுகுழலை அடித்துக்கொண்டு சென்றது.

நன்றி

*J. Shaaruthan*
*8D*

*With Best Compliments*

*from*

**Home Style**

★ Wall & Floor tiles ★ Bathroom Fittings
★ Home Accessories ★ Kitchen Accessorie

No. 315/B, Colombo Road, Kiriwandala, Avissawella.
Tel : 036-3793337Mobile : 077-4074894

*With Best Compliments from*

NAGEL
ADVERTISING

Our Services:

*Large format digital printing, all types of signages, neon signs, illuminated sign boards, Hoardings, Billboards, name boards, dealer boards, light boxes, pennarns, stickers,*
*vehicle branding, exhibition stalls, display racks,*
*promotional items, offset printing screen prints etc..*

89, Galthude, Bandaragama, Sri Lanka.
Hotline : 0718 150591
www.nagelads.com

# முயற்சி திருவினையாக்கம்

''தெய்வத்தாலாகாது எனினும் முயற்சிதன் மெய்வருந்தக்கூலி தரும்'' என்பது வள்ளுவர் வாக்காகும். அதாவது ஒருவன் ஒரு செயல் செய்ய முடியாமற் போன-ாலும் முயற்சியானது தன் உடல் வருந்திய அளவுக்காவது கூலியை கொடுக்கும் என்பதாகும்.

விடாமுயற்சியானது ஒருவனுக்கு பெறற்கரிய செல்வத்தை ஈட்டித்தர வல்லது என்றும் சோம்பலானது அவனிடத்து வறுமையையே புகுத்தும் என்பது வள்ளுவர் பெருந்தகை எமக்கு உணர்த்துகிறார்.

உலகிலே மனிதராகப் பிறந்தவர்கள் மாத்திரமல்ல அனைத்து உயிரினங்களுமே தம் வாழ்வை நடத்துவதற்கு ஏதோ ஒரு வகையில் முயற்சிகளை மேற்கொண்டுதான் வருகின்றன. முயற்சி செய்வதன் மூலமாகவே தான் எமது வாழ்க்கையின் ஒவ்வொரு படிகளுமே நகர்த்தப்படுகின்றன.

தனக்கான கூடு அமைப்பதில் தரளாது முயன்ற ஒரு சிலந்தி, ஆறு தடவை தோல்வியைச் சந்தித்தது. கடைசியில் ஏழாவது முறையாக அது விடாது முயன்ற போது அதன் முயற்சியானது பலித்தது. தோல்வியைக் கண்டு தளராது நெஞ்சும் விடாமுயற்சியும் ஒருவனை நிச்சயம் வெற்றிப் பாதைக்கு இட்டுச் செல்ல வல்லன. உலகில் புகழ் பெற்று விளங்கும் சான்றோர்கள் தமது வாழ்வில் முயற்சி எனும் ஏணியை கொண்டே வெற்றி எனும் சிகரத்தை அடைந்தார்கள். இது ஒவ்வொரு சான்றோரினதும் வாழ்வில் சாத்தியமாக விளங்குகிறது.

உலகின் பெரிய வல்லரசான அமெரிக்கா நாட்டின் அன்றைய ஜனாதிபதியாயிருந்த ஆபிரகாம்லிங்கன் என்பவர் ஆரம்பத்திலேயே மிகவும் ஒரு ஏழையாக இருந்தார். தனது ஒருவேளை உணவுக்கே கஷ்டப்பட்ட லிங்கன் தன் ஏழ்மையை நினைத்து வருந்தி முயற்சி செய்யாது விட்டிருந்தார் என்றால் அவர் பிற்காலத்தில் அந்நாட்டின் ஜனாதிபதியாக வந்திருக்க முடியாது. அவர் தன் ஏழ்மையை எண்ணி வருந்தாது தன் குடும்பத்தின் தேவைக்காக உழைத்து அத்தோடு மட்டுமன்றி தெருவீதி விளக்கின் ஒளியிலே அவர் தனது விடாமுயற்சியோடு படித்து அவ் உயரிட நிலையை அடைந்தார். அவர் மட்டுமா அவரைப் போன்றே இந்தியாவின் முன்னால் ஜனாதி-பதியான கலைஞர் அப்துல்கலாமும் தனது விடாமுயற்சி மூலமே அச்சிகரத்தை அடைந்தார்.

இவர் மட்டுமல்லாமல் இந்த உலகத்துக்கே இருளை நீக்க மின்குமிழை கண்டுபிடித்த தோமஸ் அல்வா எடிசன் தனது இளம்பிராயத்தில் அவரது பள்ளி ஆசிரியர் தோமஸ் அல்வா எடிசனை எதற்கும் தகுதியற்றவர் என்று கூறிவிட்டார். டாக்டர் எடிசனை சோதனை செய்து பார்த்துவிட்டு ''எடிசனின் தலை அமைப்பு இயற்கைக்கு விரோதமாக அமைந்திருக்கிறது. எனவே இவர் விரைவில் பைத்தியமாகி விடுவார்!'' என்று கூறினர்.

ஆனால் எடிசனின் தாயாரோ ''எடிசனை பெரிய ஆளாக்குவேன்!'' என்னும் உறுதியோடு அவருக்கு பாடம் கற்பித்தார். அந்தத் தாயாரின் விடாமுயற்சியாலும், உழைப்பாலும் எடிசன் உயர்வு பெற்றார்.

''மனிதன் கடன்பட்டிருப்பது மூளைக்கல்ல, முயற்சிக்கே! கடவுள் வரங்களை விற்பனை செய்கிறார். மனிதர்களின் முயற்சியே அவற்றின் விலை'' என்று எடிசன் பிற்காலத்தில் கூறினார்.

இவ்வாறு ஒவ்வொரு சான்றோரினதும் வெற்றிக்குப் பின்னால் அவர்களது விடாமுயற்சியே காரணமாக இருக்கிறது. உழைப்பும், விடாமுயற்சியும் உடைய ஒருவன் தன் வாழ்வில் தோல்விகளை சந்தித்ததாக சரித்திரமே இல்லை!.

நன்றி

*A. Jathevan*
*13$^{MT}$*

# வாழ்வியலில் திருக்குறள்

''அரிது அரிது, மானிடராய்ப் பிறத்தல் அரிது'' என்பது ஔவைக் கிழவியின் அமுத வாக்கு. அரிதற்கரிய இம்மானுடப் பிறவியை எடுத்து அவதரித்து, நம்மில் எத்தனைபேர் தத்தம் வாழ்வில் நல்விழுமியங்களையும் பழக்க வழக்கங்களையும் கடைப்பிடித்து ஒழுக்கசீலர்களாக வாழ்கின்றனரோ தெரியவில்லை. ''வந்தோம்; இருந்தோம்; சென்றோம்'' என்றில்லாமல் நாம் வாழ்ந்ததற்கு ஓர் தடயத்தை ஏற்படுத்திச் செல்ல வேண்டும். மனிதனை நல்வழிப்படுத்துவதற்கான பகவத்கீதை, குர்ஆன், பைபிள் போன்ற சமய நூல்களும் மகாபாரதம், இராமாயணம் போன்ற காப்பியங்களும் திருக்குறள் போன்ற போன்ற பொது நூல்களும் ஏராளம் ஏராளம். இவற்றுள் சாதி, மத, இன, மொழி பேதமின்றி உலகத்தார் அனைவரும் படித்து சுவைத்து அனுபவிக்கக்கூடிய ஒரேயொரு பொதுநூல் திருக்குறள் என்றால் அது மிகையாகாது.

தமிழ் நாட்டிலே ஆரியரின் நாகரிகமும் மொழியும் சங்கமருவிய காலப்பகுதியில் மிக்க செல்வாக்குடன் விளங்கினவென்பது அக்காலத்து நூல்கள், தகவல்கள் கொண்டு தெரிகின்றது. அத்தகைய சூழலில் வடமொழி, இலக்கிய மரபுகள் சிற்சில வழிகளில் தமிழ்மொழி தழுவியதாகக் கூறப்படுகின்றது. பண்டைக்காலந் தொடக்கமாகத் தமிழ் நாட்டின் பண்பாட்டை வழிப்படுத்தி வந்த பேரிலக்கியங்களுக்கெல்லாம் வழிகாட்டியாக அமைந்திருந்தது திருக்குறள் எனலாம். இந்நூலை எடுத்து ஆளாத தமிழ்ப்புலவரே இல்லை எனக் கூறலாம்.
சிலப்பதிகாரம், சிந்தாமணி போன்ற பேரிலக்கியங்கள் வள்ளுவர் வாக்கைப் போற்றிப் பாராட்டியுள்ளன. இத்திருக்குறளை படித்து, அனுபவித்த பெரும்புலவர் தம் கருத்தை வெளிப்படுத்திய வெண்பாக்களைக் கொண்ட ஒரு தொகை நூல்களை இயற்றியுள்ளார். இதில்

''ஓதற் கெளிதா யுணர்தற் கரிதாகி
வேதப் பொருளாய் மிக விளக்கித் - தீதற்றோ
உள்ளம் தோறும் உள்ளம் உருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு''

''உலகம் என்பது ஓர் நாடகமேடை. அதில் எல்லா மானுடர்களும் நடிகர்களே'' என்பது மேலைநாட்டுக் கவிஞன் ஷேக்ஸ்பியரின் கருத்து. உலகில் மனிதன் வாழ்வதற்கு எத்தனையோ வழிகள் இருந்தாலும் இன்னஇன்ன வழிகளில் சென்றால் நலம் பெறலாம் என இரண்டே அடிகளில் அழகாக எடுத்து இயம்புகின்றான் வள்ளுவன்.

''நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த
தன்மையான ஆளப்படும்''

அதாவது ஒரு செயலின் நன்மை தீமைகளை ஆராய்ந்து அதில் நல்லனவற்றையே செய்ய விரும்பும் ஒருவனே செயலுக்குரியவனாக ஆளப்படுவான் என்கிறார்.

''ஆலும் வேலும் பல்லுக்குறுதி
நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி''

என்பது பெரியோர் வாக்கு. ஒருவனுக்கு ஓர் விழுமியக்கருத்தை ஆன்மீகப் பேச்சு மூலமாக பெரிய வசன நடைகளோ சொல்வதை விட இரண்டே அடிகளில் அழக-ாகவும் சுருக்கமாகவும் எழுதப்பட்டுள்ள திருக்குறளைச் சொல்வது சாலச்சிறந்தது. மனிதனாக பிறந்த ஒவ்வொருவனும் எதை இழப்பினும் தன்மானத்தை இழக்கக்கூடாது என்பதை இவ்வாறு கூறுகிறார்.

மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்''

தன் உடம்பிலிருந்து மயிர் நீங்கினால் உயிர் வாழாத கவரிமானை போன்றவர் மானம் அழிய நேர்ந்தால் உயிரைவிட்டுவிடுவர் எனக்கூறுகின்றார் வள்ளுவப் பெருந்தகை.

பெரியாரைப் பேணுதல் இந்நாட்களில் அருகி வருகின்றது. தற்காலத்தில் முதி-யோர் இல்லங்களும், அனாதை மடங்களும் பெருகக் காரணம் பெரியோரைப் பேணாமையே ஆகும். இதனையே வள்ளுவன்

''பெரியாரைப் பேணாது ஒழுகின் பெரியாரால்
பேசா இடும்பை தரும்'' எனவும் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மக்களின் பண்பாட்டு வாழ்க்கையை நோக்கும் போது சங்ககாலத்துச் சமுதாயம் கற்பனையுலகின் சஞ்சரித்தல் முதலிய சிறப்புப் பண்புடையவர்களாய் விளங்கியமையால் அச்சமுதாயம் பல சிறந்த புலவர்கள் தோன்றக் காரணமாயிருந்ததென்பதில் வியப்பில்லை. இவ்வொழுக்கத்தின் மேன்மையை வள்ளுவன் இவ்வாறு எடுத்தியம்புகின்றான்.

''ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்''

எப்படிப்பட்ட நன்மைகளை அழித்தவர்களுக்கும் அவற்றில் இருந்து தப்பித்துக்கொள்ளும் வழி இருக்கிறது. ஆனால் ஒருவன் செய்த நன்றியை மறந்து போனால் அதனால் வரும் தீமையில் இருந்து நீங்கும் வழியே இல்லை. நம்மைக் கொன்றுவிடுகின்ற அளவு துன்பத்தை ஒருவர் செய்தாலும் அவர் முன்பு செய்த உதவியை எண்ணிப் பார்த்தால் அத்துன்பம் மறந்து போகும். இதனையே வள்ளுவர்

''கொல்ல அன்ன இன்னா செயினும் அவர் செய்த
ஒன்றுநன்று உளக் கெடும்'' என்கிறார்.

நவநாகரிக உலகத்திலே, இருபத்தோராம் நூற்றாண்டிலே காலடி வைத்திருக்கும் நாங்கள் இன்று நிம்மதியாக உறங்குகின்றோமா? என்று கேட்டால் அதற்கு விடை இல்லை என்பதாகும். அதற்குக் காரணம் எங்கு பார்த்தாலும் யுத்தம். இன, தம, வெறி பிடித்து அலையும் கிளர்ச்சியாளர் கூட்டம் ஏராளம். நாடுகளுக்கு நாடுகள் அணுவாயுதத்தை தயாரிப்பதிலும் ஏவுகணைகளை ஏவுவதிலும் போட்டி போடுகின்றன. அவை பாடசாலைகளையோ அல்லது சமய நிறுவனங்களையோ போட்டியிட்டுக் கட்டினால் அது வரவேற்கத்தக்கது. இவ்வாறான எண்ணம் அதிகாரப் பரவலாக்கத்தில் மிதந்து சர்வாதிகாரத்தில் தவழ்ந்து கொண்டிருக்கும் நாட்டுத் தலைவர்களுக்கு வராததன் காரணம் என்ன? ''அன்பு'' என்ற சொற்பதத்தின் மேன்மையை விளங்கிக் கொள்ளாமையே ஆகும். ஒரு நாட்டு மன்னன் அணுவாயுதத்தை தயாரிப்பதை விட திருக்குறளை அச்சடித்து விற்றால் அந்நாட்டின் ஒவ்வோர் பிரஜைக்கும் அன்பு மட்டுமல்ல ஒழுக்கம் தரும் பல விழுமியங்களையும் அறியக் கூடியதாக இருக்கும். அவ்வாறு அந்நாட்டு மன்னன் செய்வானாயின் அந்நாட்டில் இரு தனி மனித நபர்களுக்கிடையில் கூட சண்டை வராது. ஆகா! என்ன விந்தை! அன்பிற்கும் அடங்காத உயிர் உண்டோ! இதனையே வள்ளுவன்

''அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ் ஆர்வலர்
புன்கண்ணீர் பூசல் தரும்'' என்கிறார்.

திருக்குறள் ஆனது சூதாடதே; பொய் சொல்லாதே; புலால் உண்ணாதே; கள் குடியாதே; களவு செய்யாதே; புறங்கூறாதே; பிறன் இல் விழையாதே ஆகிய தீய செயல்களைச் செய்ய வேண்டாம் எனவும் நல்லவர் நட்பை நாடு; பெரியோரைத் துணைக்கொள்; எல்லோரிடமும் அன்பாயிரு; மனைவியைப் போற்று; நன்மக்களைப் பெறு; நல்லதைப் பேசு; செய்வதைத் திறம்படச் செய்; அறவழியில் நின்று பெ-ாருளைத் தேடு; இன்பத்தைப் பெறு ஆகிய பல சிறந்த வாழ்க்கைக் கோட்பாடுகளைப்

போதிக்கும் நூலாகும். இத்தகைய அரிய கருத்துக்களை இரண்டே அடிகளில் தந்த வள்ளுவனை கவிக்குயில் பாரதியார்

''வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான் புகழ் கொண்ட தமிழ்நாடு'' என்று பாடியுள்ளார்.

உண்மைகளேயன்றி வேறெதனையும் கூறாத காரணத்தால் ''பொய்யாமொழி'' என்றும் அறம், பொருள், இன்பம் என்னும் முற்திறப்பகுப்புடைமையால் ''முப்பால்'' என்றும் மனிதனுக்கு நல்வழி காட்டி தெய்வீக நிலைக்கு உயர்த்தும் பண்புடையதால் ''தெய்வநூல்'' என்றும் போற்றப்படும் பல்வகைச் சிறப்புக்கள் பொருந்திய திருக்குறளை அனைவரும் படித்து இன்புற்று பயன் பெறுவோமாக!

இருஅடியில் இருப்பதென்ன
இணையில்லாத் தத்துவமே
பெருந்தகையாம் வள்ளுவரின்
திருக்குறளில் அறிவீரோ!
கடுகதனையே துளைத்து
ஏழ்கடலையே புகுத்தியதோர்
விடுகதையாய் விளம்பிய இதன்
உள்விளக்கம் அறிவீரோ!

*T. Thiviyan*
*12MT*

# மனமும் மாயமும்

ஆரம்பகால மனிதன் பறவையைப் போல் வானில் பறக்கக் கற்றுக் கொண்டான், மீனைப் போல் ஆழ்கடலில் நீந்தக் கற்றுக் கொண்டான். ஒலியை விட வேகமாக செல்லும் விண்கலங்களில் பயணம் செய்து இன்று பால்வெளி அண்டத்தை ஒரு கலக்கு கலக்கிக் கொண்டிருக்கின்றான். இப்படி, தான் கடந்து வந்த பாதையில் தன்னை கவனிக்கச் செய்தவற்றிலுள்ள கலைகளையும், நுட்பங்களையும் ஆராய்ந்து, தன் ஆற்றலை வளர்த்து, அந்த ஆற்றலால் வளர்ந்து கொண்டிருக்கின்றான். இதன் காரணமறிய முற்பட்டால் நாம் அமையும் குழப்பத்திற்கு குறைவில்லை. ஒரு விஞ்ஞானியிடம் இக்கேள்வியை தொடுத்தால், அவன் இது மனிதனின் அறிவின் அதிசயம் என்பான். ஒரு மெஞ்ஞானியிடம் வினவினால், எல்லாம் இறைவனின் செயல் என்பான். நம்மைப்போல் ஒரு சராசரி மனிதனிடம் கேட்கப்பட்டால் இவ்வினாவிற்கு விடை கிடைக்காமல் அறுந்த மணிமாலையை போல் வினா மழை தான் பொழியும். ஆனால் உண்மையில் இக்கேள்வியின் கருவிலே உயிரினதும் உள்ளத்தினது உண்மையான சித்தாந்தம் அடங்கியுள்ளது.

மெஞ்ஞானத்திற்கும் விஞ்ஞானத்திற்கும் இடையே உள்ள இடைவெளி எது? என்னைப் பொறுத்த வரையில் ஒரே ஒரு கருத்தையே இத்தனை விவாதங்கள் தொடுக்கப்பட்டும், வாதங்கள் தகர்க்கப்பட்டும் கொண்டிருக்கின்றன. இறைவன் இருக்கின்றானா என்பதை இதன் அடித்தளமாக கொண்டு, இல்லை என கூறும் ஒரு குழுவும், உண்டு என பறைசாட்டும் மற்றொரு குழுவும், உண்டு ஆனால் நீங்கள் கூறுவது போல் கிடையாது என கூறும் மற்றொரு குழுவும், தங்கள் மலை போன்ற கருத்துக்களை குவித்துக் கொண்டு இருக்கின்றனர்.

என்னைப் பொறுத்தவரையிலோ, இம்மூன்று வழிகளும் ஒரு முடிவைத் தான் அடையப்போகின்றது. அது தான், உண்மை மெஞ்ஞான ஞானிகள் காலப்போக்கில் அறிந்து கொண்ட ஆழமான உண்மையை இன்றைய விஞ்ஞானிகள் மறுப்பது உண்மைதான். எனினும் விஞ்ஞானம் இதனையறிய இந்த சத்தியத்தை விளங்க இன்னும் பல காலம் எடுக்கும். ஏனெனில் இந்த விடயத்தை பொறுத்தவரையில் விஞ்ஞானமென்பது பச்சிளம் குழந்தை தான் என்பது பலர் கருத்து. விஞ்ஞானம் இவ்வுண்மையை ஏற்றுக்கொள்ள அதற்குத் தேவை ஆதாரம் மட்டும் தான். ஆதாரமின்றி இவ்வுலகம் எதையும் ஏற்றுக் கொள்வதாக இல்லை. இதனாலேயே விஞ்ஞானிகளில் ஒரு சாரார் இறைவன் உண்டு எனவும் வாதிடுகிறார்கள். ஏனெனில் அவர்களுக்கு கிடைத்த ஆதாரம் அவ்வளவுதான்.

இறைவன் அனைத்தையும் கட்டுப்படுத்துபவன, பரிபாலிப்பவன் என்பதே நம் கொள்கையாக இருந்து வருகிறது. இன்று விஞ்ஞானம் இதனை மறுத்தாலும் இவ்வண்ட சராசரம் உருவானதிற்கான காரணம் ஒரு அளவில்லாத சக்தி தான். Energy Source என இதனை சுருக்கமாகச் சொல்லலாம். இச்சக்தியின் விளைவாக bigbang எனப்படும் ஒரு செயல்முறையாலே இந்த அண்டசராசரி தோன்றியதாகவும், உயிர் உருவானதாகவும் கூறப்படுகிறது. ஆனால், நாம் நம்புவதைப் போன்று உலகம் அவன் கையில், அதை அவனே கட்டுப்படுத்துகிறான் என்பதே இன்றைய விஞ்ஞானம் உறுதியாக மறுக்கிறது. இதையே இறைவன் என சிலர் வாதிக்கின்றனர்.

பூமி தட்டையானது என்றனர். பின் உருண்டையானது என்றனர். பின் உருண்டைதான் ஆனால் மேலும் கீழும் தட்டையானது என்றனர். இத்தனைக்கும் பூமி அப்படியே தான் இருந்தது என்றும் கூறுகின்றனர். எது உண்மை? The 100 - Ranking of the Most Influential People என்ற புத்தகத்தில் வரலாற்றிலேயே மிகவும் தாக்கத்தை ஏற்படுத்தியவர்களில் இரண்டாம் இடத்திலிருப்பவர் Sir Isacc Newton பௌதீகவியலை புதிய ஆரம்பத்திற்கு இட்டுச் சென்றவர். இவரின் விஞ்ஞான ரீதியான கருத்துக்கள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டவை. ஆனால் இன்று நவீன இயல்பியலின் தந்தை Albert Einstein, இயல்பியலின் தாற்பரியங்களை மாற்றியமைத்தவர். 500 ஆண்டுகளாக நிலவி வந்த Newtonian physic சை பிழையென நிரூபித்து இன்று நவீன இயல்பியலை உருவாக்கியுள்ளார். இத்தனைக்கும் இருவரும் ஆராய்ந்தது பௌதீகவியலை தான். Newtonin பரிட்சாத்தனைகளின் முடிவைக்கொண்டு அடையப்பட்டவற்றை, Einstein வேறு பரீட்சாத்தனைகளால் பிழையென நிரூபித்தார். விஞ்ஞானம் முற்றிலும் சரியானதென்றால், இது எவ்வாறு நிகழும்?

நம்மை சுற்றியிருப்பவையும் நாமும் மாறுகின்றோம் இவ்வுலகில் மாற்றமொன்றுதான் மாறாதது. அதனால் மாறும் உலகம், நம் சிந்திக்கும் முறையிலும் மாற்றத்தை ஏற்படுத்துகிறது. விஞ்ஞானம் தேடுவதெல்லாம் ஆதாரம்! அந்த ஆதாரத்தை முன்வைத்தால் போதும், விஞ்ஞான உலகு அதனை ஏற்கும் ஆனால் ஆதாரம் கொடுக்கப்பட்டவை எல்லாம் உண்மையாக இருக்கப்போவதில்லை. ஆதாரமற்றவையெல்லாம் பொய்யாக இருக்கவும் போவதில்லை. உண்மை ஒன்றாகத் தான் இருக்கமுடியும். இவ்வுண்மையை அடையவே நாம் விளைகின்றோம். விஞ்ஞானம் இறுதியில் உண்மையை அறியும். ஆனால் அதுவரை நம் கல்லறை காக்காது நம் உடல் செயலிழப்பதற்கு முன்னர் உண்மையை அறிய விஞ்ஞானம் சிறந்த வழியில்லை. விஞ்ஞானம் தேவை தான் ஆனால் அதன் பலன் மெஞ்ஞானத்தோடு இணைந்திருக்கும் வரையில்தான். அதே நேரம் விஞ்ஞானமற்ற மெஞ்ஞானம் உடுப்புக்களற்ற சித்திரக்கலைஞனைப் போன்றது அதனால் தான்

Albert Einstein,
Science without Religion is Lane. Religion without science is blind என்று கூறியுள்ளார்.

நாம் அறிய விளையும் உண்மை எங்கு இருப்பினும் அதனை அறியவும் ஏற்கவும் நாம் நம்மை தயார்படுத்த வேண்டும். வெறும் கலாச்சாரம் என்ற பெயரில் மூடநம்பிக்கைகளில் மூழ்கி இருக்காமல், அவற்றை தகர்த்தெறிய நாம் விளைய வேண்டும். காலங்காலமாக நம் மூதாதையர் செய்தார்கள் என்ற ஒரே ஒரு காரணத்திற்காக, விஞ்ஞானத்தைவிட்டு நாம் விலக வேண்டும். இறைவனும் மனிதனைப் போன்று ஆபாசங்கள் நிறைந்தவனென்று கருதுவது திருப்தியடைய நம்மை நாமே வதைப்பதும், கண்டிக்கப்பட வேண்டியவை. இறைவன் விடயத்தில் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்று பிறப்பை வைத்து எண்ணுவதும் அதனால் மக்களை ஒதுக்கி வைப்பது வேதனைக்குரியது. இறைவனை கல்லிலும் மண்ணிலும் தேடாது உள்ளம் ஏற்றுக்கொள்ளுமளவுக்காவது இறைவனை பற்றிய உண்மையைத் தேட வேண்டும். இதற்கான ஒரே வழி அறிவை வளர்ப்பதுதான். மற்ற மதங்களையும் விஞ்ஞானத்தையும் ஆராய்ந்து எதில் உண்மையுண்டு என்று அறிய நாம் முயலவேண்டும். ஏனெனில் வாழ்வு சுருக்கமானது. உண்மை அறியாமல் உயிர் நீத்தால் அதுவே முடிவாக இருக்கும்!

இது என் மனதில் எழுந்த சில ஆதங்கங்கள். சமூகத்தில் நான் பார்த்து எனக்கு ஏற்பட்ட சில காயங்களின் விளைவும் பாலிலுள்ள விடயத்தை பிரிப்பதைப் போன்று உண்மையை பொய்யிலிருந்து மாயையை அறிந்து அதன் முழுப்பலத்தையும் உபயோகிக்க முயல்வோம், ஏனெனில் இக்குழப்பத்திலிருந்து மீள அது ஒன்று தான் வழி!.

**நன்றி**

*S.Manoharan Kaushall*
*6C*

*With Best Compliments*

*from*

## Grade 12 & 13 Tamil Medium Commerce / Arts

| | | |
|---|---|---|
| Accounting | : | K.Kalaichelvan |
| Economics | : | V.Parameshwaran |
| Business Studies | : | S.Mayuran |
| Bu.Statistics | : | A.Vickneswaran |
| Business Studies | : | A.Thisaiverasingam |
| Logic | : | A.Vickyneswaran |
| Tamil | : | V.Shanthakumar |

### Bio / Maths

| | | |
|---|---|---|
| Chemisrty | : | V.Parameshwaran |
| Biology | : | V.Umashangar |
| Physics | : | S.R.Jeyakumar |
| Com.Maths | : | W.Vinoth |
| Gen.English | : | P.Sujeevan |

## Grade 12 & 13 English Medium

| | | |
|---|---|---|
| Economics | : | A.N.M.Ramzan |
| Accounting | : | A.N.M.Ramzan |
| Business Studies | : | M.B.M.Azlam |
| Com.Maths | : | N.M.M.Rizmi |
| Gen.English | : | P.Sujeevan |

### *Sinhala Medium*

| | | |
|---|---|---|
| Economics | : | Thanindu Dushmantha |
| Accounting | : | Tharindu Dushmantha |
| Business Studies | : | Upul Devapriya |
| Gen.English | : | P.Sujeevan |

## Grade 10 & 11

### *Tamil Medium*

| | | |
|---|---|---|
| Science | : | K.K.Udayakumar |
| Maths | : | S.Sundaralingam |
| Bus & Acc | : | R.Johnston |
| History | : | V.Murali |
| English | : | P.Sujeevan |
| Tamil | : | V.Thanaraj |
| English Lit | : | P.Sujeevan |

### *English Medium*

| | | |
|---|---|---|
| Science | : | N.M.M.Rizmi |
| Maths | : | K.Vikneswaran |
| Bus & Acc | : | R.Johnston |

# *BRILLIANT INSTITUTE*

**No : 136, Sangamitha Mawatha**
**Colombo - 13**
**Tel : 011 2347728, 011 2473792**

# எமது தாய் மொழி

நாளொரு நாள் கற்றாலும், அம்மொழி வளத்தால் நாடுகள் தோறும் நாம் பறந்து திரிந்தாலும் நமக்கென்று ஒரு மொழியுண்டு. நமக்கும் ஒரு தனித்துவம் உண்டு. அது தான் பத்து மாதம் சுமந்து பெற்ற எமது அன்னை தன் பாலோடு கலந்து நமக்குப் பருக்கிய நம் தாய்த் தமிழ் மொழி. நமது தாய் மொழி தமிழ் எனக்கூறிக் கொள்வதில் பெருமையடைகின்றோம். ஏனெனில் அது கல் தோன்றி மண் தோன்றாக் காலத்துக்கு முன் தோன்றிய மூத்த தமிழ்; என்றும் இளமை குன்றா வளம் பொருந்திய கன்னித் தமிழ்; என்றும் இனிமை குன்றா இன் தமிழ் என்றும் தெவிட்டாத் தீந்தமிழ்; மென் கிளியும் மென்று ஜீரணிக்கத் தக்க மென் தமிழ்; வகை வகையாய் வரம் பல பெற்றுத் திகழும் வன தமிழ்; பண்டைய அரசர்களால் பராமரித்துக் காக்கப்பட்ட அழகுத் தமிழ்; சங்கம் வளர்த்த தமிழ்.
என்றும் குன்றா இளமை கொண்ட அதே இன்தமிழ் அன்று இருந்தது போலவே தனக்குரிய தனித்துவத்தில் இன்றும் நிலைத்திருக்கின்றதை மனோன்மணியம் கூறும் ''பல்லுயிரும் பலவுலகும்'' என்னும் பாடலால் தெளிவாக அறியலாம். மேலும் ''யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்'', என்று பாரதியார் கூறினார். பல மொழிகளையும் படித்துப் பார்த்தவர்களுக்கு தமிழ் மொழியின் இனிமை எத்தகையது எனச் சொல்லித் தெரிய வேண்டியதொன்றல்ல.

தமிழை ருசித்தவர்கள் ''தமிழுக்கு அமுதன்று பெயர் உண்டு'' என்பர். தமிழகத்தை ஆண்டு வந்த மன்னர்கள் பலர் தமிழை வளர்க்க அரும் பணி செய்துள்ளனர். தமிழைப் பாடும் புலவர்களுக்குத் தமது சபைகளிலே முதலிடம் கொடுத்தார்கள். ஆஸ்தான கவிஞர்கள் என பல புலவர்கள் அரசர்களின் அவைகளிலே நியமிக்கப்பட்டனர். ஒரு மனிதனுக்குத் தன் உயிரினும் மேலாக தமிழ் மொழி குறிப்பிடப்படுகிறது.

இந்த உதாரணங்களின் மூலம் தமிழ்மொழியின் பெருமை எத்தகையது என்பதை நன்கு உணரலாம்.

*J. Gowthaman*
*7D*

*With Best Compliments*

*from*

**BTEC HND**

**Leading to BSc (Hons), BA (Hons), BEng (Hons) & LLB (Hons)**

| | |
|---|---|
| **Computing** | ICT System Support<br>Software Development<br>Computing |
| **Construction Studies** | Quantity Surveying<br>CAD & Building Studies<br>Land Surveying |
| **Management** | Business Management<br>Hospitality Management |
| **Health Science** | Biomedical Science<br>Nursing |
| **Legal Studies** | HND in LAW<br>LLB (Hons) |
| **Engineering** | Telecommunication Engineering<br>Engineering Foundation |

**BCAS Marketing & Admissions Office**
32, Dharmarama Road, Colombo 6
Tel: +94(0)11 250 1145 Fax: +94(0) 11 250 4045

**BCAS City Campus**
256/2, Galle Road, Colombo 6
Tel: +94(0)11 236 4465

**Dehiwela Campus**
106/1, Galle Road, Dehiwela

**BCAS Regional Office**
22, Bar Road, Batticaloa
Tel : 065 222 8451 / 077 728 6676
573/1, Maliga Road, Sainthamaruthu
Tel : 065 222 8451 / 077 728 6676

**Kandy Campus**
344, Peradeniya Road, Kandy
Tel & Fax: +94(0) 81 222 4731

**Qatar Campus**
P.O Box 35406,
Hilal, Doha, Qatar
Tel: +974 4436 6572
Fax: +974 4443 2960

**British College of Applied Studies**

Colombo | Kandy | Dehiwela | Qatar

Hotline 0112559255

**B.C.A.S CAMPUS**

Building Careers... Transforming Lives... www.bcas.lk

# நினைவுகள்

கடலெனும் பெருவாழ்வில் - தளம்பாத
படகுகள் போலவே - மனிதனின்
நினைவலையில் நீந்துபவை - அழகிய
நினைவுகள் எனப் பெயர் பெறும்

புதுமையான இளமையில் பல நினைவுகள்
முதுமையின் வறுமையில் சில நினைவுகள்
எனப் பலவித நினைவுகள் - மனிதனின்
மனதை வருடிச் செல்லும்

தந்தை கரம் பற்றி பள்ளி சென்றது நினைவினிலே
பந்து அடிபட்டு அழுதது நினைவினிலே
அத்திப் பழம் சுவைத்தது நினைவினிலே
அத்தனை நினைவுகளும் எந்தன் மனதினிலே

குற்றாளச் சாரலில் குளித்ததும்
வற்றாப்பளையில் கூட்டத்துடன் தொலைந்ததும்
சங்கின் ஒலிகேட்டு மகிழ்ந்ததும் - என்
நீங்காத நினைவுகள் ஆகும்

ரஜினி படம் பார்த்து விசிலடித்தது ஒரு காலம்
கஜினி முகமது பற்றி படித்தது ஒரு காலம்
சைக்கிள் மிதித்து சென்றது ஒரு காலம்
பைக்கில் வந்து இறங்கியது ஒரு காலம்

மக்களில் பலவிதம் போல
நினைவுகளிலும் பலவிதம் - அவ் நினைவுகள்
அனைத்தும் இன்பமும் துன்பமும்
கலந்து தரும் ஒரு மருந்து

நினைவுகள் நினைத்துப் பார்க்க மட்டுமல்ல
வினைகளை முகம்கொடுக்கவும் உதவும்
சினையிலிருந்து வரும் மனிதனுக்கு
நினைவுகள் பல சுகம்

குழந்தைப் பருவத்தில் நினைவுகள் மறதியாகும்
இளமையில் நினைவுகள் தோழனாகும்
முதுமையில் நினைவுகள் பசுமையாகும்
இறந்ததும் நினைவுகள் மறந்து போகும்

கடிதம் படிக்கையில் எழும் நினைவுகள்
மடியில் சாய்கையில் எழும் நினைவுகள்
புகைப்படம் பார்க்கையில் எழும் நினைவுகள்
வகைவகையாய் எழும் பல நினைவுகள்

சாரணர் முகாமின் அனுபவ நினைவுகள்
பரணர் படைப்புகள் படித்த நினைவுகள்
தரணித் தாய்மடி மீது உறங்கிய நினைவுகள்
மரணப் படுக்கையிலும் மறவா நினைவுகள்

நிறைய நிறைய நினைவுகள் - என்னால்
மறக்க முடியாத நினைவுகள்

- பா. பிரசாங்கன்

# இழந்தவைகளில் இரண்டு இன்றும் சுடுகின்றன

எழுத்துக்கூட்டி வாசிக்கத் தொடங்கிய
ஏழு வயது
கண்களை மூடிக்கொண்டு கனவுலகில்
"கார்" ஓட்டிய வயது
மூலைக்கு மூலை
சிலந்தியின் சர்க்கஸ்
வெடிப்புக்களின் நடுவே
பல்லியின் குடித்தனம்
தலையணை தூக்க
தடுக்கிட்டு ஓடும் கரப்பான்
அம்மாவின் கை ருசிகண்டு
குடியேறிய எலிகள்
வெயில் சாய்ந்து உள்ளே வரும்
பாம்புகள் போக
மாரிமழை ஓ ... வென்று
ஒப்புச்சொல்லி அழ
ஒழுகும் கூரைக்கு ஓட்டைப்பானை
வைத்ததை கண்டு
செங்கல் தெரிய சிரிக்கும்
சுண்ணாம்புச் சுவர்கள்.
மாளிகை,
மணிமண்டப மாளிகை,
என் வாழ்க்கையின் முன்னுரை எழுதியது
இந்த தலைப்பற்ற தாழ்வாரங்களில் தான்
நிலைப்படி முதல் சாணி இட்டு
மெழுகிய "குசினி" அடுப்பு வரை
நினைவில் உண்டு
நேரில் சிதைந்தாலும்

நான் எனும் உயிர்க்கு
உரு கொடுத்தாய்
செல்லும் வழி செப்பமான
'செப்பல்' சத்தத்துடன் பின் தொடர்ந்தாய்
மடி அமர்ந்து
உன் தட்டில் மென்ற உணவு
மார் சாய்ந்து
கண் வாழ்க்கையில் கண்ட கனவு
குளிர் கூடி தன்னுகையில்
போர்வையான உன் 'ஸ்வட்டர்'
வழித்தெரியாப் பாதைகளில்
தொப்பையில் கூன் சாய்ந்து
எதுக்க வரும் வண்டிகளுக்கு
வாய் திறந்தாள்
வண்டு போய்விடும் என்று
கையால் 'டாடா' காட்டிச் சென்ற
'பைக்' பயணம்
நரை தெரியாமல் 'டை'
அடித்த தாடிக்கு தலை
சொறிந்து கொண்டே
நான் செய்த சேட்டைகளை கண்டு
மீசைக்குள் மறைத்துக் கொண்ட உன் சிரிப்பு
பத்து வருடங்கள்,
உனை கண்டு பத்து வருடங்கள்
உண்மைகள் வலித்தாலும் ஒழுங்காக
சொல்வேன் என்றால் எனக்கு தெரிந்த அப்பா
உன் உருவம் மட்டுமே
தாயின் அன்பு பொழிந்தும்

தந்தை நிழல் படாமல்
வாடி நிற்கும்
'சுந்தூரியனாய் நான்''

வார்த்தைகளால் வளைக்க முடியாத
நினைவுகள் வந்து செல்ல
நெஞ்சுக்குளி நீர் நிறம்ப
கவிதைகளால் கூட அழ முடியாமல்
ஒவ்வொரு முறையும் உறைந்து போயிருக்கிறேன்
ஒவ்வொரு முறையும் உறைந்து
போயிருக்கிறேன்

இன்று,
கண்டக்கனவை கண்டவனிடம்
சொல்லால் சொல்ல முடியுமா
என எண்ணி,
சொல்லி,
மீண்டும் தோற்றுப்போயிருக்கிறேன்.

சுந்தரலிங்கம் சுபாஷ் சத்தியேந்திரா
13MT

*With Best Compliments*

*from*

# S. Pratheiban (12 MSE)
# S. Kreshaan (6D)

# கல்லூரியின் ஒரு பக்கம்

அறிவுப்பீடம் றோயல் கல்லூரியின்
அழகிய பூக்கள் நாம்
மொட்டுக்களாய் இருந்த எம் கல்லூரி
வாழ்க்கையை நினைத்தோம்
மகிழ்ந்தோம் கவலைப்பட்டோம்
எத்தனை எளிமையான காலமோ....

பதிகாய் எமக்கு பகுத்தறிவளித்து
படைத்தவன் அனுப்பியதே
புது புது தேடல்
புதுமைகள் பல புரியட்டும்
என்றன்றோ!!!

பல்கலைக்கழகங்கள்
கல்லூரிகள், கல்வி நிலையங்கள்
என புதிதோர் ஆரம்பத்திற்காய்
கடவுச்சீட்டு வாங்க
கருத்தாய் கல்வியை கற்கும்
சோதரரோ
ஞாலத்தை காப்பவன்
உமக்கு ஞானத்தை வழங்கட்டும்

கவலைகளை மீட்டிப்பார்க்க
கண்ணீர் தரும்
இன்பங்கள் மீட்டிப்பார்க்க
புத்துணர்ச்சி தரும்
உங்கள் அழகான
13 வருட பள்ளி வாழ்க்கையை
அசை போட்டுப் பாருங்கள்
இரண்டுமே தரும்

ஒன்றாய் இருந்த காலத்தில்
எத்தனை எத்தனை முரண்பாடுகள்
Senior, Junior என்றதுமே
பல பல புதிய பிரச்சினைகள்
கோபத்தின் முன் அகக்கண் மூடியிருக்க
அடித்துக் கொண்டது
ஞாபகமா?

ஏடுகள் விரித்து

எழுதிய வரிகளும்
எழுதாது சென்றதற்காய்
ஏச்சுக்கள் பட்டதும்
எழுதப்படாத விதிகளை
எதிர்த்துப் பொங்கியதையும்
எழுதிய விதிகளை
ஏற்காது விட்டதும்
ஏனோ மனதில் ஏங்கி கிடக்குது!
காலம் வரைந்திட்ட
கோலங்களை மனத்திரை
கறுப்பு வெள்ளையில் அன்றி
கலர்களில் காட்டுது
ஆனால் கண் மூடினால் தான்
அதைப் பார்க்கலாம்.

வானத்தைப் பார்த்தேன்
வல்லோனைப் புகழ்ந்தேன்
பூமியைப் பார்த்தேன்
பூரித்துப் போனேன்
கடல் நுரை அலை பார்த்தேன்
கவலை மறந்து போனேன்

சோதரே,
உங்களைப் பார்த்தேன்
அன்பின் ஆணிவேர் கண்டேன்
கண்டிப்பின் கிளை கண்டேன்
பாசத்தின் பழங்களைக் கண்டேன்
புதுமை பட்டு போனேன்

நிலவாய் தொடரும் நித்திரா வேதனை
உங்கள் இமைகளை இழுத்து
மூடும் முன்னே
இதோ நான் விடைபெறுகிறேன்
இவை கதைகளல்ல
என்றும் காலத்தால் அழியாத
நிஜங்களின் ஒரு தொகுப்பாய்
தொடர்கிறது எம் வாழ்வில்.......

# தாயின் பாதத்தினடியில் சுவர்க்கம்

பாசத்தின் பொக்கிசமாக
பொறுமையின் பிறப்பிடமாக
அன்பின் அரவணைப்பில்
ஆளுமை துலங்க வளர்த்தாய்

பரிவும் - பாசமும் பாரினில்
பண்பினையும் தின்ம வளர்த்து
பக்குவமாய் பரிந்துரைத்து
பண்பாளனாய் வளர்த்தாய்
பூமி சிறந்திட

பல கலை கற்பித்து கல்வியில்
மேதையாக பல துளை மேம்பட
மம்தையின்றி பணிவுடன் யார்க்கும்
மனமொத்து பகிர்ந்து வாழ- நல்
மனம் பெற வளர்த்திட்டாய்

போதைப் பொருள் தினந்தொட்டு
பாதை மாறிப் போய் விடாமல்
புத்தி பல சொல்லி - தினமும்
சத்தியம் காக்க வளர்த்திட்டாய்

நல்ல நண்பர்கள் சகவாசம்
என்றென்றும் கிட்டிட
வழிசெய்து வழங்கிட்டாய்
வல்லவனாய் நல்லவனாய்
நீதி நேர்மை புரிந்திட
நானிலம் போற்ற நீ வளர்த்தாய்

சாதி மத பேதமின்றி
சகலரையும் ஒன்றாய்
வாழும் வரை என்னாள்
வாழ்வோரை வாழ வைக்க
வழிகாட்டும் தலைவனாய்

உயர்த்தி விட்டாய் உலகமதில்

இத்தனையின் பயனாய் - இருக்க
இத்தரணியில் வளர்த்த போதும்
ஈன்ற பொழுதின் பெரு மகிழ்ச்சி
சான்றோனாய் வளர்த்த
என்னால் கொண்டாயே பூமிதனில்

வையகத்தில் வாழ் வாங்கு வாழ
வழிகாட்டிய என் அன்னையே
என் தாயாய் உன்னைப் பெற
என்ன தவம் செய்திட்டேன் - நான்
உன் காலடிதான் என் சுவர்க்கம்

*M. Assaf Faiz*
*12 M1*

# செட்டி நாட்டுப் பழமொழிகள்

வாழ்க்கையில் கண்ட அனுபவ உண்மைகளின் வெளிப்பாடே பழமொழிகள். அவைகள் மக்களின் வாழ்க்கையைப்படம் பிடித்துக்காட்டும் கருவிகள். சொல்லில் சுருக்கத்தையும், பொருளில் ஆழத்தையும், விளக்கத்தில் தெளிவையும் உடையன. இப்பழமொழிகள் பண்பாடு, பழக்கவழக்கம் சுற்றுச் சார்பு, தொழில் இவைகளை அடிப்படையாகக் கொண்டவை. இதை அறிவு வளர்ச்சியிலேயே பிறந்து சுருக்கம் தெளிவு, பொருத்தம், ஆகிய பண்புகளால் என்றும் இறவாமல் இவ்வுலகில் வாழ்கின்றன என்று அரிஸ்டோட்டில் கூறுவார்.

பழமொழிகள் மக்களது வாழ்வுடன் வாழ்வாகப் பின்னிப்பிணைந்து விட்டன. பழமொழி மூலம் மக்களது பண்பாட்டையும் நாகரிகத்தையும் அறிந்து கொள்ளலாம். இவைகளுக்கேற்ப ஒவ்வொரு வட்டாரத்திலும் வழங்கும் பழமொழிகள் என்று இவற்றைக் கூறலாம் அவ்வகையில் செட்டி நாட்டு வட்டாரப் பழமொழிகள் குறித்துச் சில கருத்துக்களை நோக்கவும்

### வட்டாரப்படி பழமொழிகள்

ஒரே கருத்தைத் தரும் பழமொழிகள் பல வட்டாரங்களில் அவை சொற்களில் வேறுபடுகின்றன. அந்தந்த வட்டாரச் சொற்களைப் பயன்படுத்தும் போது அவை அந்த வட்டாரப் பழமொழிகள் ஆகின்றன. அந்தச் சொற்களே அவ்வட்டாரத்தின் தனித்தன்மையை காட்டுகின்றன. அது போல செட்டிநாட்டுப் பகுதிக்கு மட்டுமே உரிய சொற்களால் வழங்கப்படும் பழமொழிகளிலும் வட்டாரத் தனித்தன்மை மிளிர்வதைச் சிறப்பாக காண முடிகின்றது.

பொட்டல், ஒய்யாரம், ஓக்கல், பனியாரம், நாளி, கெத்தா, ஒசத்தி, சமத்தி, காடிக் கஞ்சி, மராப்பு, வரையோடு போன்றவை வட்டாரச் சொற்களுக்குச் சில சான்றுகள் இவைகள் பழமொழிகளில் பயன்படுத்தப்பட்டவை.

### செட்டிநாடும் சிக்கனமும்

செட்டி நாட்டைச் சிக்கனத்தின் இருப்பிடம் என்றும் கூறுவர் இதற்குப் பல சான்றுகளைக் காட்டலாம் சிக்கனமாக வாழும் செட்டி நாட்டார் கஞ்சத்தனமாக வாழ்வதில்லை என்பதைத் திருமணச் செலவும், கோயில் திருப்பணிகளும், தெளிவாகக் காட்டும். கஞ்சத்தனம் என்றால் தேவைக்குக் கூடச் செலவு செய்யாமை. சிக்கனம் என்றால் தேவைக்கு மட்டுமே செலவு செய்து ஆடம்பரத்தைக்

கட்டுப்படுத்துவது, வீண் ஆடம்பரம் அவர்கள் என்றும் விரும்பாத ஒன்று இவர்கள் இறைபக்தியும் தர்மசிந்தனையும் கலையுணர்வும் தமிழ்ப்பற்றும் மிக்கவர்கள்.

குழந்தைகளுக்குச் சிக்கனமாக வாழக் கற்றுக் கொடுப்பவர்கள் எதையும் வீணாக்காமை அவர்களின் பழக்கங்களில் தலையாயது. எனவே அவர்களின் பழமொழியில் வீண் ஆடம்பரம் வேண்டாமே என்ற கருத்து குறிப்பிடத்தக்கதாய் அமைந்துள்ளது.

**வீண் ஆடம்பரம்**

வாழ்க்கையில் வீண் ஆடம்பரத்தை விரும்பி வாழ்ந்தவர்கள் கடன்காரர்களாய், கடமையைச் செய்ய முடியாதவர்களாய் வாழும் நிலையை அனுபவத்தில் கண்ட முன்னோர்கள் வீண் ஆடம்பரம் தேவையில்லை என்பதனை வலியுறுத்தும் பழமொழிகளைக் கூறினர் பழமொழிகள் கிண்டல் நிறைந்தனவாகவும், வறுமையின் வெளிப்பாடாகவும் எப்படி வாழவேண்டும் என்பதைச் சுட்டுவனவாகவும் இயல்பு வாழ்க்கை வாழ வழிகாட்டுவனவாகவும் அமைந்து சிறக்கின்றன.

குடிக்கிறது கூழாம் கொப்பளிக்கிறது பன்னீராம் என்பது பழமொழி தேவைக்குத் துன்பப்பட்டுக் கொண்டு ஆனால் வெளிப்பெருமைக்காக செயற்படும் தன்மையினை இது உணர்த்துகிறது. அடிப்படைத் தேவையை அறியாமல் செய்யும் ஆடம்பரத்தை வெளிப்படுத்துகிறது.

**வாழும் முறை**

இந்த மாதிரியான நிலைக்கு ஆளாகிவிடக்கூடாது என்றால் எப்படி வாழ வேண்டும் என்பதைக்காட்டுவதே "ஆற்றிலே கொட்டினாலும் அளந்து கொட்டணும்" என்ற பழமொழி ஆறு பெரிதாக இருக்கிறதே என்பதற்காக கொட்ட வேண்டியதில்லை. கொட்டுவதை அளந்தே கொட்ட வேண்டும். எதையும் எண்ணிச் செலவு செய்ய வேண்டும். யாருக்குக் கொடுத்தாலும் அளவாகக் கொடுக்க வேண்டும் அதாவது இன்றைக்கு இவ்வளவு தான் செலவு செய்ய வேண்டும் என்பதைத் திட்டமிட்டு செய்ய வேண்டும்.

**ஆளும் முறை**

குந்தித் தின்றால் குன்றும் மலரும் என்பது பொதுவான பழமொழி முன்னோர்கள் வைத்துவிட்டுப்போன சொத்துக்களை உழைத்துப் பெருக்காமல் உட்கார்ந்து தின்றால் அது குன்றளவு இருந்தாலும் குறைவு படும் இதைச் சிலப்பதிகாரம் வணிக

குலப் பிறப்பான கோவலன் வழிச்செம்மையாய்ச் சொல்லும்.
"சலம்புணர் கொள்கைக்கு சலதியொடு ஆடிக்குலம்தரு வான்பொருள் குன்றம் தெலைத்த இலம்பாடு நாணுத்தரும்" என்பது சிலப்பதிகாரம்

உழைக்காமல் கரைத்தால் குலத்தில் முன்னோர்கள் சொத்தைத் தான் இருந்து ஆளமுடியாமல் சிலம்பாட்டைப் பெற்றான். எனவே முன்னோர்கள் வைத்து ஆண்டவற்றை வீண் ஆடம்பரத்தால் அழித்து விடாமல் பின்னோர்கள் வைத்து ஆளவேண்டும் இதை முன்னோர்கள் ஆண்டதைப் பின்னோர்கள் ஆளனும் என்று செட்டிநாட்டுப் பழமொழி கூறும்.

சிறு குழந்தைகளுக்கு செட்டிநாட்டில் கூறும் பல அறிவுரைகளால் ஒன்று வீட்டில் இல்லாத பொருளைக் கேட்டுத் தொணக்காதே அல்லது வீட்டில் இல்லாத பொருளை கேட்டு அழாதே என்பது இது சிறுபிள்ளை முதல் மனதில் பதிய வைக்கப்படும் கருத்து இல்லாததைக் கேட்டு அழுதால் அழுகைக்குப் பயந்து கடன்பட்டாவது கொடுக்க வேண்டிய கட்டாயம் வரும் தேவையற்ற கடன் தொல்லை வந்து சேரும். எனவே கேட்டு அழுவதால் கொடுப்பவர்க்கும் துன்பமில்லை பொருளை தேவைக்குத்தானே கேட்க வேண்டுமே தவிர வீணாகக் கேட்பது தவறு. இருப்பதை இன்பமாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற பொருளில் இதே கருத்து வேறு விதமாக கூறப்படுவதும் உண்டு.

இட்ட போசனத்தை இன்பமாக சாப்பிட உள்ளதைக் கொண்டு திருப்தியடைந்தால் வாழ்வு இன்பமாக இருக்கும் இல்லாததற்கு ஏங்கி அழக்கூடாது என்பதை இப்பழமொழி தெளிவாகச் சாட்டுகிறது. வசதிக்குத் தக்கப்படி வாழவேண்டும் என்பதன் வெளிப்பாடே இப்பழமொழி.

## வெளிப்பகட்டு

ஒய்யாரக் கொண்டையாம் தாழம்பூவாம் உள்ளே இருக்குமாம் ஈறும் பேனும் என்ற பழமொழி வெளிப்பாட்டைக் காட்டுகிறது வெளியே தாழம்பூ மணக்க இருக்கும் கொண்டை தன்னகத்தே அழுக்குகளைக் கொண்டிருக்கும் வெளிப்பகட்டாகவும், ஆடம்பரமாகவும், பேச்சளவிலும் நிற்பவர்களை இப்பழமொழி சுட்டிக்காட்டும் மதிப்பு மசால்வடையை பிச்சுப்பார்த்தா ஊசி வடை என்ற பழமொழியும் இக்கருத்திலேயே வழங்குகின்றது.

## தகுதி வாழ்க்கை

பிறரைப் பார்த்து நல்ல பழக்க வழக்கங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் இயலாததை அவனைப்போல் செய்ய முயலக் கூடாது. அவனவன் தகுதிக்கேற்ப வாழும் வாழ்க்கையே நிம்மதியான வாழ்க்கை. செல்வந்தனின் வாழ்வு போல் இயலாதவனின் வாழ்வு அமைவதில்லை இயன்றவன் செயல்களைப் போல் இயலாதவன் செயற்பட முடியாது. தோற்றத்தில் ஒரே மாதிரியாக இருந்தாலும் நல்ல பாம்பைப் போல் மண்புழு ஆட முடியாது. இதை நல்ல பாம்பு ஆடுதுன்னு நூக்களாம் பூச்சி ஆட முடியுமா என்று கூறுவர் (நாக்களாம்பூச்சி மண்புழு)

## முடிவுரை

''பழமொழி பொய்யின்னாப் பழயதும் சுடும்'' என்ற பழமொழி. மக்களுக்குப் பழமொழியின் மீதுள்ள நம்பிக்கையைக் காட்டுகிறது. சமுதாயத்தில், இதனைச் செய், இதனைச் செய்யாதே எனக் கட்டளையிடவும் பழமொழியைப் பயன்படுத்துகின்றனர். மக்களின் வாழ்வில் அனுபவித்த சாரம் என்பதால் மக்களிடையே அதற்கொரு செல்வாக்கு உண்டு. அம்முறையில் செட்டியார்கள் அழைக்கப்பெறும். தன வணிகர்களாகிய நகரத்தார்கள் எதையும் எண்ணி திட்டமிட்டு செய்பவர்கள்.

''எண்ணிச் செய்கிறவன் செட்டி எண்ணாமல் செய்கிறவன் மட்டி'' என்ற பழமொழி அவர்களின் திட்டமிட்டுச் செயலாற்றும் திறனை வெளிப்படுத்தும் ''காசுக்கு எட்டுச்சட்டி வாங்கு'' சட்டி ஒன்று எட்டுக்காசுன்ன விற்றாலும் செட்டிப்பிள்ளை ஒன்றுக்கு ஈடாகுமா என்ற வழக்கு செட்டியார்களின் கெட்டிக்கரத்தனத்திற்குச் சான்றாக விளங்குகின்றது.

நன்றி

*லா. நிதாஸ் அஹமட்*
*13MT*

# செம்மைமிகு தமிழ்மொழி

தமிழ்மொழி எம் தாய் மொழி. எம்மைப் பெற்றெடுத்த எம் தாய் எம்மை தாலாட்டியது கூட தமிழில் தான். எம்மிடம் உறவாடியதும் இம்மொழியில் தான். நாம் தாய்மொழியிலேயே சிந்திக்கின்றோம். தமிழிலேயே பேசுகின்றோம். எனவே அதன் செழுமை பற்றியும் பழமை, புதுமை, மேன்மை பற்றியும் அறிவது மகிழ்ச்சிதான்.

எண்டிசையும் புகழ் மணக்கும் எழிற்றமிழ்
கண்டோர் விரும்பும் கன்னித்தமிழ்
என்று அகிலமெல்லாம் புகழும் எம் தமிழ் அன்னை மொழி இன்று உலகம் போற்றும் செம்மொழியாய் பெருமை பெறுகிறாள் என்று நினைக்கும் போது உள்ளமெல்லாம் புளகாங்கிதம் அடைகிறது.

இந்த உலகத்திலே வழங்கிவரும் ஆயிரமாயிரம் மொழிகளுள் தொன்மையானது தமிழ் அதன் அருமையும் பெருமையும் சொல்லிலடங்கா சிறப்புடையது. இலக்கண இலக்கியங்கள் கொட்டிக்கிடக்கும் தமிழ்மொழி தெவிட்டாதது. அது அமிர்த்ததிற்கு ஈடானது. தமிழின் சுவையை பாரதிதாசன் "தமிழிற்கும் அமுதென்று பெயர் அந்த தமிழின்பத்தமிழ் என் உயிருக்கு நேர்" என்று எழுச்சியோடு பாடுகிறான் பாரதிதாசன் தன் தாய்மொழியாம் அருமைத்தமிழை உயிர் என்றே கூறிவிடகிறான்.

பொதுவாக மனிதனின் சிந்தனை வளர்ச்சிக்கும் சிறப்பான வாழ்க்கைக்கும் அவசியமானது அவன் பேசும் மொழிதான். மக்களின் பேச்சும் மூச்சும் வீச்சும் அவன் பேசும் மொழியில் தான் உள்ளது. எமது சான்றோர் இத்தமிழை பாராட்டி சீராட்டி பாதுகாத்து வந்துள்ளனர். தமிழ் இயல் இசை நாடகம் என முத்தமிழாக பிரிகிறது. அதனில் முதலாவதாக இயலை பார்ப்போமானால் தமிழ் இலக்கியங்களில் பழமை வாய்நதவை சங்ககால இலக்கியங்கள் இவற்றில் பல கால நீரோட்டங்களில் அழிந்து போய்விட்டன எனச் சொல்லப்படுகிறது எஞ்சியவைதான் எமக்கு கிடைக்கும் எட்டுத்தொகை. பத்துப்பாட்டு, பதினெட்டுப்பாட்டு போன்றவை. இவை பழந்தமிழ் மக்களின் வீர வாழ்க்கையை கூறுபவை. இவற்றுள் புறநானூறு தரும் விடயங்கள் உயிரை உடையனவாகும். தமிழன்னைக்கு அணிசெய்யும் ஐம்பெரும் காப்பியங்கள், ஓரே.... கீழ் உலகை கொண்டு வந்த திருக்குறள். இலக்கண நூலாம் தொல்காப்பியம், அகத்தியம், வீரசொழியம் போன்றவை தமிழுக்கு பணிசெய்த நூல்கள். உணர்ச்சியை வெளிப்படுத்தும் பாடல்களும் உவகை தரும் படைப்புக்களும் தமிழ் அன்னைக்கு அணிகலன்களாயின அவையெல்லாம் தமிழரின் விழுமிய பண்புகளை படம்பிடித்து காட்டுகிறது. எமக்கு இவற்றை வழங்கிய சான்றோர் தமிழ்மக்களின் வாழிவியலை. வாழ்வியல் விசித்திரங்களை எமக்கு காட்டியுள்ளனர் என்றால் மிகையாகாது.

தமிழ்மொழி வேறு சமயத்தோராலும் அரவணைக்கப்பட்ட மொழி, சைவர், வைஷ்ணவர். சமணர், பௌத்தர், இஸ்லாமியர், கிறிஸ்தவர், ஆகியோர் தமிழ்மொழி மூலம் எடுத்துக் கூறியுள்ளனர். வீரமாமுனிவர், தேம்பாவணி போன்றவை அவற்றுட் சிலவாகும்.

ஏடுகள் ஓலைச் சுவடிகளில் இருந்த எமது தமிழ்மொழி நவீன யுகத்தால் புதியமே-தார் பரிமாணம் பெற்று பரிமளிப்பதை பார்க்கிறோம். என்ன விந்தை! முத்தமிழால் மிளிர்ந்தவர் இன்று அறிவியற் தமிழால் மிளிர்கிறாள்.

தமிழ்மொழியை பிழையறப் பேசவும், எழுதவும் நாம் முயல வேண்டும் தமிழின் பழம்பெரும் இலக்கண இலக்கியங்களையும் அறிய வேண்டும் அவற்றை கற்று அதன்படி ஒழுகவும் வேண்டும் எது எப்படியாயினும் உயிரினும் இனிய தமிழைக் கன்னித் தமிழாய் காண்பதில் தான் எமக்கு எத்தனை இறுமாப்பு.

''பக்தியின் மொழி இரக்கத்தின் மொழி''

*பா. ஹரிஷ்*
*8 D*

# அறியாமை மிகுந்த ஆங்கிலோ இந்தியஉகள்

ஆயிரம் ஆயிரம் இந்திய இளைஞர்களை எழுச்சிகொள்ளச் செய்தவர் விவேகானந்தர் என்றால் மிகையாகாது. அத்தகைய பெருமை வாய்ந்த விவேகானந்தர் வடநாட்டிலே புகைவண்டியிற் சுற்றுப் பயணம் செய்து கொண்டிருந்தார். ஒரு நாள் பயணஞ் செய்து கொண்டிருக்கும் போது, விவேகானந்த அடிகளின் தோற்றம் அவ் ஆங்கிலோ இந்தியர்களின் உள்ளத்தைக் கவர்ந்தது. விவேகானந்த அடிகளுக்கு ஆங்கிலம் தெரியாதென்று, அவ்வாங்கிலோ இந்தியர்கள் எண்ணிக்கொண்டனர். அவர்கள் சும்மாயிராமல், விவேகானந்தரைச் சுட்டிக்காட்டி, ''சோம்பேறி'' என்றும் ''தடியர்'' என்றும் ''உலகை ஏமாற்றுபவர்'' என்றும் தம் மனம் போனவாறு பேசிக்கொண்டனர்; விவேகானந்தர் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு எதுவும் பேசாது அடக்கமாக இருந்தார். ஒரு புகையிரத நிலையத்தில் வண்டி நின்ற போது யாதோ பேசவேண்டியதாக ஏற்பட்டது; அப்பொழுது ஆங்கிலத்திற் பேசினார். விவேகானந்தர் ஆங்கிலம் பேசியதைக் கேட்டு அவ்வாங்கிலோ இந்தியர்கள் திடுக்கிட்டனர்.

பின் அவர்கள் விவேகானந்தரைப் பார்த்து, ''நாங்கள் உங்களைப் பலவாறு இகழ்ந்துரைத்தமைக்குத் தாங்கள் ஏன் ஒன்றுமே பதில் கூறவில்லை?'' என்று வினவினர். அதற்கு விவேகானந்தர் ''நான் முட்டாள்களைப் பார்ப்பது முதற்தடவையன்று; இதற்கு முன்னும் பல பேச்சுக்களைப் பொருட்படுத்திப் பதில் கூறுவது இல்லை'' என்று பதிலளித்தார்.

அடிகளின் பதிலைக்கேட்ட ஆங்கிலோ இந்தியர்கள் மிகுந்த சீற்றங் கொண்டனராயினும் தவறு தங்களிடத்தே இருப்பதால், மேற்கொண்டு யாதும் பேசுவதற்கும் வழியில்லாமல் நாணிப் பேசாமலிருந்தனர். பக்கத்தில் இருந்தவர்கள் அந்த ஆங்கிலோ இந்தியர்கள் நாவடக்கம் இல்லாமற் பேசிச் சொற்குற்றத்திலே அகப்பட்டு இழிவடைந்தமையைப் பார்த்து நகையாடினர். ஒவ்வொருவரும் நாவடக்கத்தைக் கொள்ளாவிடின் இவ்வாறான இழிவு நிலையே ஏற்படும். பொய்யாமொழிப் புலவரான திருவள்ளுவரும் தம் நூலில் இதைப் பற்றிக் கூறியுள்ளார்.

''யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்
சோகப்பார் சொல்லிழுக்குப் பட்டு''

- அடக்கமுடைமை, செய் 7

ச. ருக்ஸாந்
8C

*With Best Compliments*

*from*

**max win TEX (Pvt) Ltd.**

No. 45A, Keyzer Street, Colombo 11
Tel: 2399179 Fax: 2399178
Email : maxwintex@gmail.com

*Best Wishes*

*from*

**mod spot electronics**
PRIVATE LIMITED

*Dealers in TV, Video, Hi-FI,*
*Home Appliances,*
*Professional Audio-Viedo Equipment*
*& Car Steareos*

46, Keyzer Street,
Colombo 11, Sri Lanka.
Tel: +94 112328873, 0777 271171
Fax: +94 112332871
thasen@sltnet.lk

*Best Wishes*


*from*

**Aravinds**

**Importers & Wholesalers in**
**Readymade Garments**
**& Garment Display Articles**

21, Keyzer Street, Colombo 11, Sri Lanka.
Tel: 94-11-2544874, 94-11-2433412
Fax : 94-11-2384031

*With Best Compliments from*



**New Star Line**

**Dealers in Cellular Phones,**
**Spare Parts, Leather Case, Transparent Case,**
**Battery Pack, Saver Charger, Travel Charger**
**and H/F Car Kit Etc**

No. 191, Olcott Mawatha,
Colombo 11, Sri Lanka.
(1st Shop in left side of 2nd Cross St.)
Tel: 0722 242890, 0777 884037, 0727 242890

Dialog GSM tigo Mobitel kit HUTCH

## ஆயகலைகள் 64

01. வாய்ப்பாட்டு
02. நடனம்
03. இசைக்கருவிகளின் இசையோடு சேர்ந்து ஆடிப்பாடும் பயிற்சி
04. இசைக்கருவிகளை இசைக்கும் பயிற்சி
05. சித்திரம் வரைதல்
06. குதிரை ஏற்றம்
07. தெய்வச் சிலைகளுக்கு மலர்களாலும் அரிசியாலும் அலங்காரம் செய்தல்
08. மலர்களைக் கொண்டு படுக்கை தயாரித்தல்
09. பல், நகம், கேசம், துணிகள் ஆகியவற்றுக்கு வண்ணப்பூச்சு பூசுதல்
10. கண்ணாடி அலங்காரம்
11. ஜலதரங்கம்
12. படுக்கை விரிக்கவும், படுப்பதற்கும் வசதியான விரிப்புகள், திண்டுகள் போடுதல்
13. பச்சை குத்தி விடுதல்
14. வீட்டை ஒழுங்குபடுத்தி விடுதல்
15. மாலை தொடுத்தல், மணிகளை கொண்டு அலங்காரம் செய்தல்
16. கூந்தல் முடித்தல், கூந்தல் அலங்காரம் செய்தல்
17. நாடக நடிப்புப் பயிற்சி
18. காதணிகள் செய்யும் கலை
19. ஜால வித்தைகளின் பயிற்சி
20. அழகான ஆடைகள், நகைகள் அணிந்து அலங்கரித்து கொள்ளுதல்
21. வாசனைப் பொருட்களை தயாரித்தல்
22. கைகளை பயன்படுத்தித் தந்திர வேலைகளை செய்தல்
23. சமையல் கலை
24. சுவையான பானங்களை தயாரித்தல்
25. தையல் வேலை, பின்னல் வேலை
26. பஞ்சு, நூல் ஆகியவற்றை கொண்டு பறவை, மலர், பூங்கொத்து போன்றவற்றை செய்தல்.
27. விடுகதைகளை விடுவித்தல்
28. கவிதை நடையில் கேட்ட கேள்விகளுக்கு கவிதையிலேயே பதில் அளித்தல்

29. மற்றவர்கள் போல் அபிநயத்துக் காட்டுதல்
30. சந்த அமைப்பு கெடாது கவிதை படைத்தல்
31. வில், வாள், அம்பு போன்றவற்றை பயன்படுத்துவதில் தேர்ச்சி
32. வார்த்தைகளின் அமைப்பை மாற்றிப் பேசுதல், உச்சரிக்க முடியாத சொற்தொடரை அறிந்திருத்தல்.
33. நடந்த காரியங்களுக்குக் காரணகாரியங்களோடு விளக்கம் அளித்தல்
34. தச்சு வேலை
35. கட்டிடக்கலை
36. நவரத்தினக்கல், தங்கம், வெள்ளி ஆகியவற்றை பரீட்சித்தும் பார்க்கும் திறமை.
37. நகைகள், வைரங்களுக்கு பட்டை தீட்டுதல்
38. வேதியியல், உலோக இயல் பற்றிய அறிவு
39. வானியல், கோள்கள், நட்சத்திரங்கள் பற்றிய அறிவு
40. தோட்ட வேலை, செடி, கொடிகளை பராமரித்து வளர்த்தல்
41. கோழி, ஆடு, கவ்தாரி போன்றவற்றைச் சண்டைக்குப் பழக்குதல்
42. கிளிகளுக்குப் பேசக் கற்றுக் கொடுத்தல்
43. ஒப்பனைக்கலை
44. சங்கீத வார்த்தைகளில் பயிற்சி
45. அடுத்தவர்களுக்கு அறியாமல், பரியாமல் வார்த்தைகளின் அமைப்பை மாற்றி போட்டு பேசும் பயற்சி
46. பன்மொழி பயிற்சி, தாய்மொழியில் தேர்ச்சி
47. வண்டிகளைக் கட்டும் கலை
48. மந்திர சக்கரங்களை எழுதி உரு ஏற்றி தாயத்து கட்டிவிடுதல்
49. அவதானம் செய்யும் பயிற்சி
50. கவிதை எழுதுதல்
51. தத்துவ நூல்களில் தேர்ச்சி
52. கவிதையின் அமைப்பே மாற்றியும், மறைத்தும் சொல்லும் திறமை
53. ஒரு பொருளை மற்றொரு பொருள் போல தோன்றும்படி செய்தல்
54. பல வகையான சூதாட்டங்கள்
55. சமையல் கலை, மருந்தும்
56. நீச்சல் விளையாட்டுக்களில் தேர்ச்சி

57. சமூகத்தில் பழகும் முறையை அறிந்திருத்தல்
58. போர்கலை, போர் வியூகம், ஆயதங்களை பயன்படுத்தல்
59. உடற்பயிற்சியில் தேர்ச்சி
60. சாமுத்திரிகள் லட்சணத்தை கொண்டு ஆட்களின் தன்மையை புரிந்து கொள்ளும் திறமை.
61. ஆருடம் சொல்லுதல்
62. விநோதக் கணக்குப் போடுதல்
63. செயற்கை மலர்களை தயாரித்தல்
64. களிமண் பொம்மைகள் செய்தல், ஆகியவை.

*T. Amirthan*
*12MT*

*With Best Compliments*

*from*

DCC

**Dehiwala Curtain Centre**

Exclusive Curtain Fabrics
Undertaken for tailoring


145B, Galle Road, Dehiwala, Sri Lanka
Tel: 2735121 Fax: 94-11-2712980

*Best Wishes from*

**VENTURE**
METALS

GENERAL HARDWARE MERCHANTS

No. 442, Old Moor Street,
Colombo 12
Tel: 011 2332577 / 2386254



*Best Wishes*

*from*

**MAYURAN TRAVELS**

AC/ NON AC

VAN & CANTER FOR HIRE 24 HOURS SERVICE

No. 41, 5/4, 42nd Lane, Colombo 6
Mobile: 077 6398840 / 0777283688/0112360742



*Best Wishes*

*from*

M.Y.A. Ansab Shimar

Grade 4C

&

Simak 6-C

# கல்வியும் மேம்பாடும்

''கற்க கசடற கற்பவை கற்றபின் நிற்க
அதற்குத் தக''

கற்றவழி ஒழுகுவதன் மூலமே சமூக மேம்பாடு ஏற்பட முடியும். நல்லவற்றைத் தெரிந்து நன்றல்லாதவற்றை நீக்கி வாழ்வதன் மூலம் சமூகம் நல்ல வழியிற் செல்லும். எனவே கற்றலின் நோக்கமே, அற வாழ்வை மேற்கொள்வதற்காகவே.

''கண்ணுடையர் என்போர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையோர் கல்லாதவர்''

வள்ளுவர் பெருமான் இவ்வாக்கியத்தில் கூறுவது யாதெனில், கற்றவர்கள் முகத்தினில் இருப்பது தான் கண்கள். ஏனை-யோர் முகத்தில் இருப்பவை புண்கள் என்பதாகும். ஏனெனில் கண்ணுள்ளவனால் மட்டுமே தடுமாற்றமில்லாமல் சரியான பாதையில் செல்ல முடியும். அதே போல் கற்றவர்களால் மட்டுமே சரியான வழியில் நடக்க முடியும். அதனால் தான் அவர்கள் சமூகத்திற்கும் வழிகாட்டிகளாகத் திகழ்கிறார்கள்.

கற்றறிந்தோர் நீதியை, நேர்மையை, உண்மையை ஒழுக்கத்தைப் பின்பற்றுவதன் மூலம், இயன்றவரை சமூக மேம்பாட்டிற்கு உறுதுணையாக இருக்கிறார்கள். கற்றவர்களின் தொகை அதிகரித்துச் செல்லும் போது சமூக வளர்ச்சியிலும் உயர்வும், அதிகரிப்பும் ஏற்படும். சமூக மேம்பாடு எனும் போது அது தீமைகளற்ற, சமூகச்சீர்கேடுகளற்ற, ஒரு சமூக வளர்ச்சியைக் குறிக்கும். வாழும் சமூகம் கல்வியின் மூலம் தம்மைச் சீர்ப்படுத்திக் கொண்டு வாழ முற்படும் போது, சமூகம் தானாகவே உயர்வடையும்.

''எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு
அவ்வது உறைவது அறிவு''

உலகமானது எவ்வெவ் வகையில் விளக்கின்றதோ, அதை எல்லாம் அறிந்து அவ்வவ் வகையில் தாமும் பொருந்தி விளங்கச் செய்வது அறிவு ஆகும். எனவே அறிவுடையோரால் சமூகம் மேம்பாட அமைகிறது என்பது உலகம் கூறும் உண்மையாகும்.

''விலங்கோடு மக்கள் அனைவர் இலங்கு நூல்
கற்றோரோ டேனையவர்''

என்பது வள்ளுவர் வாக்கு. மனிதன் விலங்காக வாழக்கூடாது. அவன் மனிதனாக, மனிதப் பண்புள்ளவனாக வாழ வேண்டும். அதற்கு கல்வியே அச்சாணி. ஒரு சமுதாயத்தில் ஒரு பகுதியினர் கல்வியறிவு படைத்த மனிதராகவும் மற்றப் பகுதியினர் கல்வியறிவில்லாத மக்களாகவும் வாழ நேர்ந்தால் அந்தச் சமூதாயம் சீர்பெற முடியாது. முழுச்சமுதாயத்திற்குமே அது பெரும் இழுக்காகும்.

கல்வியானது மனித இனத்திற்கு மாண்பு தரும் மருந்து போன்றது. சகலரையும் சான்றோராக்கும் சஞ்சீவி போன்றது. ஒவ்வொருவரையும் உணர வைக்கும் ஒளிவிளக்கு போன்றது. பொல்லாரை நல்லாராக்கும் பொன்னருவி போன்றது. அடிமைத் தளை அறுத்து ஆள வைக்கும் ஆற்றல் கொண்டது.

''கல்வி கரையில் கற்பவர் நாள் சில
மெல்ல நினைக்கிற் பிணிபல ....''

என்று இடித்துரைக்கிறது. நாலடியார் வாழும் நாளில் கரையற்ற கல்வியின் சிறிய அளவையேனும் கற்றிட நாம் முயல வேண்டும். கல்வியால் மட்டுமே நாமும் சமூகமும் முன்னேற, உயர்வு பெற வழியுண்டு என்பதை இதயத்திற்கு கொண்டு கல்வியை சீராக கற்று சமூகத்தை உயர்வு பெறச் செய்வோமாக!

*B. Ashwinpragash*
*8D*

# பாரதியின் கவிதயம்! தேசப்பற்றும்!

''ஆதி சிவன் பெற்றுவிட்டான் - என்னை
ஆரிய மைந்தன் அகத்தியன் என்றோர்
வேதியன் கண்டு மகிழ்ந்தே - நிறை
மேவும் இலக்கணஞ் செய்து கொடுத்தான்!!!

எனப்பாடிய தேசக்கவிஞன் பாரதியின் வரிகள் அவனையே சாடி நிற்கின்றன. காரணம் எங்குமிலாத் தைரியத்தை எம்மவர் முன் காட்டி உறங்கிய மனிதங்களை தட்டியெழுப்பிய கவிஞனவன் 1882 டிசம்பர் 10 வரை தனது தாயின் வயிற்றில் உறங்கியிருந்த அந்த உதய சூரியன் தனது உதயத்திற்காய் காத்திருந்து 1882 டிசம்பர் 11 அன்று நெல்லையில் எட்டயபுரத்தில் சின்னச்சாமி ஐயருக்கும் இலக்குமி அம்மாளுக்கு மகனாக அந்த எட்டயபுர செவ்வானில் உதயமாயிற்று. அந்த உதயசூரியனின் இயற்பெயர் சுப்பையா எனப்படும் சுப்பிரமணியம்.

அப்படிப்பட்ட உதய சூரியனாகிய பாரதியின் கவிதைகள் கவிநயத்தின் சாரலும் தேசப்பற்றின் தூறலும் காணப்படும். அதற்கு அழகான உதாரணம்

''என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம்?
என்று மடியும் இந்த அடிமையின் மோகம்?
என்றெமதன்னை கை விலங்குகள் போகும்
என்றெம தின்னல்கள் தீர்ந்து பொய்யாகும்?''

என்ற வரிகளில் அழகாக இந்தியாவின் இன்னல் நிலையை எடுத்துக் கூறினான். இந்தியாவின் விடுதலைக்காக போராடிய காந்தியின் சேவையை விட பாரதியின் சேவை அளப்பெரியது. பாரத ஜனங்களும் தமிழ் மக்களும் பறங்கியர் கீழ் அடிமைப்பட்டு சிக்கித் தவித்த போது பேதைகளாய் திரிந்த போது அவர்களை மேதகளாக்கியவை பாரதியின் கவி வரிகளே என்றால் நிச்சயம் ஈடாகாது அதை அவன் அழகாய் பின்வருமாறு கூறுகிறான்.

''நெஞ்சு பொறுக்குதில்லை - இந்த
நிலைகெட்ட மனிதரை நினைத்துவிட்டால்
அஞ்சியஞ்சிச் சாவார் - இவர்
அஞ்சாத பொருளில்லை அவனியிலே''

என்கிற பொழுது அவன்தன் நெஞ்சிலுள்ள வலியை தன் கவிதைகள் மூலம் வெளிப்படுத்தி உள்ளான். என்பது தான் உண்மை இந்த கவிகளே பலரை பலரின் தைரியத்தை தட்டி எழுப்பியது.

தேசக் கவிஞன் பாரதி தான் ஒரு தமிழன் என்பதை எடுத்துரைக்கவும் தவறவில்லை அவனுடைய தமிழ்பற்றிக் கூறும் கவிதைகளிலும் கூட ஏதாவது ஓர் சமூகச்செய்தி கூறுகின்றான். அவ்வாறு கூறிய வரிகள் சில

''ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
வாழ்க்கின்றோம் ஒருசொற் கேளீர்
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்''

தமிழர்கள் எல்லோரும் தமிழ் தெரியாதவராய், தமிழைக் கேட்டிராதவராய், தமிழர்களை கண்டிராதவர்களாய் வாழுகின்ற நிலையே இன்று இருக்கின்றது. அது அற்றுப்போய் தமிழன் ஓர் தமிழனாய் வாழ தமிழ் முழக்கங்களை உலகெல்லாம் பறைசாற்றுங்கள் என்கிறான்; இதில் எந்தத்தவறும் இல்லை. ஏன் என்று கேட்டால், அக்கால தமிழன் எப்படி இருந்தானோ? அதைவிட மோதமாய் இன்று தமிழன் இருக்கிறான். அது சுற்றுப் போக வேண்டுமெனில் இது நிச்சயம் அவசியம்.

பாரதியின் தேசப்பற்றைப் பார்த்தீர்கள், தமிழ்ப்பற்றைப் பார்த்தீர்கள் அடுத்த பாரதி இந்தியப் பெண்கள் மீது வைத்திருந்த அக்கறை எத்தகையது? எனப் பாருங்கள்.

''ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணி யிருந்தவர் மாய்ந்துவிட்டார்
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப் போமென்ற
விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார்''

பெண்கள் வீட்டிலேயே பூட்டி வைத்து கல்வி கற்க விடாது செய்த அந்த வினோதர்கள் அனைவரும் மாய்ந்து விட்டனர் என பாரதி மகிழ்ச்சிப் பெருவெள்ளத்தில் எழுதிய வரிகள் இவை.

பாரதியின் சிறப்பான கவிதைகளுள் முக்கிய இடம் பெறுவது ''பாஞ்சாலி சபதம்'' இது மஹாபாரதக் கதையின் ஓர் முக்கிய அம்சமாகும். அந்தப் பகுதியில் பாஞ்சாலி மன்றில் துயிலுரித்த பொழுது நடந்த விடயங்கள் என்ன....?

''ஆடை குலைவுற்று நிற்கிறாள்! - அவள்
ஆவென்றழுது துடிக்கிறாள் - வெறும்
மாடு நிகர்த்த துச்சாதனன் - அவள்
மைக்குழல் பற்றி இழுக்கிறான்''

என்பதே அந்நேரத்தில் சபையில் இடம்பெற்றது. இதற்காய் வீமன் துடித்தென அவையில் கண்ணன் அவளின் மானம் காக்கிறான். பின் விஜயன் வீமனை பின்வருமாறு சமாதானம் செய்கிறான்.

''தருமத்தின் வாழ்வதனைச் சூதுகவ்வும்;
தருமம் மறுபடி வெல்லும் எனுமியற்கை
மருமத்தை தம்மாலே உலகங்கற்றும்
வழிதேடி விதி இந்தச் செய்கை செய்தான்
மருமத்தை மென்மேலுங் காண்போம்; இன்று
கட்டுண்டோம் பொறுத்திருப்போம் காலம்மாகும்
தருமத்தை அப்போது வெல்லக் காண்போம்
தனு உண்டு காண்டீபம் அதன்பேர் என்றான்''

என பாஞ்சாலி சபதம் விறுவிறுப்பாய் செல்கின்றது. அவ்வாறு சென்று இறுதியில் பாஞ்சாலி துச்சாதனன் உயிர் துறக்கும் வரை தன் முடியை சீவி முடியமோட்டேன் எனச் சபதமிடுவாள், அத்துடன் முற்றும்.

அடுத்து மிஞ்சி இருப்பது பாரதியின் கவிநயப் பாடல்கள் அவற்றுள் புதுப்பாடுக்கள், கண்ணன் பாட்டு, குயில்பாட்டு மற்றும் தனிப்பாடல் என்பன அடங்கும். அவற்றில் ஓர் சிறந்த கவிநயமுள்ள அர்த்தமுள்ள கவிதான்.

''இன்னறும் கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண்சு னைகளி யற்றல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதிநாயிரம் நாட்டல்
பின்ன ருள்ளத தருமங்கள் யாவும்
பெயர்வி ளங்கிழ ளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியங்கோடி
ஆங்கோ பரேழைக்கெழுத்தறி வித்தல்''

இது இதன் மூலமோ கல்வியின் சிறப்பை அறிய முடிகிறது. அதுமட்டுமன்றி ஒருவனுக்கு கல்வித்தானம் செய்வதால் ஏற்படும் நன்மைகளும் சிறப்பாகவே காட்டப்படுகின்றன.

கண்ணம்மா என் காதலி என்பதுவும் பாரதியின் ஓர் கவிதையின் ஒரு பாகம் தனது கனவு தேவதையை பாரதி வர்ணிக்கும் விதமும் அந்தப் பாவமும் சொற்கள் பகிரப்பட்ட விதமும் அற்புதமாய் இருக்கும். கண் சிமிட்டும் அந்த விழிச்சுடர்களையே அவன் சூரிய சந்திரராய் கொண்டு விட்டான். இரு சுடர்களே இரு கண்களாய் இருக்கும் அந்த அழகு தேவதையின் மிகுதி அழகையும் பார்த்து விடுவோம்.

‘‘சுட்டும் விழிச்சுடர்தான்; கண்ணம்மா
சூரிய சந்திரரோ?
வட்டக் கரிய விழி! - கண்ணம்மா
வானக் கருமை கொல்லோ?’’

எனக் கண்ணின் அழகை வர்ணித்தவன் அவன் சிரிப்பையும் குரலையும் எவ்வாறு வர்ணித்தான் என்பதையும் பாருங்கள்.

‘‘சோலை மலரொளியோ - எனது
சுந்தரப்புன்னகைதான்?
நீலக் கடலலையே - உனது
நெஞ்சிலலைகளே - உனது
குரலினிமையடீ!’’

இவ்வாறாக கண்ணம்மாவை வர்ணித்து திரிந்தவனிற்கு மனைவி செல்லம்மா! தனது கனவு தேவதையின் சாயல்கள் அவளில் இருந்ததோ? இல்லையோ? பாரதியின் மனது அவளிடம் இருந்தது. அதனால் இவர்கள் தமது இல்லறத்தை நல்லறமாக கொண்டு சென்றனர்.

இப்படியாக தனது வாழ்வில் நடந்த அத்தனை விடயங்களையும் கவிதையாயும் தான் கண்ட பிரச்சினைகளை பாடல்களாகவும் தரித்து இந்தியர்களிடம் பாரத வீரனாய் வலம் வந்த பாரதி என்ற எட்டயபுர சூரியன் நிகரிலாப் புகழோடு 1921 செப்டெம்பர் 12 அதிகாலை 1.30 அளவில் வயிற்றுக் கடுப்பு நோயினால் தனது தன்நிகரிலா ராஜ்ஜியத்தில் இருந்து மறைந்தது. இந்தச் சூரியனின் 91வது நினைவுப் பெருநாள் இன்றைக்கு ஒரு மாதத்திற்கு முன் அதாவது 2012 செப்டம்பர் 12ம் திகதி அன்று அனுஷ்டிக்கப்பட்டது.

பாரதி ஓர் புதுமைக் கவிஞன். அவன் தன் புகழ் என்றாயினும் நிலைத்திருக்கும் தமிழ்கூறும் நல்லுலகம் வாழும் வரை பாரதியும் எம்முடன் இருப்பான்.

‘‘எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே - அதன்
முன்னையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே - இதை
வந்தனை கூறி மனதிலிருத்தி
வாயுற வாழ்த்தேனோ?’’

*சி. சஜிஷ்ணவன்*
*9C*

# ஒரு சிறு பார்வை.....

ஆயிரம் மைல்களுக்கு
அப்பால் நானிருந்தாலும்
அன்பே .....
உன் அசைவுகளைக் கூட
நானறிவேன் ....

கீழ்த்திசைச் சூரியனைப் பார்த்து
ரோஜாக்கள் கண்சிமிட்டும் வேளை
தெரிந்து கொள்வேன்,
நீ துயிலெழுந்தாயென்று ...!

வண்ண மலர்களின்
மென்மைசேர் இதழ்களிலிருந்து
அதிகாலைப் பனித்துளியொன்று
வழிந்து விடும் போது
அறிந்திடுவேன் ...
நீ குளித்துவிட்டாயென்று!

காரிருளை வென்று
காலையின் கதிர்கள்
தோட்டத்தை நிறமூட்டும் நேரம்
உணர்ந்து கொள்வேன்
நீ ஒப்பனைகள் முடித்தாயென்று!

பஞ்சவர்ணக் கிளிகளும்
பாடித்திரியும் சிட்டுக்களும்
சேலையில் நின்று
அவசரமாய் புறப்படும் தருணம்
தெரிந்து விடும்,
நீ வீதிக்கு வந்துவிட்டாயென்று!

ஆம் ...
என் உயிரே
உன் சேதி சொல்ல
இயற்கைகூட தந்தியடிக்கிறது ...!

என் பதினாறு வயதை
திருடிய பெண்ணே!
பவித்திரமான உன் பார்வையொன்றிலே - எனக்கென
பத்தாயிரம் விட்டமின்கள் பதிந்துள்ளன!

உன் ஊரில் மட்டும் தான்
அமாவாசை இரவன்று கூட
நிலவொளிக்குக் குறைவில்லை!

நீ மட்டும் டைட்டானிக்கில்
பயணித்திருந்தால்
அந்த பனிப்பாறையை உருக்கி
பலபேரை காத்திருப்பாய்!

உன் முன்பிறப்பை
பார்த்து தான்
டாலின்ஸி 'மோனாலிஸா' வைத்
தீட்டினாரோ?

உலக அழகிகள் கூட
உனைக் காணுற்றால்
சற்று பதறியே போவார்கள்!
அந்நிலையில்
அப்பாவி நான் என் செய்வேன்?

'இமயத்தை வெல்லும்
திறன் படைத்தவன் நான்'
என்று கர்வம் கொண்டிருந்தேன்!
ஆனால்,
இமயமே உன்னிடம்
தோற்றதனால் தான்
வளர்வதை நிறுத்திய கதை
அன்று நான் அறிந்திருக்கவில்லை!

மின்னுவதெல்லாம் பொன்னல்ல ...
ஆனால்,
மின்னிய ஒன்று இங்கு பெண்ணானதே!

கம்பனின் கதாநாயகியின்
கலியுகத்து அவதாரமோ நீ?
கண்ணதாசன் வடித்த
கவியின் உயிர் வடிவோ நீ?

உனக்காகத் தானே
தவமிருக்கின்றேன் யான் ....

உன் கயல்க் கண்களால்
ஒரு காதல் பார்வை பார்த்து
இந்தப் பேதை உயிரைக்
காப்பாயா? இன்னுயிரே ....

அந்த ஒரு நொடி
சொர்க்கத்திற்காகத் தானே
என் இருதயம்
இன்னும் துடிக்கிறது!

அதை மறுக்காமல் தந்துவிடு பெண்ணே!
அந்த ஒரு சுகம் கொண்டு
நான் நரகத்தில் கூட
நல்வாழ்வு நடத்திடுவேன்!

அ. டானியல்
13 – பௌதீக விஞ்ஞான பிரிவு

*With Best Compliments*

*from*

COLOUR BOND

# MARUTHE STEELS


*Specialists in*
*Zincalume & Colour Bond Roofing Products*

430, Old Moor Street, Colombo 12,
Tel : 078 5141396, 0114 565655
Fax : 0112 440950

*With Best Compliments*

*from*

# R R MOBILE



535A, Galle Road, Colombo 6
Tel: 011-2362611 Mob: 071-4765606

# மறைந்த மனிதம்

யாழ் மண்ணை நோக்கி அந்த சொகுசுப் பேருந்து விரைந்து கொண்டிருந்தது. அநேகமாக எல்லோரும் நித்திரா தேவியின் வசப்பட்டு இருந்தனர். ரமணன் மட்டும் விதிவிலக்காக யன்னலினூடாக அந்த கும்மிருட்டிலும் தொலைந்த பொருளைத் தேடுபவன் போல வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் மனதில் ஏதேதோ குழப்பங்கள், போகும் காரியங்கள் நல்ல விதமாக முடியுமா? யாரையும் தெரியாத ஊருக்கு அம்மாவின் சொல்லைக் கேட்டு வெளிக்கிட்டு வந்தது -சரியா? என அவன் சிந்தித்துக் கொண்டே இருக்க, நாம் அவனைப் பற்றி சிறு முன்னுரையைப் பார்த்து விடுவோமா?

கொழும்பு பல்கலைக்கழக இறுதியாண்டு மாணவனான ரமணன் போன மாதம் வரையில் தானுண்டு, தன் படிப்புண்டு, வீடுண்டு என நிம்மதியாகத்தான் வாழ்ந்து கொண்டிருந்தான் சென்ற மாதத்தில் ஒரு நாள் காலையில் வழமை போல் எழுந்த அம்மா, தனது வழமையான வேலைகளை தொடங்காமல் கதிரைய-ில் படுத்திருப்பதைக் கண்டு அவளின் வயிற்று வலியை அறிந்தான். உடனே அருகிலிருந்த வழமையாகச் செல்லும் தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்ற போது தான் அவனின் வாழ்க்கைப்பாதையின் தடம் மாறத் தொடங்கியது. அம்மாவைப் பரிசோதித்த மருத்துவர் மேலதிக பரிசோதனைகளுக்காக அவளை வைத்தியசாலையில் நிப்பாட்டி நவீன சோதனைகள் எல்லாவற்றையும் முடித்து, முடிவுகளை அலசி ஆராய்ந்த பின் அவனைக் கூப்பிட்டு, அம்மாவிற்கு வயிற்றில் புற்றுநோய்க்கான அறிகுறிகள் இருப்பதாகவும் ஆரம்ப நிலை என்றபடியால் தகுந்த சிகிச்சை அளித்தால் உயிருக்கு ஆபத்தில்லாமல் முடியும் என்றார்.

கொழும்பிலேயே பிறந்து வளர்ந்த அவனிற்கு இதற்கெல்லாம் லட்சக்கணக்கிலே பணம் வேண்டும் என யாரும் சொல்லாமலேயே தெரிந்தது. இந்த நேரத்தில் தான் அம்மா, ''ரமணா யாழ்ப்பாணத்தில் எனது வீடும் வளவும் சும்மாதானே கிடக்குது. பெரியப்பா அதை விலைக்கு கேட்டுக் கொண்டிருக்கிறார் நீ போய் ஒருமுறை அங்க இருக்கிறவையிடம் வீட்டை எப்பத் தருவினம் எனக் கேட்டு அதற்கான ஒழுங்குகளை பார்த்துப் போட்டு வாவன்'' என்றார். இது அம்மம்மா அம்மாவிற்கு கொடுத்த சீதனம். அவன் அம்மாவிற்கும் ஒருமுறை அந்த வீட்டில் போய் இருக்க வேண்டுமென பொல்லாத ஆசை. ஆனால் சமயம் தான் வாய்க்கவில்லை. அப்பா அந்தக் காலத்திலேயே கொழும்பை வதிவிடமாகக் கொண்ட அரச ஊழியர். திருமணத்தின் பின் அம்மாவும் கொழும்பையே தனது வதிவிடமாகக் கொண்டு விட்டார். இடைக்கிடை பிரச்சினை இல்லாமல் பேச்சு வார்த்தைகள் நடக்கையில் பயணங்கள் சுமூகமாக இருக்கையில் யாழ் சென்று வருவார்களாம். இவன் பிறந்தபின், ஒருமுறை அதுவும் அவன் அம்மம்மாவின் மரணத்தின் போது சிறு குழந்தையான அவனைத் தூக்கிக் கொண்டு போய் வந்ததாக அம்மா சொல்லியிருந்தார். அம்மம்மாவின் மரணத்தின் பின் அந்த வீட்டில் அம்மம்மா வசித்த பகுதியையும் சேர்த்து வாடகைக்கு விட்டுவிட்டு மாதாமாதம் அம்மாவின்

பாங்க் கணக்கிற்கு வாடகையை அனுப்ப ஒழுங்கு செய்திருந்தார் அவன் அப்பா. ஆனால் அதுவும் சிறிது காலத்திற்குத்தான்.

பின்பு போர்ச்சூழல் அதிகரித்த சூழ்நிலையில் உணவுப் பஞ்சம் தலைவிரித்தாடிய போது, அவர்கள் வாடகை கொடுக்க முடியாது தாங்கள் மிகவும் கஷ்டப்படுவதாக எழுதிய கடிதத்தை அவன் அம்மாவும் ஒப்புக் கொண்டு வாடகையில்லாமலேயே அவர்களை தன் வீட்டில் இருக்க அனுமதித்து விட்டார். அதன் பின் நாட்டின் சூழல் மாறி சமாதானம் வந்து பயணங்கள் எல்லாம் இலகுவான பின் அந்த வீடு, வளவை போய்ப்பார்க்க இவர்களுக்கு நேரம் வரவில்லை. அப்பாவும் இவன் சாதாரண தரப் பரீட்சை எழுதும் போது ஒரு சாலை விபத்தில் மரணமடைய அவரின் சேமலாப நிதியிலும், வங்கியில் இட்டிருந்த சேமிப்பிலும் இவர்கள் காலம் சுமூகமாகவே சென்று கொண்டிருந்தது. ரமணனும் தனது ஓய்வு நேரத்தில் டியுசன்கள் கொடுத்து சிறு தொகையை சம்பாதித்துக் கொண்டான். இப்படியான நேரத்தில் தான் இந்த அவசரப்பணத் தேவை வந்து விட்டது.

அரைகுறையான நித்திரைக் கலக்கத்தில் பேரூந்து நின்று விட்டதை அறிந்து கண்ணைத் திறந்து பார்த்தான். வவுனியா என அறிவிப்புப் பலகை சொன்னது. ரைவர் தேநீர் அருந்தச் சென்றார். அவனின் சிந்தனை மீண்டும் தாயின் வசம் சென்றது. எப்பவுமே அவரிற்கு தனது ஊரையும் அந்த மக்களையும் பற்றிய நினைவுதான். அதுவும் மிகவும் பெருமையாக அவர் சொன்ன ஒரு நிகழ்வு ஞாபகத்திற்கு வந்தது. 83ம் ஆண்டு ஆடிக்கலவரத்தின் போது பொருட்களை இழந்து உயிர்தப்பி, அகதிக-ளாக யாழ் சென்ற போது வவுனியாவில், கொழும்பிலிருந்து வரும் அகதிகள் எல்லோரையுமே வரவேற்று, வவுனியா பாடசாலையில் உணவளித்து ஆறுதல் சொன்ன அந்த தமிழ் இளைஞர்களின் பண்பினை ஆயிரம் தரம் சொல்லி பாராட்டி இருப்பார். அதே போல் ஊரிற்கு சென்றவுடன் உற்றார் உறவினர் எல்லோருமே வந்து விசாரித்ததும், ஒரு நாளைக்கு ஒருவர் வீட்டில் உணவளித்ததையும் சொல்லி சொல்லி மகிழ்வார். விருந்தோம்பலிற்கு பெயர் போன தன்னினத்தைப் பற்றி அவன் அம்மாவிற்கு மிகவும் பெருமை. அந்த நேரத்தில் அந்த வீட்டில் அம்மம்மா ஒரு பகுதியில் இருந்து கொண்டு, மிகுதியை வாடகைக்கு விட்டிருந்தார். அதன் பின் சிறிது காலத்தில் நிலைமைகள் ஓரளவு சீரடைய அவன் அப்பா திரும்பவும் கொழும்பிற்கு வந்து வேலையை பாரமெடுக்க அம்மாவும் திரும்பவும் கொழும்பிற்கே குடிபெயர்ந்து விட்டார்.

ஆம், பேரூந்து திரும்பவும் தன் பயணத்தை தொடங்கியது. அவன் போகும் வேலை நல்லபடியாக முடிந்து, கையில் காசு மட்டும் கிடைத்துவிட்டால் அம்மாவின் நே-ாயை குணப்படுத்திவிடலாம் என அவன் கற்பனை விரிந்தது.

ஒரு மாதிரியாக விடியற்காலையில் யாழ் நகரை வந்தடைந்தது பேரூந்து. அவன் அம்மா தந்த விலாசத்தின்படி வீட்டையும் அடைந்து விட்டான். அவன் நினைத்ததிற்கு எதிர்மாறாக அந்த வீட்டின் செல்வச் செழிப்பில் நீந்திக் கொண்டிருந்தார்கள் சகல விதமான இலத்திரனியல் உபகரணங்களையும் பார்க்கையில் இவர்களிற்கும், வெளிநாட்டிற்கும் நெருங்கிய சம்பந்தம் இருப்பது புரிந்தது. அவன் வந்த

விடயங்களை எல்லாம் தெரிந்து கொண்டபின் அந்த வீட்டின் பெரியவர் நிதா- னமாக ''தம்பி இப்பதான் அங்கவும் நிலைமைகள் நல்லம் தானே அம்மாவை மஹரகம ஆஸ்பத்திரியில் வைத்து வைத்தியம் செய்யலாமே! ஏன் வீணாக காசை செலவழிக்கிறீர்? அதோ தம்பி இப்ப இந்த வீட்டை எல்லாம் விற்க ஏலாது. நாங்களும் இங்க இப்ப ஒரு இருபத்தைந்து, முப்பது வருஷமாக இருக்கிறோம். அந்த குழப்ப நேரமெல்லாம் இந்த வீட்டை பாதுகாத்து வைத்திருந்ததும் நாங்க தானே. இப்ப வந்து வீட்டை விக்கிறதெண்டா விடுவமே? நான் அம்மா ஆஸ்பத்திரிக்கு போக முதல் அங்க வாரன். வீட்டை எங்கட பேருக்கு மாத்தி எழுதித் தரச் சொல்லுங்கள். நான் ஒரு லட்சம் தாரன். உங்கட செலவிற்கு உதவும்'' என்றார்.

எத்தனை லட்சங்கள் பெறுமதியான வீடும், காணியும் அதில் அம்மாவின் கனவுகள், அங்குள்ள மாமரம், புளியமரம், தென்னைமரம், மாதுளை மரம் என அம்மாவின் ஞாபகங்கள் எல்லாவற்றிற்கும் மேலாக அவ தன் சொந்தங்களில் வைத்திருந்த நம்பிக்கை எல்லாமே அந்த நிமிடம் காற்றோடு கலந்தது.

எதுவுமே பேசாமல் ரமணன் வீட்டை விட்டு வெளியேறினான். கொழும்பிற்கு அடுத்த பேரூந்து எப்ப எனக் கேட்டுக் கொண்ட பின் நல்ல கடையில் வயிறு நிறைய உண்டான். அப்போது தான் நிதானமாக யோசிக்க முடியும். பசியில் எடுக்கும் முடிவு கட்டாயமாக தவறாகத் தான் முடியும் என்பது அவனின் தாயின் அறிவுரை. அப்படியே நல்லூரானையும் கும்பிட்டுவிட்டு தனது பயணத்தை தொடங்கிய பின் திருப்பவும் யோசனையில் ஆழ்ந்தான். அம்மாவைக் காப்பாற்றும் அதே வேளை அந்த வீட்டையும் அவர்கள் கையிலிருந்து மீட்டெடுக்க வேண்டும். கட்டாயமாக ஒரு ஏமாற்றுக்காரர் கையில் அது சிக்கக்கூடாது திரும்பவும் வவுனியா வந்து சேர்ந்தான். அம்மா கூறிய விருந்தோம்பல் ஞாபகம் வந்தது. அன்று இருந்த மனிதம் இன்று எங்கே போனது? இப்படி மாறியதிற்கு காரணம் போரோ? ஓடியாடிக் களைத்து பயந்து பயந்து வாழ்ந்து மரணங்களை கண்டு மரத்துப் போன உள்ளங்களா? அல்லது இவை எல்லாவற்றிற்கும் மேலாக கொழும்பில் உள்ளவர்கள் எல்லாம் சொகுசு வாழ்க்கை வாழ்கிறார்கள் என்ற தப்பான அபிப்பிராயமா? எதுவாக இருந்தாலும் அவன் எதிர்பார்த்து வந்த மனிதம் இன்று அங்கு மறைந்துதான் விட்டிருந்தது.

பேரூந்து கொழும்பை நெருங்கிக் கொண்டிருந்தது. இறங்குவதற்கு தயாரான வேளையில் தனது நண்பர்கள் வட்டாரத்தில் யாரின் உறவினர் நல்ல வக்கீலாக இருக்கிறார்கள் என திரும்பவும் சிந்திக்க தொடங்கினான் ரமணன்.

ரா. ராகுலன்
உயஉதரம் (கணிதப்பிரிவு)

*Best Wishes*

*from*

**A. Senthuran - 12MT**

**A. Sanjayan - 10D**

*With Best Compliments*

*from*



**KAMALESWARY TEX**

Shalwars, Sarees, Gents' & Childrens' Wear

Wholesale Dealers in textiles

No. 25, Grand Bazaar Road, Jaffna
Tel : 021 2228419, 021 2226303
Web : kamaleswary.com Email : info@kamaleswary.com

214, Main Street, Colombo 11.
Tel : 2452878, 2473778

*With Best Compliments*

*from*

N.K. Abishekbaran

9 - C

# மாணவர்களது கல்வி வளர்ச்சியில் பெற்றோரின் பங்களிப்பு

''எச்சமென வொருவன் மக்கட்குச் செவ்வன விச்சை மற்றல்ல பிற''
என்பது நாலடியார். அதாவது,

ஒரு மனிதன் தன் பிள்ளைக்கு தனக்குப் பின் மிகுதியாக சேர்க்கக் கூடியது கல்வியைத் தவிர வேறெதுவுமல் என்கிறார். ஆம், அத்தகைய கல்வியை பாடசாலை தான் வழங்குகிறது. எனினும், மாணவர்களின் கற்றல் - கற்பித்தல் செயன்முறையில் முக்கிய பங்குதாரராக செயற்படுபவர் பெற்றோர்களே. ஒரு மாணவனின் ஆரம்பக் கல்வியானது வீட்டிலேயே ஆரம்பிக்கப்படுகிறது. ஆரம்ப ஆசான்களாக விளங்குபவர்களும் பெற்றோர்களே என்பதில் எவ்வித ஐயமுமில்லை. பின்பு மாணவனின் 5 வயதிலேயே தான் பாடசாலை செல்கிறான். எனினும் அவன் பாடசாலையில் இருப்பது 6 மணித்தியாலங்கள் மாத்திரமேயாகும். அடுத்த 18 மணித்தியாலங்களையும் அவன் வீட்டிவே பெற்றோரது பராமரிப்பில் கழிக்கிறான். ஒரு வருடத்தில் சராசரியாக 200 நாட்களே பாடசாலை நாட்களாகும். ஆதலால் மாணவனது வளர்ச்சியில் அதிக அக்கறை செலுத்த வேண்டியது பெற்றோரே ஆவர்.

பெற்றோர் தம் பிள்ளைகளை சிறந்த முறையிலே பராமரிக்க வேண்டும். இதனையே,

''எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணிற் பிறக்கையிலே அவர் நல்லவராவது தீயவராவது அன்னை வளர்ப்பினிலே''
என்று ஒரு கவிஞர் கூறுகின்றார்.

பெற்றோர் பிள்ளையின் தேவையை நிறைவு செய்யும் போது தான் உடலியல் விருத்தி, மனவெழுச்சி விருத்தி, மொழி விருத்தி, உள இயக்கத்திறன், ஆக்கத்திறன், ஆளுமை, சமூக விருத்தி என்பன ஆற்றல் பெறும். எனவே, மாணவர்களது சிந்தனை, உணர்வு, நம்பிக்கை என்பவற்றிற்கு வழிகாட்ட வேண்டியது பெற்றோருக்கு உரிய பொறுப்பாகும்.

மாணவர்களது கடமையுணர்ச்சியும், ஒழுக்கப் பண்பும், திறமையும் உள்ளவர்களாகத் திகழ்ந்து தமது இலக்குகளை இடைய இறுதி வரை துணை நிற்பவர்கள் பெற்றோர்களே. எனவே, மாணவர்களது கல்வி வளர்ச்சியில் கூடிய கவனம் செலுத்தி சமூகத்திற்கும், நாட்டிற்கும் நற்பண்புள்ள நற்பிரஜையாக உருவாக்க வேண்டியது பெற்றோர்களே.

''தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை
தந்தை சொல் மிக்க மந்திரமில்லை''

*இர்ஸான் M. இஸ்மத்*
*13MT (2013 A/L Batch)*

*With Best Compliments*

*from*

# Eden Jewells

***Beauty That Lasts Forever***

230, Galle Road, Colombo 06, Sri Lanka.
Tel : 2361363, 2360364 Fax : +94-11-2360365
Email : edenjewels230@gmail.com / eden230@sltnet.lk

*With Best Compliments*

*from*

# S.T. Umashankar

# உங்களின் வெற்றிக்கு

- தோல்வியை ஒப்புக் கொள்ள தயங்காதே. தோல்வியிலிருந்து கற்றுக் கொள்ள வேண்டியது நிறைய இருக்கிறது.

- மணிக்கணக்கில் உபதேசம் செய்வதை விட ஒரு கணப்பொழுதாயினும் உதவி செய்வது மேல்!

- தன்னை அதிக புத்திசாலியாக எண்ணுவதே மனிதனிடமுள்ள மிகப் பெரிய பலவீனம்.

- ஒரு மனிதன் விழாமலே வாழ்ந்தான் என்பது பெருமையல்ல, விழுந்த போதெல்லாம் எழுந்தான் என்பதே பெருமை!

- அவசரமாக தவறு செய்வதை விட தாமதமாக சரியாகச் செய்வதே மேல்.

- எவன் பிறர் நற்செயல்களைப் பார்த்து மகிழ்ச்சி கொள்ளவில்லையோ அவனால் நல்ல செயல்கள் எதையும் செய்ய முடியாது.

- அடிக்கடி தவறு செய்பவன் அப்பாவி

  ஒரே தவறை திரும்பத் திரும்பச் செய்கிறவன் மூடன்

  ஒரு தவறுமே செய்யாதவன் மரக்கட்டை.

  தன்னையறியாமல் தவறு செய்து தன்னையறிந்து திருத்திக் கொள்கிறவனே ''மனிதன்''.

- ''உன்னை நீ வெல்லு, அப்போது நீ உலகத்தையே வென்றவனாவாய்''.

*மொஹமட் இர்ஸான் இஸ்மத்*
*13MT (2013 A/L Batch)*


*With Best Compliments*

*from*

K

**KUMARAN'S**

Dealers in Groceries & Indian Goods etc.



No. 157/2, Sri Kathiresan Street, Colombo 13
Tel : 2381029 Mobile : 077-4845090, 077-2177293
Fax : 2332353

*With Best Compliments from*

**ORGANIC TRADING (PVT) LTD**

Suppliers of
★ Laboratory Chemicals ★ Industrial Chemicals,
★ Laboratory Equipments,
★ Filter Papers
★ Thermometers / P.H. Meters (Digital) etc

237-2/8, Main Street, 2nd Floor,
Fairoze Super Market,
Colombo 11, Sri Lanka.
Tel Office: 2332606 / 2441439
Fax : +94-11-2332606 Res : 2943814
Mobile : 0777 724510
Email : organictrading@yahoo.com

*Best Wishes*

*from*

**J. Vithushigan**

**7 - C**

*With Best Compliments*

*from*

UNITY COMPUTERS

**UNITY PC SYSTEMS**

Computer Sales, Repairs, Services & Maintenance
Net Working & All kind of Computer Accessories

No. 394, 1/1, Galle Road, Wellawatta, Colombo 6
Tel: 0112-361777 Mobile : 0777-890532
Email : unitypc@sltnet.lk, unitypcja@sltnet.lk

## தமிழைக் கல்! தலைநிமிஉந்து நில்!

முன்னொரு காலமது
எமது முன்னோர் வாழ்ந்த நேரமது
நன்றோர் பலர் நடமாடிய வேளையது
நல்ல பல வாக்காம் சான்றோரினது

அதிகாலையிலே எழுந்து - இரை
தேடிப் பறக்கும் பருந்து - போல
நகரெல்லாம் அலைந்து - உழைத்து
ஊருக்கெல்லாம் கொடுத்தனர் - விருந்து

மாலையிலே எங்கும் நண்பர்களின் - கூடல்
அதிலிருந்து வரும் ஓர் இனிய - பாடல்
கேட்டால், வீதியில் செல்பவருக்குக் கூட ஒரு - ஆடல்
அதுவே நாம் படிக்கும் நாட்டார் - பாடல்

ஏர் பிடித்து உழைத்தவனும்
மார் மீது சுமந்தவளும்
கரையிலே படகோட்டியும்
கஷ்டப்பட்டதிற்கு ஆதாரம் இந்த நாட்டார் - பாக்கள்

நாட்டார் பாக்களுக்கும்; கல் தோன்றா மண் தோன்றா
காலத்திற்கு முன் தோன்றிய தமிழை
வளர்த்தது நம் தமிழ்
மூதாதையர்

தமிழை வளர்த்தார் திருவள்ளுவர்
தமிழ்ப்பாவை வளர்த்தார் ஔவையார்
சொற்குறுதி அளித்தார் நாலடியார்
தமிழின் வலிமை என்றென்றும் எம் பாரதியார்

நல்லோனுக்கு சொல்லே ஆயுதம்
வல்லோனுக்கு புல்லே ஆயுதம்
தமிழ்க் கற்றோனுக்கு அகிலமே ஆயுதம்
என ஆசான் சொன்ன போதும்

அலட்சியம் செய்யும் மாணவரே!
தயவு கூர்ந்து
தமிழைக் கல்லுங்கள் - என்றும்
தலை நிமிர்ந்து வாழுங்கள்

*M. N. Shabeer Ahamed*
*8D*

*Best Wishes*

*from*

V. Luxhith Devashi

3-D

*Best Wishes*

*from*

**M.S. Uzair**

**Grade 3D**

*With Best Compliments*

*from*

# 12 ST Students

# சர்வதேச புலவர் திருமண சேவை

## (ஸ்தாபனம்: 10-05-1962)

மாவிலை தோரணம் மாமலர் மாலைகள்
பூவினில் அலங்காரம் பொலிந்தபூம் பந்தலில்
மேலிய மணமக்கள் மேதினி மீதினில்
சீவிய நாளெல்லாம் சிறக்கவைக்கும் திருமணம்

50 வருடங்களாக ஆயிரக்கணக்கான திருமணங்களை நிறைவேற்றி உலக சாதனை படைத்துவரும் சர்வதேச புலவர் திருமண சேவையுடன் தொடர்பு கொள்ளுங்கள். உங்கள் சாதி சமய தகுதிக்கு ஏற்ப, நீங்கள் விரும்புகின்றபடி, உள்நாட்டு வெளிநாட்டுத் திருமனங்களைச் செய்துகொள்ளலாம். உங்கள் எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும். இனிதாகத் திருமணம் கைகூடும். இல்லறவாழ்வில் நல்லறம் பூக்கும்.

வாருங்கள் ! விருப்பத்தைக் கூறுங்கள்!
திருமணத்தை நிறைவேற்றுங்கள்

57, விகாரைலேன்
வெள்ளவத்தை
கொழும்பு-6
T.P 0112363435

உங்கள் தேவையைச் சேவையாகக் கொண்டு
வவுனியா – திருகோணமலை – மட்டக்களப்பு – மலையகம் – சென்னை
ஆகிய ஊர்களில் கிளை அலுவலகங்கள் இயங்குகின்றன.

**இயக்குனர்**

சிந்தனைச்சிற்பி – சித்தாந்த வித்தகர்

**நாடகப்பேராசிரியர்**

புலவர் செ.து. தெட்சணா மூர்த்தி
(071 335 2215)

# மாணவர் கடமை

காலையில் எழுந்து கற்றிடுவோம்
கண்டிப்பாய் இதை பின்பற்றிடுவோம்
சாலைக்கு தினம் சென்றிடுவோம்
சான்றோர் சொல் கேட்டிடுவோம்
மாலை முழுவதும் விளையாடிடுவோம்
மாணவர் நாம் இதை செய்திடுவோம்.

தெய்வத்தை இரு காலமும் வணங்கிடுவோம்
செய்வீகத் தன்மையை மனதில் ஆக்கிடுவோம்
பொய்யா மொழியை படித்திடுவோம் - அதற்கு
பொறுமை சூத்திரமாய் வாழ்வை அமைத்திடுவோம்
மெய்மையை நாளும் பேசிடுவோம் - பிறர்
மெச்சிடும் வகையில் வாழ்ந்திடுவோம்

நேரத்தோடு பள்ளிக்குச் சென்றிடுவோம்
நேர்மையை கடைப்பிடித்திடுவோம்
வாரமைந்து நாள் பாடசாலை சென்றிடுவோம்
வாசிப்பினால் அறிவை பெற்றிடுவோம்
வீரத்தை நெஞ்சில வர வழைத்திடுவோம்
வீண் பிரச்சினைகளை தவிர்த்திடுவோம்

ஆசிரியருக்கு அடிபணிந்திடுவோம்
அவர்கள் சொற்படி நடந்திடுவோம்
தூசிகளை வகுப்பறையில் ஒழித்திடுவோம்
தூய்மையை அங்கு - காத்திடுவோம்
ஊசி முனையைப் போல அறிவை வளர்த்திடுவோம்
ஊராரை நற் சமுதாயமாய் உருவாக்கிடுவோம்

*பத்மநாபன் ஷாஸ்வதன்*
*8C*

# கவிதை வன்மப்படுதல்

சுற்றி வளைத்து
வேலி கட்டி
அதற்குள் என்னைச்
சுவாசிக்க செல்வது தான்
காட்டும் சுதந்திரம்

விரிந்தெழுகின்ற
என் தேடல்களைப் பரிசோதிக்க
உன் கையில் அதிகாரம்
அதனால் தான்
நினைத்தபடி
நீ சத்திர சிகிச்சை செய்ய
என் வாழ்க்கை
விபத்திலடிபட்ட பிராணியாகிவிட்டது

நீ சொல்வது தான் வேதம்
நீ காட்டுவது தான் உலகமெனின்
எனக்கென்று
இதயமும் கண்களும் எதற்கு?
முன்னேற்பாட்டுடன் நடந்ததும்

தாக்கு தலைப் போன்று
திடீர் திடீர்ரென என்னை சுற்றி வளைகிறது
சுற்றி வளைகிறாய்
(எதிலும் முன்னேற விடாமல்)

நீ ஏவிய சூறாவளி
வெற்றிகரமாய் வீசி வீசி
என் தேசத்தையே
நாசப்படுத்தலாம்
உலகில் ஓரே காலநிலை
ஓரே அதிகாரம்
நிலைத்திருப்பதில்லை என்பதை
நீ மறந்து விட்டாய்

**நன்றி**

*M.T.A. Inshiraff*
$6^{D}$

# அறிவாலயம்

கருவாக்கி உருவாக்கி
மனிதனை மனிதனாக
மாற்றும்
அறிவு ஆலயத்தின்
ஊற்றெடுப்பு
அன்னையிடத்திலே.............

பாலூட்டிச் சீராட்டி
பாலகனாக வளர்த்து
பாரினிலே பண்புடன்
உயர்ந்து வாழ
ஊக்க மூட்டிய கல்லூரி
என் அறிவாலயமாக
என்றென்றும் மனதினிலே

தெய்வ விக்ரகங்கள்
கொண்டு தூய்மைப்படுத்தும்
இடம் ஆலயம்
ஆனால் நூல்களின் துணை கொண்டு
மூளையை முழுமைப்படுத்தும்
எம் நூலகமே
அறிவாலயமே............

*ஆக்கம் - ஸ்ரீ. ரிஷிகேஷன்*
*வகுப்பு - 6D*

# இது தெரியுமா...?

- ஓலைச்சுவடியில் இருந்து திருக்குறள் அச்சுக்கு கொண்டு வரப்பட்டது
- திருக்குறளை முதன்முதலில் வேற்று மொழியில் மொழி பெயர்த்தவர் இத்தாலி நாட்டைச் சேர்ந்த வீர மாமுனிவர் என அழைக்கப்படும் கொன்ஸ்டன் ஜோசப்பெஸ்கி பாதிரியார்
- முதல் திருக்குறள் மாநாடு நடத்தியவர் பெரியார்
- திருக்குறளில் இல்லாத உயிர் எழுத்து "ஔ"
- ஒரே ஒரு குறளில் மட்டும் வரும் எழுத்து "ங்" "ளீ"
- அதிக இடங்களில் வரும் எழுத்து "ன்" (1705 தரம் வருகிறது)
- மனிதன் பின்பற்றக் கூடாத குணநலங்களாக கூறப்படுபவை பொறாமை, பிறர் பொருளை கவருதல், புறங்கூறுதல், தீய சொற்கள் பயன்படுத்தல்
- மனிதன் பின்பற்றக் கூடிய குணநலங்களாக கூறப்படுபவை அறம், அன்பு, விருந்தோம்பல், செய்நன்றி, நேர்மை, பொறுமை, அடக்கம், ஒழுக்கம், ஈகை, உண்மை பேசுதல் போன்றவை

*ஜெ. விதுசிகன்*
*7 C*

# அகரவரிசையில் அன்பு

அரவணைப்பது அன்பு
ஆதரிப்பது அன்பு!

இன்சொல் ஆனது அன்பு
ஈகையின் பண்பே அன்பு!

உள்ளத்தில் வருவது அன்பு
ஊமையை மேதையாக்குவது அன்பு!

எல்லோரையும் ஒன்று சேர்ப்பது அன்பு
ஏற்க தகுந்ததும் அன்பு!

ஐயம் போக்குவது அன்பு!

ஒன்று சேர்ப்பது அன்பு!

ஓராயிரம் வாழ்வு தருவது அன்பு!

ஔடதமானது அன்பு!
ஔவையின் மொழியே அன்பு!

மேலும் மேலும் மேன்மையானது அன்பு
நேர்மையின் வழியே அன்பு!

*மோ. செந்தூரன்*
*8 C*

# தமிழா!

தித்திக்க தமிழ் பேசி
தினந்தோறும் துதி பாடி
தாய் போன்ற மொழியதனில்
தினந்தோறும் தோய்ந்திடுவோம்....!

விடியலற்ற வாழ்க்கையாய் - எம்
வேதியல் வாழ் மக்களின்
விவேகத்தை பறை சாற்ற
இனியொரு விதி செய்வோம்....!

பிறப்பின் பூர்வீகமே - இம்
மண்ணில் விதைத்திருக்கையிலே
விறைத்து போனதென்ன - உன்
வேடிக்கையான வாழ்வு...?

தமிழன் கோழையாம்...!
ஆகா என்ன ஓர் வார்த்தை....!
கூறுபவன் கூறட்டுமென
மௌனித்து விடாதே தோழா...!

தலைகவிழ்ந்து தமிழ் ஒன்றும்
பெரிய மொழியல்ல என்று எண்ணாதே...!
தமிழா தலைநிமிர்ந்து பார்- உலகமே
உன்னை மட்டும் தான் பார்க்கிறது...!

வீறு கொண்டழுந்து - நம்
வீரமென்ன வென்று அறிய
விவேகத்தமிழந்தவர்கள் முன்
நிகழ்த்தலாம் வாடா....!!!

காலம் கனியுமென
காரணம் காட்டினால் - உன்
காலடித்தடமும் இருக்காது
கயவர்கள் பிடியினால்....!!!

சிந்தித்துப்பாா......!
உன் பின்னொரு சகாப்தம்...!
உருவாகவேண்டுமென்றால் - உன்
வேள்வி தொடரட்டும்
வாழ்வின் இறுதிவரை....!!!

*R. சவீஷ் காந்த்*
*9D*

# சுத்தம் சுகம் தரும்

காடும் வயலும் இந்நாளில்
நாளும் நாளும் அழிவதுடன்
கூடும் குப்பை கூளங்களால்
குடிநீர் கெட்டும் வருகிறதாம்

நல்ல காற்றை நமக்காக
நாளும் தருகின்ற நல் மரங்கள்
இல்லையென்று ஆவதனால்
எங்கும் பசுமை அழிகிறதாம்

கோடிகணக்கில் உள்ள தொழிற்சாலைகளில்
எங்கும் பரவும் புகைகளினால்
ஓடிப்பரவும் நற்காற்று
உலகில் மாறி வருகிறதாம்

சுற்றுச் சூழல் எப்பொழுதும்
தூய்மையாக ஆனால் தான்
குற்றம் குறைகள் இல்லாமல்
சுகமாக வாழ வழி செய்யும்.

*M. Prashanthan*
*12 MT*

# சூரிய உதயம்

அயர்ந்து உறங்கும்
அக்கிராமம் விழித்திட முன்னமே
காரிருளில் - தன் போர்வையை
மெல்ல விலக்கி.....
கூர்மையான கண்களை
விரிந்த பார்வையின்
புன்னகையில்.....
முகம் சிவந்து போனதுவே
உன் புன்னகையில் மயங்கி
சேவல் கூடக் காதல் கொண்டதுவோ
உன் வருகையை பிறரிடம் காண்பிக்க
ராகங்கள் பல இசைத்ததுவே.
தாமதித்து விழித்திருந்த மாந்தரைப் பார்த்து
நீ சிரித்த கேலிச் சிரிப்பு
கதிர்களாய் சுட்டெரிந்ததுவே...

*M.S.M. Shihar*
*12 MT*

# இலட்சியம்

நண்பனே வலிக்காமல்
இருப்பதில்லை சிறகுகள்!
என்றாலும் பறக்காமல்
இருப்பதில்லை பறவைகள்!
சுடாமல் இருப்பதில்லை
கதிரவன் - ஆனால்
நடக்காமல் இருப்பதில்லை மனிதர்கள்!
உழைக்காமல் கிடைப்பதில்லை
முதலீடுகள்!
முயற்சிக்காமல் கிடைப்பதில்லை
வெற்றிகள்!
எட்டாத உயரத்தில்
இல்லை இலட்சியம்
எதற்கும் முயற்சித்துப்பார்
உன் திறமையான - நாளை
நீயாரோ...

*N.T. Rimash*
*13 MT*

# நல் ஆசான்

அறிவுக்கு அசானாய்
அன்புக்கு அன்னையாய்
அறிவுக் கண்களைத் திறந்திடும் மேலோனாய்!
அனைவரும் போற்றிடும் ஆசான்!

அல்லும் பகலும் அயராதுழைத்து - தான்
அடைந்த அறிவினைப் பிறருக்கும் கொடுத்து
அயராது சேவை செய்பவர் நல் ஆசானே!
அறிஞர்களைத் தோற்றுவித்ததும் நல் ஆசானே!

காடு மலைகள் என்று பாராது
கடும் வெயிலும் நோக்காது
கல்லில் பாதம் நோக நடந்து வந்து
கடமைதனை செய்பவன் ஓர் நல்ல அசானே!

காற்று, மழை, குளிர் என்று
கங்குகரையில்லா வெள்ளம் என்றும்
கடந்து வரும் வேளை ஆபத்தென்று பாராது
கல்விக்கூடம் வந்து கற்றலை நடாத்தும்

கன்னியமான கடமையாளன் ஓர் நல் ஆசானே!
பார் போற்றும் உன் சேவையால் பலரை
உருவாக்கும் ஆசானே! ஏணியாக இருந்து எம்மை
உயர்த்திட்ட ஆசானே! உன் உன்னதமான சேவை
உலகல்லாம் பரவ வேண்டும்.

எம்.என்.எம்.நைஷபான்
கணிதப்பிரிவு 2013

# சுனாமி

கடல் நடுவே ஒரு கிடுக்கம்
பலர் மனதில் ஒரு நடுக்கம்
ஓய்வாக இருந்த அலைகள் - நம்மை
ஓட வைத்து காயப்படுத்தியதே

குழந்தைகள் விளையாடி திரிந்த இடம் - இன்று
அந்த சந்தோஷங்களின் மயானமாகவுள்ளதே!
நீ! மணல் வீடுகளை உடைக்கும் போது நாம் சிரித்தோம்.....
இன்று நம் வீடுகளை
உடைத்து நீ சிரிக்கின்றாயே!

உனக்கென்ன கோபமோ!- இன்று
இவ்வுலகில் அனைந்த தீபமோ!
நல்லவர், கெட்டவர், பெரியவர், சிறியவர்
என்று நாம் அன்று விண்ணில்
எந்த பாகுபாடுமே இல்லாமல் நீ அழைத்த
பிறகு, இன்று நாம் மனிதர்களாய் விண்ணில்
எவ்வாறாக இருந்தாலும்,
நம் உள்ளங்களில்
நீர் மூலம், நிர்மூலம்!

*by*
*S. Yasodharan*
*12MT*

# கல்வியின் சிறப்பு

உலகில் இருவகைச் செல்வங்கள் உள்ளன. ஒன்று கல்விச் செல்வம், மற்றையது பொருட் செல்வம், பொருட் செல்வம் பிறருக்குக் கொடுக்குந்தோறும் குறைவு-படும். நீராலும், நெருப்பாலும், அழியக்கூடியது. பிறரால் கவரக்கூடியது. ஆனால் கல்விச் செல்வமோ அழிவற்றது. நீராலோ, நெருப்பாலோ அழியாதது. கள்வரால் களவாட முடியாதது. பிறருக்குக் கொடுக்கும் தோறும் பெருகிக் கொண்டே செல்லும். இதனாற்தான் கல்விச் செல்வத்துக்கு நிகரான செல்வம் வேறில்லை என்று நம்முன்னோர் போற்றினர்.

மனிதரில் பதிந்துள்ள அறியாமையைப் போக்கி அறிவு ஒளி ஊட்டுவது கல்வி. கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்புண்டு. கற்றறிந்தவனே கண்ணுடையவனெனக் கருதப்படுவான் "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்று நம்முன்னோர் கூறியுள்ளனர். மனிதராகப் பிறந்த ஒவ்வொரு வரும் கற்க வேண்டியவற்றைக் கற்று, கற்ற நெறிப்படி ஒழுக வேண்டும்.
இதனையே திருவள்ளுவரும்.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக" என்றார்

கற்கவேண்டியவற்றை நாம் கருத்தூன்றிக் கற்க வேண்டும் கற்க வேண்டிய பருவத்திற் கற்க வேண்டும். இளமையிற் கற்பதே சிறந்த செயலாகும். "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்னும் முதுமொழியை நாம் மறக்கக் கூடாது. எல்லாவித அழகுகளிலும் ஒருவனுக்குக் கல்வி அழகே சிறந்த அழகாகும். இக்கல்வி அழக-ினைப் பெறுவதற்கு நாம் சலியாது முயற்சிக்க வேண்டும்.

கற்பதற்கு வயதுக்கட்டுப்பாடே இல்லை. வாழ்நாள் முழுவதுமே கற்கலாம். பாடை ஏறினும் ஏடாது கைவிடல் என்னும் அவற்றை நாம் மறக்கக் கூடாது. அழியாத செல்வமான கல்விச் செல்வத்தைப் பெற்று இவ்வையகத்து வாழ்வாங்கு வாழ நாம் முயற்சிப்போமாக!

*Koneshwaran Ashwanth*
*6 D*

# மனித ஆளுமை

அழகு மயமான இந்த உலகிலே அற்புதமான படைப்பு " மானிடப் பிறப்பு ஆகும். ஒவ்வொரு மனிதனுள்ளும் நான்கு பரிமானங்கள் காணப்படுகின்றன. அவை முறையே உடல், மனம், அறிவு ஆன்மா என்பவையாகும்.

உடல் என்பது பௌதீக உடல் பிராணன் இரண்டையும் கொண்டதாகும். ஆரோக்கியமான வாழ்க்கையை கடைபிடிக்க உதவியாக இருக்கும் உடலை பேணுதல் அவசியமாகும். எமது தசைகளும், தசை நார்களும் உறுதியாக காணப்படும் பட்சத்திலேதான் எம்மால் எதையும சிறப்பாக செய்ய முடியும். பௌதீக உடல் முழுக்க உணவால் உருவாக்கப்பட்டது. எனவே உடல் ஆரோக்கியத்திலும் உறுதியிலும் பங்கு வகிப்பது உணவுதான். ஆகவே உணவை சத்துள்ளதாகவும் அளவுடனும் எடுக்க வேண்டும். அளவிற்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாகும் அதே போல் அதிக நித்திரை கொள்வது விழித்திருப்பதும் உடல் நலத்திற்கு கேடாகும்.

எண்ணங்களின் உணர்வின் தொகுப்பே மனித மனமாகும். மனமானது தோய்க்கப்பட்ட துணியைப் போன்றது. எந்த வர்ணத்தில் தோய்த்தெடுக்கிறோமோ அந்த வர்ணத்தையே அது பெறுகின்றது. எனவே இளம் பிராயத்திலிருந்தே மனதிற்கு தகுந்த நற்பண்புகளை வளர்க்க வேண்டும். சமயநூல், நீதி நூல், நல்லவர்களின் சவகாசம், நல்ல உபதேசம் என்பன மனதை ஒரு சிறந்த பாதையில் இட்டுச் செல்ல வழிகோலுகின்றது.

மனமானது எதை நினைக்கிறதோ அதுவாகவே மாறிவிடுகிறது. எனவே எம்மில் நம்பிக்கை கொண்ட மற்றவர்களையும் எம்மைப்போல் நினைத்து செயற்பட வேண்டும். அத்துடன் ஒவ்வொரு இதயத்துள்ளும் இறைவன் இருக்கிறார் என்ற பயத்துடன் செயற்பட வேண்டும். எவ்வாறாக செயற்படுகிறார் என்ற பயத்துடன் செயற்பட வேண்டும். எவ்வாறாக செயற்படுகையில் நமது மனம் சமூகமாகவும், சாந்தமாகவும், அமைதியாகவும் ஆளுமையில் மேன்மையானது அறிவு. எனவே ஆரம்ப இரண்டு நிலையும் சீர்படுத்தப்பட்டால் பகுத்தறிவு படைப்பாற்றலை உள்ளடக்கிய வலிமை மிக்க அறிவை எம்மால் வளர்க்க முடியும். ஆமையானது அவயத்தை நிலைமைகேற்ப உள்ளே இழுத்துக் கொள்ளும். ஆகவே சூழ்நிலையறிந்து ஒரு விடயத்தை உள்வாங்கிக்கொள்ளும் திறமை எப்போது ஒருவனுக்குள் உருவாகுமோ அப்போது அவனது அறிவு நிலைபெறுகிறது.

*S. Midurshanan*
*8 C*

# ஏழைக்கும் ஒரு நாள் விடியும்

காலகாலமாய் காடு மேடேல்லாம் அலைந்து
கால்களெல்லாம் முரடான பிறகும்
காத்திருக்கின்றாயே மானிடா!
எதற்காக?

காலையில் அரை வயிறு கஞ்சியை
குடித்து விட்டு
பிறர் சோற்றில் கையை
வைப்பதற்காக
நீ சேற்றில் காலை வைக்கின்றாயே மானிடா!
எதற்காக?

தோளில் கூடையுடன் தலையில்
தலை வேட்டியுடன்
மனிதனின் உச்சித் தலையை
பிளக்கும் சூட்டில் பெண்கள்
கொழுந்து பறிக்கின்றார்களே மானிடா?
எதற்காக?

ஏழை மக்களின் உழைப்பை செல்வந்தர்கள்
உறங்கும் பஞ்சு மெத்தையாக்கி
அப்பாவி மக்களை வாட்டி
வதைக்கின்றார்களே மானிடா!
எதற்காக?

இவையனைத்தையும் பூமியைப் போல்
பொறுத்துக் கொண்டு
அவர்களுக்கென்று புதிய வாழ்வு
ஒன்று வருமா?

என்று ஒரு கேள்வியுடன்
விடியலுக்காய் காத்திருக்கிறார்கள்
உறுதியை போல் உழைப்பு இருந்தால்
நீ நிச்சயம் உன் வாழ்வில் வெற்றி காண்பாய்

*கு. ஜெருட்ஷன்*
*13 MT*

# சிதைந்த உறவுகள்

கண்களை திறந்தபோது மறந்து விட்டேன்
ஒன்றை...
புரியவில்லை எனக்கு என் உறவுகள்
யாரென்று....
என்றும் போல் நாடினேன் என் உயிரான
உயிர்களை
நோக்கிய என் கண்களை நோகச் செய்த
உறவுகள்
அன்புக்காய் ஏங்கிய என்னை எட்டியுதைத்த உறவுகள்
ஆலம் விழுதுகளாய் தொங்கிக்கிடந்த
அழகான என் வீட்டுத் தூண்கள்
கல் மோதிய கண்ணாடி போல்
தூள் தூளாகிப் போகிறதே
ஓட்டிப்பிறந்த ரெட்டைக்குழந்தைகளும்
சுயநலத்துக்காய் யுத்தம் செய்யும் காலமிது
ஒன்றுவிட்ட உறவுகளையா
மதிக்கப் போகிறது உலகம்
புரிந்து விட்டது எனக்கு
அஞ்ஞானம் போய் மெஞ்ஞானம் பிறந்த
காலமிது
தன்னலம் எனும் கொடி மட்டும்
விண்ணில் பறக்கும் காலமிது
மறந்து விட்டேன் எனக்கென உறவுகள்
இல்லையென்று.

*Nishthar Nifran*
*Grade 13MT*

# விஞ்ஞானத்தின் வளர்ச்சி

விஞ்ஞானம் என்பது வேடர் யுகத்திலிருந்து வளர்ச்சி அடைந்து வருகிறது. விஞ்ஞான கண்டுபிடிப்புகள் உருவாக காரணம் மனிதனது தேவைகள் அதிகரித்தமையாகும்.

ஆதிகால மனிதனுக்கு உணவை பயன்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டது. அதன் பிரதிபலனாக நெருப்பு கண்டுபிடிக்கப்பட்டது. இதே போல் விவசாய யுக மனிதர்களுக்கு சிறந்த போக்குவரத்து முறை அவசியமாக இருந்தது. அதன் பிரதிபலனாக சக்கரம் கண்டுபிடிக்கப்பட்டது. இவ்வாறே விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள் உருவாகி வந்தன.

ஐரோப்பாவில் 1500 ஆம் ஆண்டின் பின் மக்களின் தேவைகள் அதிகரித்தன. அவற்றுள் பாதுகாப்பானது பிரதானமாக காணப்பட்டது. பாதுகாப்புத் தேவையை பூர்த்தி செய்து கொள்ளும் பொருட்டு பல ஆயுதங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. துப்பாக்கிகள், பீரங்கிகள் அவற்றுக்கு உதாரணமாகும்.

மறுமலர்ச்சி காலத்தில் மக்களுக்கு இரவு நேரங்களில் செயற்பட செயற்கை ஒளிமுதல் அவசியமாக இருந்தது. இத்தேவையை பூர்த்தி செய்யும் நோக்குடன் தோமஸ் அல்வா எடிசன் மின்குமிழை கண்டுபிடித்தார். இக்கண்டுப்பிடிப்பின் பின்னர் மக்களின் செயற்பாடுகளில் மாற்றம் ஏற்பட்டது. கைத்தொழில் புரட்சியின் போது பல மூலப்பொருட்கள் கிடைக்கப்பெற்றன. அவற்றை முடிவுப் பொருளாக மற்ற இயந்திரங்கள் அவசியமாக இருந்தது. இதன் விளைவாக பல இயந்திரங்கள் உருவாகின. நெசவு இயந்திரம், அச்சு இயந்திரம் என்பவற்றை அவற்றுக்கு உதாரணமாக கூறலாம்.

இதே வேளை தொலைத்தொடர்பு சாதனங்கள் அவசியமாக இருந்தன. தொலை -பேசியில் தொடங்கி இன்று இணையம் வரை தொலைத்தொடர்பு தன் பாட்டில் வளர்ச்சி அடைந்தது.

இவற்றின் வளர்ச்சியால் நன்மையைப் போல தீமைகளும் உண்டாயின. அயுதங்கள் பாதுகாப்புக்குப் பயன்படுத்தாமல் அழிப்பதற்கு பயன்படுத்தியதால் பல அழிவுகள் உருவாகின. இந்த கண்டுபிடிப்புகள் மனிதனை சோம்பேறியாக்கி வருகிறது. மனிதன் விஞ்ஞானத்தை பயன்படுத்தும் விதத்திலேயே அதன் விளைவும் தங்கியிருக்கிறது.

*M. Mayooran*
*9D*

# கல்வியின் தடைகள்

வாழ்க்கையில் சாதக, பாதக விடயங்கள் எம்மை நெருங்குவது வழமை. சாதக விடயங்களை ஏற்று பின்பற்றுவதும் பாதக விடயங்களைச் சாதக விடயங்களாக மாற்றியமைத்துக் கொள்வதும் நமக்கு பயனுடையதாக இருக்கும். அவ்வாறான பாதக அம்சங்களில் ஒன்றாகவே நெருக்கடி நிலை காணப்படுகின்றது.

நெருக்கடி நிலை ஏற்படுவதை எவராலும் தவிர்க்க முடியாது. எவ்விடயத்தை செய்ய நேர்கையிலும் அங்கு ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் நெருக்கடி ஏற்படுவது சாதாரண-மானது. எனினும் நெருக்கடிகள் ஏற்படும் பட்சத்தில் அதனை நீக்க நினைக்காமல் அந்த நெருக்கடிகளை எமது செயற்பாட்டிற்குத் தடையாக நினைப்பவர்கள் தான் எம்மில் அதிகம் காணப்படுகின்றனர். நாம் ஒரு விடயத்தை செய்ய முற்படுகையில் எதனையும் அதற்கு தடையாக நினைக்காமல் உறுதியான மனோபாவத்தைக் கொண்டிருந்தால் இவ்வாறான தடைகளை இலகுவாக தவிர்க்க முடியும். கல்வி கற்கும் போதும் இவ்வாறு தான் தடைகள் மற்றும் நெருக்கடிகள் ஏற்படுவதுண்டு.

மாணவர்களைப் பொறுத்த வரையில் பரீட்சைக் காலங்களிலேயே அதிகமாக நெருக்கடிகள் உள்ளன. அதற்கமைய பரீட்சையின் போது மாணவர்கள் பிரதான-மாக எதிர்கொள்ளும் நெருக்கடிநிலை நேரமாகும். சரியான முறையில் நேரத்தை முகாமைத்துவம் செய்யாதமையே இதற்குக் காரணமாகும். இது தமக்குத் தாமே ஏற்படுத்திக் கொள்ளும் ஒரு நெருக்கடிநிலை ஆகும். இன் நெருக்கடிநிலை ஏற்பட்டதன் பின் அதனைத் தடுப்பது கடினம். எனவே, நெருக்கடிகள் ஏற்படுவதற்கு முன்னர் இவற்றைத் தடுப்பது நன்று.

சில மாணவர்களுக்கு வறுமை, குடும்ப சூழ்நிலை, வீண் ஆசை, தீயவர்களின் சகவாசம் என்பன அவர்களின் கல்விக்கு நெருக்கடியாக அமைகின்றன எனினும் அந்த நெருக்கடிகளைக் சாதரணமாக கொண்டு கல்வியை நிறுத்துவது கூடாது. நெருக்கடிநிலை என்பது, தானாகவும், எதிர்பார்க்காமலும் ஏற்படக் கூடியது.

ஆகவே நாம் எமது கல்வியின் தடைகளைத் தாண்டி வெற்றி பெறுவோமாக.....

*M.R. Azlif Haqqani*
*Grade 7D*

# எம் தமிழ்மொழி

தமிழ் மொழியானது தொன்மையான மொழி "கல்தோன்றி மன்தோன்றாக் காலத்து முன்தோன்றிய மூத்தகுடி தமிழர்களால் பேணிப் பாதுகாக்கப்பட்ட மொழி. மொழி ஒரு இனத்தின் தனித்துவமாகும். உலகச் செம்மொழிகளில் தமிழும் ஒன்று. உயர் தனிச் சிறப்புக்கள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் எம் தமிழ்மொழியின் பெருமையை நாம் போற்ற வேண்டும். இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழின் பிறப்பிடம் தமிழ்மொழி.

தமிழ்மொழியை பன்னெடுங் காலமாகப் போற்றி வளர்த்தோர் அநேகர். பல மதத்தவர்களாலும் அரவணைக்கப்பட்ட மொழி தமிழ்மொழி. சைவர்கள், வைணவர்கள், சமணர்கள், பௌத்தவர்கள், இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் ஆகிய பல மதத்தவர்களும் தமிழ் மொழியை ஊடகமாக்கித் தம் சமயக் கருத்துக்களைப் பரப்பியுள்ளனர். பக்திக்கொரு மொழி தமிழ் என்று தமிழ் தூது தனிநாயகம் அடிகளால் வியந்துரைக்கப்பட்டது. தமிழ்மொழியே பக்தி இலக்கியங்கள் தமிழ்மொழி வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பு எத்தனை சிறப்பானது. தமிழ் நூல்களில் தலையாயது அறநூலாம் திருக்குறள் ஆகும். நூல்களில் தலையாயது அறநூலாம் திருக்குறள் ஆகும். வள்ளுவனால் உலகம் வாழ வகுத்தளிக்கப்பட்ட திருக்குறளுக்கு நிகர் வேறில்ல. தன்னை யாரென்றும் தன் மதம் எதுவென்றும் தாம் படைத்த நூலில் எந்த இடத்திலுமே வள்ளுவர் குறிப்பிடவில்லை. முழு உலகுக்குமே அறநெறியுரைத்த வள்ளுவரால் தமிழ்மொழி பெறும் பெருமையை அறியாதார் யார்? எனவே தான் வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு என்று தமிழரின் பெருமையைப் பாடினான் பாரதி.

பாட்டுக்கொரு புலவனான தேசியக் கவிஞன் பாரதி பல மொழிகளை அறிந்து புகழ்கொண்ட தமிழ்கவிஞன். யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவதெங்கும் காணோம் என்று மார்தட்டிப் பெருமை கொள்கிறான். தமிழுக்கு அமுதென்று பேர் அந்தத் தமிழ் இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர் என்று பாடி எம் நெஞ்சில் இடம் பிடித்தவன் பாரதிதாசன். புதுச்சேரியில் பிறந்து புதுமைக்கவி படைத்துத் தமிழ் மொழிக்கும் தமிழ் இனத்திற்கும் பெருமை சேர்த்தவர் பாரதிதாசன். கீர்த்திகள் பல கொண்ட நம் தமிழ் மொழி எமது நாட்டில் மாத்திரமல்ல இந்தியா, மலெசியா சிங்கப்பூர் மொரிசியஸ் முதலான பல நாடுகளிலும் சிறப்பாக வழங்கி வருகிறது. இன்று பிரித்தானியா, கனடா, அயல் நாடுகளிலும் தமிழர் பெருமையை நிலை நாட்டும் மொழியாகத் தமிழ் தனித்துவம் பெற்று வருகிறது. தமது மொழியைப் போற்றி மதித்து வளர்க்க வேண்டியது எம் தலையாய கடமையாகும். தமிழின் சுவை-வயை உணர்ந்து, அதன் பெருமையால் மகிழ்ந்து நாமும் தமிழரெனத் தலைநிமிர்ந்து வாழ்வோம்.

வாழ்க தமிழ்மொழி! வளர்க தமிழ் மொழி!

ஆ. பிரேந்திரா
7C

# உழைப்பின் உயர்வு

ஒருவருடைய உயர்ச்சிக்கு காரணமாக அமைவது அவருடைய உழைப்பாகும். ஆட்சித் தலைவர்களானாலும், அறிவியலாளர்களானாலும் ஒருவருடைய உழைப்பே அவரை உயர் நிலைக்கு கொண்டு செல்கின்றது.

உழைப்பு என்பது உடலை வருத்திச் செய்யும் வேலைகளை மட்டும் குறிப்பது அல்ல. நிலத்தில் வேலை செய்தாலும், கடற்றொழில் செய்தாலும் அது உழைப்புதான். ஆலைகளில் கூலி வேலை செய்தாலும் வியாபாரம் செய்தாலும் உழைப்புத்தான். அறிவைப் பயன்படுத்தி வைத்தியனாகவோ, வழக்கறிஞனாகவோ தொழில் செய்தாலும் உழைப்புதான். கல்வியைக் கருத்துடன் முயற்சி எடுத்துக் கற்றாலும் அதுவும் உழைப்பேயாகும். அகவே செய்யும் தொழிலை எடுத்துச் செய்யும் போது அதை நாம் உழைப்பு என்கின்றோம்.

செல்வம் படைத்தவர்களும் உழைப்பின்றிச் சோம்பேறிகளாய் உண்டு களித்திருப்பார்களானால் அவர்களுடைய முன்னோர் சேர்க்க செல்வமெல்லாம் சில நாட்களிலேயே அழிந்து விடும். வறிய குடும்பத்திலே பிறந்த ஆபிரகாம் லிங்கன் தனது அயராத உழைப்பினால் அமரிக்காவின் ஜனாதிபதியாக உயர்ந்தார். மின் குமிழையும் எண்ணற்ற புதிய சாதனங்களையும் கண்டபிடித்தவரான தோமஸ் அல்வா எடிசன் பாடசாலைக் கல்வியைத் தொடர முடியாத நிலையில் வறுமையில் வாடியவரே.

இந்தியாவின் ஏவுகணைத் தொழில்நுட்ப விஞ்ஞானியும், முன்னாள் குடியரசு தலைவருமான அப்துல்கலாமும், சாதாரண ஏழைக் குடும்பத்தில் பிறந்தவரே. உழைப்பு மனிதனின் உயர்வுக்கு எவ்வளவு முக்கியமானது என்பதற்கு இவர்களின் உயர்ச்சி சிறந்த உதாரணங்களாகும்.

ஆகவே இளமையிலிருந்தே கடும் உழைப்புக்கு எம்மை பழக்கப்படுத்திக் கொண்டால் நாமும் வாழ்க்கையில் உயர்வடைந்து நாட்டையும் உயர்த்தலாம்.

*சி.சத்யன்*
*6-C*

# கௌசிகர் வாக்கிய கலண்டர்

கொண்டதே கோலம் கண்டதே வாழ்க்கை யென்று இருந்தால்
வாழ்க்கை உன்னை கண்டு கொள்ளாமலே போய்விடும்.

பெண்கள் நிழலைப் போல, ஆண்கள் பின்னால் சென்றால்
முன்னால் போவார்கள்; திரும்பி நடந்தால் பின்னால் வருவார்கள்.

மனிதனை வாகனமாகக் கொண்டால், தன்னைக் கடத்தி விடுவார்கள்
என்பதற்காகவே, இறைவன் விலங்குகளை வாகனமாகக் கொண்டான்.

அந்தரங்க இரகசியங்களை ஆருயிர் நண்பரக்கூடச் சொல்லாதீர்கள்
அவற்றைச் சொல்லியவர்களை ஒருபோதும் எதிரியாக நினைக்காதீர்கள்

மறுமணம் என்பது வாழ்க்கையை இழந்தவருக்கே?
வாழ்க்கையைத் துறந்தவருக்கல்ல.

மனசாட்சிக்கு மேலானதொரு சாட்சியில்லை
அதை பூஜிக்காவிட்டால் உனக்கு ஆட்சியில்லை.

சொந்தச் சட்டி காலியாகிவிட்டால் பிச்சை எடு
அடுத்தவன் சட்டியில் களவு எடுக்காதே!

நீ யார் என்ற கேள்விக்கு தமிழன் என்று சொல்லாதவன் நல்ல
மனிதனாக இருக்க மாட்டான்.

*Amithan*
*12MT*

# சந்தர்ப்பங்கள்

ஒரு பிரச்சினை நம்மை எதிர்கொள்ளின் நாம் என்ன செய்கின்றோம்? செய்வோமா? வேண்டாமா? என்ற சலன புத்தியுடன் ஆயிரம் பேர்களிடம் ஆலோசனை கேட்டுக் கொண்டு, வந்த சந்தர்ப்பத்தையும் போகவிட்டு விட்டு, ஏமாந்த சோமகிரிகளாக கொட்டாவி விட்டுக்கொண்டிருக்கின்றோம். கணத்தில் விசயத்தை கிரகித்து, மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததைப் பற்றிப் பிடித்து மற்றவைகளை யார் அதற்காக தியாகம் செய்து விடுகின்றானோ அவனே நிச்சயம் வெற்றி பெறுவான்.

மனிதர்கள் பெரும்பாலும் தோல்வியடைவதற்குக் காரணம் ஒன்றைத் தேர்ந்தெடுப்பதும் மற்றவைகளை அதற்காக தியாகம் செய்யவும் வேண்டிய நிலை ஒரே சந்தர்ப்பத்தில் ஏற்பட்டுவிடுவதே. ''யாது செய்வது? எதை தேர்ந்தெடுப்பது; என்பதைத் அறியாது அவர்கள் கிடைத்த சந்தர்ப்பத்தை கோட்டை விட்டு விடுகின்றனர். இப்படிப்பட்டவர்கள் தாங்கள் செய்யும் காரியங்களை சிறிது முன்போ சிறிது தாமதித்தோ செய்து எல்லாவற்றையும் வீணாக்கி விடுகின்றனர். வருங்காலத்தில் என்ன செய்வது என்பதைப் பற்றி அவர்கள் அறிய மாட்டார்கள்.

தகுதி வாய்ந்தவனுக்கு தங்கமான சந்தர்ப்பங்கள் ஒன்றல்ல இரண்டல்ல ஆயிரக்கணக்கில் எதிர்ப்படுகின்றன. ஏனெனில் அவனையே எல்லோருடைய கண்களும் தேடித் திரிகின்றன. வீடு கட்டவோ பயிர் விளைக்கவோ சுரங்கம் தோண்டவோ சுகப்படுத்தவோ வழக்காடவோ விரும்புவர்கள் ஒவ்வொருவரும் அந்தந்த தொழிலில் நிபுணத்துவம் அடைந்தவர்களைத் தேடிக் திரிகின்றனர். எனவே தகுதி வாய்ந்தவன் எங்கு போய் ஒளிந்து கொண்டிருந்த போதும் கண்டுபிடிக்கப்படுவான். எனவே, சந்தர்ப்பங்கள் கிடைக்கவில்லையே என்று நீ கவலைப்பட வேண்டியதில்லை. நீ உன்னைத் தகுதி வாய்ந்தவனாக ஆக்கிக் கொள்ள மற்றவர்களின் தேவை உனக்கான சந்தர்ப்பங்களை உன் வீட்டு வாசற்படியில் கொண்டு வந்து நிறுத்தி விடும்.

சந்தர்ப்பமானது மானிட சமுதாயத்தின் அடிப்படையிலே அமைந்து கிடக்கிறது. எங்கும் சந்தர்ப்பங்கள் நிரம்பி இருக்கின்றன. ஆனால் அதைப் பற்றிப் பிடிக்கத் தன்னை தயார்படுத்திக் கொள்வதும் அதனைப் பயன்படுத்திக் கொள்வதும் ஒவ்வொரு மனிதனும் தனக்குத் தானே செய்து கொள்ள வேண்டிய காரியமாகும். பற்றிப் பிடித்துப் பயன்படுத்தத் தவறிவிட்டால் சந்தர்ப்பம் நம்மை பார்த்து நகைத்து விட்டு ஓடிவிடும்.

**நன்றி**

*தொகுப்பு*
*H.B.A. Azad*
*கணிதப்பிரிவு 2013*

# தமிழ்மொழி

எமது தாய் மொழி தமிழ். தமிழ் என்பது பொருள், இனிமை என பொருள்படும். உலகில் காலத்தால் மிக மூத்த மொழிகள் பலவுள்ளன. அவற்றுள் தமிழ், சமஸ்கிருதம், இலத்தீன் முதலியன ஒரு சிலவாகும். சமஸ்கிருதமும் இலத்தீனும் இன்று பேச்சு வழக்கில் இல்லை. ஆனால் தமிழ்மொழி பேச்சு வழக்கிலும், எழுத்து வழக்கிலும் பயின்று வருகின்றது.

தமிழ் மொழி, இந்தியத் துணைக்கண்டத்தின் தென்பகுதியில் வாழ்ந்த மக்களிடையே வழங்கி வந்தது. தமிழ்மொழி வழங்கிய தேயம் தமிழகம், தமிழ்நாடு, திராவிடம் முதலிய பல பெயர்களால் அழைக்கப்பட்டது. தமிழ் நாட்டில் அன்று பிறந்து வளர்ந்து வாழ்வு பெற்ற தமிழ், இன்று மலேசியா, சிங்கப்பூர், தென்னாபிரிக்கா வேறும் பல்தேயங்களிலும் வழங்கி வருகின்றது. தமிழ் கூறும் நல்லுலகம் மிகவும் விரிவடைந்து விட்டது.

தமிழ்மொழி இயல், இசை, நாடகம் என்னும் முப்பெரும் பிரிவுகளைக் கொண்டது. இயற்றமிழ் இலக்கணத்துடன் கூடியது. இசைத்தமிழ் இசையுடன் இயைந்தது. நாடகத்தமிழ் கதையும் இசையும் கூத்தும் கலந்து வருவது.

பண்டைத்தமிழ் மன்னர்கள் மூன்று சங்கங்களை அமைப்பித்தனர். அவை முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என்பனவாகும். சங்கங்கள் பாண்டி நாட்டு மதுரையில் இருந்தன. இச்சங்கங்களில் கடவுளரும் புலலோரும் மன்னர்களும் உறுப்பினராய் இருந்தனர். பல பல தடவைகள் நூல்களை இயற்றினார்கள்; ஆராய்ந்தார்கள்.

கடைச்சங்கப் புலவோர் ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளின் முன்பு வாழ்ந்தனர். இலங்கை எமது தாய்த்திருநாடு. எமது நாட்டவரான ஈழத்துப் பூதன்தேவனார் கடைச்சங்கப் புலவருள் ஒருவராயிருந்து தமிழாராய்ந்தார். அவர் நக்கீரர், கபிலர், பரணர் முதலிய சங்கச் சான்றோர்களைப் போலத் தாமும் அரிய பாடல்களை எழுதி உள்ளார்.

தமிழ்நூல் பரப்பு மிகவும் பரந்தது. திருக்குறள், சிலப்பதிகாரம், கம்பராமாயணம், பெரியபுராணம், தேவாரம், திருவாசகம், திவ்வியப் பிரபந்தம் என்பன சிலவாகும்.

பாரதியார் ''யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல் வள்ளுவர் போல் இளங்கோவைப் போல் எங்காயினும் கண்டதில்லை'' என்று உரைத்துள்ளார்.

''நல்லைநகர் ஆறுமுகநாவலர் பிறந்திலரேல் சொல்லுதமிழ் எங்கே'' என்று சொல்லும் அளவிற்கு நாவலரின் தொண்டு அமைந்திருந்தது.

எளிமை, இனிமை, தொன்மை படைத்த தமிழ் மொழியைச் சான்றோர் தமிழை தெய்வம் என்றும் போற்றுவர். எங்கள் தாய், தமிழ் பேசும் பல கோடி மக்களின் இதயங்களில் இருந்து நல்லாட்சி புரிந்து வருகின்றான்.

வாழ்க தமிழ் அன்னை

*V. Kogulan*
*9*

# தேனினும் இனிய தமிழை
# தேடிப் படிப்போம்.....

ஔவை தந்த
அருந் தமிழை
செவ்வையான
செந்தமிழை
இனிக்க, இனிக்கச்
சுவைக்கின்றேன்
என் உயிரின் மேலாய்
மதிக்கின்றேன்

கம்பன் வரைந்த
கனித்தமிழை
வள்ளுவன் வாயில்
வழி வந்த தமிழை
திருக்குறள் பாடும்
தெள்ளு தமிழை
பருகின்றேன் - நான்
படிக்கின்றேன்

சிலம்பிலே சிரிக்கும்
சிறப்புறும் தமிழை
வளையாபதியில்
நிலைகொள்ளும் தமிழை
குண்டலகேசியில்
நின்றாடும் தமிழை
மனதால் ரசிக்கின்றேன்
உயிரில் உணர்கின்றேன்

சீவகசிந்தாமணியில்
தவம் கொள்ளும் தமிழை
மணிமேகலையில்
பனி பெய்யும் தமிழை
மணிக்கு மணி நான்
மடிதாங்குகின்றேன்

இனிக்கும் தமிழை
இனி ரசிக்கின்றேன்

தூக்கத்தில் நான் பேசியதும்
தூய தமிழில் தான்
ஆக்கம் படைப்பதும்
அற்புதத் தமிழிர் தான்
ஏக்கமாய் அம்மா
அழைப்பதும் தமிழில் தான்
ஊக்கமாய் றோயலில் - நான்
உரையாற்றுவதும் தமிழில்தான்

உமிழ் நீர் கூட - என்னில்
ஊறுவது தமிழில் தான்
அமிழ்தமெனும் அருமருந்தின்
அறுஞ்சுவையே தமிழால் தான்!
பேச்சும் தமிழில் தான் - என்
மூச்சும் தமிழில் தான்
ஓச்சும் உயர் மொழி
உலகில் தமிழேதான்!

*இவ்வண்ணம்*
*M.F.M. Zaini*
*12MT*

# மனித வாழ்வின் சிறப்பு.....

நாம் வாழுகின்ற யுகம் விஞ்ஞான, தொழில்நுட்ப அபிவிருத்தி அதி அற்புத வளர்ச்சி கண்டுள்ள காலப்பகுதி. இதன் பயனாக மக்களின் வாழ்க்கை வசதிகள், நாகரிக ஆடம்பரங்கள், செல்வச் செழிப்பு என்பன மிகவும் செழித்து ஓங்குகின்றன. அவை அனைத்தும் மக்களை, மிக்க மகிழ்ச்சியுடன் இன்ப வாழ்வு வாழச் செய்யப் போதுமானவை என்று தான் எல்லோரும் எண்ணுகின்றனர். ஆனால் இன்றைய உலகில், மக்கள் வாழ்க்கையின் உண்மை நிலை என்ன?

மனித வாழ்க்கை துன்பங்கள் நிறைந்துள்ளது என்பது பரவலாகப் பேசப்படுகின்ற பேச்சு. இன்று நேற்றல்ல, மனித நாகரிகம் தொடங்கிய காலத்திலிருந்தே இவ்வாறாகப் பேசப்பட்டு வருவதை நாம் அறிவோம். மனித வாழ்க்கைத் துன்பங்களுக்குரிய காரணங்கள் எது, அத்துன்பங்களிலிருந்து மனிதர்கள் விடுதலை பெறுவதற்குரிய வழிகள் எவை?

வாழ்க்கையின் பல இடர்பாடுகளுக்கெல்லாம் மனிதர்களின் அறியாமையே காரணம். அறியாமையெனும் இருளை அகற்றுவதற்கு அறிவு எனும் ஒளி ஏற்றப்பட வேண்டும். இதற்குக் கல்வி அவசியம். இன்று இந்த 21ம் நூற்றாண்டில் வாழ்கின்ற நாம் கல்வியின் முக்கியத்துவத்தை நன்கு உணர்ந்தவர்கள். நாடுகளில் கல்வி கற்போர், கல்வி கற்றவர்களின் தொகை அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. இந்த வீறு கொண்ட அறிவுப் பெருக்கினால் மக்களிடையே அறியாமை நீங்கி விட்டதா? மக்களிடையே அறியாமை நீங்கி விட்டிருந்தால், மக்களிடையே துன்பங்கள், துயரங்களும் நீங்கப் பெற்றிருக்கும். ஆனால் உண்மைநிலை அவ்வாறில்லை. மாறாக துன்பங்களும் துயர்களும் இன்று பெருகியே காணப்படுகின்றன. அவ்வாறாயின் இந்த அறிவுப் பெருக்கம் தான் ஆற்ற வேண்டிய பணியை ஆற்றத் தவறிவிட்டது. மக்களிடையே உள்ள அறியாமையே நீக்கத் தவறிவிட்டது.

இன்றைய உலகில் பெருகிப் பிரகாசிக்கின்ற அறிவு, விஞ்ஞானம் தொழில்நுட்பம் சார்ந்த அறிவியல் அறிவு என்பது அறிவியல் மட்டுமல்ல அறிவியலும் சார்ந்தது. அதாவது அறப்பண்புகளின் அடிப்படையில் எழுகின்ற மனித விழுமியங்கள் சார்ந்தது. மனித விழுமியங்கள் சேர்க்கப்படாத அறிவு பயனற்றது. அறிவு விழுமியங்கள் சார்ந்ததாக அமையும் போது தான் பயன் நிறைந்ததாகிறது.

மக்கள் வாழ்வின் அமைதி, அடக்கம், திருப்தி, சாந்தி, சமாதானம், நல்லொழுக்கம் என்பன காணப்படும் போது தான் வாழ்க்கை மகிழ்ச்சி நிறைந்ததாகவும், இன்பம் பொங்குவதாகவும் அமையும். உலகியல் தேவைகளைப் பூர்த்தி செய்து விட்டால் வாழ்க்கையில் நிறைவு ஏற்பட்டு விடும் எனத் தற்கால மக்கள் நினைக்கின்றார்கள். அதற்காக இரவு பகலாக ஓய்வின்றி நீதி நியாயம் பாராது கருமமே கண்ணாக

உழைக்கின்றார்கள். இலக்கும் அதனை அடைதலும் முக்கியமேயன்றி அதற்காகப் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் பற்றி அவர்கள் அக்கறை கொள்வதில்லை. வழிமுறைகள் நேர்மையற்றதாகவும் தவறானவையாகவும் இருக்கலாம். அவற்றைப் பற்றி சிந்தை கொடுப்பவர்கள் மிக அரிதாகவேயுள்ளனர். பிழையைச் செய்த பின்னர், அது சரியென நியாயப்படுத்துவதிலும் பிழையை மறைப்பதிலும் பலர் கெட்டிக்காரர்களாக விளங்குகின்றனர்.

மனிதர்கள் பெருமகிழ்ச்சியும் பெருவாழ்வும் வாழ வேண்டியவர்கள் அத்தகைய நிறைவான வாழ்விற்கு முற்றிலும் தகுதியும் தகைமையும் உடையவர்கள். மனிதர்களே அதி உயர்ந்த அற்புதப் படைப்பு ஆக மிளிர்கின்றனர். மற்றைய எந்த உயிரினமும் மனிதனுக்கு எந்த வகையிலும் ஈடு இணையாகாது. இந்த அரிய உண்மையை மனிதர்கள் அறிந்து உணர்ந்து கொள்ள வேண்டும். ``தன்னை அறிந்தவன் தரணி ஆள்வான்'' என்பது முதுமொழி.

மனிதன் தன்னையறிதல் மூலம் தன்னிடம் உள்ள நிறைகளையும் குறைகளையும் அறிகின்றான். இச் செயற்பாடு மனிதனுக்கு மட்டும் இயலக் கூடியது. இவ்வாறு அறிந்து கொள்வதினால் தன்னை உணர்தல் மூலம் மனிதனுக்கு உரித்தானவை, இயல்பானவை, உடன்பாடானவை அணைத்துக் கொள்ளவும் தனக்கு அந்நியமானவை எவை என்பதை உணர்ந்து தெளிந்து கொள்ளும் வாய்ப்பு மனிதனுக்கு ஏற்படுகின்றது.

மனித வாழ்வின் சிறப்புக்கும் உயர்வுக்கும் உறுதுணையாக இருப்பவை மனிதனை மனிதனாக வாழ்விப்பவை மனிதர்களின் பெருந்தனம் ஆகும். எனவே அத்தகையவை மனித இனத்திற்கு பெறுமதியும், பெறுமானமும் கொண்டவையாக உள்ளன. மனிதர்களுக்கு பெருமதிப்பும் பெறுமானமும் கொண்ட பண்புகள், குணவியல்புகள், நடத்தைகள் அனைத்தையும் மனித விழுமியங்கள், மனித மேம்பாடுகள் என்கிறொம். மனித வாழ்க்கையை மேம்படச் செய்பவை மனித விழுமியங்கள். அவை மனித குலத்திற்கு உரிமையானவை. எனவே ஒவ்வொரு மனிதனாலும் பேணப்பட வேண்டியவை மனித விழுமியங்கள் வளர்க்கப்பட்டுப் பேணப்பட்டு வாழ்க்கையில் அவற்றை மேற்கொண்டு வாழும்போது தான் மனித வாழ்க்கை உயர்வு அடையும். சீரும் திருவும் பொலிய, இன்பமும் மகிழ்ச்சியும் பொங்க மனித வாழ்க்கை செம்மையும் பசுமையும் வாய்ந்ததாக விளங்கும்.

*ச. பாலகஜன்*
*12 MT*

# தாலாட்டு

ஏட்டு இலக்கியங்களுக்கெல்லாம் தாய்மை இலக்கியமாகத் திகழ்வது வாய்மொழி இலக்கியம் இதனை ''எழுதாக் கிளவி'' என்பர். நாட்டுப்புறப் பாடல்கள் எளிமையானவை. இனிமையானவை. வாயில், பிறந்து செவிகளில் உலவி, காற்றில் மிதந்து கருத்தில் இனிப்பவை. இது நாட்டுப்புற மக்களின் சொத்து. இந்த இலக்கியம் என்று பிறந்தது எவரால் பிறந்தது என எடுத்துச் சொல்ல இயலாத பண்பும் பாங்கும் கொண்டவை.

''ஏட்டில் எழுதவில்லை
எழுதிநான் படிக்கவில்லை
வாயிலே வந்தபடி
வகையுடனே நான் படிப்பேன்''

என்ற வரிகள் இதனை மெய்ப்பிக்கும். நாட்டுப்புறப் பாடல்கள் பல வகைகளில் இருந்தாலும் தாலாட்டுக்கென்று தனிச் சிறப்பு உண்டு. தாயன்பின் வெளிப்பாடாகத் திகழும் தாலாட்டுப் பற்றி இவண் காண்போம்.

## சொல்விளக்கம்

தாலாட்டு என்ற இப்பெயர் காரணம் பற்றி அமைந்ததாகும் ''தால்'' என்றால் நாக்கு ''ஆட்டுதல்'' என்பது அசைத்தல். நாவினை அசைத்து, சுழித்து, குரவையிட்டு, ஆட்டிப் பாடுவதால் தால்+ஆட்டு = தாலாட்டு எனப் பெயர் பெற்றது. அதனைத் தொடர்ந்து இசைக்கும் பாடலையும் தாலாட்டு என்கிறோம்.

இதனை தாலாட்டு, ஓராட்டு எனத் தாய்மார்கள் வழங்கினாலும் இத் தாலாட்டுப் பாடல்களைத் தலைமையாகக் கொண்டு எழுந்த இடைக்கால இலக்கியங்கள் ''தாராட்டு'' என்றும் பிள்ளைத்தமிழ் நூல்கள் ''தாலேலோ'' என்றும் குறிப்பிடுகின்றன.

## தாலாட்டின் அளவும், பண்ணும்

தாயின் அன்பு வெளிப்பாடே தாலாட்டு. அவர்கள் தங்கள் மனத்தின் பாரங்களான மகிழ்ச்சி, துக்கம் இவைகளை வெளிப்படுத்த தாலாட்டு அவர்களுக்கு ஒரு ஊடகமாகப் பயன்படுகிறது. தாலாட்டுப் பாடல்கள் குறிப்பிட்ட கடவுளையோ, உறவினரையோ, பாடவேண்டும் என்ற வரையறை இல்லை. தாயின் மன இயல்புக்கு ஏற்றவாறும், குழந்தையின் உறக்கத்திற்கு ஏற்றவாறும் தாலாட்டின் அளவும், ஓசையும் கூடுதலும் குறைதலும் உண்டு.

தாலாட்டின் பண் ''நீலாம்பரி'' என்று கூறுவார்கள். தாலாட்டுப் பாடும் பெண்கள், ஒரே பண்ணிலே பாடுவது இல்லை ஒவ்வொருவருடைய பேச்சு ஒலிக்கு ஏற்பவும் மாறுபாடு அடைவதுண்டு. இவ்வாறே பல்வேறு விதமாகத் தாலாட்டின் அளவும் பண்ணும் அமைந்துள்ளன.

குழந்தைப்பேறு

ஒரு பெண் முழுமையடைவது தாய்மை அடைந்த பிறகு தான் என்பர். அத்தகைய சிறப்பிற்குத் தன்னை ஆளாக்கிய குழந்தையின் மீது தாய் அளவு கடந்த அன்பு

பாராட்டுகிறாள். அதனால் ஒரு குழந்தையின் சிறப்பு என்ன என்று சொல்ல நினைத்த வள்ளுவன்

> ''குழலினிது யாழினிது என்ப தம்மக்கள்
> மழலைச் சொல் கேளாதவர்''

என்ற ஒரு குழந்தையின் மழலைப் பேச்சு என்பது இனிமையாக ஒலிக்கக் கூடிய சூழலும், யாழும் கூட ஒரு குழந்தையின் மழலையின் இனிமைக்கு ஈடாகா என உரைக்கிறார். குழந்தைப் பேற்றுக்காக எவ்வாறெல்லாம் கடவுளை வேண்டுகிறாள் என்பதை

> ''அரசே உனை வேண்டி
> ஆடாத தீர்த்தமில்லை
> பொருளே உனை வேண்டி
> போகாத கோயிலில்லை''

எனத் தொடங்கி ஆடிய தீர்த்தங்களையும் பாடல் வரிகளாக உரைக்கும் விதத்தில் குழந்தைப்பேற்றின் அவசியத்தையும் தான் தாலாட்டுகின்ற அந்தக் குழந்தைப்பேற்றிற்காக அவள் பட்ட துன்பங்களைத் தாலாட்டின் வாயிலாகவே உரைக்கிறாள்.

### தாலாட்டின் ஏழ்மை

எல்லாத் தாயும் தன் குழந்தையை எவ்வாறெல்லாம் சிறப்போடு வளர்க்க வேண்டும் என்று எண்ணுகிறாள். ஆனால் அவளின் ஏழ்மை நிலை அவளின் ஆசையைக் செயலாற்ற முடியாத நிலை ஏற்படும். தன் குழந்தையை ராஜ ராஜகுமாரனாகவே கற்பனை செய்யும் தாயின் உள்ளம் சிலவேளைகளில் ஏழ்மையின் தாக்குதலால் அதனைத் தாலாட்டின் போது வெளிப்படுத்துதலும் உண்டு.

> ''முத்துச் சிரிப்பழகா
> முல்லைப்பூ பல்லழகா
> வெத்துக் குடிசையிலே
> விளையாட வந்தாயோ?
> ஏழைக் குடிசையிலே
> ஈரத் தரைமேலே
> தாழம்பாய் போட்டுத்
> தவழ்ந்தாட வந்தாயோ
> தரையெல்லாம் மேடுபள்ளம்
> தவழ்ந்தால் உறுத்தாதோ
> பச்சரிசி சோளம்
> பாதிநாள் பட்டினிதான்
> பசும்பால் கொடுத்துந்தன்
> பசி தீர்க்கப் பார்த்தாலும்
> பருத்திவிதை இல்லையடா
> பசு பாலை தரலையடா
> பிள்ளைப்பால் ஊட்டியுனைப்

போசனைகள் செய்திடவே
கொள்ளையுத்தம் பஞ்சங்
குரங்காகிப் போனேண்டா''

என தன் ஏழ்மையின் தாக்கத்தைத் தாலாட்டில் வெளிப்படுத்துகிறாள். உள்ளத்துத் துன்பம் தாங்கவியலாத நிலையில் அதனை எடுத்துப் புறத்தே சொல்லுவது ஆறுதல் பெறும் வழியாகும் என்ற மனவியலே இதற்கடிப்படையாகும்.

**தாலாட்டில் கற்பனை**

குழந்தையைத் தாலாட்டும் போது பல்வேறு வகையாகக் கற்பனை செய்து தாலாட்டுவது இயல்பு அவ்வகையில் இயைபுக் கற்பனையும், மிகைக் கற்பனையும் உண்டு. மனம் உணரும் உணர்ச்சியில் மிகை தோன்றி வளரும், கற்பனையை மிகைக் கற்பனை என்பர். குழந்தை அழும் கண்ணீர் ஆறாகப் பெருகி அதில் முந்நூறுபேர் குளித்தனர். ஐநூறு பேர் கைகழுவினர். அதன்பிறகு அது குளத்தை நிறைத்து, வாய்க்கால் வழியோடி, வழிப்போக்கர் வருத்தம் தீர்த்தது. இஞ்சி, இருவாட்சி, மஞ்சள், மருதாணி, தாழைகட்குப் பாய்ந்து வாழைக்கொல்லையில் வற்றுவதாக அந்தக் கற்பனை அமைந்திருக்கும்.

**தாலாட்டில் உறவினர்**

பெண் திருமணமாகி கணவன் வீடு சென்றாலும் தன் தாய்வீட்டின் பற்று சிறிது அதிகமாகவே இருக்கும். இதன் காரணமாகக் குழந்தையைத் தாலாட்டும் போது தன் பிறந்தவர்களின் பெருமையை உரைக்கும் விதத்தில் நாட்டுப்புற இலக்கியத்தில் பல்வேறு வகையான பாடல்கள் வழங்கி வருகின்றன.

''வெள்ளியால் செய்த ஏட்டில்
வைர எழுத்தாணி கொண்டெழுத
பள்ளியில் சேர்க்க மாமன்
பணிவுடன் வந்திடுவான்''

என்ற பாடலில் ஒரு குழந்தைக்குக் கல்வியின் முக்கியத்துவம் உணர்த்தப்பட்டு, மாமனின் உதவி உரைக்கப்படுகிறது.

குழந்தையை உறங்க வைக்க மட்டும் தாலாட்டு என்ற இந்த நாட்டுப்புற இலக்கிய வகை உதவாமல் அக்குழந்தைக்கு முதலில் இசையின் பெருமையை உணர்த்தியும் வளரும் பருவத்தே எவ்வாறெல்லாம் இருக்க வேண்டும் என்பதைச் சொல்லும் விதத்திலும், கல்வியின் சிறப்பை உணர்த்தும் பாடல்களும், உறவின் பெருமைகளைச் சொல்லும் பாடல்களும் சமுதாயச் சீர்கேடுகள் சொல்லும் பாடல்களும் எனப் பல்வேறு பொருள்களில் இந்தத் தாலாட்டு எனும் இலக்கியம் நாட்டுப்புற இலக்கியத்தில் தனக்கென்று ஒரு தனி இடத்தைப் பெற்றிருக்கிறது.

*கி.விவேஷ்*
*12MT*

# பழமொழிகளின் பழம்பொருண்மைகள்

நாட்டுப்புறவியலின் சிறப்புக்கூறுகளுள் பழமொழிகளும் அடங்கும். நாட்டுப்புற மக்களின் வாழ்வியல் உணர்வின் வெளிப்பாடுகளாக விளங்கும். பழமொழிகள் சிலவற்றின் பொருண்மைகள் இன்று மாற்றமடைந்துள்ளன. பழமொழிகளுக்கு வழங்கும் தற்காலப் பொருண்மைகளின் தகுதிப்பாட்டையும், முற்காலப் பொருண்மைகளின் உறுதிப்பாட்டையும் விளக்கும் வகையில் இக்கட்டுரை அமைகிறது.

## பழமொழிகள் - விளக்கம்

பழமொழிகள் பழைமை வாய்ந்த மொழிகள்; தொன்றுதொட்டு வழங்கிவரும் இயல்புடையன. பழுத்த(வர்) மொழி - வயது, பட்டறிவு அல்லது அனுபவத்தில் முதிர்ந்த பழுத்த மக்களின் உள்ளுணர்வின் வெளிப்பாடாக விளங்கும் மொழிகள் என்ற கருத்தும் நிலவுகிறது. பழம்மொழி, பழங்கள் பொதுவாக இலகுவாக உண்ணத்தக்கன; இலகுவில் உடலில் கலப்பன: உண்ணும் போது இனிப்பன. அவற்றைப்போல, பழமொழிகள் வாழ்க்கைக்கு வளம் சேர்க்கும் வகையில் மனிதர்களின் உணர்வில் கலந்து மகிழ்விப்பன; அறிவுறுத்துவன. எனவே பழமொழிகளைப் பழமை மொழி, பழம் மொழி, பழுத்த(வர்) மொழி என விரித்துப் பொருள் கொள்ளலாம்.

## பழமொழிகளின் சிறப்பியல்புகள்

பழமொழிகள் சூத்திரம் போன்று, சுருக்கம், தெளிவு, திட்பநுட்பம் செறிந்தவை. அவற்றைச் சொன்னால், கேட்டால், எண்ணினால் இன்பம் விளைந்து, அறிவுறுத்தும் போக்கில் அமைவன. நூலுக்கு இலக்கணிகளால் உரைக்கப்படும், சுருங்கச்சொல்லல், விளங்க வைத்தல், நவின்றோர்களுக்கு இனிமை, நன்மொழி புணர்தல் ஓசையுடைமை, ஆழம் உடைத்தல், முறையின் வைப்பு, உலகம் மலையாமை, விழுமியது பயத்தல், விளங்கு உதாரணத்தாக்குதல் எனும் பத்தழகுகள் பொருந்தி வரும் பான்மையின.

அதைப்போல நூலில் விலக்கத்தக்கனவாக இலக்கணிகள் கூறும் குன்றக்கூறல் முதலிய குற்றங்கள் நீங்கி அமையும் இயல்புடையன.

பழமொழிகள் வாழ்வியலில் முதிர்ந்த வெளிப்பாடாக, வாழ்வின் பல கோணங்களையும் விளக்கும் ஓவியங்களாகத் திகழ்கின்றன. அவற்றைச் வாழ்க்கைச் சூத்திரங்கள் என வருணிக்கலாம்.

நாட்டுப்புற மக்கள், வாழ்க்கையைக் கூர்ந்து நோக்குபவர்கள். பழமொழிகள் அவர்களின் பட்டறிவின் வெளிப்பாடுகள்; அனுபவ முதிர்ச்சியின் அடையாளங்கள்; அறிவு வளத்தின் ஊற்றுக் கண்கள்; சிந்தனை வளத்தின் செப்பேடுகள்; மொழி வளத்தின்

முத்துச் சிதறல்கள்; வாழ்வியல் வளத்தின் வகைப்பாடுகள்!

**பழமொழிகளின் தற்கால, முற்காலப் பொருண்மைகள்**

1. அடி உதவுவது போல் அண்ணன் தம்பி உதவமாட்டான்
இப்பழமொழியைச் சொல்லிக்கொண்டே தவறு செய்யும் தம் குழந்தைகளை அடித்து நொறுக்கும் அம்மாக்களைப் பல இடங்களிலும் காணலாம். இப்பழமொழியைத் தவறாக உணர்ந்து கொண்டதன் விளைவு. இன்று தமிழ் மக்களின் பண்பாட்டில் ஒரு சீரழிவு ஏற்பட்டுள்ளது. குழந்தைகளை அறிவுறுத்தி, அவர்களை நெறிபடுத்த முயலாமல் தமிழக நாட்டுப்புறங்களிலும் இன்று அடிக்கும் அம்மாக்கள்! அலறும் குழந்தைகள்! அவலம்!

   இங்கு ''அடி'' என்பது இறைவனுடைய திருவடியைக் குறிக்கிறது. இறையடி, திருவடி அருள் உதவுவது போல அண்ணன் தம்பி உதவமாட்டார் எனும் பொருண்மை இதன் முற்கால பொருண்மை எனலாம். அல்லது பெரியவர்களின் வாழ்த்தை வேண்டி அவர்களுடைய திருவடிகளில் விழுந்து வணங்குவதை இது குறிக்கிறது எனலாம்.

2. மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கலாமா?
ஆற்றைக் கடக்க வேண்டியவன் மண் குதிரையிலா கடப்பான்? மனிதனுக்கு அறிவில்லையா? அதுவும் பண்டைத் தமிழருக்கு அறிவில்லை எனல் பொருந்துமா? அறிவில்லாமலா சொல்லி வைத்திருப்பார்கள் என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

   இதில் வரும் குதிர் - மண்மேட்டைக் குறிக்கிறது ஆற்றில் மண் / மணல் மேடுகள் இருக்கும். ஆற்றைக் கடப்பவன் அதில் நின்று தப்பித்துக் கொள்ளலாம் என்று நினைத்தால் ஆற்று வெள்ளம் அவனை அடித்துக் கொண்டு போய்விடும். குதிரில் கால் வைத்தால் திடீரென்று கால் உள்ளே போய்விடும். எனவே ஆற்றைக் கடக்க நினைப்பவன் மண் குதிர் - ஐ நம்பக்கூடாது. எனவே இப்பழமொழியின் மூலவடிவம் மண்குதிரை நம்பி ஆற்றில் இறங்கலாமா என்று இருந்திருக்க வேண்டும்.

3. வக்கத்தவனுக்கு வாத்தியார் வேலை, போக்குவனுக்குப் போலீஸ் வேலை
நல்ல மணிதர்களை உருவாக்குவது ஆசிரியர் பணி. நல்ல மனிதர்களைக் காக்கத் தீயவர்களைச் சிறைப்படுத்துதல் ''போலீஸ்'' என்கிற காவலர்களின் கடமை. நிலைமை இவ்வாறிருக்க, அவர்களை வக்கற்றவர் போக்கற்றவர் என எவ்வாறு கூறல் இயலும்?

   > ''வாக்குக் கற்றவனுக்கு வாத்தியார் வேலை
   > போக்குக் கற்றவனுக்கு போலீஸ் வேலை''

   வாக்குக் கற்றல் - அறிந்து கொண்ட செய்திகளை மாணவர்களுக்கு எடுத்துச்

சொல்லும் திறம்.

போக்குக் கற்றல் - திருடன் தன்னை தேடி வந்த காவலர் போய் விட்டார் என நினைத்து வெளியில் வரும் போது, அவனைப் பிடிப்பதற்கு ஏதுவாக போய் விட்டது போல் போக்கு காட்டி, சிறிது தூரம் சென்று மீண்டும் வந்து திருடனைப் பிடிப்பார் என்று சொல்லிப் பார்த்தாலே பழமொழியின் பழம்பொருள் விளங்குகிறது. நம் முன்னோர்களின் முதிர்ந்த அறிவு புலனாகிறது.

4. கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்
   கேட்பதற்கே வேடிக்கையாய் இருக்கிறது. கல்லையும் புல்லையும் மணம் செய்து கொண்டு பெண்கள் என்ன செய்யமுடியும்?

   ''கல்லான் ஆனாலும் கணவன்
   புல்லான் ஆனாலும் புருஷன்''

கல்வி அறிவு அற்ற படிக்காதவராக இருந்தாலும் புல்லாதவராக அன்பற்றவராக இருந்தாலும் கணவன் என்று ஏற்றுக் கொண்டு வாழ வேண்டும் எனும் வாழ்க்கையறிவை விளக்குகிறது இப்பழமொழி.

5. களவும் கற்று மற
   திருடக் கற்றுக்கொள்; பிறகு மறந்து விடு என்ற பொருளில் இன்று இப்பழமொழி வழங்கப்படுகிறது.

   ''களவும் அகற்று; மற''

   சொல்லிப் பார்த்தால் பண்டை மக்களின் பழம்பெருமை விளங்கும்; தமிழர்கள் திருடச் சொல்லிப் பழமொழி கூறியிருக்க வாய்ப்பில்லை.

6. ''சேலை கட்டிய மாதரை நம்பாதே''
   இப்பழமொழி மேலெழுந்த வாரியாகப் பார்த்தால் சேலை கட்டிய மாதரை நம்பக்கூடாது. சுடிதார், ஜீன்ஸ், பாவாடை, தாவணி போட்டிருக்கும் பெண்களை நம்பலாம் என்பது போல் தோன்றும்; உண்மை அதுவன்று.

   சேல் அகட்டிய மாதரை நம்பாதே சேல் போன்ற கண்களை அகட்டி, அகட்டி ஆடவரைத் தேடும் இழிகுணம் உடைய பெண்களை நம்பாதே என்பதுதான் இதன் உண்மைப்பொருள்.

7. ''சிவபூசையில் கரடி நுழைந்தாற் போல்''
   சிவபூசை வீட்டிலோ, கோயிலிலோ நடைபெறும். அப்பொழுது எப்படி கரடி நுழைய வாய்ப்பிருக்கும்? சிவபூசை பொருத்தமான இன்னிசை அருள் பாடல்களோடு இன்னியம் முழங்க நடைபெறுவது; அப்போது ஒலிச்சீர்மை அற்ற ஓசை சத்தம் கேட்டால் பூசையில் ஈடுபாடு வருமா? கரடியை எனும் ஒலிக்கும் கருவி

அதைத்தான் செய்யும்.

சிவபூசையில் கரடிகை ஒலித்தாற் போல என்ற பழமொழியே சிவபூசையில் கரடி நுழைந்தாற்போல என மாறி வழங்குகிறது.

8. ''ஆயிரம் பேரைக் கொன்றவன் அரை வைத்தியன்''

இதன் பொருள் முரண்பாடாகத் தோன்றுகிறது. பண்டைத் தமிழர் ஆயிரமாயிரம் மூலிகை, அதன் வேர்கள் பற்றி அறிந்தவர்கள். மூலிகை மருந்துகள் தயாரித்தளித்து நோய்களை நீக்கினர் மருத்துவர்கள் அதற்கு அதிக எண்ணிக்கையில் வேர்களைப் பயன்படுத்தினார்கள்.

''ஆயிரம் வேரைக் கொன்றவன்
அரை வைத்தியன்''

என்று பழமொழியின் பொருளைப் புதுமைப்படுத்தினால் பழம்பொருள் விளங்கும்.

9. ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவாது
இது கூட தெரியாதவர்களாகத் தமிழர்கள்? இது தெரியாமலா இப்படிச் சொல்லி வைத்திருப்பார்கள்?

ஓட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது.

சதைப்பகுதி, ஓடு எனப் பிரித்தறியக்கூடிய முற்றிய சுரைக்காய் ஓட்டுச்சுரைக்காய் கறிக்கு உதவாது என்பது அவர்கள் சொல்லி வைத்த உண்மை. ஓட்டுச் சுரைக்காய் குடுவைக்கு ஆகும்; கறிக்கு ஆகாது.

10. கப்பலே கவிழ்ந்தாலும் கன்னத்தில் கை வைக்காதே
கன்னத்தில் கை வைக்காமல் வேறு எங்க வைப்பது? பழமொழி எதைக் கூறுகிறது?

கன்னம் - கன்னம் வைத்துத் திருடுதல்; சுவரில் ஓட்டையிட்டு உள்ளே புகுந்து திருடுதல் கப்பம் கவிழ்ந்தாலும் திருடக்கூடாது என்பது அதன் பொருள்.

11. ஊரான் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன்பிள்ளை தானே வளரும்
... எப்படி வளரும்? ஊர்ப்பிள்ளைத் தானே வளரும்? இதன் பொருளை இப்படிப் பாருங்கள் ஊரான் பிள்ளை மனைவி; தன் பிள்ளை - மனைவியின் வயிற்றில் வளரும் தன் குழந்தை. தன் பிள்ளை வளர - தானே வளர - ஊரான் பிள்ளையாகிய மனைவியை ஊட்டி வளருங்கள்.

12. கண்டதைக் கற்கப் பண்டிதன் ஆவான்
கண்டதைக் கற்க பண்டிதன் ஆக முடியும்? மாணவர்கள் கண்டதைக்

கற்கிறார்களே! பண்டிதர் ஆகவில்லையே!

''கண்டு அதைக் கற்கப் பண்டிதன் ஆவான்''. இன்ன நூல்களைக் கற்க வேண்டும் என்று தேர்ந்தெடுத்துக் கற்றால் பண்டிதன் ஆக முடியும் என்று கருத்துரைக்கிறது இப்பழமொழி.

13. மார்கழி பீடை மாதம்
இப்படிச் சொல்லியிருப்பார்களா? இப்படி இருக்க முடியுமா? மாதங்களில் கண்ணன் மார்கழியாக இருப்பதாக பெருமையாக இம்மாதம் பேசப்படுகிறது. இறை அன்பர்களுக்கு இம்மாதம் உயர்ந்த மாதம்! கோயில்கள் எங்கும் இறையின்பத் திருவிளையாடல்கள் பெருமைக்குரிய மாதமாக இம்மாதம் திகழ்வதால், பெருமை எனப் பொருள் தரும் வகையில் மார்கழி பீடுடை மாதம் என்று பழமொழி அமைத்திருப்பர் நம் முன்னோர் என்பது பொருந்தும்.

14. தை பிறந்தால் வழி பிறக்கும்
இறைநிலையில் பீடுடை மாதமாக மார்கழி விளங்கினாலும் வேளாண் அடிப்படையிலான பொருளாதாரம் விளங்கும் நம் நாட்டில் தை மாதம் நெற்பயிர் அறுவடைக்கு வரும். அதன் காரணமாக வறுமை நீங்கி, வளமை உண்டாகும். வாடிய மக்கள், தங்கள் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்ள தை மாதப்பிறப்பு வழி வகுக்கும். இவ்வெண்ணத்தில் தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற பழமொழி ஏற்பட்டுள்ளது. இதை உறுதி செய்வதாக நம் மக்கள் கூறும் ''மார்கழிப் பஞ்சம் மக்களை விற்கும்'' என்னும் பழமொழி அமைந்துள்ளது. இவ்விரண்டையும் தொடர்புபடுத்திப் பார்த்தால் பழமொழிகளின் பொருள் நன்கு விளங்கும்.

இவ்வாறு சில பழமொழிகள் மூலம் அவற்றுக்குரிய இன்னைப் பொருளும்; முன்னைப் பொருளும் அறிந்தோம். பழமொழிகள் நமக்கு வாழ்க்கைப் பாடமாக அமைபவை. நீதி கூறுபவை; நம்மை நேர்ப்படுத்துபவை. எளிய சொற்கள் இனிய தொடர்களால் வாழ்க்கைக்கு வளம் சேர்ப்பவை. பாமரர்களின் பல்கலைக்கழகமாக விளங்குபவை. பழமொழிகளை ஆராய்ந்து பொருள் கொள்ளும் போது பொதுவாக அனைவர்க்கும் வெளிப்படையாக தெரிந்த ஒன்றை அறிவுத் தெளிவு பெற்ற நம் ஆன்றோர்கள் பழமொழியாகக் கூறி இருக்க மாட்டார்கள். நுட்பமான அறிவுடைய அவர்கள் ஆழமான கருத்துக்களைக் கூறவே பழமொழிகளை உருவாக்கிப் பயன்படுத்தியிருக்கிறார்கள் என அறியலாம்.

**நன்றி**

*K. Veivesh*
*12^MT^*

# சமாதானம்

குண்டு வெடிப்பு, துப்பாக்கிச்சூடு
கொலை, கொள்ளை
நித்தமும் பத்திரிகையில்
செய்தியாய் மட்டுமல்ல
திடீர்ச் செய்தியாய்
தொலைக்காட்சியில்

அவ்வப்போது விளம்பரமாய்
மூவினமும் கைகோர்த்த
சமாதானம்
அத்திபூத்தாற்போல
ஒரு சமாதான யாத்திரை
சமாதானம் வேண்டி
பிரார்த்தனை, திருப்பலி

என்றுதான் சமாதானமே
நிரந்தரமாகப் போகின்றாய்
நம் தாய்த்திருநாட்டில் நீ

நல்லைநாதன் செந்தூரன்
8D

# புத்தகம்

புத்தகங்களை படிக்கலாம்
புதுமைகளை அறியலாம்
நித்தம் கற்ற வழியிலே
நின்று வாழ்வில் உயரலாம்
கல்வி அறிவை தரும் புத்தகம்
நமக்கெல்லாம் கற்றுத் தரும் புத்தகம்
தொல்லையின்றி நாள்தோறும்
துணையாய் நிற்கும் புத்தகம்
புரிந்திடாத விந்தையைப்
புரிய வைக்கும் புத்தகம்
அறிந்திடாத உண்மையை
அறிய வைக்கும் புத்தகம்
நல்ல நல்ல புத்தகம்
நாளும் சேர்ந்து படித்திட்டால்
வெல்லற்கரிய மனிதராய்
வெற்றியுடன் வாழலாம்

*வி.ஓசிகன் விஸ்வநாதன்*
*6C*

*With Best Compliments*

*from*

# NEW COLOMBO STORES

167, 4th Cross Street,
Colombo 11

---

*With Best Compliments*

*from*

# Gemrich Multishop

266, Galle Road, Colombo 04.
Tel: 011-2555631

*With Best Compliments*

*from*

## Amayash Herbal

## யூனானி, ஆயுர்வேத சிகிச்சை நிலையம்

உங்கள் (தீர்க்க முடியாத) அனைத்து நோய்களுக்கும்
சிறந்தமுறையில் சிகிச்சைபெற

**Amayash Herbal**
**Unani & Ayurvedic Medical Center**
**No. 211, Kolonnawa Road, Wellampitiya.**
**T.P. 011-2533336**

| | | |
|---|---|---|
| ஹிஜாமா | (Cupping) | හිජාමා |
| பாரிசவாதம் | (Paralysis) | අංශභාග |
| மூட்டுவலி | (Arthritic) | සන්ධි රෝග |
| நீரிழிவு | (Diabetes) | දියවැඩියාව |
| கொலஸ்ரோல் | (Cholesterol) | කොලෙස්ටරෝල් |
| இருதய நோய்கள் | (Heart diseases) | හෘද රෝග |
| சரும நோய்கள் | (Skin diseases) | සමේ (චර්ම) රෝග |
| சளித் தொல்லை | (Sinusitis) | පීනස |
| ஒற்றைத்தலைவலி | (Migraine) | ඉරුවාරදය |
| உடல் பருமன் | (Obesity) | අධික තරබාරකම |

உட்பட அனைத்து பாலியல், பெண்நோய்கள் மற்றும் உளவள
ஆலோசனை வைத்திய சேவைகளை பெறக்கூடிய ஒரே இடம்
ලිංගික, ස්ත්‍රී රෝග සහ මානසික උපදේශන සේවාවන්ද

சத்திர சிகிச்சையின்றி பித்தப்பை கல், சிறுநீரகக் கல் மருந்து
மூலம் அகற்றப்படும்.
இன்றே விஜயம் செய்து வித்தியாசத்தை உணருங்கள்.
(தங்கியிருந்து சிகிச்சை பெறவும் வசதியுண்டு)

(නේවාසික ප්‍රතිකාරද ලබාගත හැකි)

All kind of massage Spa Herbal Barth & steam Barth (Panchakarma & facial)
(Separate facilities available for ladies)

THIRUKUMARAN
SATHANANTHAN
SUDHARSHAN
RAGULAN
M.Z.M.ZUHUD
HARSHANTH
KARTHIGAN
ANOJAN
ARUNAN
ASMATH
NITHAS
THAMILLENTHY
THIVIYAN
ARSHAD
ARJUN KUMAR

WRITTEN & DIRECTED BY
M.PIRANAVAN


BLUE & GOLD
PRESENTS
KOCHIKADAIYAAN
The Sappa Hero With Tin

# அன்பு கலந்த நன்றிகள்.....

☺ பிரதம விருந்தினராகக் கலைவிழா 2012ற்கு கலந்து சிறப்பித்த பேராசிரியர் செ. யோகராஜா அவர்கட்கும் (சிரேஷ்ட்ட விரிவுரையாளர் - கிழக்குப் பல்கலைக்கழகம்)

☺ அதிபர் திரு. எச். ஏ. உபாலி குணசேகர அவர்களுக்கும் உப அதிபர் திரு. கீர்த்திசேன அவர்களுக்கும்,

☺ பிரதி அதிபர் திரு. மா. கணபதிப்பிள்ளை அவர்களுக்கும்,

☺ மன்றப் பொறுப்பாசிரியர் திரு. S. R. ஜெயகுமார் அவர்கட்கும், ஏனைய பொறுப்பாசிரியர்களுக்கும்,

☺ பாடசாலைகளுக்கிடையிலான, பாடசாலைக்குள்ளான தமிழ் திறன்கான் போட்டிகளுக்கு நடுவுநிலைமை வகித்த நடுவர்களுக்கும், அதில் பங்கு பற்றிய மாணவர்களுக்கும்,

☺ என்றுமே எமக்கு உறுதுணையாய் இருக்கும் பழைய மாணவர்களுக்கும்,

☺ இவ்விழாவில் கலந்து சிறப்பித்த பெற்றோர்களுக்கும், பாடசாலை மாணவர்களுக்கும், ஏனையவர்களுக்கும்

☺ விழாவை சிறப்புற நடாத்த உதவிய விளம்பரதாரர்களுக்கும்,
உப அனுசரனையாளர் Call Me நிறுவனத்திற்கும், அட்டைப்பட அனுசரனையாளர்களாக Ukaaye நிறுவனத்திற்கும், திரு. V. நிபுனானந்தன் அவர்களுக்கும், Stassen Exports (Pvt) Ltd. நிறுவனத்திற்கும்,


☺ "தமிழ் நயம் 2012" மலரை அச்சிட உதவிய A. J. Prints அச்சகதாரர்களுக்கும்,

☺ ஒலி வசதி செய்து தந்த "Music J Entertainers" நிறுவனத்தாருக்கும்,
ஒளி வசதி செய்து தந்த "Creative Lights" நிறுவனத்திற்கும்,

☺ என்றும் உடன் நின்ற வேத்திய வேங்கைகளுக்கும்.....

☺ பெயர் குறிப்பிட மறந்த அனைத்து நெஞ்சங்களுக்கும்

நவில்கின்றோம் நன்றிகள்
பலகோடி


Best Wishes
from
A WELL WISHER

Best Compliments From
A Well
Wisher